இல்முல் இன்ஸான்

மஃரிபா மெய்ஞான விளக்கங்கள்



தொகுப்பு ஆசிரியர் :

H.அப்துல்ஹலீம்,

ஆல் இந்தியா சர் ஸதர் ஷெய்க், ரிஃபாஇ அஹ்மதிய்யா பவுஜ்தார்,

தஞ்சாவூர்.

இல்முல் இன்ஸான்

மஃரிபா மெய்ஞ்ஞான விளக்கங்கள்



செய்யத் மஹபூப்புல்லாஷா காதிரி

எனது கல்பில் ஆன்மீகச் சுடர் ஏற்றிய எனது ஷெய்ஹின்
பாத கமலங்களுக்கு
இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

பவுஜ்தார் மிஸ்கின்ஷா
தரீக்கத்துல் ரிஃபாஇ அஹமதியா. தஞ்சாவூர்

இல்முல் இன்ஸான்

மஃரிபா மெய்ஞான விளக்கங்கள்



குறிப்பு

இந்நூலில் எழுத்துப்பிழை, சொற்பிழை ஏதேனும் இருப்பின்
தயவு செய்து தாங்கள் திருத்திப் படித்துக் கொள்ளவும்

www.miskinsha.blogspot.com

இந்நூல் உருவாக எனக்கு பேருதவியும் ஆதாரமாயும் இருந்த அற்புதமான கித்தாபுகளின் விபரங்கள் :

புலவர் போத்திய பொன்னாடை	துவத்திது
மஷ்னவி ஷரிப்	மகாத்மா ரிபாஇ நாயகம்
ஹகாயிகுஸ் ஸபா	தரீக்குல் ஜன்னா
நூருல் ஹகாயிக்	திருப் பாடல் திரட்டு
இன்ஸானுல்காமில்	மனாகிபே கௌஸிய்யா
அஸ்ராருல் ஆலம்	பிதாயா இத்ஹாப்
தப்ஸீருல் ஹமீத்	தபகாத்
கஸஸுல் அன்பியா	புகாரி ஷரீப்
நஸ்ஹதுல் ஹதீத்	அஜாயிபுல் மஃலூகாத்
அய்னுல் ஆரிபீன்	ஆசிக் அவதார மாலை
சம்பூர்ண சுயப்பிரகாசம்	சீடர் கவசியம்
சிர்ருல் அஸ்ரார்	முரிது விளக்கம்
வேத புராணம்	மு நப்பிஹாத்
மஃரிபத்து மாலை	இஹ்யா
அல்லாஹ் நம்முடன்	இஸ்லாமிய இளவல்களுக்கு
பத்ஹுல் மன்னான்	இனியவை இருநூறு
ஹக்கீ கத்துல் இன்ஸான்	இறையருள் நல்கும்
பீ அஃமாலில் இன்ஸான்	நிறையருள் மார்க்கம்
மஹ்ரிபத்துல் இன்ஷான்	பஸாதெ இஸ்க்
இர்பான்மாலை	கலிமாதுன் நாபி ஆத்
தரஜாத் மாலை	ஹஜ்ரத் கௌதுல் அஃலம்
நாநாஜீவ வாத கட்டளை	துர்ரத்துன் நாஸிஹீன்
இல்லத் துறவு	பத்ரு போரின் பின் விளைவுகள்
ராதிவு முஸ்தபவிய்யத்து	ஜெயஞான ஜனன தியானம்
நஸிஹத்து நாமா	
தாவர சங்க சாஸ்திரம்	

வாழ்த்துரை

حضرت سيدشاه رحمة الله شطاري ولى الله درگاه شريف كلّه

HAZRATH SYED SHA RAHAMATHULLAH SAHIB SHUTTARI

VALIULLA DARGAH TRUST (WAKF-ALAL-AULAD)

மௌலவி ஸையத் V.N.ஸக்காப் [illegible]

Moulavi SYED.V.N. SAQAF
Muthawalli, Darga Office, KILLAI-608 102.
(Via) Chidambaram, Tamil Nadu.
Phone : 04144 - 249263

ஹி 1430 துல்ஹஜ் பிறை 19 Date 7-12-2009.

இறை அருளே! நிறையருளே!!

அல்லாஹ் ஆகிய ஏகன், மஜ்ஹரே அத்தம் ஆகிய ஏகனின் பேரொளி பிரகாசம் என்னும் நூரை சிஃபாத் வெளிப்பாட்டு சுவனது கலீஃபா வாகிய ஆதம் அலா நபிய்யினா அவர்களின் நெற்றியில் "சிர்" என்கிற ரகசியத்தை வைத்து அஷ்ரஃபுல் மக்லூகாத் படைப்புகளில் பிரதானமானவன் இன்ஸானே காமில் பூர்ண மனிதனின் வெளிப்பாடாய் வந்திருந்த போது வஹ்தத்துல் உஜூது என்ற அத்வைத ஞானத்தையும், 'மன் அரஃப நஃப்ஸஹு ஃபகத் அரஃப ரப்பஹு' என்ற கண்மணி நாயகத்தின் தெளிவான பிரபஞ்ச ஏக தவ்ஹீது தத்துவ மெய்ஞான கல்வியின் மேன்மை புரிந்து கொள்ள நாடுவோர்

இந்த நூலான "இல்முல் இன்ஸான்" என்ற நூலை ஆழ்ந்த பற்றுதலுடன் வேதத்தின் வழிகாட்டுதல்படி படித்து உணர்ந்தால் ஃபனா என்று அறிந்து பகா என்ற முக்தி அடைவர் இக்காலத்தில் இதை சேவை செய்த ரிஃபாயியா தரீகா சங்கத்தோர் ஆசி ஜனாப் ஹாஜிம் போன்று நிலைக்கொள்ளுவர்

என்றும் பணிவுடன்
நாயகம் புகழ்
[illegible]
[ஸையத் வலியுல்லாஹ் ஸக்காப் காதிரி ஷத்தாரி]

முதற்பதிப்பு = நவம்பர் 2009 துல்கஃதா 21
ஹிஜ்ரி 1430 திங்கள்கிழமை

இந்நூல் கிடைக்குமிடங்கள்
கான் ராவுத்தர்
B.நஸ்ரத் இல்யாஸ்
அஹமது, *D.Pharm*
1/60 கிழத்தெரு
வழுத்தூர். 614210
தஞ்சாவூர் ஜில்லா

A.யூசுப் அன்ஸாரி, *D.Accu*
3/100 மெயின்ரோடு
வழுத்தூர். 614210
தஞ்சாவூர் ஜில்லா

M.அப்துர் ரஹ்மான்
2/168 வடக்குதெரு
பண்டாரவாடை
தஞ்சாவூர் ஜில்லா

A.முஹம்மது ஆரீப்
6/128 வடக்குத்தெரு
முஹம்மது பந்தர்
தஞ்சாவூர் ஜில்லா

S.A.சேக் அலாவுதீன்
14/43 = உதுமான் தெரு
மேலத்திருப்பூந்துருத்தி
தஞ்சாவூர் ஜில்லா

கவிஞர் . A.பதுருல்ஜமான்
746 தெற்குகோட்டை கொல்லைதெரு
கீழவாசல், தஞ்சாவூர். 613001

A.இப்ராம்ஷா ஜாவித்
3/3 E 28 D = தஞ்சை நூர்நகர்
சக்கராப்பள்ளி Po
அய்யம்பேட்டை, தஞ்சை ஜில்லா

S.அபுல் கலாம் ஆசாத், *M.Com.*,
தெற்கு முஸ்லிம் தெரு,
திருப்பாலத் துறை, பாபநாசம்

ஹாஜி R.கமாலுத்தீன் பைஜி
கமாலியா கார்னர்,
மேல தெரு, வழுத்தூர்.

F.சையத் நூருத்தீன் ஷா
சிஷ்தியுல் காதிரி
1/134, நூருல்லாஷ தர்ஹாகா ஷரிப்
ராஜகிரி - 614 207.

முஹம்மது அக்ரம்
S/O சர்குரு அஹமதுஅலிஷா
1/38, தர்வேஸ் தைக்கால்,
மில்லத் நகர், சக்கராப்பள்ளி.

விலை :

இல்முல்இன்ஸானின்

பொருளடக்கம்

எண்	தலைப்பு	பக்கம்	எண்	தலைப்பு	பக்கம்
1	பிஸ்மில்லாஹ்வின் சிறப்புகள்	1	38.	ஹக்கை ரூஹுக்கு உவமை	63
2	இப்லீஸை படைத்தது	3	39.	யார் இந்த மலாயிகத்து	66
3	இப்லீஸின் சந்ததிகள்	4	40.	மூன்று வகையான மண்	68
4	ஷைத்தானின் நண்பர்கள்	5	41.	நான்கு வகையான ரூஹுகள்	69
5	ஆதம் இன்ற அஹமது	6	42.	நன்றி மறவாதே	70
6	அல்லாஹ்வின் ஸிபாத்துக்கள்	7	43.	மனிதா . நீ யார்	72
7	அல்லாஹ் இருப்பது எங்கே	9	44.	மரணமில்லா மனிதன்	73
8	அமா நுக்த்தா	13	45.	இன்ஷான் நஜீசானவனா	74
9	அரசனான நாட்டம்	15	46.	பை அத் பெறுவது எப்படி	75
10	ஆதம் நபியை படைத்தது	17	47.	அறிவை அறிந்த ஷெய்ஹுவை தேடு	76
11	பூதங்களின் ஜவ்ஹர்	20	48.	மூன்று வகையான சூக்ஷ்மம்	77
12	கனன் ஹிம்து	21	49.	தரீக்கத்தின் பிரிவுகள்	78
13	ஹயாத்தை பூரமும் ஆலிம் பூரமும்	23	50.	படைத்தவரின் பரிசுகள்	80
14	அன்னையும் பிதாவும்	24	51.	பக்கீர்களை தூசனிக்காதே	81
15	நான்குவித சரீரங்கள்	25	52.	வைர வாக்கியங்கள்	82
16	நான்கு பாதைகள்	26	53.	ரிபாஇ நாயகத்தைபற்றி ரசூல் (ஸல்)	83
17	ஆணின் சுக்கிலம்	30	54.	விலாயத்தின் வெண் முத்து	87
18	ஸ்தூல சரீரம்	31	55.	வாசி யோகம்	89
19	சூட்சும சரீரம்	32	56.	விதி என்றால் என்ன	91
20	காரணம் மகாகாரண சரீரம்	33	57.	லவ்ஹுல் மஹ்பூல்	92
21	ரூஹு. நப்ஸ். கல்பு	34	58.	திக்ரில் காட்சிகள்	93
22	இன்ஷானில் இயங்குவது	35	59.	பதினாங்கு இல்முகள்	94
23	சிர்ருல் இன்ஷான்	38	60.	உஹது ஸஹாபாக்கள்	95
24	கலிபாக்கள் கண்ணியம்	39	61.	தலைமுறைகள் 50	98
25	ஏழு தோற்றங்கள்	40	62.	ஜெய ஜெக ஜோதி நபி	99
26	குத்பு நட்சத்திரம்	41	63.	கலம் எழுது கோல்	102
27	ஹயாத் பயான்	43	64.	மரண ஓலை	103
28	சிந்தித்துப்பார்	45	65.	உடலில் மஹ்ஸர் நிலை	106
29	ஷெய்ஹின் ஷறுத்து	47	66.	மூச்சு பயிற்சி	107
30	அய்னுல் எகீன்	48	67.	குணங்குடியாரின் போதனை	110
31	பேசுவதும் பார்ப்பதும்	50	68.	வஹீ இல்ஹாம் மகாம்கள்	111
32	அறிவுகள் பயான்	51	69.	பரிசுத்தமே பேரின்பம்	115
33	நினைவு பயான்	54	70.	பற்குத்தி எனும் மண் ஈரல்	116
34	ஆலம் கபீரா . ஆலம் ஸகீரா	55	71.	கல்ஈரல் எனும் கருஈரல் .	117
35	இல்முல் இன்ஷான்	57	72.	நுரை ஈரல்	118
36	அங்கத்துக்குள் கலிமா	58	73.	பித்தமும் . இருதயமும்	119
37	ஆணின் சூட்சும தேகத்தில்	61	74.	மக்காம்களும் பாதைகளும்	120
			75.	தர்க்கா தொழுகை	121
			76.	தீங்கை தேடிக்கொள்ளாதே	122
			77.	உம்மி நபியின் உபதேசம்	125
			78.	விருச்சங்களின் வினோதம்	128
			79.	ஹைவான்களின் தத்துவம்	133
			80.	வினோத சக்திகள்	136
			81.	அல்லாஹ்வை அறியும் பாதைகள்	138
			82.	மலக்குகளின் தோற்றம்	140
			83.	அஸ்ஸலாமு அலைக்கும்	145

www.miskinsha.blogspot.com

என்னுரை

பிஸ்மி எனும் பரக்கத்தை பெற்றவனாய் அல்லாஹ் வெனும் ஆதார ஒளிவை அர் ரஹ்மா(ன்) னெனும் அருள் தந்தையிலும் அர் ரஹீ(ம்) மெனும் அன்புத் தாயிலும் தரிசனம் கண்டு முச்சுடர் மின்னும் மாணிடக் கோட்டைக்குல் கல்பு யெனும் அரசனுக்கு அறிவாய் = கிரீடமாய் ஆன என் ஞான ஆசிரியரின் = அடி பணிந்து நின்று ஆரம்பம் செய்கிறேன்.

அல்லாஹ்வின் அருள் ஒளிப் பெற்ற அடியார்களே = அஸ்ஸலாமு அலைக்கும் (வர) பேருலகில் மகா பெரியோரான அறிஞர்களின் அறிவுச் சோலையிலே அங்கும் இங்குமாய் பூத்திருந்த ஆன்மீக ஜீவமலர்களை சேகரித்து தொகுத்து ஒரு மாலையாக்கி உங்கள் கரங்களில் தந்து விட்டேன். இது சிபத்து தாத்தீ யெனும் ஜீவன் அறிவு நாட்டம் தத்துவம் கேள்வி பார்வை பேச்சு இந்த ஏழிலும் இல்மு யெனும் அறிவுதான் கல்பு எனும் பட்டணத்திற்கு அரசனாய் இருந்து ஆட்சி செலுத்துகிறது. எந்த கண்ணில் இந்த இல்மு (அறிவு) இல்லையோ அது குருடாகயிருக்கும் எந்த காதில் இந்த இல்மு (அறிவு) இல்லையோ அது செவிடாயிருக்கும் இந்த இல்மு யெனும் அறிவு இல்லாமல் எதையும் இன்னதென யூகிக்க முடியாது.

நமது புத்தியைக் கொண்டு ஆராய்ந்து சந்தேகங்களை யெல்லாம் நீக்கி தெளிவுப்பெற்று நமது கல்பில் துலங்க வேண்டும். அது தான் ரூஹெ நப்ஸானியான இல்மு யெனும் அறிவு எனப்படும் என்று அறிந்ததால் இந்நாலுக்கு = இல்முல் இன்ஸான் என்று நாமம் வைத்தேன்.

இந்நூல் ஒவ்வொறு வருக்கும் நல்ல பயன் தரும் என்ற எண்ணத்தைக் கொண்டே தொகுத்து இருக்கிறேன். மேலும் இந்நூல் வெளிவர உதவி புரிந்த எனது சிஷ்யர்களுக்கும் நண்பர்களுக்கும் என் பாராட்டுதல்களையும் நன்றியையும் கூறக்கடமை பெற்றிருக்கிறேன். அல்லாஹ் அவர்களுக்கு இரு உலகிலும் உதவி செய்ய து-ஆ.செய்கிறேன்.

இப்படிக்கு
தொகுப்பாசிரியர்
கவிஞர். **H.அப்துல் ஹலீம்,** ரிபாஇ
தஞ்சாவூர்.
09.11.2009

அறிவிப்பவர்கள் = மௌலானா. ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்)

எவனொருவன் குருபிரானையும்
அல்லாஹ்வின் தாத்து ஆகிய சுயார்த்த ரூபத்தையும்
ஏகமாகக் காண வில்லையோ அவன் முரீது ஆகிய உண்மை. சிஷ்யனாகான்! உண்மை சிஷ்யனாகான்!! உண்மை சிஷ்யனாகான்!!!

அல்லா(ஹ்)வும்ரசூலும்பீர் ஆகஇருக்குமென்று
நிர்ணயங்கொண்டுஎந்தஒருமுரீதுபீரிடத்தில்
முகம்பூரித்திருக்கிறாரோஅவரைநான்ஒருபீரெனக்
கருதுவேனேயன்றிஒருமுரீதாகவன்று(ஆதாரம்மத்னவிஷரிப்)

அதிகமாக சிரிக்காதீர்கள் தேவை இல்லாமல் வெளியே செல்லாதீர்கள் பிறரின் குற்றங்களை சொல்லிக்கொண்டு அலையாதீர்கள் ஏனென்றால் உமது குற்றங்களை அல்லாஹ் கவனித்துக் கொண்டு இருக்கின்றான் (ஹரத் ஹிள்ரு அலைஹின் ஸலாம்)

அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள் என்று உபதேசிக்கப்பட்டால் ஆணவம் அவனை பாவத்தின் பக்கமே இழுத்துச் செல்லுகிறது. (அல்குர்ஆன் : 2.205)

மனிதனின் செயலும் அவன் மனமும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. அவனுடைய செயல்களை வானவர்கள் கண்காணிக்கப்படுகின்றன.

அவனுடைய உள்ளம் இறைவனால் கண்காணிக்கப்படுகின்றது அவன் நற்செயல் புரியும் சமயம் அவன் உள்ளத்தில் முகஸ்துதி தோன்றிவிட்டால் அல்லாஹ்வின் வெறுப்புக்கு ஆளாகி விடுகின்றான் உங்களிடம் முகஸ்துதி ஏற்பட்டுவிடுமோ என்றுதான் நான் பயப்படுகிறேன். (திருநபி ஸல்) நூல் இஹ்யா

இறைஞான இல்மாகிறது இறைஞானிகளின் சொற்களைக்கொண்டு விளங்கமுடியும் நூல்களைக் கொண்டு அல்ல (அறிவிப்பவர்கள் - கௌதுல் அஃலம்)

www.miskinsha.blogspot.com

பிஸ்மில்லாஹ்வின் சிறப்பு

அல்லாஹூத்த ஆலா நபி ஆதம்மலைகிஸ்ஸலா மவர்களுடைய முதுகந்தண்டிலே அறுவாகுகளடங்களையும் வைத்து பின்னர் அவைகள் மீதாக்குடைய நாளையில் ஒரு சொல்லினாலே மக்கத்துக்கும் தாயபு நகருக்கும் இடையிலே அல்லாஹூத்த ஆலா நபி ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களுடைய முதுகு தண்டு உரோமக்கால் வழியே அறுவாகுகளடங்களையும் வெளியாக்கி வைத்து அவைகளைத்தன் சமுகத்தில் ஹாலி றாக்கிக்கொண்டு.

(அலஸ்துபி ரப்பிக்கும்) உங்களை படைத்து வெளியாக்கி வளர்க்கிற நாயன் நான் அல்லவா என்று கேட்டான் அப்போது அவைகள் எல்லாம் ஒன்றுபோலே (காலு பலா) மெய்தான்னென்று அறுவாகுகள் கூறக்கேட்டதும் அல்லாஹூத்த ஆலா எனது அடியவர்களாகியவர்களின் வாய்மொழியில் முதல் ஹர்பாக பே என்று தொடக்கம் உண்டானதால் அல்குர் ஆன் ஷரீபுக்கு மகுடமாக பிஸ்மில்லாஹ் ஹிர் ரஹ்மான் நிர்ரஹீம் என்றே ஆரம்பம் செய்தான்.

அல்லாஹூத்த ஆலாவின் அழகிய திருநாமங்களில்
பஷீர் என்ற இஸ்முடைய பே என்ற முதல் எழுத்தும்
ஸமீவு என்ற இஸ்முடைய ஷீன் என்ற முதல் எழுத்தும்
மலீக் என்ற இஸ்முடைய மீம் என்ற முதல் எழுத்தும்
அல்லாஹ் என்ற இஸ்முடைய அலிபு என்ற முதல் எழுத்தும்
லத்தீப் என்ற இஸ்முடைய லாம் என்ற முதல் எழுத்தும்
ஹாதி என்ற இஸ்முடைய ஹே என்ற முதல் எழுத்தும்
ரஸ்ஸாக்கு என்ற இஸ்முடைய றே என்ற முதல் எழுத்தும்

நாபிவு அல்லது நூர் என்ற இஸ்முகளின் நூன் என்ற முதல் எழுத்தும் கொண்ட பிஸ்மில்லாஹ் ஹிர் ரஹ்மான் நிர் ரஹீம் என்று உண்டாகி இருப்பதால் இதை கொண்டு துவக்கம் செய்தால் இந்த எட்டு இஸ்மு அடங்களையும் கொண்டு அல்லாஹூத்த ஆலாவை அழைப்பது போல் ஆகும்.

மேலும் பிர்அவுன் தான் நாயனென்று வழக்காடுவதற்கு முன்னாலே தன்னுடைய வீட்டு வாசலில் பிஸ்மில்லாஹ் ஹிர் ரஹ்மான் நிர் ரஹீம் என்று எழுதி இருந்தான் என்று இமாம் ராதி ரஹிமா ஹு அல்லா சொல்லி இருக்கிறார்கள்.

ரஹ்மான் என்பது தந்தையாகவும் ரஹீம் என்பது தாயாகவும் இந்த மத்தும் சத்தும் இணைந்தால் அல்லா என்று அட்சரம் என்று சொல்லப்பட்டுள்ளது.

நஸபிரஹிமஹு அல்லா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பிர் அவுனை ஹலாக் காக்கும்படி மூஷா அலைஹிஸ்ஸலாம் அனேக காலமாக து ஆ கேட்டார்கள் அல்லாஹூத்த ஆலா அதற்கு மூஷாவே நீர் அவனுடைய குபுரை பார்க்கிறீர். நான் அவனுடைய வாயிலை பார்க்கிறேன் என்று சொன்னான் அறிந்துக்கொள்ளும் அவனுடைய வீட்டு வாயிலில் பிஸ்மில்லாஹ் ஹிர் ரஹ்மான் நிர் ரஹீம் என்று எழுதி இருந்தப்படியால் குர்ஆனில் பிர் அவுனுடைய வீட்டை (வமகாமின் கரீமின்) சங்கை பொருந்திய வீடொன்று ஆண்டவன் சொல்லி இருக்கிறான்.

இமாம் குஷைரீ ரஹீமஹு சொல்லும் கருத்தாவது இந்த இஸ்மு மஃரிபா வுடையவர்களுடைய காதுகளில் போய் பிடிக்குமானால் அவர்களுடைய விளக்கங்களும் அறிவுகளும் அல்லாஹ்வுடைய உஜூதல்லாத மஃனா. அளவில் போகமாட்டாது. இனி அவன் நாவுகொண்டு அல்லாஹ் என்று சொன்னாலும் அல்லாஹ் என்னும் சொல்லை காது கொண்டு கேட்டாலும் கல்பு கொண்டு அல்லாஹ்வை சுஹூது செய்தவனாவான். ஆனபோதே ஒருவன் தன் நாவுகொண்டு அல்லாஹ் வென்று சொல்லுவான் கல்பைக்கொண்டு அல்லாவை யறிவான். ஞானத்தைக்கொண்டு அல்லாஹூத்த ஆலாவை தெறிவான் ரூஹைக் கொண்டு அல்லா ஹூத்த ஆலாவை உவப்பான் சிர்றைக்கொண்டு அல்லாவை ஷுஹூது செய்வான் இன்னும் அல்லாஹ்வுடைய முன்னிலையில் லாஹிரை கொண்டு கொழுகி நிற்பான் என்பதாகும்.

அல்லாஹூத்தஆலா குர்ஆனில் சேர்க்கப்பட்ட தடங்களையும் அல்ஹம்து சூராவில் பதித்தான் பின்பு அதையும் அழித்து வளித்து எடுத்து பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மான் நிர்ரஹீம் என்னும் வசனத்தில் மறைத்தான் பின்னர் அதையும் வடித்தெடுத்து பிஸ்மியின் முதல் எழுத்தாகிய பே என்றதில் மறைத்தான். பின்னர் அதை பிரித்தெடுத்து பேயின் கீழ் உள்ள நுக்தாவில் மறைத்து வைத்தான். இதன் கமை எண்பது ஒட்டகத்தில் ஏற்றும் அளவுக்கு இதன் மஃனாவில் தப்ஸீர் எழுதலாம் என்று ஹஜ்ரத் அலீ (ரலி) கூறியிருக்கிறார்கள்.

www.miskinsha.blogspot.com

இபுலீஸை படைத்தது

அறிவிப்பவர்கள் : வஃபு ரலியல்லாஹு அன்ஹு

அல்லாஹு த ஆலா சூடும் புகையுமில்லாத நெருப்பை படைத்தான் அதில் நின்றும் ஒருவலுப்பான படைப்பான

மாறிஜு என்ற கணவனையும்

மாரிஜா என்ற மனைவியையும் படைத்தான். இவைகள் இரண்டும் கூடி ஜான் என்கிற பிள்ளையை பெற்றன. அந்த ஜானுக்கு ஜின் என்று ஒரு பிள்ளை பிறந்தது. அதில் ஜின்னும் ஜின்னுடைய கூட்டங்கள் பிரிந்தன. அந்த கூட்டத்தில் நின்றும் இப்லீஸ் உண்டாகி சனிக்கிழமை அன்று ஹாவியா என்னும் நரகத்தில் பிறந்தான். பின்னர் ஜின் கூட்டத்திலேயே ரூகா என்னும் பெண்னை கல்யாணம் செய்துக்கொண்டான். ரூகாவின் தாய்பெயர் ஜல்சாயீ எனப்படும். பின்னர் இபுலீசுக்கு ஒரு சூலில் இரண்டு பிள்ளைகள் வீதம் பிறந்தன. அவைகள் விபரம்

புத் தூன் - குத் தூனா என்று ஒரு சூலிலும்

சுகுலா - ஷகுலா என்று ஒரு சூலிலும்

தகறு - தகறா என்றும் ஷைசான் - ஷைசானா என்றும்

கபுத்தசு - கபுத்தசா என்றும்

இப்படி எறும்புகளை போலும், கொசுக்களை போலும் பெறுகி மனம்போன போக்கில் போனார்கள். சுரியானி பாஷையில் இப்லீஸின் பெயர் அஜாஸி என்றும் அப்ரானி பாஷையில் அவன் பெயர் காரித் என்றும் உள்ளது.

பின்னர் அவன் பெயரும் உருவமும் மாற்றப்பட்டது. மேலும் அவனுக்கு

1. வது வானில் ஆபிது வணக்கஸ்தாலி என்றும்
2. வது வானில் ஜாஹிது துறவி என்றும்
3. வது வானில் ஆரிபு ஞானி என்றும்
4. வது வானில் வலீ இறைநேஸன் என்றும்
5. வது வானில் தக்கி இறைபக்தன் என்றும்
6. வது வானில் காஜின் பாதுகாவலன் என்றும்
7. வது வானில் அஜாஜில் தலைவர் என்றும் பதவிகள் இருந்தது ஆனால் லௌஹுல் மஹ்பூலில் இப்லீஸ் என்றே பெயர் எழுதி இருந்தது என சொல்லப்படுகிறது.

இப்லீஸின் சந்ததிகள்

Zஜலீத்தூன்	= இவன் கடைவீதியில் இருந்து கெடுப்பவன்
வஸீன்	= இவன் துன்பங்களை உண்டாக்குபவன்
அஃவான்	= இவன் அரசர்களிடம் இருப்பவன்
ஹFப்பாFப்	= இவன் குடிகாரரிடம் இருப்பவன்
முர்ரா	= இவன் இன்னிசைக்கு உரியவன்
லகூஸ்	= இவன் மஜூசிகளிடம் இருப்பவன்
முஸவ்வித்	= இவன் வதந்திகளை உற்பத்தி செய்பவன்
Dதாஸிம்	= இவன் தலாக் சண்டை உண்டாக்குபவன்
வலஹான்	= இவன் தொழுகையில் ஒதுவதில் இபாதத்தில் ஊசலாட்டங்களை உண்டாக்குபவன்

நமது இதயத்தின் இடது பக்கத்தில் ஒரு கொசுவின் ரூபத்தில் இப்லீஸ் அமர்ந்து இருக்கிறான். அவனுடைய வாயில் ஒரு தும்பிக்கை இருக்கிறது. அதை ஊசியாக்கி இதயத்தின் பக்கம் கொண்டு செல்கிறான். அப்போது நமது உள்ளம் இறை திக்ரில் இருந்தால் அவன் வெட்கி தலை குனிந்து அவமானமாகி போவான்.

உள்ளம் திக்ரின் நினைவில்லாது. இருந்தால் மன ஊசலாட்டங்களையும் பாவ விஷத்தையும் இருதயத்தில் பாய்ச்சுகிறான். மேலும் அவனின் மூக்கின் முன்பகுதியை மனிதனின் இதயத்தின் மீது வைத்து ஒவ்வொறு நொடியும் எதிர்பார்த்து இருக்கிறான் என்று கூறப்பட்டுள்ளது.

இப்லீஸ் சொர்க்கத்தின் அதிபதியாக 40 ஆயிரம் ஆண்டுகளும் மலக்கு மார்களுடன் 80 ஆயிரம் ஆண்டுகளும் மலக்குகளுக்கு ஆசிரியராக 20 ஆயிரம் ஆண்டுகளும் கர் ரூபியீன் என்ற மலக்குகளுக்கு தலைவராக 30 ஆயிரம் ஆண்டுகளும் ரவ்ஹானியீன் என்ற மலக்குகளுக்கு தலைவராக 10 ஆயிரம் ஆண்டுகளும் இருந்து அல்லாஹ்வின் அர்ஸை சுற்றி 14 ஆயிரம் ஆண்டுகள் தவாபு செய்திருக்கிறான்

அறிந்துக்கொள் : அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தான் நிர்றஜீம் என்று சொன்னால் வாயை பரிசுத்தமாக்குவது என்று அறிந்துக்கொள்.

www.miskinsha.blogspot.com

ஷைத்தானின் நண்பர்கள்

என் உம்மத்தினரில் உனக்கு நண்பர்கள் எத்தனைபேர் என நபிமணி (ஸல்) அவர்கள் இப்லீஸிடம் கேட்டபோது பத்து நபர்கள் என்று அவன் பதிலளித்தான்.

1. அநீதி செய்யும் நீதிபதி
2. பெருமையடிக்கும் பணக்காரன்
3. மோசம் செய்யும் வியாபாரி
4. மது அருந்துபவன்
5. கோள் சொல்பவன்
6. முகஸ்துதிக்காரன்
7. அனாதையின் பொருளை சாப்பிடுபவன்
8. தொழுகையை அலட்சியம் செய்பவன்
9. ஜகாத் கொடுக்காதவன்
10. அதிக பேராசை கொள்பவன்

இப்லீஸின் தோற்றம்

1. உடல் பாம்பு போலும்
2. தலையில் கொம்புகள் முளைத்தும்
3. கைகள் குரங்கின் கை போலும்
4. வாலும் கால்களும் யானையை போலும்
5. குரலோசை கழுதை போலும்
6. வேகம் புலியை போலும்
7. வாயில் பீநாற்றம்
8. வலது கையில் ஊன்றுகோலும்
9. இடது கையில் நெருப்பு கொள்ளியும்

கொண்டுகொடுமை தனமெல்லாம் உள்ளவனாக ஹாவியா என்னும் நரகத்தில் சனிக்கிழமை அன்று இப்லீஸ் பிறந்தான்

ஆதமுடைய மக்களில் நின்றும் ஒருபிள்ளை பிறக்கும்போது அத்துடன் சேர்ந்தே ஒரு ஷைத்தானும் பிறக்கின்றான். அவன் பெயரானது வஹ்மு என்ற சந்தேகமாய் இருக்கும். இது நம்மைவிட்டு நீங்காது அப்படி நீக்க நினைத்தால் காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வின் நினைப்பில் நிலையாக வேண்டும்.

ஆதம் தின்ற அஹூமறு

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களும் அன்னை ஹவ்வா அவர்களும் துன்யாவில் விவசாயம் செய்து வாழ்ந்து வரும் நாளையில் ஓர் நாள் இபுலீசு ஹவ்வாவுடைய இடத்துக்கு ஒரு பெரிய ஆலிமைப்போல் வந்து ஹவ்வா அம்மையாரை பசப்புதனமாக பேசி இறக்கம் உண்டாக்கி என்வசம் ஒரு ஏழைப்பிள்ளை இருக்கிறது. அதை எடுத்து வளர்த்து கொள்ளுமாறு கூறி அவனின் மகனான அஹூமறு என்ற அந்தபிள்ளை விட்டு சென்றான். மாலை நேரமானதும் வீட்டுக்கு வந்த ஆதம் பிள்ளையை பற்றிய விபரம் கேட்டு அடி பைத்தியக்காரி நம்மளை சுபர்க்கத்தில் இருக்க. வொட்டாமல் குடிகெடுத்த பாவியான இபுலீசு தான் அந்த கிழவன் என்றும் இந்த பிள்ளையானது அவனின் கசடு என்றும் கன்னாஸாக இருக்கும் என்று சொல்லி அந்த குழந்தையை துண்டு துண்டாக அறுத்து பூமியில் குழிதோண்டி புதைத்து மண்ணை போட்டு மூடி வைத்தார். மறுநாள் இபுலீஸ் வந்து அந்த பிள்ளையை அழைத்து மீண்டும் ஹவ்வாவிடம் கொடுத்துவிட்டு போனான் ஆதம் அவர்கள் மறுபடியும் அந்த பிள்ளையை நெருப்பில் இட்டு கொழுத்தி சாம்பலாக்கி எடுத்துக்கொண்டு போய் தண்ணீரில் கரைத்து விட்டார். மறுநாள் இப்லீஸ் வந்து மீண்டும் பிள்ளையை அழைத்து கொடுத்து விட்டு போனான். மாலையானதும் பாவா ஆதம் அவர்கள் வீட்டில் மூன்றாம் முறையும் பிள்ளை இருக்க கண்டு அவனை தக்பீர் சொல்லி அறுத்து சட்டியில் இட்டு அவித்து வைத்து பாவா ஆதமும் அன்னை ஹவ்வாவும் இருவரும் அமர்ந்து தின்று விட்டார்கள். அதை கண்ட இபுலீசு இப்பதான் ஜெயகாலம் பிறந்தது என்று சந்தோஸம் கொண்டான்.

அவ்விதம் உண்ட அஹூமறுடைய சரீர சதையானது ஆதம் ஹவ்வாவின் உடலில் மூன்று வஸ்துக்களுடன் கலந்து விட்டது. அவைகளானது கரு ஈரல் பற்குத்தி பித்து இந்த மூன்றில் கலந்து கொண்டது. அவ்விதம் கலந்து விட்டதால் பித்தத்தில் கசப்பு உண்டாயிற்று. கரு ஈரல் கருப்பு நிறமாகி விட்டது. பற்குத்தி சாம்பல் நிறமாயிற்று. இப்படி ஆனதால் பற்குத்தியால் பார்வை கேள்விகளாகிய காமங்களும், கரு ஈரலால் மண்ணாசை என்கிற மயக்கமும் பொய் பித்தலாட்டங்களும் கொடுமையான பாதகங்களும் பித்தத்தின் கசப்பால் கோபம், சோம்பல், குலவெறி நிலை, கொலை களவு, ஆங்காரம் குபிரியத்துகளும் இதனால் தான் உண்டாகும். இது கொண்டு இபுலீசு லஹனத்துல்லா ஆலங்கள் எல்லாவற்றிலும் பறந்து கெக்கரை கொட்டி சிரித்தான் பின்பு இன்ஷானில் எனக்கு ஏழு பங்கு இருக்கிறது. முஹம்மதுக்கு ஒரு பங்குதான் இருக்கிறது என்று சொல்லி திரிந்தான்.

www.miskinsha.blogspot.com

அல்லாஹ்வின் ஸிபாத்துகள்
நபிமார்களின் ஸிபாத்துகள்

அவ்வல் லதீன மஃரி பத்துல்லாஹி என்றது

தீனில் முந்தியது அல்லாஹ்வை அறிவதாகும். மேலும் ஹக்குடைய செயல்கள் அவன் ஸிபாத்தை சேர்ந்ததாகவும் ஸிபாத்து தாத்தை சேர்ந்ததாகவும் தாத்து தன்னில்தானே நிலை நிற்கிற தாயும் இருப்பதால் அவனுடைய செயலுக்கு எதிரில்லை என்று ஓர்மை படுத்துகிறது. (ருக்குன்) அல்லாஹ்வை அறியுதல் என்கிற மஃரிபாவாகும். அல்லாஹ்வுக்கு 41 சிபாத்துகள் உள்ளன. அவைகள்

வாஜிபான ஸிபாத்துகள் = 20
முஸ்தஹீலான ஸிபாத்துகள் = 20
ஜாயிஸான ஸிபாத்துகள் = 1 எனப்படும்

நபிமார்களாய் இருந்தாலும் வலிமார்களாய் இருந்தாலும் அவனின் குன்ஹு தாதை அறியக் கூடாது என்று இருக்கிறது. அறிய வேண்டியது சிபாத்து களைத்தான் இதில் வாஜிபான ஸிபாத்துகள் 20

1. உள்ளமை 2. பூர்வீகம் 3. என்றென்றைக்கும் தரிப்பாடு 4. அவனுடைய உள்ளமையிலும் வன்னிப்புகளிலும் செயல்களிலும் புதியவைகளுக்கு ஒவ்வா வண்ணமாயிருக்கிறது. 5. அவன் தன்னைக் கொண்டு தான் நிலைப்பாடாக இருக்கிறது. 6. அவன்ஒருவன் என்கிறது. 7. தத்துவம் 8. நாட்டம், 9. அறிவு, 10. ஹயாத்து, 11. கேள்வி, 12.பார்வை, 13.பேச்சு

14.காதிருன் = ஆதாரம் யின்றியே தத்துவமுடையவன்,
15. முரீதுன் = நபுஸன்றியே = நாட்டமுடையவன்,
16. ஆலிமுன் = கல்பன்றியே அறிவுடையன்,
17. ஹைய்யுன் = ரூ ஹன்றியே ஹயாத்துடையவன்,
18. ஷமீஅன் = காதன்றியே கேள்வியுடையவன்,
19.பஷீருன் = கண்ணன்றியே பார்வையுடையவன்
20. முதகல்லிமுன் = நாவன்றியே பேச்சுடையவன்

இவைகள் ஏழும் சிபத்து தாத்தீ எனப்படும். மற்றவைகள் சிபத்து சிபாத்தியாகும் இனி இவைகளுக்கு எதிர்மாற்றமான

முஸ்தஹீலான ஸிபாத்துகள் 20 அவைகள்

1. இல்லாமை, 2. புதிது, 3. அழிவு, 4. ஒப்பு, 5. பிறர்அளவில் தேவை, 6. இணை, 7. ஏலாமை, 8. நாடா திருத்தல், 9. மடமை, 10. சாவு, 11. செவிடு, 12. குருடு, 13. ஊமை, 14. ஏலாமையானவன், 15. நாடாதவன், 16. மடயன், 17. செத்தவன், 18. செவிடன், 19. குருடன், 20. ஊமையன், இவைகளில் ஏதேனும் ஒன்று அவனுக்கு உண்டு என்றால் அப்படிச் சொன்னவன். காபிராவான் (நவூது பில்லாஹி மின்ஹா) இனி ஜாயிஸான சிபாத்து ஒன்று அது முன் சொன்ன இருவகையான 1. தாத்திபா, 2. அபு ஆலியா இந்த இருவகையான சிபாத்தையும் சேராத தனிவகையானது. அதாவது அவனுக்கு உண்டாகி இருத்தலும் இல்லாது இருத்தலும் சமமாய் இருக்கிறது

ஜாயிஸான ஸிபாத்தானது

1.படைக்கிறது, 2. அழிக்கிறது, 3. கொடுக்கிறது, ரிஸ்ஸக் கொடுப்பது சீமானாக்குவது =ஏழையாக்குகிறது = படைக்கிறது, அழிக்கிறது நேர்வழி காட்டுகிறது = பிரயோஜனம் செய்கிறது நேர்வழி காட்டாதிருக்கிறது = தங்கடம் செய்கிறது கொடுக்கிறது = விலக்குகிறது.

இவைபோல் உள்ளவைகளாக இருக்கும்

நபிமார்களின் ஸிபாத்துகள் 9 இதன் விபரம்
வாஜிபான ஸிபாத்துகள் 4 அவை

1. உண்மை, 2. நம்புதல், 3. அவர்கள் கொண்டுவந்ததை ஏவப்பட்டதுபோல் ஜனங்களுக்கு தெரிவித்தல் என்றும் 4. அறிவு எனப்படும் இவைகளுக்கு எதிர் மாற்றமான

முஸ்தஹீலான ஸிபாத்துகள் 4 அவைகள்

1. பொய், 2. துரோகம், 3. ஏவப்பட்டதை பிறருக்கு தெரிவிக்காது மறைக்குதல், 4. மடமை என்றும் சொல்லப்படுகிறது.

ஜாயிஸான ஸிபாத்து ஒன்று அவை மேலே சொன்ன நான்கும் இவர்களுக்கு அறவேயில்லை என்றும் உண்டாகி இருப்பது உண்டு என்றும் மன பிதற்றம் சொல் பிதற்றம் இல்லாது உண்மையை உணர்தல் ஜாயிஸ் என்று சொல்லப்படும்.

www.miskinsha.blogspot.com

அல்லாஹ் இருப்பது எங்கே

அல்லாஹ் நம்முடன் என்னும் அறிவு பிரகாசம் கொண்ட ஒரு அற்புதமான கிதாபில் ஷைக் அப்துல் காதிர் மன்பஈ அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அல்லாஹ்வை அறிவது ஈமான் கொண்டவர்கள் மீது சுன்னத்தாக இருக்கும். நமது மார்க்கத்தின் ஒவ்வொருவரும் அறிந்துக்கொள்ள வேண்டிய முக்கியமாக இருக்கின்றது. இதை அறியாமல் ஈமான் முழுமை அடைய முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவும்.

அல்லாஹுதஆலா நிரந்தரமாக அர்ஸில்தான் இருக்கிறான் என்றும் குர்ஸில் அமர்ந்திருக்கிறான் என்றும் அல்லது கஃபதுல்லாவை தனது வீடாக அறிவித்து அதை சுற்றி வரும்படி ஏவியுள்ளான் என்றும் எண்ணி உண்மையை அறியாது இருப்பது தவறானதாகும். ஏன் என்றால் அல்லாஹு அக்பர் என்றால் அல்லாஹ் மகா பெரியவன் என்று பொருளாகும். மேலும் அல்லாஹ் அர்ஸில்தான் இருக்கின்றான் என்றால் அல்லாஹ்வை விட அர்ஸ் பெரியதாகிவிடும். மேலும் அர்ஸ், அல்லாஹ்வினால் படைக்கபட்டது. அல்லாஹ்விற்கு முன்நாள் இருந்தது இல்லை ஆனதால் அல்லாஹ் அர்ஸின் தான் இருக்கிறான் என்றால் அர்ஸ் உண்டாவதற்கு முன்பு அல்லாஹ் எங்கேயிருந்தான் என்றால் என்ன சொல்வீர்கள் சிந்தித்து பாருங்கள்

அல்லாஹ் அர்ஸில் இருக்கிறான் என்று சொல்வது மறுக்க முடியாத உண்மை இதை மறுப்பவன் காபிர் மேலும் அல்லாஹ் அர்ஸில் மட்டும் தான் இருக்கிறான். வேறு எங்கும் இல்லை என்று கூறுபவர்களும் காபிர் தான் என்றாகிவிடும் ஆகையால் அல்லாஹ் அர்ஸை சூழ்ந்து இருக்கிறான் என்றும் அர்ஸ் அல்லாஹ்வை சூழ்ந்து இருக்கவில்லை என்றும் அறிவதே சரியானதாகும்.

ஏழுவானம் ஏழு பூமி அதில் இருக்கும் அனைத்தையும் தன்னுள் அடக்கியது. குர்ஸ் அதையும் சூழ்ந்துள்ளது அர்ஸ் எனவே அர்ஸில் அல்லாஹ் இருக்கிறான் என்றால் அனைத்து வஸ்துகளிலும் அவன் இருக்கிறான் என்றுதான் பொருள்படும் என்பதால்

குறிப்பு : அவனின் குன்ஹு தாத்தை அறியக் கூடாது.

குர்ஸ் என்பது ஒரு நாற்காலி என்றும் அதன்மீது இறைவன் அமர்ந்து இருப்பதாகவும் கற்பனை செய்வதும் கூடாது. கூறினால் அல்லாஹ்விற்கு வீடு இருப்பதாகவும் அதில் அவன் குடி இருக்கிறான் என்றும் ஆகிவிடும். இது தவறு அப்படி சொல்வது கூடாது மேலும் கஃபத்துல்லாவை தவாபு செய்ய சொல்லி இருப்பதும். ஹஜ்ருல் அஸ்வத் கல்லை அல்லாஹ்வுடைய வலது கரம் என்பது ஹதீஸ் கூறுவதும் அதை முத்தமிடும்படி ஏவப்பட்டதும். இவை எல்லாம் கண்ணியத்துக்கு உரியவைகளே தவற வேறில்லை உதாரணம் : மன்னரின் அரண்மனையை காண மக்கள் கூடுவதும் அதை சுற்றிப்பார்பதும் உலக இயல்புதான் அதேபோல் கஃபாவும் என அறியவும்.

பின்பு அர்ஸின் மீது செவ்வையாகி (அங்கிருந்து எல்லா) விஷயங்களை நிர்வகிக்கிறான் என்று கூறியுள்ளான்

(அல்குர் ஆன் 10 : 3)

இந்த ஆயத்திலிருந்து அர்ஸ் என்பது ஹக்கு தஆலா எல்லா காரியங்களையும் நிர்வாகம் செய்யும். தலைமையகம் போன்றதாகும் என தெரிய வருகிறது. எனவே தான் அதன்பால் நன்மைகள் உயரவும் அங்கிருந்து இறையருள்கள் இறங்கவும் செய்கிறது.

உதாரணமாக : உயிர், உடல், முழுவதும் பரவி இருந்தாலும் இதயத்தில் இருந்துதான் மற்ற உறுப்புகளுக்கு கட்டளைகள் பிறக்கின்றன. அதுபோன்ற சிருஸ்டிகள் அனைத்திற்கும் உள்ளத்தை போன்று ஹக்கு தஆலா. அர்ஸை படைத்துள்ளான். மற்றபடி அவன் அர்ஸில் மட்டும்தான் இருக்கிறான் என்பது அர்த்தமல்ல ஆகையால் அர்ஸிலும் சர்வ கோடி சிருஸ்டிகளிலும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதே ஹக்கான கொள்கையாகும். மேலும் து ஆவின் போது வானத்தின்பால் கைகளை உயர்த்துவது ரஹ்மத் இறங்குவதை எதிர்பார்ப்பதை காட்டுவதற்காகவே ஆகும். அப்படி இல்லை எனில் (வானத்தில் இறைவன் இருப்பதாக கொண்டால்) வானத்தை நோக்கி முகத்தையும் முன்னோக்குமாறு கூறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஹதீஸ் ஷரீபில் அவ்வாறு முகத்தை வானத்தின்பால் முன்னோக்குவதை தடை செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் அழைக்கப்படுவன். (அல்லாஹ் த ஆலா) வானத்தில் மட்டும் இருப்பதாக சந்தேகம் வந்து விடக் கூடாது என்பதற்காகவே முகத்தால் வானத்தை நோக்குவதை தடைசெய்யப்பட்டுள்ளது.

www.miskinsha.blogspot.com

ஹக்கு த ஆலா இருப்பது எங்கே என்று கேள்வியானால் அதற்கு நீங்கள் என்ன பதில் தருவீர்கள்.
ஆலம் கபீரா என்னும் சரீரத்திலா அல்லது
ஆலம் ஸகிரா என்னும் லோகத்திலா
வானத்திலா பூமியிலா கஃபாவிலா : இவைகள் யாவிலும் நிரந்தரமாய் நில்லாதவன் என்பதே நீதியானதாகும். மேலும்
எல்லாமே ஹக்குதான் (சிருஷ்டி என்று ஒன்றில்லை) என்பவன் மடையன்
எல்லாமே பாதில் (சிருஷ்டி தான் ஹக் இங்கில்லை) என்று கூறுபவன் துர்பாக்கியவான் என்றும்
நான் இறைவனல்ல எனினும் தஜல்லி (வெளியாகுவதை) கவனித்து இறைவனை விட்டு பிரிந்தவனும் அல்ல உஜீது (உள்ளமை) பற்றிய பாடத்தில் ஒவ்வொரு (மர்தபா) அந்தஸ்தும் ஒவ்வொரு சட்ட முடையதாக இருக்கிறது. அவற்றை பாதுகாத்து நடந்து கொள்ளவில்லையானால் வழிகெட்டவன் ஆகிவிடுவாய் என்று (மஸ்னவி ஷரீபில்) உள்ளது.

சிலர் சொல்கிறார்கள் இறைவன் இன்ஷானில்தான் இருக்கிறான் என்று சிலர் சொல்கிறார்கள் இறைவன் வேறு இன்ஷான் வேறு என்று இதில் எது முடிவான முடிவு ஹக்கென்று அறியவேண்டும். ஆயுதங்கள் பல நாமத்துடன் பல ரூபங்களில் இருந்தாலும் ஒரே இரும்புதான் என்றும் ஆடைகள் பலவிதமானதாகவும் பல பெயர்களில் இருந்தாலும் பஞ்சு ஒன்றே என்று உறுதிகொள்ள வேண்டும் என்றும் அதாவது மக்கள் யாவரும் ஆதத்தின் மக்களே இதில் உயர்வு தாழ்வு குணபேதம் மொழி பேதம் இனபேதம் என்று காணக்கூடாது என்பது நீதி என்றாலும். இது நாவில் மட்டும் உள்ளதே தவிர இதயம் வரை சென்று நிலைப்பு கொள்ளவில்லை என்பதே உண்மை மேலும் அல்லாஹ் எங்கும் நிறைந்தவன் அவனுக்கு தெரியாமல்.

காய்ந்த ஒரு இலை கூட விழமுடியாது. இன்ஷான் முதல் எறும் வரை எல்லாவற்றிலும் ஏகமயமாய் பிரகாசிக்கின்றவன் இறைவன் அவனில்லாமல் எதுவும் தோன்றவும் முடியாது அவனில்லாமல் எதுவும் வாழவும் முடியாது என்றாலும் எல்லாம் அவனாய் ஆக முடியாது என்பது இல்மை அறிந்த அறிஞர்களின் தீர்க்கமான முடிவாயும் இருக்கின்றது. ஆனதால் இன்ஷான் தன்னை மறந்து புலன் பொறிகளை பூட்டிஒர்மையுடன் பல ஆண்டுகள் போராடி நப்ஸை ஒடுக்கி எல்லாம் அவனே என்று வெற்றி பெற்றவர்களால் மட்டுமே.

நெருப்பில் விழுந்த இரும்பு நெருப்பாய் மாறுவது போல் மாற்றங்கள் கண்ட மாமேதைகள் பலர் செய்து காட்டியும் இருக்கிறார்கள். இப்படி பட்ட நிலையில் மனிதன் தெய்வத் தன்மையை பெற முடியும். சராசரி மனிதர்களால் இவ்விடத்தை பெற முடியாது.

சிலர் வாய் வார்த்தையில் உதாராணம் காட்டுவார்கள். இறைவன் நீர் போன்றும் இன்ஷான் நீர் குமிழி என்றும் இறைவன் விதை என்றும் இன்ஷான் மரம் என்றும் உண்மைதான்

இதை மறுப்பதற்க் கில்லை என்றாலும் தொலைகாட்சி பெட்டியில் வரும் உருவங்கள ஒளிகள் நிறங்கள் காட்சிகள் எல்லாம் தொலைகாட்சி பெட்டியாகி விடமுடியாது. ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஒன்றாய் உண்டும் ஒன்றாய் பழகியும் ஒன்றாய் படுத்தும் ஒன்றாய் இருந்தும் கணவனுக்கு பிடித்தமானதை மனைவி செய்தும் மனைவிக்கு பிடித்தமானதை கணவன் செய்தும் இருமனதும் ஒருமனதாய் இருந்தாலும் திரிந்தாலும், மனது ஒன்றுபடுமே தவிர உடல் ஒன்றுபடாது. ஆணின் படைப்பு வேறு, பெண்ணின் படைப்பு வேறு என்பது திண்ணம். ஆனதால் பிறப்பால் வேறு நிலை பெற்றிருப்பினும் இன்ஷானே நீ மனதால் தெய்வநிலை பெற முடியும். முயற்சி செய் முன்னேறு உன்னால் முடியாதது ஒன்றும் மில்லை. அலட்சியம் செய்யாதே. நீ மாணிக்கமும் அல்ல மண்ணாங்கட்டியும் அல்ல. நீ நடுநிலையானவன் பாடுபட்டால் பலன் பெறுவாய். மற்றபடி தகரம் தங்கமாகாது. தங்கம் தகரமாகாது. ஹக்கு ஹல்காக முடியாது ஹல்க்கு ஹக்காக முடியாது. ஆனால் மனிதன் மனிதனாக வாழ்ந்தால் இறைத்தன்மை பெற முடியும் என்று இன்ஷானுல் காமில் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

www.miskinsha.blogspot.com

அமா நுக்த்தா

குன்து கன்ஸன் மஃபிய்யன்
வ. அஹ் பப்து அன்வு உறப
இதன் பொருள்
நான்மறைந்த புதையலாய் இருந்தேன்
நான் அறியப்படுவதற்க்காக பிரியமானேன் (ஹதீது குத்ஸி)

நபி (ஸல்) அவர்ளிடம் ஒரு அஸ்ஹாபி கேட்டார்கள் யா ரசூலல்லாஹ் அல்லாஹ் கல்க்குகளை படைக்கும் முன்னே எங்கே இருந்தான் என்று அதற்க்கு பெருமானார் சொன்ன பதில் மர்தபத்துல் அமாவில் என்றும்

அல்லாஹுதஆலா என்னை மர்த பதுல் அமா வென்கிற நுக்தாவில் இருந்து ரசூலாக அனுப்பி இருக்கிறான் என்று நபிமணி (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள் அந்த அமாவெனும் இருளில் இலங்கும் நுக்தாவுக்கு

உஜுபு - தன்பு - நுக்தா - ஆதிமூல வித்து - தாத்து - என்றும் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

உஜுதே முத்லக் (சர்வமும் பொதிந்தது) உடைய நிழல் என்றும் மண் தண்ணீர் நெருப்பு போன்றவைகளால் இதற்கு அழிவில்லை என்றும் இன்ஷானிலும் உலகில் உள்ள ஒவ்வொரு உள்ளமையிலும்

இது உண்டாகி இருக்கிறது என்றும் இந்த நுக்தா ஒரு மிருதுவான சிறு எலும்பை போல் இருக்கும் என்றும்

கபுரில் இருந்து நம்மை எழுப்பி வைக்கிறதும்

மஹஸரில் நிறுத்தி கேள்வி கணக்கு கேட்பதும்

உதிப்பு நாட்டம் உண்டாக்குவதும் இந்த நுக்தாவே என்றும்

உலகில் உள்ள எல்லோரின் ஹயாத்தும் இதிலிருந்துதான் ஆனது என்றும் உலகில் உள்ள உஜுது அடங்கலும் இந்த நுக்தாவில் நின்றுமாய் இருக்கும் என்றும் இது பார்வைக்கு தெளிவாய் தெரியும் என்றும் ஹயாத்து, அறிவு, சித்தம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு, இவைகளை உண்டாக்குவது. இந்த நுக்தா தான் என்றும்

இது நமது முதுகுதண்டு எலும்பின் முடிவில் கீழே பலதுல்ஹை என்ற லாம் அலிஃபு உடைய உருவத்தின் உள்பக்கமாக முச்சுடராய் இருக்கப்பட்ட வட்டத்தின் உள்ளால் உந்திக் கமலத்தில் தொப்புளுக்கு எட்டுவிரக் கடைக்கு கீழே ஸபா என்கிற மைதானத்தில் அந்த அமா நுக்தா இருக்கின்றது. இந்த நுக்தாவுக்கு குதரத் என்னும் சக்தி தத்துவம் உண்டாகி இருக்கிறது. இந்த நுக்தா முன்நாள் தாயின் கெர்ப்பத்தில் விழுந்த நுக்தாவாய் இருக்கும். இந்த நுக்தா எல்லாவற்றிலும் இருந்து எல்லாத்தையும் பார்க்கின்றது. மேலும் எல்லா பார்வையும் அதற்குடையதாய் இருக்கின்றது. இதுதான் நாடவைக்கின்றது. இதுதான் நாடுகிறது. தேவையாகிறது. இச்சைப்படுவதும் உதிக்கிறது. எல்லா கேள்வியையும் கேட்கிறது. இவைகள் இதன் சிபத்தாய் இருக்கும்.

இதுவே நமக்கும் மற்றவைகளுக்கும் அல்லாஹ்வால் தாத்தாய் இருக்கும். அந்த தாத்து என்கிற நுக்தாவை பார்க்க சுஹுது (தெரிசனம்) செய்ய குர்ஆனிலும் ஹதீஸிலும் ஆதாரங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனதால் இதை உன் உஸ்தாதிடம் கேட்டு படித்துக்கொள். இந்த தவத்திற்கு மேலான தவம் வேறு ஏதுமில்லை. இந்த தவம் அன்பியாக்களும், அவ்லியாக்களும் கையாண்ட மகா தவமாகவும் பெரிய இபாதத்தாகவும் இருக்கிறது.

ஹக்கு த ஆலாவின் உஜுதிற்க்கு இது ஒரு பாண்டமாகி விட்டது. உலகமானது. அமாவின் வெளித்தோற்றமாய் இருக்கும். இதன் உள் தோற்றம் தான். இன்ஷானாக அமைந்துள்ளது. (ருஹு) இந்த தோற்றங்கள் எல்லாம் ஜவ்ஹர் எனும் பெலம் தான் அமா என்னும் நுக்கத்தாக இருக்கும். மேலும் இது ஆகாச வெளியில் உள்ளமையாய் இருக்கும். அறிந்துக்கொள் சகலப்படைப்புகளும் வெளியாகிறதும் பின்பு மறைகிறதும். இந்த அமா என்னும் நுக்கத்திலாய் இருக்கும். மேலும் இப்படி பல பல சிபத்துக்கள் எல்லாம் இதில் புதைந்து இருப்பதால் நமது ஆரிபீன்கள் இதை அல்லாஹ் என்று கூறினார்கள். ஆதமை அல்லாஹ் தன் சூரத்தில் படைத்தான் என்றதற்க்கு

நபிமணி (ஸல்) அவர்கள் சொல்லும் விளக்கமானது= சூரத்தென்பது கண்ணுக்கு தெரியும் ரூபமல்ல அல்லாஹ்வுடைய தாத்திற்கும் சிபத்திற்கும் செயலுக்கும் உதாரணமாய் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

www.miskinsha.blogspot.com

அரசனான நாட்டம்

அல்லாஹு த ஆலா இன்ஷான்களுக்கு தன் சிபத்துகளால் ஏழு சிபத்துகளை கொடுத்திருக்கிறான். அவைகள்

ஹயாத்து - அறிவு சித்தம் தத்துவம் கேள்வி பார்வை பேச்சு இந்த ஏழில் - ஹயாத்தே பிரதான மானது ஹயாத்து இல்லாது போனால் மற்ற ஆறு சிபத்துகளும் இல்லாமல் போகும். ஆனால் இதில் மற்ற ஆறு சிபத்துகளும் இல்லாதிருந்தாலும் ஹயாத்து இருக்கும்.

ஹயாத்து - அறிவு - குதரத் இந்த மூன்றும் இருந்தும் இறாதத் எனும் நாட்டம். இல்லாது போனால் ஒரு செய்கையும் வெளியாகாது. ஆகையால் சகல செயல்களையும் நடத்தி ஒழுங்குபடுத்துகிறது. சித்தமென்னும் நாட்டம் தான் என்று சொல்லப்படுகிறது இந்த நாட்டம். அது சுயத்தில் மிகவும் தத்துவத்தை உடையது. மனிதனில் இருக்கிற கோபம், ஆசை, நற்குணம், துற்குணம் முதலியவைகளையெல்லாம் ஒழுங்காய் நடத்துகிறது நாட்டம் தான். அது மற்ற ஆறு சிபத்துகளுக்கெல்லாம் இராஜனாய் இருக்கும். அறிவு இதற்கு மந்திரியாய் இருக்கும்.

பெண்ணாசை, பொருளாசை அல்லது கோபம் இவைகள் சித்தத்தை மிகைத்து அதன் அதிகாரத்தை கீழ்படுத்தி அவைகளே ராஜாங்கம் நடத்தும். படி ஆகிவிட்டால் சித்தம் அடிமையாகிவிடும்.

இந்த சித்தம் கீழ்பட்டு இச்சை மேலிட செய்பவர்களை பாவிகள் என்றும் கெட்டவர்கள் என்றும் சொல்லப்படும். பிறரை வசப்படுத்துவது இந்த சித்தத்தின் தத்துவம் தான்.

பற்பல கலைகளும், வித்தைகளும், கண்கட்டிவித்தையும் மெஸ்பரிஸம் மரணமான அர்வாஹுகளை வர வழைத்து பேசுதல் போன்ற பல சித்துவிளையாட்டுகளை சித்தமே செய்கிறதாய் இருக்கும். இந்த சித்தத்தை பிறர் மனதில் செலுத்தினால் அவர் மனதில் உண்டாகிற எண்ணங்கள் நமது மனதில் உதிப்பது போல் இருக்கும். இயற்கை தேட்டங்களும், மற்ற காமம் பசி உறக்கம் இவைகள் சித்தத்திற்கு அடங்கிவிடும். மேலும் ஜின்வசியம் நீரின் மேல் நடக்க நமது ஹுக்கும் தண்ணீரின் ரூஹுக்கும் தொடர்பு ஏறி ஆற்றை பிளக்க நடக்க ரிஸியோகம் அறிவது பயில்வது சித்தத்தின் உபகாரமே.

முஹம்மது கௌஸ்குவாலிரி எழுதிய
1. ஜவாஹிருல் கம்ஸா 2. பதஞ்ஜாலிய்யா என்ற கிதாபுகளை படிக்கவும்.

சிறாஜி ரஹீம ஹுல்லாஹ் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்ஷானை அல்லாஹுத ஆலா தன்னுடைய தாத்துக்கும் சிபாத்துக்கும் செயலுக்கும் உதாரணமாகப் படைத்தான் என்று

அல்லாஹு த ஆலாவுக்கு ஒன்றையும் ஒப்பு சொல்லக் கூடாது. என்றாலும் உதாரணமாக சொல்லக் கூடும்

இன்ஷானுடைய தாத்தை மற்ற உயிருள்ள உயிரில்லாத படைப்புகள் எல்லாவற்றையும் விட்டும் வேறு விதமாக்கினான் அவனின் சொந்த சிபத்துகளாகிய = ஹயாத் தெனும் ஜீவன் x இல்மெனும் அறிவு x இறாதத் எனும் நாட்டம் x குதறத் தெனும் தத்துவம் x சம்கென்னும் கேள்வி பசறெனும் பார்வை x கலாமென்னும் வார்த்தை x இவைகள் சிபத்து மகுனவி என்கிற தோத்தோ டொத்ததாகும். இந்த ஏழுந்தவிற சிபாத்து மஅனிவி உடைய காரணம் கொண்டு உண்டான சிபத்து ஏழு அவைகள். ஹையுன் ஹயாத்துள்ளவன் x ஆலிமுன் அறிவுள்ளவன் முரீதுன் நாட்டமுள்ளவன் x காதிருன் வல்லமையுள்ளவன்ஸமீவுன் கேள்வியுள்ளவன் x பஷீருன் பார்வையுள்ளவன முதகல்லிமுன் வார்த்தையுள்ளவன் x என்னும் ஏழு சிபத்துகளையம் கொடுத்து அவனுடைய தாத்துக்கு உதாரணம் சொல்லக் கூடிய தாக்கிவிட்டான்.

நமது செயல்கள் எல்லாவற்றிற்கும் தொடக்கம் ஆனது நாட்டமாய் இருக்கும். ஒரு எழுத்து எழுத வேண்டும் என்று நாடினால் அது கல்பில் வெளியாகி ரூஹுல் ஹைவானியைக் கொண்டு மூளைக்கு ஏறி தாது நரம்பு வழியாக தசை நரம்புகளில் சென்று பேனாவை பிடித்து காகிதத்தில் அந்த நாட்டம் வெளியாகிறது என்று அறிந்துக்கொள்.

முத்லக்கு என்ற சூரியனுக்கு முகையிது என்ற சந்திரன் நேர்பாடாக வரும் இத்தருணத்தில் தான். இன்ஷான்களின் ஹாஜத் எனும் நாட்டங்கள் நிறைவேறக்கூடியதாக இருக்கிறது. எனவே நீ புத்தி சாதூர்யமுடையவனாக இருப்பின் இந்த நேரம் தப்பிப்போகாதபடி எச்சரிக்கையோடிருந்து உனக்கு ஆகவேண்டிய காரியம் பூராவையும் இந்த நேரத்திலேயே செய்து முடித்துக்கொள். உனது மனதில் ரோஜாமலரின் நினைவு செல்லுமேயானால் நீ ரோஜாமலராக ஆகிவிடுவாய் என்றும் அறிவிப்பவர்கள்.ஹலரத் மவ்லானா அப்துர் ரஹ்மான் ஜாமி(ரஹ்)

குறிப்பு : தாத்து என்றஜலால் x சிபாத்து என்ற ஜமால் சம்பூர்ண ஜோதி வீசும் அதை பார் அதுவே உன் வெற்றிக்குவழி

www.miskinsha.blogspot.com

ஆதம் (அலை) அவர்களை படைத்துது

அல்லாஹு தஆலா நபி ஆதம் அலைஹிஸ் ஸலாமை படைப்பதற்கு கூறிப்படி = மலக்கல் மவ்த்து அவர்கள் பூமியுடைய நாலு திசையிலே நின்றும் உயர்தியிலும், தாழ்த்தியிலும், பரிசுத்தமான பூமியிலும், அசுத்தமான பூமியிலும், சிகப்பான பூமியிலும், கருப்பான பூமியிலும், வெளுப்பான பூமியிலும், கரியாக இருக்கிற பூமியிலும், கடல் மலையாக இருக்கிற பூமியிலும், காடாக இருக்கிற பூமியிலும் உள்ள மண்களெல்லாம் கையில் வரத்தக்கதாக கையால் ஒருபிடி மண் அள்ளிபோய் கசப்பான தண்ணீரைக் கொண்டும், நல்ல தண்ணீரைக் கொண்டும் அந்த மண்ணெல்லாம் களிமண்ணாகுமளவும் குழைத்தார். இதனால்தான் ஆதமுடைய பிள்ளைகளின் குணங்களெல்லாம் பேதக மாயின.

நபி (ஸல்) அவர்களை படைத்தது

அல்லாஹு த ஆலா நபி (ஸல்) அன்னவர்களை படைப்பதற்கு கூறியப்படி ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பூமியின் நடுவிலே நபி (ஸல்) அவர்களின் கபுரில் பூமி மண்ணின் ரூஹில் நின்றும் ஒரு கை பிடி ரூஹான மண்ணை அள்ளிக்கொண்டார்கள். அந்த மண் வெள்ளையாகவும் மிகவும் துப்புறவாகவும் இருந்ததாம். மின்மாயின் x தண்ணீர் x மின் லபுவின் பாலாறு x மின் ஹம்றின் மதுவாறு மின் அசுபின் தேனாறு இந்த நீர்களை ஊற்றி நபியை படைத்த மண்ணை கழுவப்பட்டது.

அந்த மண்ணை தஸ்னீம் என்கிற சுபர்கத்து ஆற்று தண்ணீரைக் கொண்டு குழைக்கப்பட்டது. பின்னர் அந்த மண் வெள்ளையான முத்தை போலாயிற்று பின்னர் அந்த முத்துவை ஆதமுடைய மண்ணில் போட்டு குழைக்கப்பட்டது. பின்னர் நாற்பது வருஸம் வரை குழைந்த மண்ணாக அது இருந்தது. பின்னர் சுட்ட மண் போல கெட்டியாகும் படி உலந்து கெட்டியானது. அது அடிக்கப்பட்டால் சப்தம் உண்டாகிற மண்ணானது. அந்த படி செய்ததெல்லாம் அல்லாஹு தஆலா. குதரத்துக் கொண்டு படைத்தான் என்றாகும். இறைவன் அந்த மண்ணை ஒரு சடல மாக்கினான் அந்த சடலத்தை மலாயித்துக்கள் நடக்கிற பாதையிலே நாற்பது வருஸம் போட்டுவைத்தான். அப்போது அவர் பேசக்கூடிய மனிதனாக இருக்கவில்லை மண்ணினாலே படைக்கப்பட்ட சூறத்தாக இருந்தார் அந்த இடம் மக்கத்துக்கும் தாயுப்புக்கும் நடுவில் என்று சொல்லப்படுகிறது.

ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவ்வல் கலிமாவின் நடு இரண்டு எழுத்துக்களான ஹூம் என்ற ஜெகஜோதியான பிரகாசத்தில் நின்றும் முதல் முதலில் ரூஹை தலை மூளையிலே ஊதப்பட்டது. அந்த ரூஹு அங்கே இருநூறு வருஸம் தங்கி இருந்தது. பின்னர் அது இரண்டு கண்களில் வந்து இறங்கியது. பின்னர் அது குடிமாறி மூக்கந்தண்டில் போய் இறங்கியது. அது சமயம் தலை மூளையில் நெடியேறி தும்மல் உண்டானதும். நபி ஆதம் (அலை) அவர்கள் முதல் முதலில் வாய்மொழியாக அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னார்கள். பின்னர் அந்த ரூஹு ஆதம் நபியின் மார்பின் இறங்கியது. பின்னர் அது விலா எலும்புகளில் இறங்கியது. பின்னர் அது வயிற்றில் வந்து இறங்கியதும் பசி ஏற்பட்டு வஜீபன இச்சை உண்டானது. பின்னர் அந்த ரூஹு சரீரம் முழுவதும் பரவியதும் சரீரமெல்லாம் சதையாகவும், இரத்தமாகவும், எலும்பாகவும், நரம்பாகவும், சவ்வாகவும் ஆகிவிட்டது.

நபி ஸல்லல்லாஹு (அலை) அவர்கள் திருவுளமானார்கள். ஆதமுடைய தலையயையும், நெற்றியையும் கஃபாவுடைய மண்ணில் நின்றும் நெஞ்சையையும், முதுகையையும், பைத்துல் முகத்தஸ் மண்ணில் நின்றும் இரண்டு தொடையையும் எமன் தேச பூமி மண்ணில் நின்றும் இரண்டு கெண்டை காலையும், மிஸ்ருடைய பூமி மண்ணில் நின்றும் இரண்டு பாதத்தையும் கிசாசுடைய பூமி மண்ணில் நின்றும் வலது கையை மஷ்ரீக் உடைய பூமி மண்ணில் நின்றும் இடது கையை மஃரிப்புடைய பூமியில் நின்றும் படைத்தான் என்று

நிச்சயமாக (ஆரம்பத்தில் முதல் மனிதரை) களிமண்ணின் சத்தில் இருந்து சிருஷ்டித்தோம் பின்னர் அதனை நாம் இந்திரியமாக்கி ஒரு பத்திரமான இடத்தில் வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத்தை இரத்தக்கட்டியாக்கினோம். பின்னர் அந்த இரத்தக்கட்டியை மாமிச பிண்டமாகச் செய்தோம். பின்னர் அம்மாமிஸ பண்டத்தில் இருந்து எலும்பை உற்பத்திச் செய்து அந்த எலும்புக்கு மாமிஸத்தை அணிவித்தோம். பின்னர் அதனை (பூரணமாக) மனித சிருஸ்டியாக அமைத்தோம். இவ்வாறு சிருஷ்டித்த அல்லாஹ் பெரும் பாக்கியம் உடையோன் அல்குர்ஆன் *23=12-13-14*

www.miskinsha.blogspot.com

நபி ஆதம் (அலை) அவர்களின் சரீரத்தில் அல்லாஹு த ஆலா அக்குல் எனும் புத்தியை அவருடைய தலைமூளையில் ஆக்கினான். அக்குலுடைய தலையை அவருடைய இரண்டு தாமரை மொட்டிலாக்கினான். கோபத்தை கரு ஈரலில் வைத்தான் சேவக தனத்தை கல்பிலே வைத்தான் பயங்கரத்தை பற்குத்தியில் வைத்தான் சிரிப்பை மாங்காவில் வைத்தான் சந்தோஷத்தையும், துக்கத்தையும் அவரின் முகத்திலே வைத்தான் கைகளும் கால்களும் வலுவாக இருக்கிறதற்காக வேண்டி மூளையிலேயும், கல்பிலேயிலும் இரண்டு வாசலை அவரில் உண்டாக்கினான். அதானது = காதினாலே கேட்கிறதை எல்லாம் கல்பு அறிகிறதும். கண்ணாலே பார்கிறதை எல்லாம் கல்பு பார்க்கிறதுமாய் இருக்கும்.

தொண்டை குழியுடைய ஒடுக்கத்திலே இரண்டு பாதையை உண்டாக்கினான் அதானது ஒன்று ஆகார முதலானது இறங்குகிறதற்காக வேண்டியும் மற்றொன்று தண்ணீர் இறங்குகிறதற்கான பாதையையும் ஆக்கினான். மேலும் ஆதம் நபி அவர்களின் சரீரத்தில் முன்னூற்று அறுபத்து ஆறு (366) பிரிவான நரம்புகளைப் படைத்து வைத்தான் என்று சொல்லி இருக்கிறார்கள்.

சிறு ஆலம் என்கிற நமது சரீரம் விரிந்து படர்ந்துள்ள பெரிய ஆலத்திற்கு ஒப்பாய் இருக்கிறது.

அதாவது இருதயமானது அல்லாஹ்வின் அர்ஸிக்கு ஒப்பாகவும்,
தலைமூளையானது அர்ஸில் அமைந்த குர்ஸிக்கு ஒப்பாகவும்,
மலாயிகத்துக்கள் என்பது பஞ்சேந்திரியங்களுக்கு ஒப்பாகவும்,
நரம்புகள் சந்திர சூரிய நட்சத்திரங்களுக்கு ஒப்பாகவும்,
தசை நரம்புகள் தபீயத் என்கின்ற தத்துவங்களுக்கு ஒப்பாகவும்,
கல்பில் உண்டாகிற எண்ணம் லவ்ஹுல் மஹ்பூலுக்கு ஒப்பாகவும் உள்ளன.

ஆதம் சரீரத்தை மலாயிகத்துக்கள் கூட்டங்கள் பார்த்து பார்த்து ஆச்சரியப்படுவார்கள். அதற்கு முன்னாலே இந்த சூரத்து போலே ஒருவரையும் மலாயிகத்துகள் பார்த்ததில்லை ஆனதால் புதுமையானார்கள் இபுலீசும் ஆதம் அருகே போய் அவரை பார்த்து தன் கையை கொண்டு அவரை அடித்தான். பின்னர் அவரின் வாய்க்குள் புகுந்து உள்ளே போய் பின் துவாரத்தின் வழியாக வெளியானான் என்றும் கூறப்பட்டுள்ளது.

பூதங்களின் ஜவ்ஹரார்
(ஆலம் ஸகீரா)

அவன் உலகத்தின் ரட்சகன் வானங்களான உன்னதமான படிவங்கள் வெளிப்பட்டதும் பூமியான மிகக்கீழேயுள்ள படிவங்கள் வெளிப்பட்டதும் இவை. இரண்டுக்கும் இடையில் உள்ளவை யாவும் வெளிப்பட்டதும். அவனால் தான் நீங்கள் மெய்யுறுதி கொண்டால் அது விளங்கும்(அல்குர்ஆன் 26=24)

ஹு என்ற ஓர் எழுத்து ஆகாயமாய் எழுந்தது இது பூமிக்கும் வானத்திற்கும் நடுவாக இருக்கும் இதற்குமேல் காற்று மண்டலமும் இதற்கு கீழே இருள் மண்டலமும் நிறுவப்பட்டுள்ளது. மேலும் அல்லாஹு த ஆலா வானத்தை இரண்டு நாட்களிலும் பூமியை இரண்டு நாட்களிலும் இதன் நடுவான மத்தியில் உள்ளதையும் ஆறு நாட்களிலும் படைத்தேன் என்று குர்ஆன் ஷரீபில் கூறி இருக்கிறது யாதெனில் வானம் என்றது ஆலம் ஸகீறா எனும் சரீரத்தில் முண்டக கமலத்தில் ஏழு உறுப்புகளும் பூமி என்றது. இருதயக்கமலம் உந்திக்கமலங்களில் ஏழு உறுப்புகளுமாய் இருக்கும் இதன் மத்தியில் உள்ளது என்றது. கல்பை தழுவிய புத்தியின் வீடாகிய மூளைஸ்தானமாய் இருக்கும் இதுவே ஆ . . . . காயம் . . . என்று சொன்னதாக இருக்கும் இதில் உள்ள உலகங்களும் இதில் நிறைந்துள்ள தத்துவங்களும் மனதின் தத்துவங்களாய் இருக்கின்றன மனமோ அறிவின் தத்துவத்தில் அறிவோ ஆத்மாவின் தத்துவத்தில் ஆத்மாவோ தாத்தை தழுவியதாய் இருக்கின்றன = இதை பூத ஆகாயம் மன ஆகாயம் ஆன்மா காயம் பிரம்மா காயம் என நான்கு பிரிவுகளாய் இன்ஷானில் சிர்ரான இந்த ஆகாயத்தை சொல்லலாம். இந்த ஆகாயத்திற்கு அசலாய் உள்ளது. ஒரு போதும் அழியாத ஹு. என்னும் தாத்தாக இருக்கும். மண், தண்ணீர், காற்று, நெருப்பு இந்த நான்கு பூதங்கள் இயங்க தலைமை செயலகமே ஆகாயம் என்று சொல்லப்படும். மேலும் பூமியை சூழ ஆகாயம் இருக்கிறது. சந்திரனை சூழ ஆகாயம் இருக்கிறது. நாம் அதனை பார்க்கமுடியாது. அதன் நிறங்களை மட்டும் காண முடியும். ஆண்டவனின் அம்ஸமே ஆத்மா. ஆத்மாவின் அம்ஸமே ஆகாயம் எனப்படும்.

அல்லாஹ் நம்மில்

பூவில் வாசம் போலும் x விறகில் நெருப்பை போலும் கரும்பில் சாறு போலும் x பாலில் வெண்ணை போலும் எள்ளில் எண்ணைபோலும் x நீரில் ருசியைப்போலும் நிறைந்து உள்ளான்.

www.miskinsha.blogspot.com

ஆகாய சுனன்ஹரிமத்து
(ஆலம் கபீரா)

தத்துவ ஞானத்தின் படி அக்னி ஜூவாலையானது. நீராவி முதலியவைகளை மேல் நோக்கச் செய்யவும் காரணமாய் இருப்பது. பூமியில் இழுப்பாகிய (ஈர்ப்பு விசை) அல்லது கருமகருஷணம் மாகும். அது எது என்றால் பூமிக்கு சமீபத்தில் உள்ள ஆகாயம். தடிப்பாகவும் மேல் நோக்கி செல்ல செல்ல மெல்லியதாகவும் இருப்பதால் நீராவியும் அக்னி ஜூவாலையும் தன் சமூகத்தில் இருக்கிற ஆகாயத்தை உஷ்ணப்படுத்தி மெல்லினமாக்கிவிடுகிறது. ஆகையால் தடிப்பான ஆகாயமானது நெருங்கி வியாப்பிப்பதற்காக உஷ்ணப்படுத்தப்பட்ட ஆகாயத்தை நீராவி அக்னிஜூவாலையோடு மேலே எழும்பிவிடுகின்றது. ஆகையால் மேலே இருக்கிற ஆகாயத்தில் மெல்லினமும் உஷ்ணப்படுத்தப்பட்ட ஆகாயத்தின் மெல்லினமும் சேர்கின்றது. மற்றபடி ஆகாயமானது பூமியின் கவர்ச்சியினால் கீழ் நோக்கிக்கொண்டே இருக்கிறது. ஆகையால் பூமி, ஆகாயம் வாண ஆகாயத்தை விட தடிப்பாக இருக்கும்.

அல்லாஹூ த ஆலாவின் ஆசை என்ற நுக்கா வானது பாரதூரமான பேரொளியாகி விரிந்து படர்ந்த

சீன் என்னும் சிர்ரு ஒரு வெட்டவெளியாகி இதில் இருந்து.

நூன் என்னும் நூர் (ஒளி) உண்டாகி இதில் இருந்து

நூன் என்னும் நார் நெருப்புஉண்டாகி இதிலிருந்து

ஹே என்னும் ஹவா காற்று உண்டாகி இதில் இருந்து.

மீம் என்னும் மாஉ தண்ணீர் உண்டாகி இதில் இருந்து.

தே என்னும் தூராபு மண் உண்டாகி உதயமாயின

ஒரு பொருளுக்கும் வேறொரு பொருளுக்கும் நிக்காஹூ நடந்து வேறொரு பொருள் உற்பத்தியாக வேண்டும் என்று கூறுவது போல் நெருப்பில் இருந்து காற்றுண்டாகி காற்றில் இருந்து தண்ணீர் உண்டாகின்றது என்றால் நெருப்பில் தண்ணீர் இருக்கிறது என்றாயிற்று. இவை ஒன்றுக்கு ஒன்று பகையாயிற்றே. எப்படி ஜோடி சேரமுடியும். இதோ விபரம் = உஷ்ணம் ஹறாறத்து குளிர் புறூறத்து ஈரழிப்பு றுத்தூபத்து உலர்தல் எபூசத்து ஆக இந்த நான்கைக் கொண்டு பூதங்களாயிற்று

உஸ்னமும் உலர்தலும் = சேர நெருப்புண்டாயிற்று என்றும்
உஸ்ணமும் ஈரழிப்பும் = சேர காற்றுண்டாயிற்று என்றும்
ஈரழிப்பும் குளிரும் = சேர தண்ணீராயிற்று என்றும்
குளிரும் உலர்தலும் = சேர மண்ணாயிற்று என்றும் இதுவே சரியான பூதங்கள் பிறப்பு என்றும் முஹ்யித்தீன் இப்னு அரப் கூறி இருக்கிறார்கள்.

www.miskinsha.blogspot.com

இவ்விதமாகிய ஆகாயமானது. மண்ணுடைய உண்மையும் சக்தியையும் வாங்கி வானத்திற்கு அனுப்புகிறது தண்ணீருடைய உண்மையும் சக்தியையும் வாங்கி சந்திரனுக்கு அனுப்புகிறது காற்றுடைய உண்மையும் சக்தியையும் வாங்கி நட்சத்திரத்திற்கு அனுப்புகிறது நெருப்புடைய உண்மையும் சக்தியையும் வாங்கி சூரியனுக்கு அனுப்புகிறது இவ்விதமான மண், தண்ணீர், காற்று, நெருப்பு இவைகளின் உஜூது எனும் உள்ளமைகளை ஒன்று கூட்டி ஒருவஸ்துவை படைக்க வேண்டுமானால் மேல் கூறிய நான்கு பூதங்களுடைய மூலப்பொருட்களான ஜவ்ஹர்களை ஒன்று சேர்த்து ஹக்கு சுபஹான ஹூவத்த ஆலா வுடைய ஹக்கில் கலந்துஉருவாகிறன்து.

பூதங்களில் அசுத்தங்கள்

மண் அசுத்தமாவது : மலம், ஜலம், ஹைள் நிபாஸ், குப்பை தெரு புழுதி, உப்புமண் பாறைமண் போன்றவைகளாலும் இது நீரில் கரையுதலாலும் இதை அசுத்தம் எனப்படும்.

தண்ணீர் அசுத்தமாவது : அலை சிதறும், நீர்துளி, குமிழி, நுரை சேறு, பாசி படர்தல் போன்றவைகளாலும் இது நெருப்பில் ஒடுங்குதலாலு இதை அசுத்தம் எனப்படும்.

நெருப்பு அசுத்தமாவது : புகை பொரி பாகம் செய்தல், சுடர் விடுதல், காற்றில் அணைந்துவிடல் போன்றவைகளாலும் இதை அசுத்தம்எனப்படும்.

காற்றில் அசுத்தமாவது : துர்வாசனை, புழுதி படலம், புயல், சூறாவளி போன்றவைகளாலும் மேலும் இது ஆகாயத்தில் ஒய்ந்துஒடுங்குவதாலும் இதை அசுத்தம் எனும் கழிவு எனப்படும்.

ஸ்தூலசரீர அசுத்தங்கள் : வாதம் பித்தம், சிலேத்மம், நஜீஸான, நவதுவாரங்கள் ஒல்லியானது அதிக குண்டானது கூன் குருடு ஊமை மூடன் செவிடு சப்பாணி போன்றவற்றாலும் கால கணக்குப்படி மவுத்தாவதாலும் இது அசுத்தமாகும்.

ஹயாத்தான பூதங்களும் அழியும் பூதங்களும்

உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரில் இருந்து படைத்தோம் (அல்குர் ஆன் 21:30)

மவுத்தைக் கொண்டு ரூஹு பிரிந்தால் சரீரத்தின் ரூபம் குழைந்து மண் மண்ணோடும் தண்ணீர் தண்ணீரோடும் காற்று காற்றோடும் நெருப்பு நெருப்போடும் போய் சேர்ந்துவிடும். மீண்டும் மீண்டும் உயிர் பெறும்.

மனித ஹயாத்துக்கு தேவைகளான ஆக்ஸிஜன் எனும் ஜலவாயுவு ஹைட்ரஜன் எனும் பிராண வாயுவு நைட்ரஜன் எனும் உப்புவாயுவு இவைகள் மனித ரூஹு பிரிந்துவிட்டால் இந்த வாயுக்கள் வெளியாகி காற்றுடன் கலந்துவிடும். மீண்டும் மீண்டும் உயிர் பெறும்.

தண்ணீர் நெருப்பினால் வற்றி ஆவியாய் காணாமல் போனால் அந்த நீர் அற்றுப்போய்விட்டது என்று நினைத்து விடாதே. அது ஆவியாய் ஆகாயத்திற்கு சென்று மேகமாகி தண்ணீராய் திரும்பவும் பூமியில் விழும். நீ குடிக்கிற தண்ணீர் அற்றுப் போகிறதென்று நினையாதே, அது சரீரத்திற்கு சென்ற பின் மலமாகவும், ஜலமாகவும், வியர்வையாகவும் வெளியாகித் திரும்பவும் தண்ணீர் ஆகி விடும்.

இதுபோலவே அல்லாஹு த ஆலா படைத்த படைப்புகளில் மூலப்பொருள் எனும் ஜவ்ஹர் அற்று போகிறதும் குறைகிறதுமில்லை. அதிகமாகிறதும் இல்லை.

(அழியும்பூதங்கள் என்றது)

இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் (இதன்பொருள்) திட்டமாக நாம் அல்லா(ஹ்) உடையவர்களே மேலும் நாம் அவனிடமே மீளுகிறவர்களாக இருக்கின்றோம். (அல்குர்ஆன்2=156)

இறைவன் தன் படைப்பை தொடராத ஓர் காலநிலையில்

மண்ணே நீ ஜலத்தில் கரைந்துவிடு x ஜலமே நீ அக்னியில் வற்றிவிடு அக்னியே நீ காற்றில் திசையற்று போய்விடு x காற்றே நீ ஆகாயத்தில் அடங்கிவிடு ஆகாயமே நீ ஒன்றில்ஒன்றாக இந்த அய்ந்தின் எண்ணங்களையும் கல்பை விட்டும் நீக்கிவிடுவாயாக

நப்ஸே நீ உனது நக்ஸை (அமைப்பு) கல்பு என்கின்ற பலகை விட்டும் அழித்துவிடு

ரூஹே நீ ஜிஸ்மு (சரீரம்) உடைய கொழுகுதலை உதரி விடுவாயாக

அறிவே நீ என்னுடைய கல்பில் இன்மையாகிப் போவாயாக

இது பூதங்களுக்கு தாத்து விடும் கட்டளையாகும்.

அன்னையும் பிதாவும்

அல்லாஹு சுபஹான ஹுவத்த ஆலா வில் நின்றும் அன்னல் நபி (ஸல்) அவர்களை தொடர்ந்து = நம்முடைய பூர்வீகத்தை நோட்டமிட்டு பார்த்தால் நாம் வெட்டவெளி என்னும் தாத்து முத்லக்கா இருந்து அறிவென்னும் நூறாகி ரூஹுல் குத்ஸி பரிசுத்த ஆன்மா என்ற நாமம் பெற்று பின்பு உஷ்ணம் - சதுப்பு - குளிர்ச்சி - வறட்சி என்ற தன்மைகளாகி - மண் தண்ணீர் காற்று நெருப்பு - என்ற தன்மைகளாகி பின்பு தாய் தந்தையின் ஊன் குடிப்பு முதலியவைகளாகி உட்சென்று பின்பு அவ்வூனின் சத்துக்கள் என்ற தன்மையில் இருந்து உதிரமாகி பின்பு தாய் தகப்பனின் நாட்டமாக உதயமானதும் பின்பு அவர்களின் இஸ்க்கானதும் அந்த இஸ்க்கு பொங்கி ஒரு துளி நீராகி நுத்பா வென்ற தன்மையின் நுக்தா என்ற கோலத்தில் மறைந்து (மத்தென்ற) தந்தைக்குறி வாகனத்தில் ஏறி சவாரியாகி (சத்தென்ற) தாய் குறி வாசல் வழியே பாய்ந்து கர்பக்கோள் குகையில் தரித்து ரூஹானி என்ற தத்தவம் உண்டாகி அலிஃப்பு முதல் ஏ வரையில் உள்ள முப்பது அரபி அட்சரங்களை சிரசு முதல் பாதம் வரை சித்தரிக்கப்பட்டு இருநூற்று எண்பது நாள் முடிந்து ஸ்தூல சரீரம் பனிக்குடம் என்ற கடல் மடையை உடைத்து (பர்ஜ்) வாசல் வழியே தலையை நீட்டி இந்த பூ மண்டலத்திற்கு வந்ததே மஃரிபா என்று சொல்லப்படும்,

தாய்வயற்றில் சதைக்கட்டியாய் இருந்த சுரூபம் நாற்பது நாள் சென்றப்பின் முதல் முதலாக சிரசில் நான்கு கலிமாவை பதியவைத்து மூடிப்போட்டு வைத்தான். அந்த கலிமாவானது (1) வது ரூஹ் (2) வது ரூஹானி எனும் ஆங்காரம் (3)வது சீதேவி தனம் (4) மூதேவித் தனம் எனப்படும். பின்னர் சரீரம் வளர்ந்ததும் ரூஹு புகுந்து அழகும் தெளிவும் வந்தவுடன் ஹயாத்து பொருந்தி மதானிய்யாவின் கோலத்தில் நிரம்பிவிடும் அப்போதுதான் மலக்கானிய்யாவின் புறத்தால் தரப்படும். வஜீபனங்கள் யாவும் விக்காமல் ஜீரணமாகும். அப்போது நாவு ருசிதேடும்

ஹயாத்து உதயம்

அந்த ஜடலம் தரிக்கிறதற்க்கு முந்தி நாதத்தில் இருந்த அக்னி காந்தியானது தான் ரூஹாக இருக்கும். அதுவே அவ்வள் நாட்டம் அதுவே அறிவாக இருக்கும் அதில் நின்று வெளிப்பட்டதே ஹயாத் இருக்கும் ஆனதால் தான் ரூஹு தாத்து என்றும் ஹயாத்து சிபாத்து என்றும் இருக்கிறது. அதுவே கருமத்தில் பாவா ஆதமும் பீவி ஹவ்வாவுமாய் உள்ளது.

www.miskinsha.blogspot.com

எவனொருவன் இம்மையில் தன்னை இன்னான் னென்று அறியாத அறியாமை (அஞ்ஞானம்) என்ற குருட்டு தனத்தினால் குருடனாக இருந்தானோ அவன் மருமையிலும் தன்னை அறியாக்குருடனாகவே இருப்பதன்றி பாதையில் வழி தவறிய வனாகவும் இருப்பான் (அல்குர் ஆன் 17=72)

அல்லாஹு தஆலா இன்ஷான்களின் தேக அமைப்பை = நான்கு விதமாக ஸ்தூலம் - சூட்சுமம் - காரணம் - மகா காரணம் எனும் சரீரங்களை பால், தயிர், மோர், வெண்ணை, போன்ற அமைப்பில் ஆக்கியுள்ளான்

நாசூத் எனும் வெண்ணை ஸ்தூலத்திற்கு ஒப்பாயும்,
மலகூத் எனும் மோர் சூட்சுமதேகத்திற்கும் ஒப்பாயும்,
ஜபுரூத் எனும் தயிர் காரண தேகத்திற்கும் ஒப்பாயும்
லாஹூத் எனும் பால் மகாகாரண தேகத்திற்கு ஒப்பாயும்
உள்ளன.

பால் என்றது அஹது என்றும் தயிர் என்றது அஹதியத்து என்றும் மோர் என்றது வஹ்தத்து என்றும் வெண்ணை என்றது வாஹிதியத் என்றும்

லாஹூத்தெனும் மகா காரண தேகத்திற்கு உதாரணமான பாலும் ஜெபுரூத் எனும் காரணதேகத்திற்கு உதாரணமான தயிரும் இவைகளுடைய இருதேகமானதும் அறிவு சம்பந்தமாகவும் நாமமாகவும் உள்ளன.

மலகூத்தெனும் சூட்சுமதேகத்திற்கு உதாரணமான மோரும் நாசூத்தெனும் ஸ்தூலதேகத்திற்கு உதாரணமான வெண்ணை இவைகளுடைய இருதேகமானதும் ஜடசம்பந்தமாகவும் அடையாளமாகவும் உள்ளன.

காரணமும், மகா காரணமும் இல்லாது x ஸ்தூலமும் சூட்சுமமும் அகப்படாது ஸ்தூலதேகத்தையும் சூட்சுமதேகத்தையும் கொண்டுதான் காரண தேகத்தையும் மகா காரணதேகத்தையும் சேரவேண்டும்.

வெண்ணையை நாசூத்தெனும் ஸ்தூல தேகமாகவும் அதை ஓர் நினைவால் சுஹூது தியான அக்னியால் உருக்கினால் ஹக்கு த ஆலா வெனும் நெய்யை உவமானத்துக் ஆரிபீன்களால் கூறப்படுகிறது.

சந்திரனானது சூரியனுக்கு நேர்கோட்டில் வரும்போது பூரண சந்திரனாக ஆகுதல்போல் சூரியனையன்றி கொஞ்சமும் சந்திரனுக்கு ஒளிவென்பது கிடையாது. இதுபோல் நாசூத்துக்கு லாஹூத்தின்றி உஜூது எனும் உள்ளமை கொஞ்சமும் கிடையாது. அதாவது பால் இல்லாமல் வெண்ணை உண்டாகாது என அறிய வேண்டியது.

அறிந்துக்கொள் : நித்திரை விழிப்பிலும் விழிப்பு நித்திரையிலும் மறைந்து விட வேண்டும். காரணலோகமாகிய ஜபுருத் சூட்சும லோகமாகிய மலகூத்தில் சேர்ந்து விட வேண்டும்.

பெண் வயிற்றில் பிள்ளை தரிப்பது போல் சூட்சுமமானது ஸ்தூலத்தில் வந்து விட வேண்டும்.

லாஹூத்து, ஜபுருத்து, மலக்கூத்து ஆகிய மூன்றும் சரீரத்தை போன்றும் நாசூத்து தான் இவற்றிற்கு உயிர் போன்று இருக்கிறது. அந்த உயிருக்கு உயிர் தான். இன்ஷான் ஆகிய மானிடனாக இருக்கிறான் என அறியவும். மேலும்

பாலிலே நான்கு திரைகளும் தயிரில் மூன்று திரைகளும் மோரில் இரண்டு திரைகளும் வெண்ணையில் ஒரு திரையும் ஆக பத்து திரைகளை கடந்து தான் கல்குகள் ஹக்கில் ஹக்காக சேர வழி உண்டாகி இருக்கிறது.

இதன் விபரங்களில் பாலில் நான்கு திரைகள் யாதெனில் ஆலங்களுக்கு ஆதாரமாய் இருப்பதால் ஆலநபி (ஸல்) அவர்கள் சரீ அத்து இன்ஷானின் வடிவம் இவர்களில் ஆனதினாலே ஆதம் நபி அலை ஹிஸ்ஸலாம் = தரீகத்து ஞானமார்க்கம் இவர்களால் உண்டானதாலே இபுறாஹீம் அலை ஹிஸ்ஸலாம் = ஹக்கீகத்து ஞானத்தின் தலைவாசல் இவர்களான படியால் ஹஜ்ரத் அலீ (ரலி) மஃரிபத்தாகும்

1. சரீஅத்து என்றால் = நேர்வழியில் நின்று சிறுபாவம், பெரும்பாவம் செய்யாமல் மிகவும் சாதுவாக நடத்துக்கொள்கிறது.

2. தரீகத்து என்றால் = ஒரு குருவின் கையைப்பிடித்து அல்லாஹ்வின் இல்மை தெளிவாக விளங்கிக்கொள்கிறது.

3. ஹகீகத்து என்றால்= சர்குருவின் சொல்லையும் மற்றவைகளையும் உண்மை படுத்திக்கொள்வது

4. மஃரிபத் என்றால் = புலன் பொறிகளை அடக்கி தவத்தில் இருந்து மனதை ஓர்மை செய்து நாளாவட்டத்தில் பக்குவமாகி சமதியத்துடன் பழகி ஹக்குடன் ஒன்றுப்பட்டு தன்னை பனா செய்து வஹ்தானியத்தில் மூழ்கி ஹக்கில் பனா ஆவது எனப்படும்.

ஜிப்ரயீல் சரீகத்து x மீக்காயீல் தரீகத்து
இஸ்ராபீல் ஹகிகத்து x இஸ்ராயீல் மஃரிபத்து
மெய்ஞானம் எனும் மரத்திற்கு
விதை சரீஅத்துx கிளைகள் தரீகத்து
வாசனையான பூ x ஹக்கீ கத்து
இன்பமான பழம் மஃரிபத்தாகும்
சரீஅத்து தௌராத்து வேதம் x தரிகத்து ஜபுர் வேதம்
ஹக்கீகத்து இன்ஜில் வேதம் x மஃரிபத்து குர்ஆன் ஷரீப்

www.miskinsha.blogspot.com

தௌஹீது எனும் சரீரத்திற்கு

தோலாகிறது சரீஅத்து x சதையானது தரீக்கத்து
எலும்பானது ஹக்கீகத்து x மூளையானது மஃரிபத்து

கீழ் உலகமானது பிண்டத்தில்

சரீஅத்து பற்க்குத்தி என்றும் x தரீக்கத்து நுரைஈரல் என்றும்
ஹக்கீகத்து கருஈரல் என்றும் x மஃரிபத்து தாமரைக்காய் என்றும்

குர்ஆன் எழுத்துக்களில்

அலிஃபு முதல் ஏ வரை சரீஅத்தாக இருக்கும்
தாள் முதல் ஸாதுவரை தரீக்கத்தாக இருக்கும்
ஸாது முதல் காப்வரை ஹகீகத்தாக இருக்கும்
காப் முதல் ஏ வரை மஃரிபத்தாக இருக்கும்
இன்ஷானில் உண்டாகும் வார்த்தை சரீஅத்து
சுவாசமாகிய வாசியானது தரீகத்து
காதின் கேள்வி ஓசையானது ஹகீகத்து
இருகண்களில் ஒளியானது மஃரிபத்தாக இருக்கும்

குர் ஆன் ஷரீபில்

ஹாமீம் என்றது சரீஅத்து x யாஷீன் என்றது தரீகத்து
தாஹா என்றது ஹக்கீகத்து x அன்நபுஸல் மூஃமினத்
என்றது மஃரிபத்து

நபிமணி (ஸல்) அவர்களுக்கு

பர்ளான காரியங்களை சரீ அத்தாகவும்
லாம் என்ற சுஜூதை தரீகத்தாகவும்
வாஜிப் என்றதை ஹக்கீகத்தாகவும்
சுன்னத்தான காரியங்களை மஃரிபத்தாகவும் ஆக்கினார்

முஷாஹிதா ஆசன இருப்பு சரீஅத்தாயிற்று
முறாக்பா நினைவுகொள்வது தரீகத்தாயிற்று
இர்ஸாது என்ற உறுதி சாதனை ஹக்கீ கத்தாயிற்று
சர்குண கோலம் காமிலாகிறது மஃரிபத்தாயிற்று

லாஇலாஹ இல்லல்லாஹூ திக்ரானது சரீஅத்து
இல்லல்லாஹூ என்று சொல்வது தரீகத்து
மூஉ மினல்லாஹ் திக்ர் ஹகீகத்து
அல்லாஹ் என்று செய்கிறது முஹம்பத்தாகும்
முஹப்பத் தென்பது முஹ்யித்தீனாக இருக்கும்.

வாஜிபுல் உஜீத் எனும் சொல்வது சரீஅத்தாகவும் மும்கினுல் உஜீத் எனும் திரும்புவது தரீகத்தாகவும் மும்தனவுல் உஜீத் தெனும் பார்ப்பது ஹக்கீகத்தாகவும் ஆரிபுல் உஜீத் தெனும் யோசிப்பது மஃரிப் பத்தாகவும் உள்ளது

வாஹிதுல் உஜூத் தென்பது தன்னை மறந்து மஸ்தாய் இருப்பது எனப்படும்.

இல்முல் எகின் என்பது படித்ததை உறுதி செய்வது சரீஅத்துஅய்னுல் எகின் என்பதுகண்ணால்கண்டதை உறுதி செய்வது தரீகத்து ஹக்குல் எகின் என்பது உறுதி செய்ததை செயலாக்குவது ஹகிகத்து கமாலுல் எகின் எனபது இல்மை கொண்டு தாத்தை துதிப்பது மஃரிபத்து

தையுபுகலிமா சரீஅத்து x ஷஹாதத்கலிமா தரீக்கத்து தன் சீஹூகலிமா ஹகீகத்து x தஸ்பீஹானது மஃரி பத்தாயும் இருக்கிறது.

நமது கண்களின் நடுவில் இருக்கும் பாப்பா ஒளிவாக தோன்றும் நுக்தா என்ற சிறு வட்டச் சுடரின் மகாமில் நான்கு மூலைகள் உண்டு அவைகள் சரீஅத்து தரீக்கத்து ஹக்கீகத்து மஃரிபத்து என்ற இவைகள் நாம்கொண்ட ஈமானுக்கு நான்கு தூண்களாக இருக்கும்

இதின் நடுக்கால் தவ்ஹீதாகும் இதுவே மகாமே முஹப்பத்தாக இருக்கும் இவைகள் மேலே சொன்ன பாலின் திரைகளாகிய நான்கு பாதைகள் எனப்படும்

இந்த திரைகளை விலக்கி செல்லும் தடமே பாதை என சொல்லப்படுகிறது.

இனி - தயிரில் மூன்று திரைகள் என்றது

அஹது உஹது வாஹிது எனும் தனிமைகளை அறிவதும் அல்லா ரசூல் ஆதம் எனும் முச்சுடர்களை அறிவதும் அலிஃபு லாம் மீம் எனும் அட்சரங்களை அறிவதும் பதி, பக்தி, பாசம் எனும் முக்கூறுகளை குடிகொள்வதும் ஆணவம், காமியம், மாயை எனும் மும்மலம்களையும் நீக்குவதும் மண், பொன், பெண் போன்ற பேராசைகளை நீக்குவதும் காமம், வெகுளி, மயக்கும் போன்ற குற்றங்களை செய்யா திருப்பதும் வாதம், பித்தம், சிலேத்மம் போன்ற தோஷங்கள் வராமல் விரதம் கொள்வதும் சூரிய கலை, சந்திரகலை, அக்னிகலை எனும் மும்மண்டல சுவாசம் பழகுதல் ஹா - ஹூ - ஹி என்று வாசியில் ஏற்றம் இறக்கம் செய்து வருகுதல் போன்றவற்றை பிழையின்றி பயின்றி வந்தால் மேலே கூறிய தயிரின் திரைகள் விலகி மூன்று பாதைகளிலும் செல்ல அல்லாஹூ த ஆலா எனக்கும் இதை பயில்பவர்களுக்கும் அருள்புரிவானாக

www.miskinsha.blogspot.com

இனி மோரில் இரண்டு திரைகள் என்றது சுக்கிலம், சுரோனிதம் என்ற தாய் தகப்பனின் கருப்பொருள் என்ன வஸ்து என்றும் அது எவ்விதம் உண்டானது என்றும் ஆராய்ச்சி செய்து பெற்றோரை மதிப்பதாகும். அல்லாஹு த ஆலாவின் கட்டளைகளான ஏவல் எனும் ஹாலாளை கடைபிடித்து விலக்கல் எனும் ஹராமை விலக்குவதாகும்.

இல்லறம் துறவறம் எனும் இருஅறம் தனில் இல்லறத்தில் துறவறம் காண்பதும் இம்மை மறுமை இருஉலகுதனில் மறுமைக்கு தேவையானதை இம்மையில் கஷ்டங்களை தாங்கி தேடிக்கொள்வதும் ஆகும்

இனி வெண்ணையில் ஓர் திரை என்றது

அல்லாஹுவே வானங்கள் இன்னும் பூமியின் நூர் (ஒளி) யாக இருக்கிறான் (அல்குர் ஆன் 24:35)

நப்ஸ் ரூஹு கல்பு என்ற மூவுலகங்களையும் இர்பான் ஆகிய அறிவு எனும் செக்கில் போட்டு ஆட்டி எண்ணையை எடுத்தாகியில் அதுவே நூர் ஒளிவாக இருக்கும்

எவனொருவன் இந்த நூரைக்கொண்டு நூர் ஆகிவிட்டானோ மரணம் மின்மை என்ற முத்து கைவசமாகிவிட்டது. அந்த நேரத்தில் நன்றியும் நன்றிசெலுத்துபவனும் இல்லாததாய் இருக்கின்ற படியால் தியானமும் ஞானமும் அற்றுப்போய் ஜபமும் தபமும் எறிந்து போய் ஒரு வகை மறதி மனதில் வரும். இந்த தானத்தில் நினைவை விட மறதி நலமாயும் மஹபூபு ஆகவும் இருக்கிறது. ஆகையால் நீ நினைவற்று இருப்பாயாக இந்த நினைவு உயிராகவும் மறதிநூராகவும் இருக்கிறது. நினைவு மறதியில் இருந்து உண்டானதே தவிர மறதி நினைவில் இருந்து உண்டானதில்லை ஏனெனில் மறதி முந்தியும் நினைவு பிந்தியுமாய் இருப்பதால் மனம் நினைவுவந்த பிறகு சந்தோஷம் அடைகின்றது. ஆகையால் சிறப்பானவனே மறதி உருகிய பின்பு தான் நினைவு ஏற்படும் என்றிருப்பதால் இந்த நினைவை அநியாயமாக வீணில் செலவு செய்துவிடாமல் இல்லறத்தில் துறவறமாய். ஒரு தனிமையான இடத்தில் இருந்து காலையும் மாலையும் ஈடில்லா இறைவனை ஓர்மையுடன் நினைத்து மற்றவைகளை மறந்து இருந்தால் கரந்த பாலில் முகம் தெரியாது பின்னர் காய்ச்சிய பாலில் முகம் தெரிவதுபோல் அல்லாஹுவின் நூர் நூரே முகமதியாய் காட்சித் தரும்.

குறிப்பு : எத்தி வைப்பது மட்டுமே நமது கடமை நேர்வழி அழிப்பது இறைவன் கரத்தில் (வமா அலைனா இல்லல் பலாக்)

ஹக்குத ஆலா நமக்கு தந்து நாம் உண்ணும் தானியம் காய்கறிஇலைகள் மாமிசங்கள் பழங்கள் பால் நெய் ஆகியவைகளை பல், நாவு இவைகளால் நன்கு அரைப்பட்டு பக்குவமாகி இதயக்கமல கருவிகளால் பிரிக்கப்பட்டதும் இந்திரிய நரம்புகளால் உறுஞ்சபட்டு அந்த அன்ன ரசத்தை தலைமூளையின் ஓரங்களில் சேமிக்கப்படும்.

சுல்பு என்கின்ற முதுகெலும்பின் முடிவில் ஒரு பக்கம் ஆண் என்றும் ஒருபக்கம் பெண் என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு நடுவில் உதிக்கின்ற அக்லு எனும் புத்திக்கு நல்லது கெட்டது என தெரியாததாய் இருக்கும் இந்த கருவியில் இல் என்ற இரண்டு எழுத்தும் இல்லல்லாஹு என்ற மந்திரமும் கூடி குலாவி விந்தில் வாசி சேர்ந்து நுத்பா திரண்டு எழுந்து அதுவே நுக்தா ஆனது. அதுவே ஆத்மாவானது. மற்ற நப்சுகள் நாட்டத் தேட்டங்கள் யாவும் அந்த நுத்பாவின் குணா.

குணங்களாய் இருக்கும் ஆனால் பெண்களுக்கு இரண்டு மார்புகளுக்கும் இடையில் சுரோனிதம் குடிகொண்டிருப்பதாக சொல்லப்படும்

ரூஹே நப்ஸானியும் ரூஹானியும் சேர்ந்து உண்டாக்குகிற ஆசை தான் காமம் எனும் இன்ஷானின் தன்மையாக இருக்கும். ஹக்கீத்தத்தில் = ஆணும் பெண்ணும் வேறெல்ல இவை ஒன்றே எனப்படும். ஆனால் லாஹிரில் = தனித்தனியே பிரிவாக்கும் இதில் அன்பு ரூஹை சேர்ந்ததாயும் மோகம் சரீரத்தை சேர்ந்ததாகவும் ஆரிபீன்களால் சொல்லப்பட்டுள்ளது. மேலும் பெண் ஆணில்பனா என்றும் ஆண் ஹக்கில் பனா என்றும் உள்ளது. நாயகம் (ஸல்) அவர்கள் தன்னை அறியச்சொன்னது ஏன் என்றால் ஹக்கின் தாத்தை அறியக்கூடாது அவனின் அஸ்மாக்களும் சிபத்துக்களும் இன்ஷானில் வெளியாகி இருப்பதால் அஸ்மாக்களையும் சிபத்துக்களையும் தான் தன்னை அறிவதாய் இருக்கும். ஆண் பெண் சேர்மானம் என்பது நான்கு பூதங்களின் சேர்மானமாய் இருக்கும் அதற்காகத்தான் தண்ணீரைக் கொண்டு துப்புறவு செய்யச் சொன்னதாக இருக்கும்.ரூஹே நபுஸானியா எனும் அறிவாத்மா சரீர இச்சையை அக்னி நரம்புகளில் சூடேற்றி ரத்தம் கொதித்து நரம்புகளில் பாய்ந்து அவைகள் விம்மி மூளைக்கு ஏறியதும் நப்ஸே அம்மாரா மதிமயங்கும் பயத்தை உண்டாக்கும் ரூஹே நப்ஸானிய்யா கண்ணை மூடவைக்கும். ஒவ்வொரு துளி ரத்தமும் புணர்ந்தோடும். இது ஒரு உறுப்பை சேர்ந்ததல்ல சரீரம் முழுவதும் பரந்தாக இருக்கும் இந்த இணைப்பின் வாசிப்பில்

www.miskinsha.blogspot.com

ஸ்தூல சரீரம்

நாசூத் ஆகிய ஸ்தூல சரீரம் என்ற வீனை கம்பியில் மலக்கூத்தெனும் சரீரம் சப்தம் இருப்பது போன்று நிறைந்திருக்கின்றது. புளியங்கொட்டையில் உள் விதையை மேல்தோல் ஓடு எவ்வாறு மூடி உள்ளதோ அவ்வாறே சூட்சும் சரீரத்தை ஸ்தூல சரீரம் மூடிக்கொண்டது. நீ புறக்கண்களால் காணும் இந்த ஸ்தூல சரீர தோலைத் தவிர மற்றபடி வேறு எதுவும் உன்புத்திக்கு புரியாது. மனக்கண்ணில் காணமுடியும்.

சூட்சும சரீரத்திற்கு சேதம் உண்டானால் அதை ஸ்தூலம் அனுபவிக்கும். ஆனால் ஸ்தூலத்திற்கு சேதம் வந்தால் அதை சூட்சுமம் அனுபவிக்காது. மரணத்திற்கு அந்த சூட்சும சரீரத்தோடு எவ்வித தொடர்புமில்லை. நித்திரைக்கு சூட்சுமம் பேரில் தத்துவம் இல்லை. சூட்சுமம் சரீரம் அழுக்கின்றி பரிசுத்தமாய் சுகந்த மணமாய் இருக்கும் ஆனால் ஸ்தூலமோ அழுக்காகவும் துர்வாடையாகவும் பலவீனமாகவும் இருக்கும்.

சூட்சும சரீரம் பலம் கொண்டதாகவும், உறுதியாயியும் இருக்கும் மேலும் ஸ்தூல சரீரம் எவ்வாறு வெளியீடாக இருக்கின்றதோ அவ்வாறே சூட்சம சரீரம் உள்யீடாக உள்ளது. சூட்சும லோகம் ஸ்தூல லோகம்போல் இருக்கிறதேயன்றி இவைகள் வெவ்வேறாக இல்லாமல் சேர்ந்தே உள்ளன. நாசூத்து மக்கா முக்கும் ஜபுரூத்து மக்கா முக்கும் நடுநிலையானது. மலக்கூத்து மக்காம் தான் அங்கிருந்து இங்கு வரும் யாவரும். சூட்சமம் என்னும் மலக்கூத் வழியாகவே வரவேண்டும். இதுவே இரண்டின் நடுவே பாலமாக அமைந்துள்ளது. ஓர் உதாரணம் கேள் அதாவது நின்றுகொண்டு இருக்கும் ஒருவன் படுக்கவேண்டும் என்றால் அவன் உட்காரும் நிலைக்கு வந்த பின்புதான் படுக்கும் நிலைக்கு போக முடியும் அதுபோல்.

ஆலம் அஜ்ஜாம் எனும் ஸ்தூலமெனும் சடலோகம் ஆலம் அர்வாஹ் எனும் ஆன்மா லோகம் இவைகளுக்கு வழி (நடுவழியான) ஆலம் மலக்கூத் எனும் சூட்சும லோகம் தான் = சிறப்பானவனே

ஆன்மாவுக்கும் சடத்துக்கும் நடுவில் நீ இருக்கிறாய் ஆனதால் திக்ர் தியானம் யோகம் ஆசனம் வாசி நடு தொழுகை இதுபோல் உள்ள இபாதத்துகளின் பக்கம் சேர்ந்தால் சூட்சும லோக ஆன்மா உருவாகும் இதை விட்டுவிட்டு பெரும் தீனி, இச்சை, ஆடம்பரம், உள்ளாசம், இப்படி இழிவு வாழ்க்கையின் பக்கம் சேர்ந்தால் சடலோகம் துன்பம் ஆகும்.
புத்திமான் பலவான் ஆவான்.

சூட்சும சரீரம்

ஆன்மா தத்துவம் இருபத்தைந்தால் அவதாரமானதே இந்த சூட்சம தேகம். கரணம் அய்ந்து = ஞானேந்திரியம் அய்ந்து = கண்மேந்திரியம் அய்ந்து = வாயுவு பத்து = ஆக இந்த இருபத்தைந்து தத்துவங்களின் விபரமானது

கரணம் அய்ந்தானது மனம் உதிக்கிறது x புத்தி அரிகிறது. அகங்காரம் உதித்தெழும்புகிறது x சித்தம் இதை பரிமாறுகிறது. வாயுவு பஞ்சகம் அய்ந்து புலனை நடத்துகிறது என்றும் மேலும் ஞானேந்திரம் அய்ந்தானது கண், மூக்கு, காது நாக்குதோல், என்றும்
கன்மேந்திரம் அய்ந்தானது = கைகள், கால்கள், முகம், முன் பின் துவாரங்கள்
வாயுவு பத்தானது = பிராணவாயு=அபாண வாயுவு = உதான வாயுவு = சமான வாயுவு = நாகன் வாயுவு = கூர்மன் வாயுவு = வியான வாயுவு = கிருதரன் வாயுவு. தேவதத்தன் வாயுவு = தனஞ்செயன் வாயுவு = என்றும் சொல்லப்படும்.

இந்த சூட்சும சரீர குணங்கள் பதிமூன்று உண்டும்

அவைகள் = துர்பலம் = துவேசம் = காமம் = குரோதம் = உலோபம் = மோகம் = மதம் = மாற்சரியம் = ஈதிசை = அசூசை = டம்பம் = தர்ப்பம் = அகங்காரம் = இவைகள் இந்த சரீரத்தின் தொழில் என்றும் சொல்லப்படும்

ஹயாத்தின் = ஸ்தூல சரீரம் அன்னமய கோசம் என்றும் ரூஹின் = சூட்சும சரீரம் பிராணமய கோசம் என்றும் நப்ஸின் = காரண சரீரம் ஆனந்த மயகோசம் என்றும் கல்பின் = மகா காரண சரீரம் மனோமய கோசம் என்றும் ஹயாத்துக்கு ஜவ்ஹரான பஞ்சபூதங்களுக்கு ஜவ்ஹரான மூலாதாரம். இதன் ஆறு ஆதாரமும் சுவாசநிலை சரிவர இயங்கினால் = அதை ஹயாத் என்றும் இது

மலக்கூத்துடைய ஆலத்தை சுற்றி வந்து ஜபுரூத்துடைய ஆலத்தை பார்க்கும்போது இதை ரூஹு என்றும் மேலும் இது நாசூத்துடைய ஸ்தூல தேகத்தில் காம உணர்ச்சியில் செயல்பட்டால் இதை நப்ஸ் என்றும்

மலக்கூத்துடைய ஆலம் அந்த தீய உணர்ச்சியை தீமையானதென எண்ணி அதை செய்யாமல் தடுக்குமேயானால் அது அப்போது கல்பு என்றும் இப்படி செயல்படும் நிலைக்கு தக்கபடி பெயர்பெறுகிறது.
ஸ்தூல சரீரத்துக்கு உரிய உறுப்புகளும் ரூபமும் சூட்சும சரீரத்திற்கு இருக்கும் என்று இதுநூரானிய்யாவால் சமையபப்பட்ட சூரத் என்று சொல்லி இருக்கிறது.

www.miskinsha.blogspot.com

காரண = மகாகாரண சரீரம்

நமது சரீரத்தில் நூருல் அய்னி எனும் கண்களின் பார்வைக்கு காட்சியாகாததே இந்த காரண சரீரம் எனப்படும் இது எங்கே காணப்படுகிறது என்றால் இது மூடர்களிடம் தான் வெளியாகிறது. இது விருப்பம் உடையோரிடம் சுருங்குதலாகவும். இது மூடர்களிடம் = விரிவுதலாகவும் செய்கிறது ஆனதினால் இதை நப்ஸ் என பெயர் எடுத்துக்கொண்டது. இது கேவலமான மன இச்சையில் தொழில் ஆவதற்கு ஒன்றும்யின்றி நின்ற ஆன்மாவிற்கு அறிவு இச்சை போன்ற செயல்கள் பொதுவில் விளக்கமுற செய்ய இது காரணமாய் இருப்பதால் இதனை காரண சரீரம் என அழைக்கப்படுகிறது. இதில் உண்டாகும் மயக்க அறிவால் இது ஆனந்த மயகோசமாகும்.

மகா காரணசரீரம்

பிராணமயகோசம் இதற்கு கல்பு என பெயர் ஹயாத்து ரூஹூ நப்ஸ் கல்பு எனும் நான்கிற்கும் தாயகமாக இருந்து சாத்வீகம், ராஜஸம் தாமஸம் எனும் முக்குணங்களால் ஆனா இந்த உடல் மனம் முதலிய காரணங்களின் தொழிலாக அமைந்துள்ளது ஆனதால் ஈமான் கொண்ட விசுவாசிகளே நமது குணம் நேர்பட்டால் செயல் நேர்படும் என்பதில் சந்தேகம் இல்லை ஆனாலும் பாலாகி, தயிராகி, மோராகி, வெண்ணையாகி உருகி நெய்யாகி ஹக்கை அடைவது மகாசெயலாகும். இந்த நான்கு வித சரீரங்களின் ரகசியங்களை = பலஞானவான்கள் பல கிதாபுகளில் ஆங்காங்கே சிறு சிறு துளிகளாக தெளித்து இருந்ததை ஒன்றாய் திரட்டி ஒரு குளமாக அமைத்து இருக்கிறேன். ஆனதால் மன அழுக்கு பரிசுத்தமடைய ஆவல் பூத்த அன்பர்கள் இந்த இல்மு குளத்தில் மூழ்கி குளித்து பேரானந்தம் பெற அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள்புரிவானாக மேலும் இந்த நான்கு சரீரங்களில் ஸ்தூலமும் சூட்சமும் சரீரத்தை சேர்ந்ததென்றும் மற்ற காரணமும் மகா காரணமும் ஆன்மாவை சேர்ந்ததென்றும் அன்பர்கள் அறியவேண்டியதாய் இருக்கும்

ரூஹ் கல்பு நப்ஸி

1) ரூஹூ எனும் ஆன்மா இதன் மூலப்பொருள் எனும் உஜூதை சிந்தித்தால் இதற்கு மூன்று பொருள் தேவையாய் உள்ளது தெரியவரும்

(1) வது இரத்தம் (2) சூடு எனும் உஷ்ணம் (3) ஆவி இதில் இரத்தத்தின் கொழுமையால் சுழன்று சூடாகி கொதித்து அதில் உண்டாகும் ஆவியே ரூஹூ எனப்படும். அஃலிபு = லாம் ஹே இந்த மூன்றும் கூடி ரூஹூ உண்டானது என சொல்லப்படுகிறது.

2) கல்பு எனும் இருதயம் இது நமது இடது மார்பின் தோல் எலும்பில் இருந்து கீழ் நோக்கி ஒரு ஜான் நான்கு விரக்கடையில் வாழைப்பூ வடிவில் தலைகீழாய் தொங்கிகொண்டிருக்கிறது. இதை சுற்றி ஒளி பிரகாசம் வீசுகிறது. இதன் நூர் சரீரம் பூறாவும் படர்ந்துள்ளது என சொல்லப்படுகின்றது.

மனம் இதன்விளக்கம்

3) நப்ஸ் நாதிகா எனும் ஒரு மரத்திற்கு ஆறு கிளைகள் உள்ளதென்றும் அவைகளின் ஒரு கிளைக்கு பதினான்கு சிறு கிளைகள் என்று எண்பத்துநான்கும் இதன் குணங்கள் என்றும் இதன் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப்பெயர்கள் உண்டென்றும் இந்த நப்ஸ் (மனம்) இதை அறிந்தவன் தன்னை அறிந்தவன் என்று நபிமனி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றதற்கிணங்க இதை விபரிப்பது அவசியமாய் உள்ளது மேலும் இதை அறிவது கடமையாய் உள்ளது உள்ளம் எனும் மனம் ஒரு கண்ணாடி ஆகும் இதன் பிம்பம் தான் இன்ஷானின் முகம் ஆகும் முகத்தின் அழகை பார்த்து அகத்தின் அழகை தெரிந்து தெரிந்துக்கொள்கிறார்கள். மேலும் இந்த நப்ஸ் எனும் உள்ளத்திற்கும் ஆன்மாவிற்கும் சம்மந்தம் உள்ளது. இதன் ஒரு பக்கத்தில் நல்ல விஷயங்களும் இதன் மறுபக்கத்தில் கெட்ட விஷயங்களும் வருகிறது. இந்த உள்ளம் தான் உடலில் ஆட்சி செய்கிறது. இதன் விபரம்

(1) உள்ளத்திற்கு கோபம் வந்தால் உடல் முழுவதும் நடுங்க ஆரம்பிக்கிறது முகம் சிவக்கிறது வியர்வை பூக்கிறது.

(2) உள்ளத்திற்கு சந்தோஸம் வந்தால் முகம் மலர்கிறது சிரிப்பு சந்தோஸம் குதூகுலம் ஆட்டம் கொண்டாட்டம் தருகிறது.

(3) இந்த உள்ளத்தில் காமம் உண்டானால் அந்த காற்று ஆரம்பித்து ஆண் பெண் உறுப்புகள் வரை செல்கிறது மேலும்

(4) இந்த நப்ஸ் எனும் உள்ளத்தில் உணவு ஆசை உண்டானால் நாக்கின் கீழ் இருக்கும் உமிழ் நீரால் நனைகிறது இப்படி உடலை உள்ளம் ஆட்சி செய்கிறது. இதன் இருப்பிடம் அல்லாஹ்வை தவிர வேறு யாருக்கும் தெரியாது.

www.miskinsha.blogspot.com

இன்ஸானில் இயங்குவது

தாத்தின் உள்ளமையில் நின்றும் இச்சிக்கிற (காமம்) தன்மை வெளியானால் அதற்கு நப்ஸ் (மனம்) எனப்பெயர். பார்க்கிற தன்மை வெளியானால் அதற்கு ரூஹு எனப்பெயர் அறிகிற தன்மை வெளியானால் அதற்கு கல்பு எனப்பெயர் இந்த தன்மைகள் ஏதும் இல்லாதிருந்தால் அதற்கு தாத்து எனப்பெயர் ரூஹுக்கு மந்திரி புத்தியென்றும் X கல்பு மந்திரி நாக்கு என்றும் நப்ஸிக்கு மந்திரி ஷைத்தான் என்றும் சொல்லப்படுகிறது

ரூஹுக்கு இரண்டு குணங்கள் அவைகள்

ஒன்று = நளவு செய்வது ரூஹெ ரப்பானிய்யா என்றும் மற்றொன்று = பயம்கொள்ள செய்வது = ரூஹெ நப்ஸானிய்யா என்று உள்ளது

நப்ஸ் இதை இப்லீஸ் என்றும் X ரூஹு இதை மலக்கு என்றும் கல்பு இதை இன்ஷான் என்றும் X கூறப்பட்டுள்ளது நப்ஸ் இச்சா சக்தி என்றும் X ரூஹை ஆன்மா சக்தி என்றும் கல்பு இதை மனம் என்றும் சொல்லப்பட்டுள்ளது

கல்புடைய ஒளி மஞ்சள் நிறமாகவும்
ரூஹுடைய ஒளி சிகப்பு நிறமாகவும்
சிர்ருடைய ஒளி வெள்ளை நிறமாகவும்
கபீயுடைய ஒளி கருப்பு நிறமாகவும்
அக்பாவுடைய ஒளி பச்சை நிறமாகவும்
சொல்லப்பட்டிருக்கிறது

கல்புடைய மகாம் இடது மார்பில் இரண்டு அங்குளத்தின் கீழே எனவும் ரூஹுடைய கட்டுப்பாடு வலது மார்புக்கும் கீழே கல்பை சந்திக்கிறதாகவும் சிர்ருடைய கொலு வலது மார்புக்கு மேலே நடுநெஞ்ஜின் பக்கம் சாய்மானமாகவும் கபீ இடது மார்புக்கு மேலே நடுநெஞ்ஜின் பக்கம் சாய்மானமாகவும் அக்பாவின் மகாம் கபீ மக்காமுக்கு மேலே உள்ளதாகவும் நப்ஸிடைய மக்காம் தலைமூளைக்கு முந்தின வயறாக இருக்கும் எனவும் தன்னை அறிய விரும்புவோர்கள் அறிய வேண்டியதாய் இருக்கும்

சிர்ருடைய மகாம் கல்பு எனப்படும். இந்தக் கல்பு. அக்பாவின் நடுவில் உள்ளதென்றும் X ஹயாத்தும். அனாவும் ஒன்றே என்றும் கபீ யாகிறது எல்லா லதாயிபுகளுக்கும் உள் கிருபையால் இருக்கின்றதென்றும் ரூஹானது கல்புக்கு லுத்பாக இருக்கிறதென்றும் சொல்லப்படும்

ரூஹுகள் பயான்

உன் சரிரம் ரூஹை சுமந்துகொண்டிருக்கிறது என நினைப்பது தவறாகும் ரூஹுதான் சரீரத்தை சுமந்து கொண்டிருக்கிறது என உறுதிகொள் ரூஹு நீங்கினால் சரீரம் கிழே மையித்தாய் விழுந்துவிடும் ரூஹு இல்லாது போனல் பூமியின்மேலே ஒரு பொருளும் இருக்காது மேலும் ரூஹு ஹயாத்து முதலிய ரூபமற்ற பொருட்களை கொண்டே அவைகள் நிலைத்திருக்கும் மனிதனின் இரண்டு பிரிவாய் இருக்கும் அவையானது

1 = வது சரீரமும் ரூஹுல் ஹைவானியும்

2= வது நபுசுசரீரமும் ரூஹுல் ஹைவானியும் நபுஸில்லாது இருந்தால் மனிதன் மிருகமாய் இருப்பான் என சொல்லப்படுகிறது.

ஞாபகமானது ரூஹுன் தத்துவத்தில் ஓர் தத்துவமாய் இருக்கும் சிறு பிராயம் முதல் இன்றுவரை பிடித்தது கேட்டது பயின்றது போன்ற இவைகள் எல்லாம் எங்கே பதிவாகி பாதுகாக்கப்படுகிறது தெரியுமா அதுதான் மனம் என்னும் கஸானா இதில் அமைந்து தேவையானது தேவைப்படும்போது ஞாபகத்திற்கு வருகின்றது என அறிந்துக்கொள். நமது தேகத்தில் கண்டிப்பை உடைய பொருள்கள் இந்த ஆலம் அஜ்ஸாமுக்குடையது

நமது சூட்சும சரீரம் ஆலம் மிதாலுக்குடையது
நமது ரூஹு ஆலம் ஜபுரூத்துக்குடையது
நமது சிர்ரு ஆலம் லாஹூத்துக்குடையது

கல்புக் கண் பயான்

அல்லாஹு த ஆலா நமக்கு கல்புக் கண்ணை தந்திருக்கிறான். அந்தக்கண் நமது சூட்சும சரீரம் ரூஹு சிர்ரு ஆகியவைகளுக்கெல்லாம் கண்ணாயிருக்கிறது. சூட்சும சரீரத்தின் கண் திறந்தால் ஆலம் மிதால் வெளியாகும் ரூஹின் கண் திறந்தால் ஆலம் அறுவாஹு வெளியாகும் சிர்றின் கண் திறந்தால் ஆலம் மலக்கூத் வெளியாகும் இப்படியான கண்கள் திறக்கப்படுவது எவருக்கென்றால் பாத்தினுடைய இல்மையறிந்து X சுலூக்குடைய பாதையில் செல்பவர்க்குத்தான் பகுத்தறிவு யோசனை இவைகள் கல்பில் தான் உண்டாகிறது

www.miskinsha.blogspot.com

ரூஹுல் ஜமாத் = இதில் இரண்டு சிபத்துகள்

1 = வது திக் காலத் எனும் = பாரம் என்கிற பொருளான கரும கருஷணம் என்றும்

2 = வது கிப்பத் எனும் = இலேசு என்கிற பிண்டி கர கருஷணம் என்றும்

ரூஹுல் நபாத் = இது இன்ஷானையும் ஹைவானையும் மரங்களையும் வளர்க்கும் ரூஹு என்றும்

ரூஹுல் ஹைவானி = பிராணிகளின் ரூஹு = உடல் உறவு இன்பம் தருவதும் அகங்காரம் விரோதம் முரண்பாடான குணமானதாய் இருக்கும்

இந்த ரூஹுல் ஹைவானி நமது இருதயத்திலிருக்கிற குழியிலிருந்து புகைபோல் வெளியாகி நரம்பு முழுவதும் பரந்து ஹயாத்து என்ற ஒளியையும் பார்வை கேள்வி முதலிய தத்துவங்களையும் இதுவே நடத்துகிறது

ரூஹுல் இன்ஷானி = இது மனிதனுக்கு மட்டும் சொந்தமான ரூஹு என்றும் பகுத்தறிவு யோசனை இவைகள் இதன் தத்துவமாகும் நாம் சுருக்கமாக பேசும் பொழுது நபுஸென்று சொல்கிறோம் மனிதா அறிவுள்ளவனே ஆராய்ந்துபார் யோசிக்கிறதும் உன் நபுஸே நினைக்கிறதும் உன் நபுஸே = அல்லாஹ்வை அறிய விரும்புகிறதும் அந்த நபுஸே

அந்த நபுஸிதான் நீ இதை திறமாய் பிடித்துக்கொள் X சரீரம் உனது வீடு உன் வீட்டையும் உன்னையும் X ஒன்றாய் சேர்த்து நீ என்று நினைக்கிறாதே கோபமும் மோகமும் இச்சைகளும் ரூஹெ ஹைவானியின் குணமென்றும் பசி, தாகம், உறக்கம், இயற்க்கையின் குண மென்பதை விளக்கிக் கொள்

ரூஹு மூளையை சந்தித்தால் பார்வை மூச்சு பேச்சு உண்டாகும்

ரூஹு தாமறகாயை சந்தித்தால் தூக்கம் உண்டாகும்

ரூஹு மூலாதாரத்தில் சேர்ந்தால் மவுத்து உண்டாகும் என அறியவும்

ரூஹு அசையாது ரூஹானி அசையும் X ரூஹானி புருவ மத்தியில் குடி கொண்டது

ரூஹு சரீரம் முழுவதும் பரவி நிற்க்கிறது

ரூஹானி புருவ நடுவை விட்டு வெளியானால் மனிதன் தூங்குவான்

ரூஹு வெளியானால் மனிதன் மவுத்தாவான்

ரூஹு முஹம்மதாகவும் ஹயாத்து முஹ்யித்தீனாகவும் இருப்பதை

நீ அறிவதே தன்னை அறிவதாகும்

> நான் உங்கள் நப்சுகளிலே இருக்கிறேன் ஆனால்
> நீங்கள் நோட்டமிடுவதில்லை (அல்குர் ஆன் 26 : 19)

சிர்ருல் இன்ஷான்

அல்லாஹுதஆலா படைத்த எல்லாவற்றிற்கும் = ஹயூலா அல்லது ஜவ்ஹர் என்னும் மூலப்பொருள் உண்டு. இது இல்லாமல் எதுவும் உண்டாக முடியாததாய் இருக்கும் ஆனதால் இந்த அறிவைதேடும் எவரும் இதை அறிவது அவசிமாய் இருக்கின்றது.

சடப்பொருள் அனைத்திற்கும் ஜவ்ஹரானது மத்தா எனும் அணுவும் திடப்பொருள் அனைத்திற்கும் ஜவ்ஹரான ரூஹாய் இருக்கும் ஹயாத்துக்கு = மூலப்பொருள் மண் தண்ணீர் காற்று நெருப்பு ஆகாயமாய் இருக்கும் மண் தண்ணீர் காற்று நெருப்பு ஆகாயம் இவைகளுக்கு ஹயாத்து மூலாதாரமாய் இருக்கும்.

கருவுக்கு ஜவ்ஹர் நினைவு X நினைவுக்கு ஜவ்ஹார் அறிவு அறிவுக்கு ஜவ்ஹர் நூர் X நூரின் ஜவ்ஹர் சிர்ரு சிர்ரின் ஜவ்ஹர் கல்பு X கல்பின் ஜவ்ஹர் தாத்தாய் இருக்கும்

பூத சரீரங்களின் தந்தை பாவா ஆதம் நபி என்றும் அருவாஹுகளின் தந்தை நபி முஹம்மது (ஸல்) அவர்கள் என்றும் சர்வ ஜுவராசிகளின் தந்தை யா முஹ்யித்தீனாக இருக்கும் இல்மின் ரகசிய அந்தரங்கமும் கலிமாவில் உள்ள லாமும் = ஹுவும் மூச்சாகிய அலிஃப்பு லாம் ஹே என்ற அட்சரங்களும் = இன்னும்கேள் ஹயாத்துல் கைபார் எனும் அலையில்லா கடலில் முஹம்மதாகிய வலம்புரிசங்கில் மணிமுத்துவானதும் யா-முஹ்யித் தீனாக இருக்கும். ஹயாத்துல் கைபார் கடலின் நுரை வெண்மையாயும், சிகப்பாயும் எழுந்து கார்மேகமானது ரசூலின் கமல கண்களாய் இருக்கும். ரசூலின் ஜவ்ஹர் எம்பெருமான் முஹ்யித்தீனாக இருக்கும் கண்களின் கருவட்டம் இரண்டில் ஒன்று ஹாமீம் ஒன்று ஹே மீம் ஒன்று முஹம்மதாகவும் ஒன்று முஹ்யித்தீனாகவும் இருக்கும் ஒன்று தாள் என்றும் ஒன்று மீம் என்றும் சொல்லப்படும்

அறிவானவனே அறிந்துக்கொள்

ஹாமீம் என்றதின் அற்புதமான ரகஸியம் யாசீன் என்றும் இந்த இரண்டும் கூடியது தான் தாஹா என்றும் தாஹா என்றது மவ்ஜுதில் அடக்கம் மவ்ஜுது என்றது எங்கள் கௌதுநாயகம் யா முஹ்யித்தீனிலும் அடக்கமாயிற்று இத்தனை காலமாய் பாதுகாத்து மறைத்து இருந்த திரையை நீக்கிவிட்டேன் சீதேவியானவர்கள் சிந்திக்கட்டும் சீர்பெறட்டும்.

www.miskinsha.blogspot.com

கலிபாக்கள் கண்ணியம்

எக்கீன் மரமானது முஹ்யித்தீனாக இருக்கும் அதில் தாவுஸ் எனும் மயிலாக நாயகம் (ஸல்) அவர்களையும் காகம் ரூபமாக அபூபக்கர் (ரலி) அவர்களையும் கூகை எனும் கோட்டான் ரூபமாக உமர் (ரலி) அவர்களையும் ஆந்தை ரூபமாக உதுமான் (ரலி) அவர்களையும் ராஜாளி ரூபமாக அலி (ரலி) அவர்களை நிறுத்தினான்

பூதங்களில்

மண் பூத அவதாரம் அபூபக்கர் (ரலி) எனவும்
தண்ணீர் பூத அவதாரம் உமர் (ரலி) எனவும்
காற்று பூத அவதாரம் உதுமான் (ரலி) எனவும்
நெருப்பு பூத அவதாரம் அலீ (ரலி) எனவும்
ஆகாயத்தின் ஜவ்ஹரானது நபி முஹம்மது (ஸல்) மும் பீவிபாத்திமா (ரலி) வும் ஆகும்

லிவாவுல் ஹம்து கொடியில்

முதல் குஞ்சத்தில் பிஸ்மியும் அல்ஹம்தும் இரண்டாம் குஞ்சத்தில் தவ்ஹீது கலிமாவும் மூன்றாம் குஞ்சத்தில் அபூபக்கர் உமர் உதுமான் அலீ (ரலி) இவர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள.

கியாமத் நாளையில்

அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்கள் தூய கஜ்பூரமண குதிரையிலும் உமர் (ரலி) அவர்கள் மணமிக்க கஸ்தூரி குதிரையிலும் உதுமான் (ரலி) அவர்கள் வெள்ளை கற்பூரமண குதிரையிலும் அலீ (ரலி) அவர்கள் சொர்க்கத்து ஒட்டகையில் வருவார்கள் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்

நாளை சொர்க்கத்தில்

அபூபக்கர் (ரலி) யின் சொர்க்கத் தோழராக இபுராஹிம் அலை அவர்களும் உமர் (ரலி) யின் சொர்க்கத் தோழராக நூஹ் (அலை) அவர்களும் உதுமான் (ரலி) யின் சொர்க்கத் தோழராக நபி மணி (ஸல்) அவர்களும் அலி(ரலி) யின் சொர்க்கத் தோழராக ஜக்கரிய்யா (அலை) அவர்களும் இருப்பார்கள் அறிவானவனே = சிந்திப்பார் இவர்களை எப்படி நேஸம் கொள்வது காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் இல்முல் ஏகின் மரம் முஹ்யித்தீனாகும் அய்னுல் எகின் (மயில் கண்பாவை) விந்து ரசூல் எனப்படும்

ஏழு தோற்றங்கள்

விதைகளினால் : மரம், செடி, கொடிகள் உண்டாகின்றன இவற்றிற்கு உணறும் சக்தி உடலால் என்றும் இவைகளுக்கு அதிகாரியாக ஹஜ்ரத் அலீ (ரலி) நியமிக்கப்பட்டுள்ளார்கள்

ஒளிவினால் : சொர்க்கம் வாழும் வானவர்கள் உண்டாக்கப்பட்டார்கள் இவர்கள் அல்லாஹுவின் கட்டளைப்படி நடப்பவர்கள் இவர்களுக்கு அதிபராக ஹஜ்ரத் உவைசுல் கரணி (ரலி) உள்ளார்கள்

முட்டையினால் : பறவை பல்லி பாம்புகள் உருவாகின்றன இவற்றிற்கு உணறும் சக்தி நாசியாலும் நாவினாலும் உண்டாகிறது இப்படைப்பிற்கு ஆளுனராக அபுபக்கர் (ரலி) உள்ளார்கள்

வியர்வையினால் : ஈறு, பேன்கள் உருவாகின்றன. இவற்றிற்க்கு உணரும் சக்தி நாவு, நாசி, கண்களால் உண்டாகிறது. இப்படைப்பிற்க்கு ஆளுநராக உமர்(ரலி) உள்ளார்கள்

நெருப்பினால் : பிறப்பை பெற்ற நரக வானவர்கள் இவர்கள் அல்லாஹ்வின் ஆணைப்படி செய்பவர்கள் இவர்களுக்கு தலைவராக உதுமான் (ரலி) பொருப்பு ஏற்றுள்ளார்கள்

சினையினால் : மீன்கள் இனம் உண்டாகின்றன இவைகளுக்கு உணறும் சக்தி நாவு உடல் இரண்டாலும் பெறுகின்றன இதற்கு ராஜராக இமாம் ஹஸன் (ரலி) மகுடம் சூட்டப்பட்டும்

விந்துவினால் : இருந்து மனிதன், ஜின், மிருகங்கள் அவதரிக்கின்றன இவைகள் = நாவு கண் நாசி செவி மூளை இவற்றால் உணரும் சக்தி உண்டாக்கப்பட்டுள்ளதாய் அறிவிக்கப்பட்டுள்ளது இவைகளுக்கு இயக்குனராக இமாம் ஹுஸைன் (ரலி) இருக்கிறார்கள்

www.miskinsha.blogspot.com

குத்பு நட்சத்திரம்

பெண் ரூபமான நட்சத்திரம் நபி முஹம்மது (ஸல்) என்றும்
அதன் தலையில் பச்சை கிரீடமாய் அலி (ரலி) என்றும்
அதன் இடுப்பின் பட்டியாய் பீவி, பாத்திமா (ரலி) என்றும்
வலது காதில் தோடாய் இமாம் ஹஸன் (ரலி) எனவும்
இடது காதில் தோடாய் இமாம் ஹுஸைன் (ரலி) எனவும்
அதன் மார்பில் பதக்கமாய் அல்குர் ஆன் ஷரீபும்
வலது புஜத்தில் கடையமாய் அபூபக்கர் (ரலி) அவர்களும்
இடது புஜத்தில் கடையமாய் உமர் (ரலி) அவர்களும்
வலது கை விரல் மோதிரமாய் உதுமான் (ரலி) அவர்களையும்
வலது பாத கொலுசாய் பாவா ஆதம் நபியும்
இடது பாத கொலுசாய் பீவி ஹவ்வா அவர்களும்
பெண் உருவான முஹம்மதியாவின் வலது கையில் பஞ்சவர்ண கிளியாக எம்பெருமான் முஹ்யித்தீன் அவர்களும் அமையப் பெற்றதாய் குத்பு நட்சத்திரம் இலங்கியதாம்

சூரியன் என்று நிர்மாணிக்கப்பட்ட பகலொளியின் தீபங்களான ஒளிச்சுடர்கள் எட்டு அவைகள்
(1) அபுபக்கர் சீத்திக் (2) உமர் கத்தாப் (3) உதுமான் இப்னு அப்பான் (4) அலீ (5) பாத்திமா நாயகி (6) ஹஸன் (7) இமாம் ஹுஸைன் (8) ஜெகத்குரு முஹ்யித்தீன் எனும் இந்த எட்டும் ஜீவ ஜோதிகளாய் சூரியனில் இருக்கும் என அறியவேண்டியது

நபியே 0 ஆதமை படைக்கும் முன் நீங்கள் எங்கே இருந்தீர்கள் என்றார்கள் ஓர் ஸஹாபி அர்ஸின் வலது புறத்தில் நானும் ஹஜ்ரத் அலியும் பாத்திமாவும் ஹஸனும் ஹுஸைனும் நட்சத்திரங்களாய் ஒளி வீசிக்கொண்டு இருந்தோம் என்றார்களாம்

கலிமா பஞ்சத்தன் பர்ஜக்

நுக்தா வானது வஹதத்து முஹம்மது என்றும் லா வஜுத் ஆசை ரூஹு மல்லா அலீ என்றும் இலாஹ வாகிறது 0 இல்மு கல்பு பாத்திமா என்றும் 0 இல்லா வாகிறது 0 நூர் நப்ஸ் ஹஸன் என்றும் அல்லா வாகிறது 0 சுஹுது 0 கவாஹி ஹுஸைன் என்றும் சொல்லப்படும்

ரசூல் ஆஷிக்கும் ரப்பு மஉ ஷுக்கும் ஆக வும் ஹயாத்துல் கைபார் கடலில் வென் முத்தின் ஜோதியாய் அமைந்த நபி முஹம்மது (ஸல்)
கோலத்தின் உள்ளே = பச்சை மரகத்தின் வடிவாக உறைந்து இருந்ததும்இன்னும் அல்லாஹ்வின் ஹலரத்தில் சொந்தமானதும் அவன் செய்யும் செயல் முழுவதும் = அவர் செய்யும் செயலாக நிர்ணயம் கொண்டதும் இவர்கள்தான் கௌது முஹ்யித்தினாக இருக்கும் அய்ந்து பூதங்களிலும் புலன் அய்ந்திலும் பொருந்திய முஹம்மதியாவின் ஒளிவும் கல்குகளின் ஒளிவும் கூடிய அர்வாஹுடைய ஆலத்தில் ஆயிரம் கோடி சூரிய ஒளிபோல் பச்சை சுடராய் நின்ற ஷெய்ஹனா முஹ்யித்தீனை முஹம்மதியாவின் வெண்சுடர் ஜோதி கண்டு அளவற்ற ஆசையுடன் வந்து அணைந்து கட்டி தழுவி முத்தி முகந்து என் ஆஷிக்கே நானும் நீயூம் ஒரே வஸ்தாக இருக்கும் எனச் சொல்லி அய்னுல் எகீன் எனும் கண்ணின் ஒர்மை மேடையில் இரண்டும் ஒளிவட்டமாக நின்றது இதை அறிவது தன்னை அறிவதாய் இருக்கும்

சந்திர சூரிய சரம் பாய்கின்ற இதயம் எனும் கஃபதுல்லாவின் கண்ணாகவும் அதுதான் அஹது அஹமது தோற்றமாகிய முஹ்யித்தீனான குருபரனின் நூறாக இருக்கும் அதுவே விழிகளுக்கு மத்தீபத்தில் நின்று பரஞ்ஜோதி வீசும் அலிப் லாம் மீம் என்பதின் சிர்று எனும் ரகசியம் எங்கள் கௌதுல் அஃலமாய் இருக்கும்

என் முரீதே = நான் உன்னை இம்மையிலும் மருமையிலும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு உறுதியுடன் என்னைப்பற்றி பிடித்துக் கொள்வாயாக நீங்கள் என்ன சாப்பீடுகிறீர்கள் என்ன பருகுகிறார்கள் (பேராசையால்) எதனை சேகரித்து வைத்திருக்கிறீர்கள் என்பது உள்ளிட்ட உங்களது முழு வாழ்க்கையும் என் முன்னே கண்ணாடி போல் தெளிவாக உள்ளது என அறிவிப்பவர்கள் (கௌதுல்அஃலம்)

படைப்புகளை பராமரிக்கும் பணி என்னிடம் ஒப்படைக்கப்படும் (கௌதுல்அஃலம் 3=156)

www.miskinshah.blogspot.com

ஷெய்ஹ் ஹல்லாசு மன்சூறு (ரஹ்) அவர்கள்
முரீது விளக்கம் என்ற கிதாபில் கூறியிருக்கும் விபரம்

ஹயாத் பயான்

அறிந்துக்கொள் தாலிபானவனே உன் சரீரம் ஏது உன் உறுப்பு ஏது உன் ரூஹேது உன்ஹயாத்தேது உன் சிர்றேது உன் இல்மேது என்று உண்மையாக நீ இவையெல்லாம் அறியாமல் மவுத்தாக உனக்கு உரிமை உண்டு என்று எண்ணாதே அறிந்துக்கொள் தாத்தென்று ரூஹூ X சிபத்தென்றது ஹயாத்து அவ்வள் தாத்து அது நாடினதே சிபாத்து ஹயாத்தென்பது சரீரம் X சரீரம் என்பது ஆதம் ஆதமுக்கு சிபாத்து ஹவ்வா X என்றும் அறிந்துக்கொள்

நாட்டத்தை நீ யறியும் படியும் X நாட்டம் உன்னையறியும் படிக்கும் நீ ரூஹை அறியும் படியும். ரூஹூ உன்னை அறியும் படியும் ஒரு தலத்தில் இருந்து இபாதத் செய்ய நாடிட செய்கிறதே அதுதான் ஹயாத்து ஒருவன் = அல்லாஹ்வையும் முஹம்மதையும் காணாமல் கலிமா சொன்னபப்டியால் பொய்சாட்சி சொன்னார்களே அவர்கள் யாரென்றால் ஹக்கு த ஆலாவை உண்மையாக அவன் தாத்தையும் சிபாத்தையும் ரூஹையும் ஹயாத்தையும் அறியாதவர்களாயும் முஷாஹிதா முறாக்கபா வில் சுஹூதை செய்யாதவர்களாயும் இருக்கும் தாலிபாவனே=நூர் என்றது நாட்டம் X அதை அறிகிறது ரூஹூ மூளையினுடைய தலம் தலை அந்ததலையிலே இருந்துக்கொண்டு சரீரம் அடங்களும் பக்திபாயும் ரூஹூ ஒடுங்கும் தலம் கல்பாகும்

அப்போது அந்த ஹயாத்து அந்த ரூஹை பொதிந்துக்கொள்ளும் அந்தவேளை தான் நித்திரை உண்டாகும் சோம்பல அசதி வரும் மறுபடி அந்த ஹயாத்தும் ரூஹூம் பிரிகிற நேரத்தில் ஹயாத்து கல்பிலே வரும் ரூஹூ தலை மூளைக்கு செல்லும் போது

நித்திரை தெளிந்து விழிப்பு வந்த உடனே உறுப்புகளெல்லாம் தெளிவு பெற்று பின்பு ஹயாத்து நாட நாட அந்த ரூஹூ அவைகளை எல்லாம் செய்து முடித்துக் கொள்ளும் அந்த ஹயாத்தையும் சரீரத்தையும் அழகாக சுமந்து நடக்குறது ரூஹூடைய சிபத்தென்று அறிந்துக்கொள்வோம்.

ஒரு மனிதன் அணியும் சட்டையைப் போல் ஹயாத்து என்றும் அவன் சரீரம் போல் ரூஹூ என்றும் தாலிபானவனே தெரிந்துக்கொள்
மூளை ஒளிவு விளையும் தலம் X ரூஹூ சரீரம் என்றும்
ஹயாத்து உள்ளங்கால் தொடுத்து உச்சிவரைக்கும் நிறைந்திருக்கும் ரூஹின்றி சரீரம் அழிந்து போகும் என்றது

அந்த ரூஹூ முஷாஹிதா வினுடைய நாட்டத்திற்க்கு. ஹயாத்தோட ஒத்துநில்லாத படியினாலே அழிந்து போகும் என்று சொல்லப்பட்டது. அப்போது இந்த ஹயாத் அந்த கோலப்பட்டதற்குள்ளே தங்கி நடப்பி வித்துக்கொண்டதனால் அது காலத்திற்க்கும் அழியாது அது ஏன் என்றால் அந்த ரூஹூ மவுத்தாகிறதும், அந்த ஹயாத்திற்க்கும் ஓர் அழிவுமில்லை. ஆகிர் மட்டிற்க்கும் அவன் கபுரிலேயே ஹயாத்தையும் ரூஹையும் இழந்தவனில்லை அவன் அருபமான ஹாயத் என்கிற நாட்டத்தில் அவன் சரிரத்ததுடனே எழும்பி வருவான். சில நேரம். அவனை ஆலத்தில் உள்ளவர்கள் காண்கிறதும் உண்டு. அந்த உடனே மறைந்தும் போவான். மறைந்த உடனே கபூரில் இருப்பான். ஆகையால் அவன் மவுத்தானவன் அல்ல. மேலும் அந்த கபூரிலே இருக்கிறானே அவனுக்கு சுவாசமில்லை ஏனென்றால் அவனுடைய ரூஹூ சுவாசமின்றியே கீழ்நோக்கி பத்திபாயும் ஆகையால் அவன் சிர்றாலே மேலே இருக்கிறான் அவன் ஹயாத்துடனே இருக்கிறான். அவன் சரீரத்தில் ஓர் சிபத்தும் குறைவு வரவில்லை. ஆன படியால் அவன் மவுத்தானவன் அல்ல. அவனை சில கல்க்குகள் சூழ்ந்திருக்கிறார்கள். அவர்களை நம்பார்வைக்கு தெரியாது.

என்னுடைய தியானத்தில் பிராணனை. ஒளிவாக்கிக் காணும் போது சூரியன், சந்திரன், நட்சத்திரம் இவை மூன்றும் ஒன்றானது. அப்போது வானம் என்ற பெயர் இல்லாமல் போய்விட்டது. என்னுடைய கருவு.அந்த சந்திரன் என்றது என்னுடைய தலை மூளை நட்சத்திரம் என்றது. என்னுடைய நாட்டம் அந்த சூரியன் என்றது. இவை மூன்றும் என்னுடைய ஹக்களவிலேயே என் சரிரத்தை விட்டுமீண்டது. இது ஷெய்ஹூ அவர்கள் சமாதிநிலையாய் தவம் செய்தது.

இதுவும் மவுத்தான நிலைக்கு ஒப்பாக இருக்கும் சமாதிநிலை என அறியவும்.

www.miskinsha.blogspot.com

சிந்தித்துப்பார்

ஹலரத் காஜா ஹயாத்தே கலந்தர் (ரஹ்) அவர்களின்

பஸாதெ இஸ்க் எனும் கிதாபின் கூறியிருக்கும் விபரம்

சரீஅத்தை பேனுபவர்கள் இதை ஆராயக்கூடாது) உனக்கு அல்லாஹ தஆலா அளவில் சேர்மானமாக நோக்கம் இருந்தால் அதற்க்கு அந்தரங்கம் இதுதான் அதாவது நீ என்ற எண்ணங்களையும் அனா நீயத்துகளையும் சர்வ நாசம் செய்து எரித்துப்போடு இஸ்க்கு என்ற துடைப்பத்தால் மனம் என்ற அறையில் உள்ள கெட்ட குணமான குப்பைகளை பெருக்கிவாரிக் கூட்டி அள்ளி வீசிவிடு இரண்டு என்றதை எடுத்து எரித்துவிடு. முஸல்லாபாயை கிழித்துபோட்டு விடு தஸ்பிஹ்மணி அறுத்துதூரஎரிந்து விடு கித்தாபுகளை எல்லாம் கட்டிதண்ணீரில் போட்டுவிடு முற்ஸிதாகிய சற்குருவின் கையை பிடித்து நான் உங்கள் அடிமை என்று சத்தியம் செய். பட்டினியாய் நோன்பு வைக்காதிர்கள். பள்ளிவாசல் போய் அல்லாவை அறியாமல் பெருமைக்காக சஜ்தா செய்யாதே உலூ செய்யப்பட உள்ள மண்தோண்டியை உடைத்து தூர எறி இஸ்க்கென்ற பானத்தை குடி. முல்லா என்ற காஜி லெப்பையாகாதே பிராமணனாகாதே. நானா கலந்தர் மஸ்தானை போல் நீயும் நான் ஆண்டவன் என சொல் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் விபரம்

மனிதன் என்பவன் யார் ? அவன் எப்படி உண்டாகிறான். அவன் செயல்களின் ரகசியம் எவ்விதம் இயங்குகிறது. என்பவற்றை சிறிதும் சிந்திக்க தெரியாதவன் மூடன். மனித பிறவி என்பதற்கே அறுகதை அற்றவன் என்றும் நான் மண்ணில் வாழ்கிறேன், அல்லாஹ் விண்ணில் வாழ்கிறான். நான் மனிதன் அவன் புனிதன் என்றும் என் தாய், தகப்பன் ஓத சொன்னார்கள், ஓதினேன். பள்ளிவாசல் போக சொன்னார்கள், போனேன். அங்கே இமாம் அவர்கள் தொழுகிறார்களே, அப்படியே நானும் செய்கிறேன். என்று சொல்லக்கூடியவர்கள் எத்தனையோ பேர் நமது கூட்டத்தில் இருக்கிறார்கள்.

ஈமான் என்றால் என்ன? இஸ்லாம் என்றால் என்ன?

கலிமா என்றால் என்ன தொழுகையை அறிவது எப்படி நோன்பு என்றால் எந்த முறையில் கடைப்பிடிப்பது. இந்த கேள்விகளுக்கு எல்லாம் பதில் தெரிந்தவர்கள் மிக மிக குறைவு என்பதே உண்மை.

பிறர்கண்டு நம்மை மதிக்கவேண்டும் என்ற மனப்பேய் பிடித்தவர்கள். தஸ்பிமணியை கையில் பிடித்தவண்ணம் தெருவில் திரிவதைபாருங்கள். திக்கீர் செய்யும் முறை இதுதானா. தன்னைமறந்து செய்வது அல்லவா திக்ர்.

இன்னும் சிலர் தாய் தகப்பனை தூர எரிந்து விட்டு மனைவி மக்களை பட்டினிபோட்டு சதா பள்ளிவாசலில் விழுந்து கிடக்கும் ஒருவரை என்ன வென்று சொல்வது.

சிந்தித்துப்பாருங்கள் ஹயாத் கலந்தர் சொல்லும் உப தேசத்தை இது சரியாகப்பட்டால் சரிதான். சிலர் சதாகிதாபுகளை படித்துக்கொண்டு அதை சிலருக்கு எடுத்துக் கூறிக்கொண்டும் தன்னை. இல்மு அறிந்தவர் என்று பிதற்றிக்கொண்டு இருப்பதையும் பாருங்கள் மவ்னமாய் இருப்பவரே. இல்மு அறிந்தவர் என்பவர் தன்னையும் தன்நப்பையும் அறிவதும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறப்பையும். அவர்களின் ரூஹையும் தாத்தை சிபத்தை. சிபாத்தையும் சரிகத்தையும் தரிகத்தையும் முஷாஹிதா முறாக்கபா வையும் இதுபோன்ற பாதைகளை அறிவதாகும். என அறிவதாகும்.ஆனதால் ஓர் உண்மையான பொய் வேஷம் போடாத பரதேசியான முகவரியே இல்லாத தர்வேஸாய் இருக்கும் அந்த மஹானை கைப்பிடித்து கரை சேர அல்லாஹ்வை பற்றி படித்துக்கொள்.

1. ஒலுவின் பர்ள் சுன்னத் தெறியாமல் தண்ணீர் எடுப்பதில் தரமில்லை.
2. இல்மு என்பதை உணராமல் கல்வி கற்பதில் பலனில்லை
3. அல்லாவை அறியாமல் குல்லா அணிவதில் பலனில்லை
4. திகிரின் முறை பயிலாமல் தஸ்பி மணி உருட்டுதல் பலனில்லை
5. ஓர்மை என்பது இல்லாமல் இறைவனை நெருங்க முடிவதில்லை
6. உஜீதின் உள்ளமை புறியாமல் சுஜீது செய்தும் பலனில்லை.
7. ஷெய்ஹின் சினேகிதம் யில்லாமல் மெய்யை அறிய வழியில்லை.

www.miskinsha.blogspot.com

ஹலறத் முஹம்மது ஷம்

நூறி இமாம் அவர்கள்

அய்னுல் ஆரிஃபீன் கிதாபில் கூறி இருக்கும் விபரம்

ஷெய்ஹின் ஷறுத்துகள்

காமிவான ஷெய்ஹாவைர் முரீதின்களுக்கு முதலில் அல்லாஹ்வை பற்றிய தாத்து சிபத்தையும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் குறிப்பும் ரசூல் என்பதின் குறிப்பும் ஜெகத்குரு முஹ்யித்தீனின் அந்தரங்க பதவியின் உபதேஸமும் ஆதம். உண்டானதும் ஹவ்வா உருவானதும் குர்ஆனின் சூட்சமும் தன்னை அறியும் வழிமுறைகளையும் கருப்பொருள் தத்து வங்களையும் ரூஹு ஹயாத் அறிவு புத்தி பிறப்பு இறப்பு லாஹிர் பாத்தின் போன்ற இன்ஷானின் உடல் உயிர் இயங்கும் தத்துவங்களையும் இப்படித்தான் வாழனும், எப்படியும் வாழலாம் என்பது கூடாது. என்று வழிகாட்டுபவாரகவும்

தனிமையை விரும்பம் தவயோகியாகவும் வாசியில் உருஸ் நுசூல் படித்தவராகவும் உலகை தூசனிப்பவராகவும். சொர்க்கத்தைவிரும்பாதவராகவும் தன்தேவைகளை. அல்லாஹ் விடமே கேட்பவராகவும் பெறுபவராகவும் மன்னாதி மன்னநாயினும் தன்னை தேடி வரட்டும் என எண்ணம்கொண்டும் தான் தேடிபோய் எவரையும் பார்க்கவும் எதையும் கேட்கவும் வெட்கம் கொண்டவராகவும் தான் நமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டி இருக்கிறார்கள். ஆனதினால்

எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி வாழ்க்கை நடத்துவாரோ அவரே அல்லாஹ் விடம் மேலானவர் (அல்குர்ஆன் 49=13)

எந்த இதயத்தில் அல்லாஹ் வை அஞ்சும் அச்சம் நீங்கி விடுகிறதோ அந்த இதயம் பாழாகி விடும் (அபுசுலைமான் தாரானி (ரஹ்)

நாம் அவனுக்கு (மனிதனுக்கு) அருட் கொடைகளை வழங்கினால் அவன் நன்றி செலுத்தாமல் புறக் கணித்து தோளை உயர்த்தி பெருமை கொள்கிறான் (அல்குர்ஆன் 17 = 83)

தன் ஆத்மாவை பரிசுத்தமாக்கிக் கொள்பவன் வெற்றியடைந்தான் தன் ஆத்மாவை பாழ்பழுத்திக்கொண்டவன் நஸ்டம் அடைந்தான் (அல்குர் ஆன் 91 = 9 10)

மனிதா முரீது பெற்றால் மட்டும் சொர்க்கம் சென்று விட முடியாது நல்ல அமலும் நல்ல குணமும் நல்ல செயலுமே உதவி செய்யும்)

அய்னுல் எகீன்

பார்வை பயான்

அல்லாஹு தஆலா. இன்ஷான்களின் சரீரத்தில் அறிய முடியாத அற்புதங்கள் எண்ணில்லா வகையில் உண்டாக்கி இருந்தாலும் அவைகளைவிட ஆதத்தின் மக்களுக்கு மார்தபத்துல் அமா வெனும் தாத்தான. நுக்தாவே வயிரமலையாய் வாய்த்தது எனச்சொல்லலாம் ஏன் என்றால் இங்கிருந்தே உயிர் உடல் இயக்கங்கள் உண்டாகின்றன. இந்த தாத்தின் சிபத்தின் சிபாத்தைக்கொண்டே பார்வை உண்டாகின்றன. அந்த நுந்தாவின் நாத விந்தானது மூலாதாரத்தில் நின்றும் விளைவாகி அப்பால் சூரிய சந்திர குணங்களை பதிய வைத்து அவைகளின் வடிவில் வடிவமெடுத்து அவைகளை சுற்றி கடந்த கபால மண்டலத்தில் சிம்மாசன மேடை போட்டு சர்வ உலக வாதிகளையும் தனக்குல் அடக்கிக் கொண்டு தக்க இடத்தில் வந்து நின்று இரண்டு. கண்களாயிற்று

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்

அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி என்ற ஆயத்தில் வானம் புவி யெங்கும் பரவி இருக்கக்கூடிய இறைவனுடைய ஜோதி ஒரு மாடக் குழியிலே வைக்கப்பட்ட விளக்குக்கு ஒப்பிடப்படுகிறது.என்றால் யாது வானம் புவியில் காணக் கூடிய இரண்டு பிரகாசமான ஜோதிகள் சூரியனும் சந்திரனும் தான் எனினும் சூரிய சந்திரரர்கள் எந்த மாடக் குழியிலும் வைக்கப்பட்டதாக தெரியவில்லை மாடக்குழி எதும் மனிதனின் உடலிலே இருக்குமா என்று சிந்தித்தால் அது இருகண்களாக இருக்கலாம் என்று கற்பனையிலே தோன்றுகிறது. மேலும் உண்மையும் அதுதான் ஆனதால் ரப்பு என்றால் சூரியன் ஆண் அஹது என்றால் சந்திரன் பெண் என்ற மூடு மந்திர வார்த்தைகளை அறிய வேண்டும். மனிதனுடைய கண்ணிலே

இருக்கிற இறை ஜோதியை காட்டித்தருபவர் யார் அப்படி காட்டித் தருவதற்க்கு வருபவர்தான் ஷெய்ஹு அவர் பார்வையை பொருத்தி அருள் பாலிக்கிறார். இது தெரியாதவர் ஷெய்ஹு அல்ல ஷைத்தான் எனப்படும்.

ஹயாத்துல்கைபார் கடலின் நுரை வெண்மையாயும் சிகப்பாயும் எழுந்து கார்மேகமானது ரசூலின் கமலக் கண்களாகும் கண்களின் கருவட்டம் இரண்டில் ஒன்று ஹாமீம் ஒன்று ஹேமீம் ஒன்று தான். ஒன்று மீம் எனப்படும். மேலும் கண்பாவை நுக்தா நினைவாக இருக்கும் இதன் நூர் முஹ்யித்தீனாக இருக்கும் இல்முல்எகீன் என்ற மரம். இதில் அய்னுல் எகீன் என்பது கண்ணின் பச்சைநிறபாப்பாவின் ஒளிவாக இருக்கும் ஹயாத்துல் கைபார் என்றது ஓர் கிணறாக இருக்கும் இதில் ஊறும் ஒளி முஹம்மதாக இருக்கும் காரணத்தால் அதற்க்கு ரசூல் என்ற நாமம் ஆனது. இதை அறிவதே தன்னை அறிவதாய் இருக்கும்

www.miskinsha.blogspot.com

1. நீ எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறாயே அது ஒரு கண்

2. அந்த பார்வையை நீ உற்று நோக்கினால் அந்த ஒன்றில் இரண்டு கண்தோன்றும்.

3. அப்பால் அந்த பார்வையில் வைத்தே இமைகளை இறுக்கி மூடிப்பார்த்தால் ஒரு கண் தெரியும்

4. இவைகளில் மந்தார முள்ளக் கண் ஒன்றும் உண்டு

5. கண்ணைத் தேய்த்தால் அங்கே ஒரு கண் உண்டாகி தெரியும்.

6. நினைவுடன் ஸம்பந்தம் கொண்டு எல்லா உலகங்களையும் நோக்கி வரும் கண் ஒன்றும்

7. இருளில் இருந்து நட்சத்திரங்கள் வெளியாவதுப்போல் அகக்கண் தோன்றும்.

8. அது பல பல கோலங்களுடன் பலகண்களாய் வெளியாகும்.

இப்படி வெங்காயத்தோல் அடுக்குப்போல் ஒன்றுக்குல் ஒன்றாக இப்படி கண்கள் அல்லாஹ் வினால் நமக்கு அருளப்பட்டுள்ளன மேலும்.

பச்சை கருப்பு வெள்ளை வட்டங்கள்

பச்சை நிற நுக்கத் பாவை எனப்படும் இது தானும் வெளியாகி மற்றவவைகளையும் வெளியாக்கும் கருப்பு வட்டம் பெரும் நுக்கத் இதை வட்டம் எனப்படும் இது சிறு சிறு ஒளிகளை ஒன்றாக்கி பெரிய வட்டமாய் கெட்டிபடுத்தும் வெள்ளை நிற நுக்கத் வட்டம் இதுவும் வட்டம் எனப்படும் இது ஒரு பெரிய ஒளி வட்டத்தை சிறு சிறு சிதறல்களாய் தனித்தனியே பிரித்து ஒளியை பெல ஹீனப்படுத்தும் என உணர வெண்டியது.

9. ஒருவஸ்த்தைப்பார்த்து அப்பால் அதைப்போல அடையாளமாக செய்கிற கண் இது. மனக்கண் எனப்படும். இது ஹக்கு வெளியாகும் துறையாக இருக்கும் இந்த கண் வழியாக காணும் கனவுகள் பிரத்தியட்சமாய் மெய்யாக நிதர்சனமாகும். மற்ற வகையான கண்களாலும் காணும் கணவுகளெல்லாம் அந்த நேரமே பொய்யாக மாறும். அவைகளின் பலவித மருட்டு தலை தவிற ஹக்கு வெளியாகாது.

10. இவைகள் அல்லாமல் மரண நேரத்தில் உண்டாகும் சிரமாச் சாரியங்களை எல்லாம் கண்டு திடுக்கிடும் கண்ணும் ஒன்று இருக்கிறது.

11. அதை சரீரத்தை விட்டு வெளியாக்கி அதன் கிழுத்தியாங்களை ஒவியங்களை காணச் செய்யாமல் கண்ணை மூடி அடைக்கின்ற ஒரு கண்ணும் இருக்கிறது. இப்படி விதமாய் நம்மில் வெளியிலும் உள்ளிலும் சில கண்கள் உள்ளன.

பேசுவதும் பார்ப்பதும்

அல்லாஹு தஆலா நமக்கு அருளிய புலன்களில் பேச்சும் ஒன்று இது உதயமாவது தலை உச்சிக்குழி அதிலிருந்து மின் பிரகாசம் போல் பளீரென்று உதித்து நுக்தாவானது அலிஃபாக நீண்டு ஒடி அங்கிருந்து மூலாதாரத்தின் உந்திக்கமல. குழிவழியாக ஸ்வாசம் பிந்தப்பட்டு எழும்பி அங்கிருந்து இருதயக்கமலாகிய தாமறக்காயில் வந்து நின்று பின்பு அந்த அலிஃபுடன் உருவாமாகி அல்லாவென்று தொனி கூடி. பின்பு வலது பக்கமாக ஒருவாமும் கூடி இல்லல்லாஹு என்று வாசியில் சம்பந்தித்து. எழுந்து பின்பு நேத்திரத்தில் வந்து நீர் ததும்ப செய்து அய்ந்து புலன் தோறும் முட்டி மற்ற பூத வாசல்கள் தோறும் உசும்புதல் செய்து தன்வீடாகிய கபாலத்தை ஒரு குப்பாவைப்போல் உண்டாக்கி அதையே அர்ஸ் தானமாக்கிக் கொண்டு குட்டி நாக்கு வழியாக ஹு வென்று ஒடி இறங்கி சங்காங்குழி மார்க்கமாக வந்து நின்று

தொனியை வெளிப்படுத்தும் நப்ஸ் நாதிகா எனும் ரூஹ் தொனியை வெளிப்படுத்தும் போது தன்ஏவள் கருவியாகிய பெரியநாக்கில் குறிந்தவுடன் நாவு பிரண்டு. பற்களில் ஒட்டி வாயுவு கலந்து அட்சரத்தை அனுசரித்து ராகத்துடன் வெளியாகும் அதனை பேச்சு என்றும் வார்த்தை என்றும் சொல்லப்படும் இதற்க்கு எழுத்துக்கள் முப்பத்திரெண்டு பற்க்கள் முப்பத்திரெண்டு ராகங்கள் முப்பத்திரெண்டு என்று தொண்ணுற்றாறு தத்துவம் சொல்லி இருக்கிறார்கள்

கண்

சரீரம் என்ற ஆட்சி பீடத்தில் ரூஹு சக்கரவர்த்தியாகி நள்ரு என்னும் பார்வையின் அரியாசனத்தில் அமர்ந்துக்கொண்டு ஒரு பக்கம் ஸ்தூலம் என்கின்ற. நந்தாவனத்தையும் மறுபக்கம் சூட்சுமம் என்கின்ற மலர்வனத்தையும் பார்த்த வண்ணமிருக்கிறது இதை = ரூஹு முத்லக்கு என்றும் உஜூது முத்லக்கு என்றும் சொல்லப்படும். இந்தப் பார்வை யானது

மலையை துரும்பாகவும் மூதேவியை சீதேவியாகவும்
மாற்ற வல்லமை பெற்றதாக இருக்கும் இதை
அறிவது தன்னை அறிவதாய் இருக்கும்

அல்லாஹ் உங்களுடைய கேள்வி புலனையும் பார்வையையும் எடுத்து விட்டு உங்களின் இதயங்களில் முத்திரை வைத்து விட்டால் அல்லாஹ்வையன்றி எந்தநாயன் அவைகளை உங்களுக்கு கொடுப்பான் என்பதை நீங்கள் சிந்தித்தீர்களா.
(அல்குர்அன் 6=46)

www.miskinsha.blogspot.com

அறிவு பயான்

வானம் பூமி லோகங்களின் சிருஷ்டிப்பிலும் இரவு பகல்களின் வேறு பாட்டிலும் அறிவாளர்களுக்கு மெய்யாகவே அத்தாட்சிகள் இருக்கின்றன அந்த அறிவாளர்கள் நின்றிருக்கும் போதும் உட்கார்ந்திருக்கும் போதும் / படுத்திருக்கும் போதும் அல்லாஹு த ஆலாவை ஞாபகம் செய்வார்கள்

(அல்குர்அன் 3=190=191)

என்னைக் கொண்டே என்னை அறிந்தார் அறியும் படி ஆகினேன் என்று அல்லாஹ் (ஹதீது குத்ஸில்) சொல்லியது.

ஹக்கு த ஆலாவின் தாத்து அல்லது ஹஸ்தீ இதில் இருந்து பூத்த நூரே முஹம் மதியா வெனும் ஜீவ மாமலரில் தோன்றும் சுகந்த நறுமணமே அறிவு எனும் இர்பான் எனப்படும். இதைப்பற்றி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் உத்லுபுல் இல்ம வ.லவ்கான பிஸ் ஷீன் (இதன் பொருள்) சீன தேசத்தில் இருந்தாலும் நீ அறிவை தேடி அடைவாயாக என்று தாலிபானவனே, இன்பமும் துன்பமும் அறிவினாலேயே உண்டாகின்றன.

புதைபொருளாய் மறைவோடு மறைவாய் மறைந்திருந்த அல்லாஹ்வை அறிந்து தெளிந்து பகிரங்கமாக்கியதே அறிவுதான் மேலும் மனிதன் கலைஞனாகவும் விஞ்ஞானியாகவும் மெய்ஞானியாகவும் மேம்பாடு அடைவதெல்லாம் இந்த இர்பான் எனும் அறிவினால்தான். அல்லாஹு ஆலா நமக்கு ஆறு விதமான அறிவுகளை கொடுத்திருக்கிறான். அவைகள்

கண்களினால் அறிவதை பார்த்தறிவு என்றும் இதில் சிலநேரம் சுட்டறிவு சேர்ந்து விட்டால் இல்லாததை உண்டு என்றும் உண்டானதையில்லை என்றும் தூர இருப்பதையும் கிட்ட இருப்பதையும் சரியாக காட்டாமல் பொய்யை மெய் என்றும் மெய்யை பொய் என்றும் நம்மை. மூடர்களாக்கி குழப்பத்தில் மூழ்கடித்து விடும் இதனால் தான்

ஒரு கவிஞர் கண்ணை நம்பாதே. உன்னை ஏமாற்றும் என்று பாடி உள்ளார்.

நாசியால் அறிவதை நுகர்ந்தறிவு என்றும், செவியால் அறிவதை கேட்டறிவு என்றும், நாவினால் அறிவதை சுவைத்தறிவு என்றும் இதில் ஒருவன் வயறு, நிறைய உணவை ஒட்டகையைப்போல் உண்பானேயானால் அவனில்

சுட்டறிவான புத்தியும் பகுத்தறிவான மெய்யறிவும் சிந்தனை சக்தியை தூங்க வைத்து விடும். அப்போது அவனால் ஆழ்ந்து சிந்திக்க முடியாது பகுத்தறிவு. என்றால் இது ஹலால் இது ஹராம் என்று ஆராயும் அறிவு. இது மற்ற படைப்புகளிடம் உண்டாவதில்லை இன்ஷான்களில் சிலரிடத்தில் இது சரிவர இயங்குவதும் கிடையாது என்றாலும் நமது சரீரம் என்ற பட்டணத்திற்க்கு அறிவே அரசனாய் இருந்து பரிபாலனம் செய்கிறது.

புத்தி

அறிவில் இரண்டு வகையுண்டு ஒன்று மெய்யறிவு ஒன்று சிற்றறிவு எனப்படும் அக்லு எனும் புத்தி பஹ்மு எனும் விவேகம் இவைகள் சிற்றறிவின் சினேகிதர்களாகும். நமது தலையின் பின்பகுதியில் அடிப்பட்டாலும் அல்லது மதுபோதையில் இருந்தாலும் ஜன்னி வாத நோய் உண்டாகி விட்டாலும். இந்த சிற்றறிவானது சரீரத்தை விட்டு நீங்கி விடும் இந்த அறிவால் யாதொரு பயனும் இல்லை.

புத்தியென்பது தலையில் இருப்பது என சொல்லப்படுகிறது

புலன்களை புத்தியிலும் X புத்தியை மனதிலும்

மனதை ஓர்மையிலும் X ஓர்மையை அறிவிலும்

அறிவை நினைவிலும் அடக்கி தன்னை

அறிந்தவன் அல்லாஹ்வை அறிந்தவனாவான்

இந்த இர்பான் எனும் சுய அறிவு வானலோகத்திற்க்கு மக்சூது ஆகிய இலட்சியப் பொருளாக இருக்கிற தென்றும் வானவர்களால் சஜ்தா செய்யப்பட்ட வஸ்து என்றும்

அவர்கள் ஆதமுக்கு சஜ்தா செய்தது இந்த இர்பானுக்காகத்தான் என்றும் இந்த அறிவு எனும் நூர் தான் ஆதமுடைய ஹகீகத் ஆகிய அகமியமாகவும் கல்பு எனும் சுல்தானுக்கு முஹ்யித்தீன் எனும் கிரீடமாகவும் இருக்கிறது என்று நமக்கு அறிவு உணர்த்தலாயிற்று.

நாம் மலக்குகளிடம் ஆதத்திற்கு பணிந்து ஸஜ்தா செய்யுங்கள் என்று கூறிய போது இப்லீஸைத் தவிற அனைவரும் சுஜூது செய்தனர். இப்லீஸ் மட்டும் மறுத்தான் கர்வம் கொண்டான் இறைக்கட்டளையை நிராகரிப்பவரில் அவனும் ஆகிவிட்டான் (அல்குர்அன் 2=34)

www.miskinsha.blogspot.com

அறிவு ஏற்ற மானதா காசு பணம் முதல்கள் ஏற்றமானதா என்றால் 10 விதமான வகையில் அறிவே ஏற்றமானது.

1. அறிவு முர்ஸலான நபிமார்கள் தேடியது
முதல்கள் ஹாரூன் பிர்அவ்ன் சத்தாத் இவர்கள் தேடியது.

2. அறிவு அறிவுடையவனை காத்துக் கொள்ளும்
முதல்களை அதற்குடையவன் பாதுகாக்க வேண்டும்.

3. அறிவுடையவனுக்கு மிகுந்த தோழர்கள் சேர்வார்கள்
முதல்உள்ளவனுக்கு மிகுந்த பகைவர்கள் உண்டாவார்கள்

4. அறிவை சிலவு செய்தால் அதிகப்படும்
முதல்களை சிலவு செய்தால் குறைந்து விடும்

5. அறிவு உடையவரை சங்கையானவர் எனப்படும்
முதல்கள் உடையவரை பகில் என்று சொல்லப்படும்

6. அறிவை திருடர்களை விட்டு காக்க வேண்டியதில்லை
முதல்களை திருடர்களை விட்டு காக்க வேண்டும்.

7. அறிவுடையவர் பிறருக்கு கியாமத்தில் மன்றாடுவார்
முதல்வுடையவனை கியாமத்தில் கேள்வி கணக்கு கேட்கப்படும்.

8. அறிவு எந்த கஸ்ட நஸ்டத்திலும் அழியாது
முதல்கள் ஒரு பெரிய நஸ்ட்டத்தில் அழிந்து போகும்.

9. அறிவு நமது கல்பை ஒளிமயமாக்கும்
முதல்கள் நமது கல்பை கடுமையானதாக செய்யும்

10. முதலாளி பணத்திமிறில் தன்னை நாயன் என்பான்
ஆனால் அறிவாளி அப்படிச் சொல்ல மாட்டான்

ஆக அறிவே சிறந்ததென (பேராசையின்றி) அறிவை அடைந்தவர் அறிவாளியாவார்

நினைவு பயான்

நீங்கள் என்னை நினையுங்கள்
நான் உங்களை நினைப்பேன் (அல்குர்ஆன் 2 = 152)

மனிதனில் உண்டாகியுள்ள ஒவ்வொரு தத்துவமும் வெவ்வேறு பெயர் எடுத்து ஒவ்வொன்றும் மணிமுடி தரித்து பல்வேறு துறையில் மன்னனாய் இருந்து அரசாட்சிச் செய்கிறது. மானிடனின் மண் கோட்டைக்குள் இவைகளை தனித்தனியே பிரித்து அதன் குண செயல்களை விபறிப்பது என்பது சாதாரணமாய் சொல்லிவிட முடியாத சிரமான செயலாகும் ஆயினும்.

எல்லா தத்துவங்களுக்கும் இது ஏற்றமானதாகவும் விஷேச தன்மையானதாகவும் இந்த நினைவு இலங்குகிறது. இதை தாத்து முத்லக் எனச்சொல்லப்படுகிறது. (முத்லக்) என்றால் சர்வமும் பொதிந்தது) எனப்படும். இந்த நினைவைப்பற்றி தர்கலை அப்பா அவர்கள். கருவோடு நினைவு ஒன்றாய்யிருப்பதறியாமல் கனத்த உள்ளம் கலக்கத்துக்குள் லாகுதே அல்லாஹு = என பாடியுள்ளார்கள் என்றால் கரு இருப்பது நினைவுக்குள்ளே என பொருள் புலப்படுகிறது. ஆகஇன்ஷான்களில் உண்டாகிற காமம் அவனின் நினைவில்தான் உண்டாகிறது. உதாரணம் = ஒருவன் காலையில் இருந்து மாலை வரை ஒரே எண்ணமாய் இன்று மனைவியுடன் சந்தோஷமாக இருக்க நாடி அவளை மகிழ்விக்க வாசனையான பொருட்களுடன் வீடு சேர்ந்ததும். அங்கு அவனை சேர்ந்த யாருக்காவது ஓர் திடீர் ஆபத்து ஏற்பட்டால் என்ன மாறுதல் நடக்கும் என்றால் ஏழு மணி நேரம் உலாவிவந்த சிந்தனை அறுபட்டு நினைவு மாறி அந்த ஆபத்தில் அகப்பட்டவரை காப்பாற்ற மருத்துவமனையில் தங்கிவிடுவான் அங்கு எத்தனை நாள் ஆயினும் இந்த மனைவியின் நினைவு வருவதில்லை. ஆனதால் ஒவ்வொரு மனிதனும் அவனின் நினைவை சீர் செய்தால் போதும் மற்றபடி தொழுகை தவம் முதலான இபாதத்கள் யாவும் ஓர்மையில் நிலை பெறும் மேலும் அறிவும் நினைவும் ஒன்றாகி விட்டால் செய்யும் செயல் சிறப்படையும் என்பார்கள். மனிதன் முட்டாள் தனம் அடைவதெல்லாம் இந்த நினைவுயில்லா மறதியால் தான் வாகனம் ஓட்டுபவனும் மின்சார தொழில் செய்பவனும் விமானத்தை ஓட்டுபவனும் கால்நடையாய் செல்பவனும் இப்படி யாராய் இருப்பினும் நினைவு தடுமாறினால் போதும் ஆபத்தில் அல்லது மரணத்தில் சிக்கிக்கொள்ள நேர்ந்து விடும் ஆனதால் இந்த நினைவை அல்லாஹ்வின் பக்கம் வைத்து ஈடேற்றம் பெற நம் அனைவருக்கும் அல்லாஹ் பேரருள் புரிய நல்அமல் செய்ய ஈமானை ஒளிவாக்கி தருவானாகவும்

www.miskinsha.blogspot.com

ஆலம் ஸகீறு, ஆலம் கபீறு

ஆலம் ஸகீறு	ஆலம் கபீறு
வெளி உலகம்	உள் உலகம்
இது அஹமதாகவும் உள்ளது.	இது முஹம்மதாகவும்
அல்லாஹ்வின் அர்ஸிக்கு ஒப்பாய்	தலை எனும் சிரசு
அபூ ஜம் ஜம் கிணற்றுக்கு ஒப்பாய்	தலை உச்சி குழி
குர்ஸாகிறது	நெற்றியும்
சுல்தானன் நஸீரா	தலை மூளை ஸ்தானம்
காபா கௌஸைன்	புருவ மத்தி
இதுவே =	மகாமன் மஹ்மூதாய் இருக்கும்
தூர் சீனா மலைக்கு ஒப்பாய்	கண்கள் கருவட்டம்
அர்ஸின் தூன் தீபங்கள்	பல்வரிசையாகும்
சுபர்க்கம்	நடு நெஞ்சுக்குழி
கஃபத் துல்லாஹ்	கல்பு எனப்படும்
பைத்துல் மஹ்மூர் பள்ளி	அறிவும் நினைவும் நாட்டமும்
கௌதர் நதி நீர்	எச்சில் ஊற்று
கடல் வளைவுகள்	முதுகந்தண்டு
மீஜான் தராசு	வாய் மொழிகள்
கலம்	வலது கை
லவ்ஹுல் மஹ்பூல்	இடது கை
சிறாதல் முஸ்தகிம் பாலம்	வயறு
தஹ்தஸ்ஸறா (பாதாளம்)	இரு பாதங்கள்
ஆறு அருவிகள்	நரம்புகள்
மலை கெபிகள்	எலும்புகள்
மரம் செடி கொடிகள்	சரீர ரோமங்கள்
1 வது வானம்	வாய்
2 வது வானம்	நாசி
3 வது வானம்	கண்கள்
4 வது வானம்	காது
5 வது வானம்	புருவங்கள்
6 வது வானம்	நெற்றி
7 வது வானம்	மண்டையோடு

நமது சரீரத்தில் வலதுபாகம் பூராவும் மஹ்மூதரின் பங்காகவும் நமது சரீரத்தில் இடதுபக்கம் (உள்பாகம் மட்டும்) இபுலீசின் பங்காகவும் பிரிவினையாக்கப்பட்டுள்ளது

முதல் பூமிக்கு ஒப்பாகா	நமது தோல் புஜங்கள்
2 ஆம் பூமி ஒப்பாகா	மார்பு
3 ஆம் பூமி ஒப்பாகா	இடை
4 ஆம் பூமி ஒப்பாகா	வயிறு
5 ஆம் பூமி ஒப்பாகா	தொடைகள்
6 ஆம் பூமி ஒப்பாகா	கைகள்
7 ஆம் பூமி ஒப்பாகா	ஆண், பெண் குறிமேடுகள்
சூரியனாய்	வலது நாசி சுவாஸம்
சந்திரனாய்	இடது நாசி சுவாஸம்
நட்சத்திரமாய்	அறிவுகள்
மின்னலாய்	கண்சிமிட்டல்
மழையாய்	கண்ணீர்
சூறாவளியாய்	குறட்டை
புயலாய்	வாயுவு பிரியுதல்
நரகம்	பெருங்குடல்
கடல்	சிறுக்குடல்
அமானித வாசல்	முன் துவாரம்
நரக வாசல்	பின் துவாரம்
குர்ஆன்ஷரீப்	இரு காதுகள்
ஷைறவான்கள்	ஈறு பேன்கள்

ஹஜ்ருல் அபியள்கல் தாமரக்காயில் வெள்ளைக்கல் அமாவாசையானது தொப்புள் மன்ஸில் இது சந்திர சூரியர்களின் எல்லைகளை பிரிக்கும் ஸ்தலமாகும்

www.miskinsha.blogspot.com

இல்மூல் இன்ஷான்

இமாம் கஸ்ஸாலி ரஹீம ஹுல்லாஹ் சொல்லி இருக்கிறார்கள் மவுத்துக்குப் பின் இன்ஷானோடு சேர்ந்து போகிறவைகள் இரண்டு ஒன்று இல்மு ஒன்று அமல் என்று

அல்ஹைய்யுல் என்றது கண்களாகும்
அல் கைய்யூம் என்றது காதுகளாகும்
மத்து என்றது ஆண்குறியாகும்
சத்து என்றது பெண்குறியாகும்
ஜபர் என்றது பித்தாய் இருக்கும்
ஜேர் என்றது கருஈரலாய் இருக்கும்

காபு	நிற்பது கண்மலராய் இருக்கும்
ஹே	நிற்பது கஃபா புருவமத்தியாய் இருக்கும்
ஏ	நிற்பது கபாலம் பைத்துல் மஹ்மூராய் இருக்கும்
அய்ன்	நிற்பது கண் கருவட்டமாய் இருக்கும்
ஸாது	நிற்பது நாக்கான குர்ஸா இருக்கும்
தாள்	எழுத்தால் உலகம் விரிவானது
அலிபுலாம்	எழுத்தால் ஆத்மாவானது
நூன்	எழுத்தால் ஆனந்தம் உண்டாவது
ஜீம்	எழுத்து சரீர ரகஸியமானது
அலிபுலாம்	ஹே-கூடி ரூஹாய் ஆனது
ஒரு மீம்	நாவில் தொனியானது
ஒரு மீம்	கண்ணில் ஒளிவானது
லாம்	ஆணின் விந்தானதும் உணவை இழுப்பதும்
அலிஃபு	அல்லாஹ்வின் தனிமைகோலம்
பே	அல்லாஹ்வின் இரண்டாம் கோலம்
ஜீம்	உஹதான தலை
வாவ்	அப்ஜத்தில் ஆறு இது.
	உயிர்களுக்கு நினைவாக இருக்கும்
ஹே	இது. நிதானம் தருவதாகும்
நுக்தா	4 = வது மக்காம் லாஹூத்
ஹே	5 = வது மக்காம் ஜெம்ஹூத்
வாவ்	6 = வது மக்காம் ஹா.ஹூத்
ஸே	7 = வது மக்காம் பா.ஹூத்
ஹே	8 = வது மக்காம் தம் ஹூத்

லா	மண் பூதம் உள் உருப்பு பற்குத்தி இதனால் பேச்சும்
இலாஹ	தண்ணீர்பூதம்உள்உருப்பு கருஈரல்இதனால்பார்வையும்
இல்லா	காற்று பூதம் உள் உருப்பு நுரைஈரல் இதனால் மூச்சு
அல்லா	நெருப்பு பூதம் உள் உருப்பு பித்து இதனால் கேள்வி
ஹூ	ஆகாயம் உள் பூதம் மூளை இதனால் உதிப்பு

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மது ரசூலுல்லாஹி

கலிமா என்னும் வாக்கியத்தை அரபியில் எழுதினால்

காப்.லாம்.மீம்.தே. என்று நான்கு எழுத்துகளாகும், இதை விபரம் எப்படி என்றால்

காப் = காமிலானவன் அல்லாஹ்வின் வாஜிபான 20 சிபத்தை அறிய

லாம் = எனும் ஜிப்ரயீல் தூதுவராய் வந்து

மீம் = எனும் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு

தே = எனும் தூறாப் என்ற மண்ணாய் ஆன மனிதர் மீது உஜூ

தானதை உணர்த்தச் சொன்னதே கலிமாவாகும்.

லா = இது இடது விலாவின் கீழ் மண் = சுவை துவர்ப்பு

இலாஹ = இது நாவின் கீழ் தண்ணீர் = சுவை உப்பு

இல்லா= இது தொப்புளில் காற்று = சுவை புளிப்பு

அல்லா= இது நடுவயற்றில் நெருப்பு = சுவை கசப்பு

ஹூ = இது தலையில் முஹம்மதியாவின் ஒளி = ஆகாயம் இன்பம்

இன்ஷான் ஓர் கலிமா மரம்

லா = என்றால் நப்ஸ் இது கனியாகவும்

இலாஹ = என்றால் இருதயம் இது புஸ்பமாகவும்

இல்லாஅல்லாஹு = என்றால் ஆத்மா இது கிளைகளாகவும்

முஹம்மது = என்றால் சிர்ரு ரகஸியம் மரம் ஆகவும்

ரசூல் = என்றால் நூர் ஒளி வேர் ஆகவும்

அல்லாஹி = என்றால் தாத் விதையாகவும்

சரீரத்தில்சூழ்ந்துள்ளது என்றும்

www.miskinsha.blogspot.com

முஹம்மது ரசூலுல்லாஹி

மீம்	இன்ஷானின் அர்ஸான தலையில்
ஹே	தோள் புஜங்களில்
மீம்	உந்திக் கமலத்தில்
தாள்	இரண்டு கால்களிலும்
றே	விலா எலும்புகளில்
ஷீன்	ஆண், பெண் குறிகளில் (அஹதியத்து)
வாவ்	தசையிலும் இரத்தத்திலும் (உஹதியத்து)
லாம்	முகத்திலும் ரூபத்திலும் (வாஹிதியத்து)
அலிஃப்பு	ரூஹஉல் குத்ஸியில்
லாம்	ஷெய்ஹஉம் ஹயாத்தும்
லாமலிப்	மூலா தாரத்தில்
ஹே	தாமரைக்காயில்

இவ்விதமாக இன்ஷானில் கலிமா உள்ளதை அறியாதவர் இஸ்லாம் என்று ஆக மாட்டார். மேலும் நாயகம் (ஸல்) சொல்லியிருக்கிறார்கள் வ. மன். யகூலு. லா. இலாஹ. இ ல் ல ல் லா ஹு அ ல் ப . ம ர் . ர த் தி ன் . பி லா தஃகிக்கின். பஹஉவ. காபிர் (இதன் பொருள்)

முஸ்லீம் என்று சொல்லும் ஒருவர் அவ்வள் கலிமாவை விபறித்து அறியாமல் ஆயிரம் தரம் சொன்னாலும் அவர் காபிராக இருக்கும் என்றும் = சொல்லியிருக்கிறார்கள்

லா	என்றால் இது முஸ்தஹப்பு என்றும்
இலாஹா	என்றால் இது சுன்னத்து என்றும்
இல்லா	என்றால் இது வாஜீபு என்றும்
அல்லாஹஉ	என்றால் இது பர்ள் என்றும்
முஹம்ம	என்றால் இது பர்ள் என்றும்
துர்ர	என்றால் இது வாஜிபு என்றும்
சூலு	என்றால் இது சுன்னத்து என்றும்
லல்லாஹி	ஏன்றால் இது முஸ்தஹப்பு என்றும்

லாஇலாஹ

இதில் உள்ள ஹே என்ற எழுத்து தாயின் கருவில் உள்ள சிசுவை உருவமாக்கும். எழுத்து இதற்க்கு பவளம் என பேர் சொல்லப்படும். இதுதான் தாயின் (ஹைள்) மாதவிடாயை உண்டாக்குவது மேலும் சிசுவிற்க்கு தாய்பாலாக ஊறிவருவதும் ஆனதால் இதை பெண் எனப்படும்.

இல்லாஅல்லாஹஉ

இதில் உள்ள ஹஉ என்ற எழுத்து ஆண், பெண் என்றில்லாது ஒளிவாக இருக்கும். இது பச்சை என்று பெயர் பெற்று சூடுரத்தம் மூச்சை ஒன்றாக்கி ரூஹை உண்டுபடுத்துவது.

முஹம்மதுரசூலுல்லாஹி

இதில் உள்ள ஹி என்ற எழுத்து நாம் உண்ணும் உணவில் இருந்து நுத்பாவை எடுத்து தாயின் கருவறையில் சேர்த்து சிசு உண்டாக காரணமாய் இருப்பது. ஆனதால் இதை கரு எழுத்து என்றும் ஹே என்றது உருவெழுத்தென்றும் ஹஉ வென்பதை உயிர் எழுத்தென்றும் கலிமாவை அறிவது நமக்கு பர்ளாக இருக்கும். இதை எல்லாம் அறியாமல் கலிமா சொன்னது உண்மையாகாது இஸ்லாமானவராகவும் முடியாது என அறிந்து கலிமா உட்பொருள் அறிவது அவசியமானது.

www.miskinsha.blogspot.com

ஆணின் சூட்சுமதேகத்தில்
பொருப்பாளர்களான மு.வக்கல்கள்

அலிஃப்பு	கண்களின் பாவைகளில்	இஸ்ராபீல்	அலைஹிஸ்ஸலாம்
பே	நெற்றியில்	ஜிப்ரயீல்	,, ,,
தே	வலது புருவத்தில்	இஸ்ராயீல்	,, ,,
த்தே	இடது புருவத்தில்	மீகாயீல்	,, ,,
ஜீம்	தலையில்	குல்காயீல்	,, ,,
ஹே	தாமரைக்காயில்	தன்கபீல்	,, ,,
ஹ்ஹே	கருஈரலில்	மஹ்ககாயீல்	,, ,,
தால்	வலது காதில்	தர்தாயீல்	,, ,,
ஜால்	இடது காதில்	அஹ்ராயீல்	,, ,,
றே	வலது விலாவில்	அம்வாகீல்	,, ,,
ஸே	இடது விலாவில்	ஸர்காயீல்	,, ,,
ஷீன்	வலது கை விரல்பகுதி	ஹம்வாகீல்	,, ,,
ஷ்ஷீன்	இடது கை விரல்பகுதி	ஹம்ராயீல்	அலைஹிஸ்ஸலாம்
ஸாது	வலது கை கீழ் பகுதி	அஹ்ஜாயீல்	,, ,,
லுவாது	இடது கைகீழ்பகுதி	அத்ாயீல்	அலைஹிஸ்ஸலாம்

தொய்	வலது புற இடுப்பில்	இஸ்மாயீல்	அலைஹிஸ்ஸலாம்
லொய்	இடது புற இடுப்பில்	லவ்ஸாயீல்	,, ,,
அய்ன்	வலது கண்ணில்	லவ்மாயீல்	,, ,,
Gகைன்	இடது கண்ணில்	லவ்காயீல்	,, ,,
Fப்பே	வலது தொடையில்	ஸர்ஹமாயீல்	,, ,,
காபு	இடது தொடையில்	அத்ராயீல்	,, ,,
காப்	வாய்யில்	ஹருஸாயீல்	அலைஹிஸ்ஸலாம்
லாம்	நடுவயற்றில்	தாதாயீல்	,, ,,
மீம்	தலை மூளையில்	ரூமாயில்	,, ,,
நூன்	விரைப்பையில்	ஹவ்லாயீல்	,, ,,
வாவ்	தொப்புளில்	அன்தமாயீல்	,, ,,
ஹே	முதுகு தண்டு தொண்டையில்	தூர்யாயீல்	,, ,,
லாம்அலிபு	இரு முழங் கால்களில்	தர்தாயீல்	,, ,,
ஹம்ஸா	நாசியில்	ஹமாகாயீல்	,, ,,
யெ	கால்பாதங்களில்	ஸர்கீதாயீல்	அலைஹிஸ் ஸலாம்

மனிதன் எந்த நிலையில் இருந்தப் போதிலும் அவனுக்கு முன்னும் பின்னும் தொடர்ந்து வரக்கூடிய. மலக்குகள் பலர் இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வுடைய கட்டளையைக்கொண்டு அவனை இரட்சிக்கின்றனர் (அல்குர்ஆன் 13 = 11)

www.miskinsha.blogspot.com

ஹக்கை - ரூஹுக்கு உவமை காட்டுதல்
ஆலம் ஸகீர் × ஆலம் கபீர்

அப்துல் கரீமுல் ஜீலி ரஹ்மஹுல்லாஹு அவர்கள் இன்ஷான் காமிலீன் எனும் கிதாபில் கூறிஇருக்கிற. விபரமாவது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வ.ஸல்லம் கூறிய தன்னையறிந்தவன் திட்டமாகத் தன் நாயனையறிவான் என்ற திருவசனத்தின் கருத்தானது. அறிவானவனே அறிந்துகொள்.

அல்லாஹு த ஆலா குர்ஆனில் அலிஃபு லாம் மீம் தாலிகள் கிதாபு லா.றைப.பீஹி ஹுதன்.லில்முத்தகீன் என்றதின் பாதின் பொருளானது : தாலிபானவனே.அலிஃபு லாம்.மீம் என்றது இன்ஷாவின் முத்தேகம் என்றும் அது முன்டகக்கமலம் இருதயக்கமலம் உந்திக்கமலம் என்று பிரிவானதும் தாலிக்கல் கிதாப் என்றது அவனின் நப்ஸாக இருக்கும் என்றும் இன்ஷான் தன் நபுஸை யறிந்து பயபக்தியுடையவனாய்யிருந்தால். அது அவனுக்கு சந்தேகமின்றி நேர்வழிக் காட்டுமென்று சொல்லியதின் 10 வகை விபரம்

ஆலம் கபீர் எனும்

1. நமது சரீரத்தில் ரூஹில்லாது போனால் யாதொன்றும் நடக்க முடியாது ஒவ்வொரு உறுப்பையும் ஒவ்வொரு அங்கத்தையும் ரூஹே நடத்துகிறது. அந்தரூஹு நமது கண்ணுக்கு தெரியாது போனாலும் அதுதான் நடத்துகிறது என்பது நமது அறிவுக்கு விளங்குகிறது. ரூஹில்லாது போனால் சரீரம் செத்த : மய்யித்தாகிவிடும்.

இது போலவே ஆலம் ஸகீர் எனும் உலகத்தில் அல்லாஹு தஆலா கண்களுக்கு தெரியாது போனாலும் அவனே எல்லா ஆலங்களையும் நடத்துகிறான் என்றும்

ஆலம் கபீர் எனும் நமது சரீரத்தில் ரூஹைக் கொண்டேயன்றி ஒரு அசைவும் ஒரு நினைவும் ஒரு செய்கையும் இயங்க முடியாது என்றும்

இதுபோலவே ஆலம்ஸகீர்ரெனும் வெளிஉலகத்தில் அல்லாஹு தஆலாவை, கொண்டேயன்றி உலகத்தில் ஒரு காய்ந்த இலை கூட கிழே விழ முடியாது என்றும்.

2. வது உவமையானது = நமது சரீரத்தில் உள்ள சகல உறுப்புகளையும் நடத்துவது ஒரே ரூஹு என்பதற்க்கு நமக்கு சந்தேகம் இல்லாதது போலவே உலகங்களையெல்லாம் நடத்துகிறது ஆளுகிறதும் ஒருநாயன்தான் என்பது சந்தேகம் இல்லை.

3 வது சரீரத்தில் நடக்கிற நன்மை தீமைகளனைத்தும் ரூஹின் நாட்டத்தைக் கொண்டே நடந்து வருவன போலவே. உலகங்கள்யாவிலும் நடக்கின்ற நன்னை தீமை முதலிய செய்கைகளனைத்தும் அல்லாஹு தஆலாவின் நாட்டத்தைக் கொண்டே நடத்தப்படுகின்றன.

4 வது சரீரத்தில் நடக்கிற காரியங்களனைத்தும் ரூஹுக்கு தெரியாதிருக்க முடியாது. அது போலவே உலகங்களில் நடக்கிற காரியங்களனைத்தும் அல்லாஹு தஆலாவுக்கு தெரியாமல் இருக்க முடியாது.

5 வது சரீரத்திற்க்கு மற்ற வஸ்துகள் எல்லாவற்றிலும் ரூஹு மிகவும் சமீபமாக நெருங்கி இருப்பது போலவே சகலவஸ்த்துகளுக்கும் அல்லாஹுத்த ஆலா சமீபமாக இருக்கிறான்.

6 வது சரீரம் உண்டாகு முன் ரூஹு இருந்தது போலவே படைப்புகளை படைக்கும் முன் அல்லாஹ் இருந்திருக்கிறான்.

7 வது சரீரத்தில் எந்த இடத்தில் ரூஹு இருக்கிறது என்று நமக்கு தெரியாது அது ஒரு உறுப்பில் இருக்கிறதா அல்லது ஒரு இடத்தில் இருக்கிறதா என்றால் அது எதிலும் நிலையானதல்ல. அது போலவே அல்லாஹு தஆலா இன்ன தலத்தில் இருக்கிறான் என்றுச் சொல்லக்கூடாது இடமும் தலமும் அவனில் அமைந்திருக்கின்றன ஷெய்ஹு அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அல்லாஹு தஆலா விடம். நாயனே நீ எந்த தலத்தில் இருக்கிறாய்யென்று கேட்க அல்லாஹு தஆலா கௌதுல்லஃலமே எனக்கொரு தலமுமில்லை இடமுமில்லை. இடம் தலம்யாவையும் படைத்தவன் நானென்று திருவுளம் பற்றினான் மேலும் சரீரம் அழிந்தப்பின் ரூஹு இருப்பது போலவே உலகம் அழிந்தப்பின்னம் அல்லாஹ் இருப்பான்.

www.miskinsha.blogspot.com

8 வது ஆலம்கபீறா வெனும் சரீரத்தின் ஏகாதிபதியாக ரூஹு சரீரத்தில் இருக்கிறது தெரிந்தாலும் அது என்ன தன்மையாய் யிருக்கிற தென்று நமக்கு தெரியாமல் இருக்கிறது.

அதுபோலவே அல்லாஹு தஆலா இருக்கிறான் என்பது உறுதியாயிருந்தாலும் அவனென்ன தன்மையிலிருக்கிறான் னென்று அறியக் கூடாததாக இருக்கிறது.

9 வது ரூஹு சரீரத்திலிருக்கும் போது பார்வையைக்கொண்டு காணவும் முடியாது. வேறொரு பொருளுக்கு ஒப்பிடவுடம் கூடாது அதுபோலவே அல்லாஹ்சுபஹானஹுவ தஆலாவை பார்வையைக் கொண்டு காணவும் முடியாது. ஒரு பொருளுக்கு ஒப்பிடவும் கூடாதென்றும் உள்ளது.

10 வது நமது ரூஹை பஞ்சேந்திரியங்களால் எட்டக்கூடாது அது போலவே அல்லாஹு தஆலாவை பஞ்சேந்திரியங்களால் எட்டவும் கூடாது.

சிறாஜி ரஹ்மி ஹுல்லாஹ் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்ஷானை அல்லாஹு தஆலா தன்னுடைய தாத்துக்கும் சிபாத்துக்கும் செயலுக்கும் உதாரணமாகப் படைத்தான் என்று அல்லாஹு தஆலாவுக்கு ஒன்றையும் ஒப்பாய் சொல்லக் கூடாது. என்றாலும் உதாரணமாய் சொல்லக் கூடும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

அல்லாஹுத்ஆலா ஆதம் நபியை தன் சூறத்தில் படைத்தானென்று நபிஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள் சொல்லிய வசனத்திற்க்கு இமாம் கஸ்ஸாலி ரஹ்மி ஹுல்லாஹு சொல்லுகிறார்கள் அல்லாஹு தஆலாவுடைய சூறத்தென்றது கண்ணுக்குத்தெரியும் ரூபமல்ல அது அல்லாஹு தஆலா வுடைய தாத்திற்க்கும் சிபாத்திற்க்கும் செயலுக்கும். ஒப்புச்சொல்லக்கூடியதாயிருப்பதால் உதாரணமென்கிற கருத்தாயிருக்கும். ரூஹு என்பது கண்டிப்பையுடைய பொருளுமல்ல கண்ணுக்கு தோற்றப்படுகிற தோற்றமும்மல்ல 0 சரீரத்தை சேர்ததுமல்ல 0 அதை விட்டு பிரிந்ததுமல்ல 0 அது தன்னைக் கொண்டு தான் நிற்கிறபொருளாயிருக்கின்றது என சொல்லப்பட்டுள்ளது.

யார் இந்த மலாயிகத்து

அமா விலுள்ள மூலப்பொருள் ஜவ்ஹர் எனும் இது ரூஹுடைய சூறத்துக்களை ஒப்புக்கொண்டது அவைகளுக்கு முஹையிமா என பெயர் சொல்லப்படும். அந்த அர்வாஹுகளில் ஒன்றிற்க்கு ரூஹு என்று சொல்லப்படும். யார் இந்த மலாயிகத்து

அப்துல் கரீமுல் ஜீலி ரஹ்மி ஹுல்லாஹு அவர்கள் இன்ஷான் காமிலின் கதாபில் சொல்லியிருக்கிறார்கள். சூஃபியாக்கள் இந்த மலக்கு படைக்கப்பட்டவைகளுக்கு எல்லாம் ஹக்கென்றும் ஹக்கீகத்தி முஹம்மதியாக வென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அல்லாஹுத்ஆலா இந்த மலாயிக்கத்தை தன் ஒளிவைக்கொண்டுபடைத்தான் மற்ற படைப்புகளெல்லாம் அதின் ஒளிவைக் கொண்டுப் படைத்தான்.

இன்னும் அல்லாஹு தஆலா தன் அஸ்மாக்களைக்கொண்டு அதன் வழியாக அவன் பார்கிறதாக ஆக்கிக்கொண்டான்.

படைப்புகள் யாவிலும் அதை மேன்மையானதாகவும் முகர்றபீன்களின் நாயகமாகவும் உயர்த்தியாகவும் ஆக்கினான். இன்னும் அர்ஸைசுமக்கிற எட்டுமலாயிக்கத்துகளையும் இன்னும் இல்லிய்யீன்களென்கிற மலாயிகத்துகள் இன்னும் அனாசிர்களைக்கொண்டு உண்டாக்கிய மலாயிக்கத்துக்களாகிற எல்லா மலாயிக்கத்துக்களையும் இந்த மேன்மையான மலாயிக்கத்துவின் ஒளிவைக்கொணடு படைத்தான்.

அந்த மலக்கின் கமால் அல்லது நிரப்பம் ஹக்கீகத்து முஹம்மதியாவில் வெளியாயிற்று அதனால் தான் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லாம் மனிதர்களில் உயர்த்தியானவர்களாய் இருக்கிறார்கள்.

இன்னும் அந்த மலாயிக்கத்துக்கு அம்ருல்லா வென்கிற பெயரிருக்கிறது. அதனால் தான் அல்லாஹு தஆலா நபியே ரூஹாகிறது எனது அம்றென்று திருவுளம் பற்றினான்.

அல்லாஹுத்தஆலா இந்த மலக்கை தன் தாத்துக்கோர் கண்ணாடியாக்கிக் கொண்டான்.

www.miskinsha.blogspot.com

இந்த மலக்கை கொண்டல்லாது அல்லாஹுதஆலா தன் தாத்தைக் கொண்டு வெளியாகிறதில்லை. படைப்புகளில் வெளியாகிறதெல்லாம் தன் சிபத்துகளைக்கொண்டே

இந்த மலாயிகத்துதான் துன்யா ஆகிறம் சொர்க்கம் நரகம் அனைத்திற்க்கும் குத்துபாயிருக்கிறார்கள்.

இந்த மலக்குக்கு அந்தந்த நிலைக்கு தக்க பெயர்களிருக்கின்றன அவைகள் கலமுல் லஉலா வென்றும் நபிஸல்லல்லாஹு அலைஹி வ.ஸல்ல.முடைய.ரூஹென்றும் அக்கிலில் அவ்வலென்றும் ரூஹுல் இலாஹி யென்றும் பல பெயர்கள் சொல்லப்படும் ஆனால் ஹக்கு தஆலாவுடைய சமுகத்தில் இந்த மலாயிக்கத்துக்கு ரூஹ் என்கிற பெயராயிருக்கும் மென்று சொல்லியிருக்கிறார்கள்.

அறிந்துக்கொள்

உஜுத் என்றால் X கண்டிப்புடைய கண்டிப்பில்லாத ரூபமுடைய X ரூபமில்லாத பொருள்கள் யாவற்றிற்க்கும் மூலப்பொருளாய் இருக்கும் என அறிந்துக்கொள் இதை தமிழ்ஞானிகள் பரம்பொருள் என்றும் சத்து (பலம்) என்றும் சொல்வர்.

ஜவ்ஹர் = என்றால் சடப்பொருள்களுக்கெல்லாம் அசலான பொருள் எனவும் சடப்பொருளென்பது கண்டிப்புடைய கண்ணுக்குத் தெரியும் பொருள்கள் மட்டும்மல்ல மற்றும் இந்திரியங்களுக்கும் தெரிகின்ற பொருள்களுக்கும் சடப்பொருள் என சொல்லப்படும் (பரம்பொருள்)

சத்து பலம் எனவும் சொல்லலாம்

அர்ளு = என்றால் சடப்பொருளின் கோலமல்லது இலட்ச்ஷணம் எனப்படும் உதாரணம் காற்று கண்ணுக்கு தெரியாமல் போனாலும் அது உடலில் உறசுவதில். அதை சடப்பொருள் என சொல்லப்படும்.

ஹயூலா = என்றால் ரூபமுள்ள பொருள்களுக்கு மூலப்பொருளாகும் லவ்ஹுல் மாஹ்பூலில் சமைக்கப்படுகின்றது. இப்படியே

மூன்று வகையான மண்

அல்லாஹுதஆலா மனிதன்படைப்பை மூன்று வகையான மண்ணைக்கொண்டு உண்டாக்கி இருக்கிறான். இதன் விபரம் யாதெனில் முதலாவது உலகமண் இரண்டாவது சுபர்க்கமண் மூன்றாவது அர்சின் ஒளி

1. இதில் உலகமண்ணால் படைக்கப்பட்டதின் குணங்கள் அனாநீயத் குபாடம் பாப.பந்தங்கள்.கோபம்.பொய், போன்ற துற்குணங்களாயிற்று என்றும்

2. இதில் சுபர்க்கமண்ணால் படைக்கப்பட்டதின் குணங்கள் ஞானம் உண்மை.சிரித்த முகம், உபகாரகுணம், தாழ்மை, கல்வியறிவு, தருமம். முதலிய நற்குணமாயிற்று என்றும்.

3. இதில் அர்ஸின் ஒளிவால் படைக்கப்பட்டதின் குணங்கள் இவர் எப்போதும் தனிமையில் இருப்பார்கள் வாய் திறந்து அதிகம் பேசமாட்டார்கள் உணவிலோ. உடையிலோ பொன்னிலே பொருளிலோ எதிலும் விரும்பி விருப்பம் காட்ட மாட்டார்கள் இப்படி குணம் கொண்டவரின் நினைவில் சதா அல்லாஹ்வின் திக்ர் அதிகமாகிக் கொண்டே இருக்கும். மேலும் இவர்கள் அல்லாஹ்வின் இஸ்கில் புகுதப்பட்டு ஜமாலியத்துல்லாஹ் வாகிய வஹ்தானிய்யத்தின் சமுத்திரத்தில் மூழ்கி சதா ஆனந்தமாகி தவத்தில் தரிபடுகிறது. பூரணத்தில் சம்பந்தப்படுகிறது. நேரத்திற்க்கு நேரம் த.ஜல்லியாத்தின் மஸ்துண்டாகி கொழுவிக் கொள்கிறது ஆகிய பூரண மயங்களாகும்.

தாத்து சிபாத்து இல்முல்எகின் அய்னுல்எகின் ஹக்குல்எகின் கமாலுல்எகின் சித்ரத்துல் முன்தஹா ஆலம் கபீறு ஆலம் ஸகீறு ஆலம் பகீறு காபா கௌஸைன் மகாமன் மஹ்மூதா சுல்தானன் நஸீரா வஸீலத்துல் மர்ளியா இவைகள் சூழ்ந்த இன்ஷான் படைக்கோலம் கொண்ட 96 தத்துவங்களையும் கலிமா தத்துவம்.96 அறிவு தத்துவம் 96 போன்ற ஞான விளக்கம் இல்மு இஸ்மு முவக்கல்களை அறிவது தன்னை அறிவதாய் இருக்கும்.

www.miskinsha.blogspot.com

நான்கு வகையான ரூஹுகள்

அல்லாஹு தஆலாவின் சிர்றென்கிற ரூஹின் பர்ள் நான்கு இதை ஒவ்வொரு ஷெய்ஹும் முரீதும் அறிவது பர்ளாக இருக்கும்

1 வது = கல் மண்மலை இதன் ரூஹுகள் நான்கு இவைகளில் எஜமானியத்தான ரூஹுகள் இரண்டு அவைகள் ஒன்று ரூஹெ தபக்கியத்து மற்றொன்று ரூஹெ தபக்கியாகும்.

இதற்க்கு அடிமை ரூஹுகள் இரண்டு அவைகள் ஒன்று ரூஹெ சிப்பாது = மற்றொன்று ரூஹெ திக்லு எனப்படும்.

2 வது = மரம், செடி, கொடி, இவைகளுக்கு தலையையானது ரூஹு = ரூஹெ நபாதியத்து இதற்க்கு அடிமை ரூஹுகள் முப்பத்திரண்டு அவைகள் ஜாதிபா மாஸிக்கா காமா தாபிக்கா முமையிஸா முஸவ்வறா மு.நவ்மியா முகல் லித்தா எனப்படும்.

3 வது விலங்கினங்களின் ரூஹுகளில் தலைமையானது = ரூஹெ ஹைவானிய்யா இதற்க்கு அடிமை ரூஹுகள் பனிரெண்டு அவைகள் லாமிஸா பாஸிறா ஷாமி தாப்பிக்கா ஹிபுலு பிக்ஹு சியாலு முஸ்தரிக்கு போன்றவைகளாகும்.

4 வது இன்ஷானியத்துடைய ரூஹுகளாய் இருக்கும். இதன் குறிப்பு பெயரானது நாத்திகா பஷரியத்து எனப்படும். இதில் அர்வாஹும் அப்தும் சேர்ந்து இருபத்தைந்து அடிமையான ரூஹுகள் உண்டு இவைகளில் மிகச்சிறப்பான ரூஹெ நலரியத்து என்ற ரூஹு இவைகளில் ஒன்றாக சேர்ந்துள்ளது.

இதன் குணம் = இன்ஷானுடைய பதவியை நல்ல அமலில் சேர்த்து கொண்டு நடத்தும் இதன் விபரமெல்லாம் இருபத்திஎட்டு வகைகளாக உள்ளன. இவைகளை மனிதன் அறிந்து தவத்தில் கொழுகிக்கொள்ளவது பர்ளாகும்.

இதன் சரீர வடிவானது மத்து பிதா குறி என்றதின் நீளமாகவும் ஆசனமானது சுக்கூனாகவும் நுக்தாவானது பரமாத்மாவாகவும் அந்த நுக்தாவின் வட்டமானது இருகண்களாகவும் மெஃராஜில் சந்தித்து பேசிய இது போன்ற ரகஸிய இல்மாகியதை அறிவது பர்ளாக இருக்கும்.

நன்றிமறவாதே

பின்னர் ஓர் அற்ப துளியாகிய (இந்திரிய) சத்திலிருந்து அவனுடைய சந்ததியை (உருவகித்து) உண்டாக்கினான் பின்னர் அதனைச் செப்பினிட்டு தன்னுடைய ரூஹ் இலிருந்து அதில் ஊதி (மனிதனை உண்டாக்கி)னான் உங்களுக்கு காதுகள் கண்கள் இருதயங்கள் முதலியவற்றையும் அவனே அமைத்தான் (இவ்வாறிருந்தும்) நீங்கள் நன்றி செலுத்துவது வெகுசொற்பம் (அல்குர்ஆன்32=8-9)

அல்லாஹுதஆலா தவ்றாத்து வேதத்தில் சொல்லி இருப்பதாவது ஆதமுடைய மக்களே = நானுங்களுக்கு உங்கள் தாயின் வயிற்றில் நீங்கள் தங்குவதற்க்கு கெர்ப்பப்பையை தந்தேன் = அங்கே ஹாளிராகும் மலக்குகளின் ரூபங்களை கண்டு பயம்கொள்ளாதிருக்க உன் முகத்திற்க்கு முகமூடி அணிவித்தேன் இன்னும் நீ செவ்வையாக சாய்ந்துக்கொள்ள உன் தாய் வயிற்றில் வலது பக்கம் ஒரு சாய்மானமும் இடது பக்கம் ஓர் சாய்மானமும்மான நஞ்சுப்பையையும் பன்னீர்குடபையையும் இருபக்கத்திலும் மெத்தைகளாக்கித்தந்தேன். உனக்கு உன்தாய் புசிக்கும் ஒஜீபனத்தின் வாடைநெடியால் உனக்கு மூச்சு திணறல் உண்டாகாதிருக்க உன் முகத்தை தாயுடைய முதுகுபுறமாக்கினேன். இன்னும் நீ தாய் வயற்றில் கை கால்களை நீட்டவும் மடக்கவும் பார்க்கவும் கேட்கவும் உனக்கு படித்துத் தந்தேன் = அப்பால் நீ அவதரிக்கும் காலம் பூர்த்தியானதும் தாயின் கெர்ப்ப அறைக்கு சாட்டப்பட்ட மலக்களவில் உன்னை வெளிப்படுத்தும் படி வஹி அறிவித்தேன். அவர் தம்முடைய இறகின்பேரில் உன்னைப்படுக்கவைத்தப்படி வெளியாக்குகிறார். அப்போது உனக்கு எளிதில் ஜீரணிக்கும்படி உன் தாயின் இரத்தத்தை நிறம் மாற்றி வெள்ளையான பாலாக்கித் தந்தேன். உன் தாயின் மார்பில் உன் சிறிய வாய்க்கு தோதாக இரண்டு நுனிகளை உண்டாக்கினேன். நீ பால் அருந்தும் போது மார்பில் காயம் படாமல் இருக்க அப்போது உனக்கு பற்கள் தரவில்லை. உன்மீது உன் தாய்க்கு பாசத்தை அளித்தேன். அதனால் அவள் உந்தப்பட்டு உன்னை அரவணைக்கிறாள் அதன்பின் உன் தந்தைக்கு அன்பு ஏற்படுத்தப்பட்டு உன்னை அவர் பராமரிக்கச் செய்தேன் இன்னும் கேள் குளிர் காலத்தில் சூடாகவும் வெயில் காலத்தில் குளிராகவும் இருக்கும்படியாக பால் வர உன் தாய்க்கு இரண்டு மார்பகத்தை உண்டாக்கினேன்

www.miskinsha.blogspot.com

நீ படுக்கவும் உட்காரவும் ஊறவும் நிற்க்கவும் நடக்கவும் தோதுவாக உன் முதுகில் சிறு சிறு எலும்புகளை கோர்ந்து உன் அசைவுக்கு தக்கபடி அதை உண்டாக்கித்தந்தேன். பின்னர் சிறிய பதார்தங்களை கடித்து மென்று தின்னும்படி லேசானப்பற்களை முளைக்கச் செய்தேன். பின்னர் அந்தப் பற்க்கல் விழும்படி செய்து கடினமான வஸ்துக்களை இழுக்கவும் கடிக்கவும் தோதான கெட்டியான பற்க்களை தந்தேன் நான் இப்படியெல்லாம் செய்ய என்னில்லாதவனுக்கு ஏலுமா பார். இப்படியெல்லாம் இருந்தும் உன் முதுகுவலுத்து இடைவலுத்து நீ ஆளான பொழுது எனக்கு நீ தக்குவாச் செய்யாமல் மாறுசெய்து என்னுடனே போருக்கு நிற்க்குறாய் இன்னும் நானிருக்க என்னை நம்பாமல் நான் படைத்த கல்கை நம்புகிறாய் நீ பாவம் செய்யும் போது மற்றவர்களுக்கு அதை மறைக்கிறாய் எனக்கு நீ வெட்கப்படுகிறாய் இல்லை. இப்படி இருக்க நானோ நீ கூப்பிட்டநேரத்தில் ஜவாபு கொடுக்கிறேன். கேட்டால் தருகிறேன். நீ தப்பாச்செய்து பாவமன்னிப்பு தேடி என்னளவில் மீண்டால் உன்னைச் சேர்த்துக்கொள்கிறேன் என்று சொல்லப்பட்டுள்ளது

நீயா - நானா

உனது தகப்பனின் சரீரத்தில் விந்தாக செய்தது நீயா அல்லது உன் தாய் தகப்பனா? அந்த விந்து தாய் வயிற்றில் சென்றப்பின் அந்த இருட்டு அறையில் ஆயிரக்கணக்கான இயந்திரங்களைக் கொண்டும் செய்ய முடியாத அங்கங்களும் உறுப்புகளும் நரம்புகளும் அவைகளுக்கு தத்துவங்களும் முண்டாகச்செய்தது நீயா உன்தாய் தகப்பனை இல்லை இல்லை இவைகளெல்லாம் ஓர் மறைவான தத்துவம் தான் என்று ஏற்றுக்கொள்வாய் நீ வாயில் வைத்த வஜீபனத்தை உன் நாட்டம்யில்லாமல் உன் நாவு அதை சுழட்டி உள்வாங்கவும் பற்கள் அதை அரைக்கவும் அதில்உமிழ் நீர் சேர்ந்து பதமாக்கி விழுங்கப்பட்டு ஜீரணக்குடலில் செல்லும் வேளையில் ஜீரணநீர் குடல் சுற்றிலும்யிருந்து இறங்கி ஜூரணமாக்குவதும் பின்பு கருூரலுக்கு செல்லுவதும் அங்கு இரத்தமாகுவதும் அதில் நின்றும் இருதயத்திற்க்கு போவதும். நுரைூரலால் வரும் காற்றைக்கொண்டு இரத்தம் சுத்தமாகுவதும் அது ஒவ்வொரு உறுப்பிற்கும் சென்று அவைகள் தரித்து. அந்தந்த உறுப்புகளுக்கு தேவையானவைகளாய் உருவாகிறது ஆகிய வேலைகளை நீயா செய்கிறாய் அல்லது நீயா செய்விக்கிறாய். நன்றியுள்ளவனே நினைத்துப்பார் நன்றிசெய் இவை எல்லாம் அல்லாஹ்வின் திட்டப்படி சட்டப்படிக்கே நடக்கின்றன.

மனிதா நீயார்

அல்லாஹு தஆலா அல்குர்ஆனில் கூறியிருக்கும் (2=30) வசனமான வ.இஜ்கால ரப்புக லில் மலாயி கதி என்ற ஆயத்தில் ஆதமை எனது பிரதி நிதி (கலீபா)யாக அமைக்கப்போகிறேன் என்றும் அல்இன்ஷானு சிர்ரீ.வ.அனா.சிர்ருஹு (இதன் பொருளானது). மானிடன் எனது இரகஸியப்பொருள் நான் அவனது இரகஸிய பொருளாகும் என்றும் அல்லாஹு தஆலா. ஹதீது குத்ஸியிலும் கூறி இருப்பதற்க்கும்.

ஷெய்ஹு அப்துல் கரீமில் ஜீலி (ரலி) அவர்கள் தங்களின் இன்ஷான் காமில் என்ற கிரந்தத்தில் கூறியிருக்கிறார்கள். அல்லாஹு தஆலா. குர்ஆனில் கூறிஇருப்பதையும் ஹதீது குத்ஸியில் கூறி இருப்பதையும் (மேலே உள்ள இரு வசனங்களையும்) இந்த வாக்கியத்தின் ரகஸியத்தை விளங்கி நன்கு அறிந்தவனுக்கு.

அல்இன்ஷானு ஹுவல்லா (ஹ்) மானிடன் அல்லா(ஹ்) வாயிருக்கும் என்றும் அல்லா(ஹ்) இறக்கிய இக்லாஸி சூராவினில் அவனும் இன்ஸானும் ஒன்றாம் என சொல்லியிருக்கிற சொல்லை சிந்தித்தால் சிர்ருல் இன்ஷான் தானவனா மென்று
எல்லார்க்குமிது தெரியவரும்.

தாத்து ஆகிய தத் சொரூபத்துக்கும் மீதாக்கு என்கிற ஆன்மகூடத்திற்க்கும் நடுவில் மானிடன் தான் உயிராக இருக்கிறான். மலாயிகத்துகளை இன்ஷானுடைய ஒளிவைக்கொண்டுப்படைத்தேன். இன்ஷானை எனது ஒளிவால் படைத்தேன் என்று அல்லாஹு தஆலா மனிதனை மேன்மையாய் கூறியிருக்கிறான் என்றால்.

இவன் யார் என்று அவனுடைய மூலத்தை நோக்க அவன் தாய் தகப்பனில் நின்று முள்ளவனுமன்று தான் தானாய் உண்டான வனுமன்று (கைபு ஹுவிய்யத்து) என்ற மறைபொருளை சேர்ந்தவனாயும் அந்த மறைபொருளின் தெளிவாயும் இவன்யிருக்கிறானே. ஒழிய மற்ற மிருக சாதிகளைப்போன்று அவன் இறந்தழியும் பிணமல்ல வென்பதை அறிந்துக்கொள். அவன் எந்த இடத்திலிருந்தும் கீழிறங்கி வரவில்லை அவன் எங்கிருக்கின்றானோ. அங்கேயே இருந்து கொண்டிருக்கிற போதிலும் ஒரு மருட்சியான பார்வை இடையில் இருந்துக்கொண்டு இருப்பதால் அவனை. வருவதாகவும் போவதாகவும் காட்டி வைக்கிறது. இன்னும் அவனுடைய துவர்க்கம் வானம் பூமி ஆகியவற்றிவில்லை ஆன்ம லோகத்தில் இருந்தவாறே இப்போது இருக்கின்றான் இப்போதிருப்பதை போலவே காலவரையறை இன்றி எக்காலத்திலும் இருக்கிறானென்றறிந்து கொள்வாயாக
சிறப்பானவனே சிந்தித்துப்பார்.

www.miskinsha.blogspot.com

மரணமில்லா மனிதன்

இன்ஷான் காமில் என்னும் மானிடனின் முடிவான எல்லையை நினைத்து நோட்டமிடும்போது இறப்பும் பிறப்பும் இவனுக்கு கிடையாது என்றே கூறவேண்டும். அவன் வானமும் அல்ல பூமியும் மல்ல சூரியனுமல்ல சந்திரனுமல்ல வானவருமல்ல ஜின்னுமல்ல மண்ணுமல்ல தண்ணீருமல்ல கற்கரடுமல்ல, புற்பூண்டு மல்ல மிருகங்களுமல்ல உடலுமல்ல உயிருமல்ல எனினும் இவையாயும் அல்லாஹ்வின் அம்ரு என்னும் கட்டளையைக்கொண்டு வெளியானவை என்று அறிந்துக்கொள்வாயாக

தெய்வாசன பீடமாகிய அர்சுக்கு மேற்பட்ட அர்சும் பாடமிடப்பட்ட பலகையான லவ்ஹுல் மஹ்பூலுக்கு லவ்ஹுல் மஹ்பூலும் இவனாக இருக்கிறான் மேலும் அவ்வல்ஆகிர் லாஹிர் பாதின்யாவும் இவனாகவே இருக்கிறான் = மனிதா இதோபார் நீ ஒரு தலைப்பாகைபாத ரட்சை யல்ல உன்பாதார விந்தத்தின்மீது சத்தியமாக யாதொரு வஸ்த்துக்கும் உன் மகிமையை விட மேலான தொன்றும் ஏற்பட்டில்லை ஜின்கள். தேவதைகள் முவக்கல்கள் வானவர்கள் மற்றும் சிருஷ்ட்டி பொருள்கள் சகலமும் உனக்கு அடிமைகளாயும் அவற்றிற்க்கு எல்லாம்.

நீ வணக்க பொருளாயும் யிருக்கிறாய் மனிதா அறிவானவனே அர்சுகுர்சு லவ்ஹு கலம் சூரியன் சந்திரன் பகல் இரவு பிரபஞ்சம் அடங்கலும் உன்னுடைய தோற்றமாகும். மனிதா நீ பரிசுத்தமாகிய நூர் என்னும் ஜோதியாக இருந்துக்கொள் சகலவற்றிற்க்கும் பாதுஷா என உன்னை யாக்கிக் கொண்டால் உனக்கு மேலான கீர்த்தியுண்டாக்கி சிருஷ்டிகளிடத்தில் வலியுல்லாஹ் என புகழ் பெறுவாய்.

தவ்றாத் ஜபுர் இன்ஜில் புர்கான் சுஹ்பு வேதங்கள் இதரவேத கிரந்தங்கள் யாவும் உனது கல்பில் நின்றும் வெளியாகி இருப்பதை அறியாமல் விட்டு விட்டு தங்கமானது தன்னை தகரம் என்று நினைத்து கொண்டிருப்பதை போல் நீ உன்னை உணறாமல் இருந்து கொண்டிருக்கிறாய் மனிதா நீ மாணிக்கம் மண்ணாங் கட்டியல்ல மறந்துவிடாதே

வஹுவல் ஹக்கு வ.யஹ்தி மன்யஷாவு (இதன் பொருள்) இதுதான் உண்மை இதையார் நாடுவானோ அவன் வெற்றி பெறுவான் பாடுபட்டால் பலன் கிடைக்கும். வெற்றி பெற்றவர்கள் பாதை உன்னை வரவேற்கிறது மனிதா யோசிக்காதே உடன் புறப்படு செயல்படு உன்சரீரமே மரணிக்கிறது. உனக்கு மரணமில்லை

மண்ணால் படைக்கப்பட்டவன் மண்ணுக்கு தாழ்மை தனமேயன்றி மேன்மையில்லை என்றும் இரத்தமும் இந்திரியமும் அசிங்கமானதாக இருப்பதால் அவைகள் சரீரத்தில்பட்டால்.கழுவினாலன்றி தொழுகை கூடாது என்றும் நஜ்ஸான நஜ்சு வரும்துவராத்தில் மனிதன் இருந்து நஜ்ஸை உணவாக உண்டும். இரண்டு நஜ்ஸைக்கொண்டு இன்ஷானைப்படைக்கப்பட்டிருக்கிறது. என்றும் இவ்வாறான கேவலமானவனுக்கு மேன்மை தனம் எப்படி கிடைக்கும் என்றும் மனிதன் செத்து சிதைத்து போகிறவனாய் இருப்பதாலும் தன் விருப்பம் போல் ஏதும் செய்ய முடியாதவனாகவும் தன் விருப்பம் போல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாதவனாகவும் இருக்கிறோம் என்றும் இவ்வாறான முறையில் தன்னை அறிந்த ஒருவன் அவன் நிச்சயமாகஅறிவையும் வெற்றியையும் இழந்து தோற்றுவிட்டவனேயன்றி அவன் ஒருபோதும் ஜெயித்த மனிதனாக மாட்டான் நீ நபிமார்களையும் வலிமார்களையும் யோசி = சிறப்பானவனே

உன்னை சிரசுகள்யாவற்றிற்க்கும் கிரீடமாக ஆக்கிக்கொள் நீ கல்புடைய வடிவமானவன் உன் ரூஹு உன் உருவமானதே தாத்துவின் உதயஸ்தானம் நீதான் = ஆனால் நீ விலை உயர்ந்த இரத்தினமும் மல்ல = நீ தாழ்மையா நஜ்சுமல்ல மனிதா மேன்மையாகு.

முடிவு நாளின் குறிப்புகளில்

குர்ஆன்ஷரீபில் பதிவான வசனங்கள் யாவும் மறைந்து விடும் என்றும் பள்ளிவாசல்கள் யாவும் வானுவகிற்க்கு உயர்த்தப்படும் என்றும் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் செயழிலந்து விடும் என்றும் தானியபயிர்கள் காய்கறி பழத்தோட்டங்கள் நீர் தடாகங்கள் மரம் மலை மாடிவீடு போன்ற பூமியில் உண்டாக்கப்பட்ட உண்டானயாவும் நொறுங்கி தூள் தூளாகிவிடும் என்றும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. அறிவானவனே அறிந்துக்கொள் மனித வம்ஸமே அழிந்து ஒரு மனிதன் கூட இல்லை யெனும் போது குர்ஆணை ஓதுவது யார் தொழுவது யார் தானியங்களும் காய்கறி பழங்களும் இருந்து என்ன பயன் யார் புசிப்பது மனிதர்களேயில்லாத மைதானத்திற்க்கு சந்திர சூரிய ஒளிகள் எதற்க்கு என்று தான் அவைகளை அல்லாஹுதஆலா அழிந்து விடுகிறான் என்றால் இவைகள் யாவும் உண்டாக்கப்பட்டது. மனிதனுக்காகத்தான் என்று உன் மேன்மையை நீ உணர்ந்து ஆக வேண்டியதை செய்துக்கொள்வாயாக.

கலிமாத்துன் நாபி ஆத் எனும் கிதாபில் ஹலரத் ஜான்முஹம்மது லெப்பை ஆலிம் அவர்கள் கூறியிருக்கிறார்கள் இந்த ரகஸியம் உனக்கு விளங்காவிடில் சரேலென்று அதனை தவறு என்று கூறத்துணியாதே தெரிந்தோரிடம் கேட்டு தெரிந்துக் கொள்வாயாக.

www.miskinsha.blogspot.com

பைஅத் பெறுவது எப்படி

ஹஜ்ரத் அப்துல் காசீம் சாஹிபு அவர்கள் எழுதிய பீ. அஃமாலில் இன்ஷான் எனும் கிதாபில் சொல்லிய விபறமாவது.

அல்லாஹு தஆலா குர்ஆனில் = நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள் திக்ரை யுடையவர்களிடத்தில் நீங்கள் அறியாதவர்களாயிருக்கும் ஹாலில் என்று திருவுள மாகி இருப்பதாலும்

நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள் இன்ஷான் பேரில் பர்ளாக்கப்பட்டது காமிலாகிய ஷெய்ஹை தேடுவது என்றும்.

அறிவை தேடுவது ஆண் பெண் இருபேர்களுக்கும் பர்ளாகும் என்றும் ஷெய்ஹானவர் நபியைப் போல் என்றும் எவனுக்கு ஷெய்ஹில்லையோ அவனுக்கு தீனில்லை என்றும் எவனுக்கு பைஅத்யில்லையோ அஹ்ல இஸ்லாமில் அவன் முஷ்ரிக் கென்றும் எவனுக்கு ஷெய்ஹில்லையோ அவனுக்கு ஷெய்ஹு ஷைத்தான் என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

ஹஜ்ரத் இபுறாஹீம் தத்கூக்கி (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் தரீக்கில் ஷெய்ஹை தேடுவது முரீதீன்கள் பேரில் வாஜிபாகும் என்றும் இன்ஸான்பேரில் ஹக்கை யறிவது வாஜிபு என்றும் ஆகையால் இல்மை தேடுவது பர்ளும் x ஷெய்ஹை தேடுவது வாஜிபும் நஸீஹத் பெறுவது சுன்னத்தும் x அதன்படி அமல் செய்வது பர்ளுல் அய்னாக இருக்கும் என்றும் திருவுளமாயிருக்கிறப்படியாலும்.

ரசூல்ஸல்லல் லாஹு (அலை) அவர்கள் கூறியிருப்பதாக கவுலுல் ஜமீல் லென்கிற கிரந்தத்தில் கூறிய விபரமாவது ஒரு சூஃபியான ஷெய்ஹு விடத்தில் ஒருவன் பலமுறை பைஅத் செய்வது ஆகுமானதே என்றும் இன்னும் ஒருவனுக்கு பைஅத் தந்த ஷெய்ஹு மவுத்தாகி போனாலோ அல்லது அவர் இருக்கும் இடம் தெரியா திருந்தாலோ அல்லது முந்தின ஷெய்ஹு இல்மு அறியாதவராக இருந்தாலோ வேறு ஒருவரிடம் பைஅத் வாங்கலாம் இப்படியில்லாமல் தற்பெருமைக்காவும் சுயநலத்திற்காகவும் வேறு ஒரு ஷெய்ஹு இடம் முரீதுபெற்றால் அது விளையாட்டுக்கு ஒப்பாகும். ஷெய்ஹினால் கிடைக்கிற பறக்கத்தையும் இல்மையும் அவன் இழந்தவனாவான். மேலும் ஷெய்ஹுடைய கல்புகளுக்கு அவர்கள் முரீதுகளுக்கு சிலவு செய்த வார்த்தை பாடு எனும் உபதேசங்கள் திரும்ப ஷெய்ஹுயிடம் வந்துவிடும் என்று எச்சரிக்கை கூறப்பட்டுள்ளது.

அறிவை அறிந்த ஷெய்ஹுவை தேடு

சூஃபியாக்கள் ஷெய்ஹு மார்களுடைய சொல்லையும் செயலையும் கண்டும் கேட்டும். நீ குற்றம் சொல்லாதே அவரில்ஷரீயத்தின் நேர்வழி இல்லாதிருந்தாலும் சரியே நம்முடைய புத்தி குறைவு என்று எண்ணிக்கொள் என்றும் ஆனதால் நீ மஷாயிஹுகளையும் ஷெய்ஹுகளையும் பழித்து அவமரியாதை செய்யாதே ஏன் என்றால் விஷத்தை நினைவுடன் தின்றாலும் மறதியாய் தின்றாலும் சாவுவரும் ஆகையால் நீ மறந்தாவது தெரிந்தாவது ஷெய்ஹுமார்களை குற்றம் சொல்லாதே.

நீ பீர் முர்ஸிதை தேடும்முன் அவரிடத்தில் எவ்வளவு இல்மு இருக்கிதென்று உன்னால் பரீசிக்க முடியாத போனாலும்தெரிந்தவர்களை கொண்டு பரீசித்து இர்ஸாது பெறுவாயாகில் ஷெய்ஹுமார்களை பழிக்க மாட்டாய். இதன் கீழ் வருகிற இல்முகள் இல்லாத வேடதாரிகளிடம் முரீது பெற்றால் கையை நீட்டினவனும் அக்கையைப்பிடித்தவனும் பாவியாவார்கள்.

ஷெய்ஹு அறிந்திருக்க வேண்டிய இல்முகள் குர்ஆன் ஹதீது பிக்ஹு அகாயிது நாசிகு மன்சூஹு முபஸ்ஸிறு காஸு ஆம் முஹக்கம் முதஷாபிஹா கறாஹிய்யது தஃபீமு இபாஹது நதுபு உஜுபு சஹீஹு லயீபு முஸ்னது முறுஸில் ஆக இருப்பதுமாய் இருக்கும்.

இம்ஹாலுல் வஜிகி என்னும் கிதாபில் ஷெய்ஹு என்பதறக்கு அறுகதை அற்றவர் ஆவது அகப்பார்வையிழந்து மிருகம் போல் ஒத்தவனாயும் இன்னும் கல்பில் உள்ள நஸல்களான முகத்தாட்சினை பெருமை அகப்பெருமை தன்னைமதிப்பு தலமைத்தனம் சபைமுந்தல் தன்சொல் எங்கும் செல்ல வேண்டும் என கருத்து வைத்தல் துனியாவை விரும்பி இதில் இருக்க ஆசைவைத்தல் மேலெண்ணம் பொறாமை பொல்லா எண்ணம் வஞ்சகம் கெடும்பு உள்ளொன்றும் புறமொன்றும் வைத்தல் ஆகிறத்தையும் மவுத்தையும் மறக்குதல் வீண் பேச்சு வீண்வாதம் பொய்சொல்லல் சமத்து பேசல் பொய் சத்தியம் கோள் இருநாவு கொண்டு பேசல் தகுமல்லாததை துதித்தல் இதுபோல் உள்ளவனெல்லாம் ஷெய்ஹல்ல வென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹஜ்ரத் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் திக்ரு ஜலி ஒரு செயலில் நிய்யத்து வைப்பதும் திக்ரு கல்பி அச்செயலில் கல்பை ஹாலிராக்குவதும் திக்ரு ரூஹி அச்செயலுக்கு உரித்தான ஓர் தலத்தை குறிப்பிடுகிறது.திக்ரு சிர்ரி வெளிகோலத்திலே தன்ரூபத்தை கல்புகண்ணாடியில் தெரிசிப்பது திக்ரு கபீ அப்படி கண்ட சூரத்தை விடாமல் பார்த்து வருவது இவ்வித செயலை அறிந்தவனைத்தான் ஷெய்ஹென்று சொல்லப்படும் என சொல்லியிருக்கிறார்கள்.

www.miskinsha.blogspot.com

ஹகாயிகுஸ். ஸபா என்ற கிரந்தத்தை மன்லகன் என்ற பெயரில் எழுதிய ஹலரத்து மவ்லானா மஹ்மூது பஹ்ரீ (ரலி) அவர்கள் மேலும் இந்நூலை அறபு தமிழில் எழுதியது ஷாஹ் முஹம்மத் கௌஸ் சாஹிபு மேலும் இதை தமிழில் சம்பூர்ணமாக்கிய மா.மு.மஸ்தான் லெப்பையின் ஹகாயிகுஸ் ஸபா என்னும் பரமார்த்தத்தெளிவு என்னும் கிதாப் எனக்கு இந்நூல் உண்டாக பேருதவியாய் இருந்து பல விளக்கங்கள் கிடைத்ததில் பொதுவாக.

சூஃபியாக்கள் நடத்திய தரீக்கா மூன்று வகையாக பிரித்ததில் 1 வது இஜாதிய்யா, 2வது ஷுஹூதிய்யா, 3வது உஜூதிய்யா என்றும் இதில் இஜாதிய்யா கொள்கையாதனில் குர்ஆனுடைய வெளிப்படை (லாஹிர்) போதனைகளை மட்டும்எடுத்து நடப்பதாலும் சிருஷ்டி பொருட்களின் உள்ளமை இவர்களின் கொள்கைப்படி இன்மை எனப்படும் உள்ளமையாக இருப்பதாலும் இவர்களும் சில அத்கார் என்னும் தியானங்களை அனுஷ்டித்து வருவதாலும் இவர்களையும் சூஃபிய்யாக்களான ஞானிகள் கூட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2 வது ஷுஹூதிய்யா இதன் இமாம் முஜத்திது அல்பதானீ ஷெய்ஹு அஹ்மது ஸர் ஹந்தீ (ரஹ்) ஆவார்கள். இவர்கள் இரண்டு தாத்துகள் உண்டு என்றும் அவைகள் ஒன்று ஹக்குடையது மற்றொன்று ஹல்குடையது என்றும் சொல்லக்கூடியவர்கள் ஹல்குடைய தாத்தை அதமீ இஸாபீ என்ற சம்பந்தி இன்மையேயன்றி ஹகீகீ என்னும் யதார்த்த மல்ல என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

3வது வுஜூதிய்யா இதன் இமாம் ஷெய்ஹுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபீ (ரலி) ஆவார்கள். இவர்கள் கி.பி 1241 ஆம் வருடத்தில் ஸ்பெயின் தேசத்தில் அவதரித்த சிறந்த ஞானியாவார்கள் இவர்களின் மரணம். சிரியாவில் நிகழ்ந்த போதிலும் இவர்களை மேனாட்டு சூஃபியாக்கள் ஞானிகள் ஆகியோர் கூட்டத்தில் நான் சேர்க்கின்றனர். இம்மாபெரும் வகுப்புக் கொள்கைதான் இஸ்லாமிய தத்துவார்த்தத்தின் மீது பாரிய விசேஷத் தன்மையை அளித்ததாகும். இவர்களின் கொள்கையானது பேனாவில் மையானது அல்லாஹ் என்றும் அதிலிருந்து வெளியாகும் எழுத்துக்கள் பல பல விதமாய் இருந்தாலும் எல்லாமே அந்தமைதான் என்ற தத்துவ வாதிகளாய் இருந்து வருகின்றனர்.

இமாம். ஜாமீ ரஹ் அவர்கள் எழுதிய நப ஹாதுல் உன்ஸு எனும் கிரந்தத்தில் சூஃபியாக்கலுல் அறுநூறு பேர்களைப்பற்றி எழுதப்படுவதாகவும் அவர்களுல் மூன்நூறு பேர்கள் ஹக்கும் கல்கும் பனிக்கட்டியையும் தண்ணீரையும் போல் ஏகம் என்ற இப்னு அரபீ (ரலி)யுடைய ஏக தத்துவ கொள்கையை ஆதரிப்பவர்களாகவே காணப்படுகின்றனர் மற்ற மூன்நூறு பேர்கள்களுக்கு தலைமை தாங்கும் இமாம் ஷெய்ஹு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீயைப் போல் ஹக்கும் கல்கும் இரும்பையும் நெருப்பையும் போன்று சம்பந்தத்தை மட்டும் பெற்றிருக்கின்றனர் ரென்று கூறுகிறார்கள் மேலும்

இமாம் ஹமீதுத்தீன் லாஹூரீ (ராஜபுதனம்) அவர்கள் சமுத்திரத்தில் நிறபேதங்கொண்ட எண்ணற்ற அலைகள் நாம மின்மையிலிருந்து நாமத்தை பெற்றுக்கொள்கின்றன என்றும் ஒரு வேளை மஜ்னூன் என்னும் ஆடையையும் மற்றொருவேளை லைலா என்னும் ரூபத்தையும் பெறுகிறது என்று கூறிவருகிறார்கள் என்றும்

வஹ்தத்துல்வுஜூது என்னும் ஏகத்துவ கொள்கையை கடைப்பிடித்திருந்த தரீக்குகளையும் அதன் ஷெய்ஹுகளையும் இனி கவனிப்போம்.

1. காதிரிய்யா தரீக்கு

ஹலரத் கௌதுல் அஃலம் செய்யதினா அப்துல்காதிர் ஜீலானி (ரலி) அவர்களும் ஹலரத்து ஷெய்ஹுல் அக்பர் முஹ்யித்தீனிப்னு அரபீ (ரலி) அவர்களும்

ஹலரத்து ஷெய்ஹு ஸதுருத்தீன் கூனவீ (ரஹ்) அவர்களும்

ஹலரத்து ஷெய்ஹு அப்துல் கரீமீ ஜியலி (ரஹ்) அவர்களும்

ஹலரத்து ஷெய்ஹு அப்துர் ரஸ்ஸாக் ஜஹன் ஜானவீ (ரஹ்) அவர்களும்

ஹலரத்து ஷெய்ஹு அமான் பானி பத்தீ (ரஹ்) அவர்களும் நடத்தினார்கள்

2. கப்ர விய்யா தரீக்கு

ஹலரத்து மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்களும்

ஹலரத்து ஷம்சுத்தீன் தப்ரேஸு (ரஹ்) அவர்களும் நடத்தினார்கள்

3. ஸஹ்ரவர்திய்யா தரீக்கு

ஹலரத்து ஷெய்ஹு பரீதுத்தீன் அத்கார் (ரஹ்) அவர்களாவார்

4. ஷிஸ்திய்யா தரீக்கு

ஹலரத்துசெய்யிது முஹம்மது கேஸு தராஸ் (ரஹ்) அவர்களும்

ஹலரத்து செய்யிது ஜஅபர் மக்கீ (ரஹ்) அவர்களும்

5. நக்ஸ பந்திய்யா தரீக்கு

ஹலரத்து குவாஜா அப்துல்லாஹ் இஹ்ரார் (ரஹ்) அவர்களும்

ஹலரத்து மௌலானா ஜாமீ (ரஹ்) அவர்களும்.

www.miskinsha.blogspot.com

ஹலரத்து முல்லா அப்துல்கபூர் லாரி (ரஹ்) அவர்களும்
ஹலரத்து குவாஜா பாகி பில்லாஹ் காஹிலீ அவர்களும்
ஹலரத்து ஷெய்ஹு அப்துல்ரஸ்ஸாக் காஷீ (ரஹ்) அவர்களும்
ஹலரத்து ஷம்ஸுத்தீன் காபஸு (ரஹ்) அவர்களும்
ஹலரத்து ஸஊதுத்தீன் பர்கானீ (ரஹ்) அவர்களுமாவார்கள்
இன்னும் இதுபோல்
ஹலரத்து ஷாஹ் செய்யிது முஹம்மது கௌஸ் குவாலிரி (ரஹ்) அவர்களும்
ஹலரத்து செய்யிது சாஹுல் ஹமீது நாகூரி (ரஹ்) அவர்களுமாய் இருக்கும்
ஹலரத்து ஷெய்ஹு ஹுஸைனிப்னு மன்சூருல் ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் இந்த
வஹ்ததுல் வுஜூதை ஸ்தாபித்தற்க்காக வேண்டி பூதஉடலை விட்டும் பிரிந்தார்கள் என்று சரித்திரம் சாட்சி பகர்கின்றது.
ஜாமி உல்லுசூல் என்ற கிதாபில்
நாற்பத்தி ஓர் தரீக்குகளை செல்லி இருப்பதாவது
அவைகள் காதிரிய்யா ஸாதுலிய்யா நக்ஸபந்திய்யா ரிபாய்யா
அஹ்மதிய்யா தசூக்கியா அக்பரிய்யா மௌலவிய்யா சஹ்றுவர்திய்யா
கப்றவிய்யா கல்வத்திய்யா ஜல்வத்திய்யா பஃதாசிய்யா கஸ்ஸாலிய்யா
ரூமிய்யா ஸவுதிய்யா சிஸ்திய்யா ஷவுபானிய்யா கல்ஹஸனிய்யா
ஹம்ஸவிய்யா பைறாமிய்யா இஷாகிய்யா பக்கீரிய்யா உமரிய்யா உதுமானிய்யா
அலவிய்யா அப்பாஸிய்யா ஸைனபிய்யா ஈஸவிய்யா
மஃறபிய்யா புஹூரிய்யா ஹத்தாதிய்யா கைபிய்யா ஹிழிரிய்யா
ஸத்தாரிய்யா பையூமிய்யா மலாமிய்யா ஜதுரூஸிய்யா மத்பூலிய்யா
சுன்புலிய்யா உவைஸ்ஸிய்யா என சொல்லப்பட்டிருக்கிறது மேலும்
தைபூரிய்யா தரீக்கின்ஷெய்ஹு அபாயஜீதுல் பிஸ்தாமி (ரலி) அவர்களாயும்
கர்கிய்யா தரீக்கின் ஷெய்ஹு மஉரூபுல் கர்கீ (ரலி) அவர்களாயும்
ஜுனைதிய்யா தரீக்கின் ஷெய்ஹு ஜுனைதுல்பஹ்தாதி (ரலி) அவர்களாயும்
சிர்ரிஸ்ஸிக்திய்யா தரீக்கின்ஷெய்ஹு ஸிர்ரி ஸிக்தி (ரலி) அவர்களாயும்
கஸ்ரூனிய்யா தரீக்கின் ஷெய்ஹு ஹனீபா கஸ்ரூனி (ரலி) அவர்களாயும்
தர்தூஸிய்யா தரீக்கின் ஷெய்ஹு அப்துல்பற்றா தர்தூஸி (ரலி) அவர்களாயும்
இந்து ஆறு தரீக்காவும் காதிரிய்யா தரீக்கை சேர்ந்தவை என்றும்

சொல்லப்பட்டிருக்கிறது இவைகளில் இந்த தரீக் உயர்ந்தது என்றோ இந்த தரீக் தாழ்ந்தது என்றோ பாகுபாடு பார்ப்பதும் சொல்வதும் தடுக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

படைத்தவனின் பரிசுகள்

சித்திலெப்பை மரைக்காயர் முஹம்மது காசீம் எழுதி சின்ன.லெப்பை.மரைக்காயர் ஆலீம் ஹலீம் தீன் வெளியிட்ட அஸ்ராறுல் ஆலம் எனும் கிதாபில் உள்ள விபரம் வருமாறு

அல்லாஹ்வின் அருட் கொடைகள்

1. அப்துல்காதிர் ஜீலானி அவர்களுக்கு
ஆலத்தின் அதிகாரத்தை நடத்தும் தத்துவமும்
உதவி செய்யும் தத்துவமும் வழங்கப்பட்டிருக்கிறது
2. அஹ்மத் கபீர் ரிபாயி அவர்களுக்கு
அற்புதமும் உதாரண குணமும் மிக அதிகமாகத் தரப்பட்டது
3. ஹஸன் ஷாதுலிய்யி அவர்களுக்கு இல்மின் தத்துவமும் அருளின் தத்துவமும்
4. நக்ஸபந்தி முஹம்மது பஹாவுத்தீன் அவர்களுக்கு
வஹ்தத் கடலில் மூழ்கும் தத்துவமும்
5 முஹ்யித்தீன் இப்னு அரப் அவர்களுக்கு மஹ்ரிபா உடைய இல்மும்
6. அஹ்பது பதவி அவர்களுக்கு கருணையும் இரக்கமும்
7. மவ்லானா ரூமி அவர்களுக்கு அன்பும் ஆசையும் அருளியதாக உள்ளது

சூஃபியாக்களுடைய வழியை சேர்ந்தவர்களில் பல பிரிவுகளிருக்கின்றது. அவர்களுக்கு பக்கீர் என்றும் இதில் தலைமையான வர்களுக்கு முர்ஸித் என்றும் சொல்லப்படும் இந்த கூட்டங்களில் சிலர் அலி (ரலி) அவர்களில் நின்றும் சில்சிலா படிக்கிறதும் சிலர் அபூபக்கர் (ரலி) அவர்களில் நின்றும் சில்சிலா பிடிக்கிறதும் வழக்கமாய் இருக்கிறது.

நபிமார்கள் தரீகா

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் சுஹர்வர்திய்யா தரீக் என்றும்
ஹஜ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் சிஸ்திய்யா தரீக் என்றும்
எம்பெருமான் (ஸல்) அவர்கள் தபகாத்திய்யா தரீக் என்றும்
ஹஜ்ரத் அலீ இப்னு அபூதாலிப் அவர்கள் காதிரிய்யா தரீக் என்றும் சொல்லப்பட்டுள்ளது

செல்வம் அதிகாரம் துன்பம் ஆகிய நிலையில் மனிதனுடைய அறிவு சோதிக்கப்படுகிறது (அறிவிப்பவர்கள் ஹஜ்ரத் அலீ ரலி)

www.miskinsha.blogspot.com

Fபக்கீர்களை தூசனிக்காதே

ஹஜ்ரத்து லுக்மானுல் ஹகீம் அவர்கள் தம் மகனாருக்கு உபதேசித்தது

மகனே ஒருவனுடைய ஆடை கந்தையாக இருக்குதென்ற காரணத்தினால் அவனை தூசனிக்காதே ஏன்னென்றால் உன்னுடைய நாயனும் அவனுடைய நாயனும் ஒருவனாகத்தான் இருக்கிறான்

பக்கீர்களின் மக்கள் எரிந்த சாம்பலாக இருந்தாலும் சரி அதை உனது காலினால் சமிட்டி மிதித்திடாதே அப்படி செய்தால் நீ கரிந்து விடுவாய் இது கெட்ட ஒடுக்கமாகிய (சூ.அல்காதிமா) விஷயமாகும். அதைவிட்டு அல்லாஹ்வை கொண்டு காவல் தேடுகிறேன்.

இன்னும் பக்கீர்களின் மக்களை முறித்து நடக்காதே அல்லாஹு தஆலா உன்மக்களை முறித்து விடுவான்

இன்னும் பக்கீர்களின் இறச்சியாகிறது நஞ்சு வைக்கப் பட்டதாய் இருக்கும் யாராகிலும் ஒருவன் அதற்க்கு குறுக்கிட்டால் அல்லாஹுதஆலா அவன்மக்களை நஞ்சைக் கொண்டு சோதிப்பான் ஆனதால் கவனம் மகனே கவனம்.

இப்னு அப்பாஸ் அறிவிக்கிறார்கள்

நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒரு ஸஹாபி வந்து கேட்டார் யாரசூலல்லா பக்கிறு என்பது ஏதாயிருக்கும் என்று அதற்க்கு நபியவர்கள் அல்லாஹ்வின் கஜானாக்களில் நின்றும் ஓர் கஜானாவாக இருக்கும் என்று சொல்ல அவர் இரண்டாம் முறையாக அதையே கேட்டார் அதற்க்கு அல்லாஹுதஆலாவுடைய கராமாத்துகளில் ஓர் கராமாத்தாய் இருக்கும் என்றார்கள் மீண்டு அவர் மூன்றாம் தடவையாக அதையே திரும்பவும் கேட்டார். அதற்க்கு நபி (ஸல்) அவர்கள் பக்கிறாகிறது ஓர் வஸ்துவாய் இருக்கும் அதை அல்லாஹுதஆலா முர்ஸலான நபிக்கே அல்லது அல்லாஹுதஆலா பேரில் சங்கையான வருக்கே அல்லாது கொடுக்க மாட்டானே அப்படிக்கொத்த வஸ்துவாயிருக்கும் மென்று சொன்னார்கள்.

ஒரு பக்கீர் தன் ஷெய்ஹின் பெயரை அன்பாகவும் ஜதபாகவும் ஒருமுறைச் சொன்னால் எழுபது வருடம் வரை அவர் உள்ளத்தில் வெளிச்சம் என்ற நூர் ஜோதி பிரகாசிக்கும்

வைர வாக்கியங்கள்

மதியற்றவனே முதலில் என்னிடம் நெருங்கு பிறகு அல்லாஹ்வின் இல்லத்தை ஹஜ்ஜு செய்யலாம் உனக்கு இதயத்தூய்மை சித்திக்காதவரை உன்ஹஜ்ஜை அல்லாஹ் ஏற்க்கமாட்டான் நான் கஃபாவின் தலைவாயிலாக அமர்ந்துள்ளேன் (3-145 கௌதுல்அஃலம்)

உலக இச்சைகளில் கட்டுண்டு கிடப்பவர்களை நெருங்கிப் பழகினால் மனம் கல்லாகிவிடும் அவர்களுக்கு அடிபணிந்து நடந்தால் அல்லாஹ்வின் கோபம் உங்கள் மீது ஏற்படும் அவர்களுக்கு மரியாதை செய்தால் பாவங்கள் தான் பெறுகும் (ரிபாஇ.நாயகம்)

மடமைக்கு மருந்தில்லை சத்தியத்துக்கு அழிவில்லை அகந்தை காரனோடு நட்பில்லை மோசக்காரனுக்கு வாக்கில்லை நம்பிக்கை துரோகிக்கு ஈமானில்லை இறைதியான அனுஷ்டான மற்ற சோம்பேறிக்கும் மனப்பிரகாசமில்லை (ரிபாஇநாயகம்)

உங்களுடைய அகமும் புறமும் எனக்கு வெட்ட வெளிச்சமானது உனது தஹஜ்ஜத் தொழுகையும் நோன்பும் (உணவு அல்ல) அது பந்தியில் சாப்பாட்டுடன் வைக்கப்படும் சட்டினிக்கு சமமானவை (கௌதுல் அஃலம்)

பணத்துக்காகப் பண்பையும் பகுத்தறிவையும் இழந்து விடாதே உன்னிடம்முள்ள கெட்ட குணங்கள் அனைத்தயும் ஒன்றாக களைந்து நீக்கிவிடு உன்னுடைய தேவைக்காகவே பணம் படைக்கப்பட்டிருக்கிறது எனவே அது உன் அடிமை நீ அடிமைக்கு அடிமையாகி விடாதே (ஹஜ்ரத் அலீ/ரலி)

மனிதனே நீ மார்க்க அறிஞனைத் தேடினால் தான் அறிவைப்பெறமுடியும் நீங்கள் எப்படி ஒரு நல்ல செயலை செய்ய வேண்டுமென்பதை கற்றுக்கொள்வதை விடவும் நல்லசெயல் பெரிதல்ல ஒருகாலம் வரும் அந்த காலத்தில் செயல் புறிவதைவிட மார்க்க அறிவை கற்றுக்கொள்வதே சிறந்ததொரு செயலாகும் ஈமான்என்பது உடல் போன்றது அதன் ஆடையபக்தி அதன் வெளிப்படையே அறிவு வஞ்சகனிடம் உண்மையறிவு இருக்க முடியாது (திருநபி (ஸல்) அவர்கள்)

பொருமையாளருடன் அல்லாஹ் யிருக்கிறான் பெருமையாளருடன் ஷைத்தான் யிருக்கிறான் (இமாம் கஸ்ஸாலி)

தர்மம் செய்பவரைவிட திக்ருசெய்பவர் சிறந்தவர் (நபி (ஸல்) அவர்கள் நூல் தப்ரானி)

இச்சைக்கு தன்மனதில் இடம் கொடுத்துக் கொண்டே அல்லாஹ்வின் அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள் (நூல் இஹ்யா)

www.miskinsha.blogspot.com

ரிபாயி நாயகத்தை பற்றி ரசூல் (ஸல்) அவர்கள்

ஹீராக் நாட்டில் இல்மிலும் இபாதத்திலும் சிறந்துவிளங்கிய ரிபாயி குடும்பத்தில் ஷெய்ஹு மன்சூர் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்கள் ஒருநாள் கனவு கண்டார்கள் அந்தக் கனவில் மாமதினா நகரின் மஸ்ஜிதுன்நபவி பள்ளிவாசலில் சில நபிமார்களும்சில அஸ்ஹாபிகளும் சூழ்ந்த சபை நடுவில் தாஹாநபி (ஸல்) அவர் வீற்றிருக்கக்கண்டார் மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வலது கையை ஒரு சிறுவரின் தலைமீது வைத்துக்கொண்டிருந்தார்கள் அப்போது பெரியார் மன்சூர் ரிபாயி அவர்களைப்பார்த்து நாயம் (ஸல்) கூறினார்கள். மன்சூரே இந்த சிறுவர் மகத்துவமும் உயர்பதவியும் வாய்ந்தவர் எனது சந்ததியில் உள்ளவர் எனது பிரதிநிதி என் அந்தரங்கமானவர்.இவர் பெயர் அஹ்மத் கபீர் ஆகும். இவரை யார் நேசிக்கிறாரோ அவரை நான் நேசிப்பேன் கியாம நாளையில் அவரை என் மன்றாட்டத்தால் காப்பாற்றுவேன். இவரை பகைத்தவன் என்னை பகைத்தவனாவான் இன்றிலிருந்து நாற்பதாம் நாள் இவர் ஜனனமாவார் என்று கூறினார்கள்.

ஆரிபு நாயகத்தின் தந்தைபெயர் ஸெய்யது அபுல் ஹஸன் அலி இப்னு யஹ்யா (ரலியல்லாஹு அன்ஹு ஆரிபு நாயகத்தின் தாயார்பெயர் = ஆயிஷா பின்த் அபுபக்கர் (ரலி) ஆவார்கள் இந்த ஆயிஷா அம்மையாருடன் பிறந்தவரே. மன்சூர்ரிபாயி ஆவார்கள். ரிபாஇ நாயகம் அவர்கள் ஹிஜ்ரி 512 ஆம் ஆண்டு ரஜபுபிறை 21 செப்டம்பர் மாதம் ஞாயிற்றுக்கிழமை அன்று வாஸித் என்ற ஊரின் சுற்றுப் புறத்தில் உம்முல் உபைதா நகருக்கு அருகில் ஹஸன் என்ற ஊரில் இவர்கள் பிறந்தார்கள் அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளால் = நபிமணி(ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்த பிரகாரம் அஹமதுல்கபீர் என்று பெயர் சூட்டி அழைத்தார்கள்.

இவர்கள் = ஷேக் அப்துஸ் ஸமீஃ அல் ஹர்பூனி அவர்களிடம் குர் ஆன் பயின்று ஹாபிஸ் ஆனார்கள்

ஷைஹு அலி இப்னு காரி (ரலி) அவர்களிடம் ஸர்பு நஹ்வு பிக்ஹு ஹதீஸ் தப்சீர் போன்ற எல்லா கலைகளையும் பயின்றார்கள்

பின்னர் ஷெய்ஹு அலாவுதீன் அலிய்யில் வாஸிதி (ரலி) அவர்களிடம் முரீது பெற்று இஜாஸத் சனது வாங்கியப்பின் வாசியோகம் முஷாஹிதா முறாக்கபா போன்ற இபாதத்துகள் கற்றுவந்தார்கள் அதுசமயம் அஹமத் கபீர் (ரலி) அவர்களுக்கு வயது இருபத்தேழு.

பின்னர் தன் தாயின் சகோதரர் ஷெய்ஹு மன்சூர் ரிபாயி (ரலி) அவர்களிடம் கிலாபத் பெற்று இஸ்முல் அஃலத்தின் தாத் பிரியம் பயின்று ரிபாயி தரீக்காவை தலைமை ஏற்று நடத்திவந்தார்கள் பின்னர் சில ஆண்டுகள் சென்றதும் அஹ்மதியா என்ற பேர்பெற்ற ஒரு தரீக்கை நிறுவி அதை தன்னை நாடி வருபவர்களுக்கு போதித்து உலகம்யாவும் தீன்கொடி பறக்க பாடுபட்டார்கள்

அன்னல் சுல்தானுல் ஆரிபீன் செய்யத் அஹமதுல்கபீர் ரிபாயி அவர்கள் வாழ்ந்த பகுதியில் மலைஜாதிமக்கள் அதிக மிருந்தனர் அவர்கள் முரடர்களாயும் அழகர்களாயும் இருந்த குர்தி யரான இந்த மக்களிடையே தவ்ஹீதின் உணர்வும் இஸ்லாமிய சாந்தியும் இணைந்த வீர உணர்வும் உண்டாகுமாறு திக்ரு. ஞான போதனைகள் செய்தார்கள் அந்த மக்களின் வழிக்தோன்றல்கள் விரைவிலேயே இஸ்லாமிய உலகின் கிலாபத்தை ஏற்கக் கூடிய அளவிற்க்கு அல்லாஹுக்காவும் தன் தரீக்கிற்க்காகவும் தன் உடல் உருப்புகளை வெட்டி வீசவும் தீனுக்காக உயிர் தரவும் துணியும் படி அவர்களை தயார் செய்தார்கள் இதற்க்காக ஒரு புதிய கொடியை உயர்த்தினார்கள் அது சிகப்பு வர்ணமுடையது அதில் ஒரு பிறையும் ஒரு நட்சத்திரமும் போடப்பட்டிருந்தன மேலும்.

நபிபெருமான் (ஸல்) அவர்களின் காலத்தில் சிகப்பு கொடி ஓர் இரு தடவைகள் உயர்த்தப்பட்டிருக்கிறது ஆனால் பிறையும் அங்கோண நட்சத்திரமும் கூடிய சிகப்பு கொடியை முறைப்படுத்தி உரிய நிய்யத்துடன் உயர்த்தியவர்கள் ஆரிபு நாயகமே ஆவார்கள் பின்னர் இது முஸ்லீம் உலக கலிபாவின் கொடியாயிற்று

தவநிலை

பதாயிஹ் என்றால் நீரூற்று எனப்படும் ஹஸன் நகரை சுற்றி நீரூற்றுகள் சூழ்ந்திருந்ததால் இப்பெயர் உண்டானது என சரித்திரம் கூறுகிறது இந்த ஹஸன் நகரை ஒட்டிய மனிதர்கள் நடமாட்டம் மற்ற காட்டில்

www.miskinsha.blogspot.com

நதிகரையில் துறவுவாழ்வில் தரிப்பட்டார்கள் இஷாவுக்கு உலூசெய்வது கொண்டே சுபுஹூ தொழுகையும் முடித்தார்கள் பசியை மறந்து ஆண்டு கணக்கில் இறைதியானத்தில் தளைத்திருந்தார்கள் அப்படி உண்ண வேண்டிய அவசியமானால் இலைகளையும் கிழங்குகளையும் தின்று ஒருவாய் தண்ணீர் குடித்துக்கொள்வதும் உண்டு. மழையையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பனிரெண்டு ஆண்டுகள் இறை இஸ்கில் மூழ்கினார்கள் என்றும் ஹிகமுர்ரிபாயி என்ற கிதாபில் உள்ளதாகவும் மேலும்

இரவும் பகலும் வாழ்க்கை முழுவதும் முட்படுக்கையாய் ஜீவிய காலத்தை கடத்திய பெரியார்களிடம் அவர்கள் அனுபவித்த துன்பத்திற்க்காக மருமை நாளில் இறைவன் மன்னிப்புக் கேட்டுக்கொள்வான் என பெருமான் நபி ஸல்லல் லாஹூ அலைஹி வஸல்லம் அவர்க்ள கூறியிருக்கிறார்க்ள என்றும் பிரபல ஆஸ்கர் அவாடுபெற்ற ஏ.ஆர்.ரஹ்மான் அவர்களின் ஷெய்ஹூ மல்லவி மூ.முஹம்மது ஹஸன் காதிரி அவர்களும் ஆர்.பி.எம்.கனி அவர்களும் சேர்ந்து எழுதிய மாபெரும் மகாத்மா ரிபாயி ஆண்டகை என்று நூலில் சொல்லப்பட்டுள்ளதே இந்த அத்தியாயம் ரிபாயி ஆண்டகைக்கு வாலிபப் பருவம் எப்போதும் தனித்தே இருப்பார்கள் துறவு கோலத்தை உணர்த்தும் கிழிந்த ஆடைகள் அணிந்து பசித்தவர்களாக விழித்தவர்களாக கண்ணீர் சொரிந்தவர்களாக இறையச்சத்தால் இதயம் பதறியவரப் களாகவே காணப்படுவார்கள்.

ஊருக்கு அருகே உள்ள காட்டிற்க்கு சென்று விறகுகளை சேகரித்து கட்டி தலையில்தூக்கி வந்து ஏழைகள் விதவைகள் நோயாளிகள் கண்யில்லாதவர்களுக்கு பகிர்ந்து தருவார்கள் இப்படி செய்வது ரிபாயி நாயகத்தின் பணியாக இருந்தது அவர்கள் பக்கிராக வாழ்ந்த தால் பல சமயங்களில் ஏழைகளுக்கு கொடுக்க எதுவும் இருப்பதில்லை என்பதால் இவ்வாறு சிலபோது செய்து வந்தார்கள்

ஆரிபுநாயகமவர்கள் தன் முரீதின்கள் பக்கிர்கள் கலிபாக்கல் போன்றவர்களுக்கு சொல்லும் உபதேசம் யாதனில் கிடைத்ததை புசி இல்லாததற்க்காக கவலைப்படாதே சொகுசற்ற உடையே உடுத்து வைக்கோல் விரிப்பிலோ அல்லது தரையிலோ படுத்து உறங்கு நடையுடைபாவனை அமைதியாக இருக்கட்டும் பக்கீர்கள் போன்று அகிகா கல்வைத்த மோதிரம் அணிந்துக்கொள் என முத்துமொழி பகர்ந்து அவர்கள்

ஹிஜ்ரி 578 ஜமா அத்துல் அவ்வல் மாதம் பிறை 22ல் செப்டம்பர் 23 வியாழன் அன்று 66ம் வயதில் ஆத்மா சடலத்தை விட்டு பிரிந்தது இன்னாலில்லாஹி

ஆரிபு நாயகத்தை புகழ்ந்த கௌதுனா

ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் சுல்தானுல் ஆரிபீன் அவர்களை கீழ்காணுமாறு புகழ்ந்து பேசியதாக அவர்கள் பிரகடனத்தையொட்டி அவர்கள் பாதங்களை நேரில் முதன் முதலில் தங்கள் தோள்மீது ஏற்றவர்கள் பெரியார் ஷைஹூ அலீ இப்னு அலீ இப்னு.ஹீ தியயி (ரலி) தெரிவித்துள்ளார்கள். (கௌதுல்அஃலம் சொன்னதாவது) செய்யிது அஹமத் கபீர் ரிபாயி அவர்கள் ஷரீ அத் தர்கத் ஹகீகத் மஃரிபா ஆகிய நான்கிலும் நான்கு கடலாய் அந்த நான்குகடலும் கலந்த ஒரே சமுத்திரமாய் இருக்கிறார்கள் அவர்கள் பெருமையை ஒளிமார்களும் ஷைஹூ மார்களும் பேச இயலாது வாயடங்கியுள்ளனர் அது குறித்து சயிக்கினையாகத்தான் சொல்லுவார்களேயன்றி விரித்துரைக்க மாட்டார்கள் அவர் அல்லாஹ்வின் ஸிர்ரு (ரகஸியப்பொருளும்) மஹபூபுமானவர் நான் மவுத்தான பின் அவர்கள் கௌதுல் அஃலமாய் முடி சூட்டப்படுவார்கள் என்று புகழாரம் சொன்னதாக கூறியிருக்கிறார்கள்.

பக்கீர்களின் உறுதி

நமது தென்னாட்டில் ரிபாயி தரீக்கா கணிசமான அளவே பரவியுள்ள போதிலும் உலகின் பல பாகங்களிலும் இந்த தரீக்கின் பக்கீர்களும் முரீதின்களும் பெருகியுள்ளனர். இந்த பக்கீர்கள் கொதிக்கும் தாரில் நடப்பவர்களாயும் கூர்மையான குருஜ் எனும் ஆயுதத்தாலும் கட்டாரி கண்டரக்கோடாலி கூர்மையான கம்பி போன்றவைகளால் தன் உடலில் அற்புதங்களை செய்து காட்டுவார்கள் இதனால் அவர்களுக்கு ஏதொறு கஸ்டமோ ஆபத்தோ இரத்தமோ வலி வேதனைகளோ வருவதில்லை இந்த தரீக்கா ஸிரியாவில் மூன்று கிளைகளாய் பரவியுள்ளது அவைகள்

ஹரீரிய்யா சாஅதிய்யா ஸையா திய்யா என்றும் எகிப்தில் இது மூன்று கிளைகளாய் ஆனதில் பாஜிய்யா மாலிக்கிய்யா ஹபீபிய்யா என்றும் உள்ளது என்றாலும் அஹமத்கபீர் ஆண்டகை அவர்களால் பிரபலமானது அஹமதிய்யா என்றே சான்றுகள் கூறுகின்றன (பக்கீர்களின் மூலமந்திரமாய் இலங்கிய (அல்மதத்யாஷெய்ஹூ எனும் இந்த ஞான மகாசமுத்திரமான அஹமத்கபீர் அவர்களின் ஞானசரீரம் உம்முல் உபைதா என்ற நகரில் அடக்கம் செய்யப்பட்டது.

ஏழையாகவே நீர் இறைவனை சந்திக்க வேண்டும்செல்வந்தனாக சந்திக்க வேண்டாம். (அறிவிப்பவர்கள் ஹஜ்ரத் பிலால் ரலி)

www.miskinsha.blogspot.com

விலாயத்தின் வென் முத்து

அவ்லியாக்களின் அரசரான ஹஜ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 470 ரமலான் மாதம் பிறை அன்று வெள்ளி இரவு ஜனனம் ஆனார்கள். ஜீலான் எனும் நகரை ஒட்டிய நீப்எனும் கிராமத்தில் ஸெய்யிது அபுஸாலிஹ் இப்னுமூஸா என்ற தந்தையர்க்கும் உம்முல்கைர் எனும் அமத்துல் ஜப்பார் பாத்திமா என்ற தாயின் 60ஆம் வயதில் புதல்வராய் பிறந்தார்கள்.

நபிபெருமான்(ஸல்) அவர்களில் பதினோராவது தலைமுறையில் இவர்கள் அவதரித்தார்கள் மேலும் அப்பாஸியா கலிபாக்களின் மறைமுகமான சூழ்ச்சி காரணமாக தமது தாயகம் விட்டு நீங்கி உலகின் பல பகுதிகளிலும் சென்று குடியேறி இருந்தனர். அவ்விதம் சென்றவர்களில் ஆண்டகை அவர்களின் தந்தைவழி தாய்வழி மூதாதையர் சிலர் காஸ்பியன் கடலை ஒட்டிய பாரஸீக பாஷை பேசப்பட்ட தபரிஸ்தான் மாகாணத்தில் வந்து குடியேறி இருந்தனர் எனவே தான் நபிபெருமான் (ஸல்) அவர்களின் வமிசத்தினரான முஹ்யித்தீன் ஆண்டகை பாரஸீக நாட்டிலே உள்ள இவ்விடத்தில் அவதரித்தார்கள் பின்னர்

தமது பதினெட்டாம் வயதில் ஆத்மஞானக்கல்வியை அறிய பஹ்தாத் நகருக்குல் பிரவேசித்தார்கள் அந்த பஹ்தாத் நகரம் ஜீலானிலிருந்து நானூறு மைல்களுக்கு அப்பால் விருந்தது என்று ஆர்.பி.எம்.கனிஆவர்கள் தம்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள் இந்த ஊரின் சுற்றளவு 12 மைல்களை கொண்ட ஒரு அழகு நகரமாகும் பாக்தாத் என்றால் பார்ஸி மொழியில் இறைவனின் அருட்கொடை என்றும் அறபிமொழியில் ஆடுகளை வெட்டும் ஆட்டு தொட்டி என்றும் பொருள்படும்.

இயற்கை எழில் சூழ்ந்த இந்த நகரின் உள்ளே செல்லமுயன்ற முஹ்யித்தீன் ஆண்டகையை ஹஜ்ரத் ஹிலுர்(அலை) தடுத்து நிறுத்தி ஏழு ஆண்டுகள் வரை அந்நகருக்குல் நுழையாதிருப்பது அல்லாஹ்வின் ஆணை என்று அறிவுறுத்தினார்கள் பின்னர் அதன்படியே.

பாரசீகத்தின் கார்க் எனும் பகுதியில் உண்ணாமல் உறங்காமல் முட்களிலும் கற்களிலும் வெறுங்காலுடன் நடந்து புலனிச்சைகளையும் சரீரசுகங்களையும் பாராது கடுந்துவம் புறிந்து ஏழு ஆண்டுகள் சென்றப்பின்னர்

அந்த அழகிய நகருக்குல் சென்று தகுதிவாய்ந்தவர்களை தேடிப்பிடித்து விட நினைத்தவர்களா பாக்தாத் நகரில் முஸா பரியா எனும் பகுதியில் அனாதை போல் அலைந்து கொண்டு இருந்தார்கள் அப்போது.

அவ்வழியே வந்த பாபுல் அஜஸ் என்ற இடத்தில் கலாச்சாலை நடத்திவந்த பெரியாரான ஷைகு அபூஸயீதி (ரஹ்) அவர்கள் முஹ்யித்தீன் ஆண்டகையை அழைத்துச்சென்று முரீதும் கிலாபத்தும் பெருமான் நபி (ஸல்) அவர்களின் போர்வை ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் இவர்கள் மூலம் தலைமுறை தலைமுறையாக கைமாறி இந்த ஷைகு அபூஸயீது முகர்ரமி ரஹ் அவர்களுக்கு கிட்டிற்று அவர்கள் ஆண்டகை அவர்களுக்கு கிரிக்கா என்ற அந்த போர்வை யையும் அவர்மீது போர்த்தி ஒப்படைத்தார்கள்.

கௌதுல் அஃலம் அவர்கள் தஸவ்ப் பயின்றது (இன்ஸான் தத்துவம்) ஸர்பத் கடை நடத்திவந்த ஷைகு ஹம்மாது அவர்களிடம் = அறபி இலக்கிய ஞானம் பயின்றது அல்லாமா அபூஜக்கரிய்யா யஹ்யா தப்ரேஸ் அவர்களிடம் அல்ஹதீஸ் பயின்றது அபுல்காலிப் அஹ்மது =அபுல்காசிம் அலி இந்த இரு மாமேதைகளிடத்திலும் மேலும் பிக்ஹு சட்டங்கள் பயின்றது = காஸி அபூ ஸயீதினில் முபாரக் பின் அலி முகர்ரமி=அபுல் உபா அலபின் அகீல் என்னும் இந்த இருவர்யிடத்திலும் பயின்றார்கள் 51 வயதில் ஆண்டகை அவர்கள் 1. பீபீ மதினா சாகிபா 2. பீபீ சாதிக்கா சாகிபா 3.பீபீ மூமினா சாகிபா 4.பீபி மஹ்பூபா சாகிபா என்ற நான்கு மனைவியரை திருமணம் செய்து 27 ஆண்மக்களையும் 18 பெண்மக்களையும் பெற்றெடுத்தார்கள் என்று எம்.ஏ.ஹைதர் அலீ அவர்கள் எழுதிய மெய்ஞ்ஞான ஜோதிகிதாப்பில் கூறியிருக்கிறார்கள்.

அல்லாஹு தஆலா ஒவ்வொரு கல்புக்கும் வெவ்வேறு அற்புதங்களை குடிகொண்டதாக செய்திருக்கும் படித்தரத்தின்படி முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களுக்கு மேனியில் ஈஉட்கார்ந்ததில்லை பூமியில் அவர்கள் எச்சில் துப்பியது இல்லை மேலும்

இளவயதில் அப்துல்காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் 40 பைகள் அளவுக்கு கோதுமை ரொட்டியும் 4 மாட்டு இறச்சியும் சாப்பிட்டு வந்தார்கள் இந்த அளவுக்கு அதிகமாக உணவு சாப்பிட்டும் அவர்களுக்கு மலம் கழிப்பதற்கான அவசியம் ஏற்படவில்லை என்று மனாகிபே கவ்ளியா வில் கூறப்பட்டுள்ளதாக அல்ஹாஜ்.

எம்.கே.முஹம்மது இபுறாஹீம் தம் நூலில் கூறியிருக்கிறார்கள் பாக்தாத் நகரில் ஹிஜ்ரி 561 ரபியுல் ஆகிர் மாதம் பிறை 11 றில் 91 வயதில் கடும் ஜீரம் ஏற்ப்பட்டு இப்பூஉலகினை விட்டு பொன்னுலகு ருபுறப்பட்டு மறைந்தார்கள் (இன்னாலில்லாஹி)

நடக்கவிருக்கும் நிகழ்ச்சி எதுவும் எனக்கு அறிவிக்கப்டாமல் (காலமோ மாதமோ)நகர்வதில்லை வீண் குதர்க்கம் பேசும் அறிவீனனே (உன்) விதண்டா வாதத்தை நிறுத்து கௌதல் அஃலம் (1=124)

www.miskinshah.blogspot.com

வாசி யோகம்

சரீ அத்து = இதற்க்கு

திக்ர் ஜல்லி X மன்ஜில் நாசூத்

மகாம் மூக்கு நுனி X நேரம் = சுபுஹு

மூச்சு லாயிலாஹ இல்லல்லாஹு = இதில்

வெளியேறும் மூச்சில் லாஇலாஹ

உள்ளேறும் மூச்சில் இல்லல்லாஹு

தரீகத்து = இதற்க்கு

திக்ர் கல்பி X மன்ஜில் மலகூத்

மகாம் இருபுருவம் X நேரம் இஷாவுக்குப்பின்

மூச்சு = இல்லல்லாஹு = இதில்

வெளியேறும் மூச்சிலும்

உள்ளேறும் மூச்சிலும் = இல்லல்லாஹு

ஹகீகத்து = இதற்க்கு

திக்ர் ரூஹி X மன்ஜில் ஜெபுரூத்

மகாம் குட்டிநாக்கு X நேரம் சவுரியப்படி

மூச்சு = ஹு அல்லாஹ் = இதில்

வெளியேறும் மூச்சில் அல்லாஹ்

உள்ளேறும் மூச்சில் ஹு

மஃரிபத்து = இதற்க்கு

திக்ர் சிர்ரி X மன்ஜில் லாஹூத்

மகாம் நெற்றிநடு X நேரம் சுபுஹுக்குமுன்

மூச்சு யாஹு

வெளியேறும் மூச்சில் = யா

உள்ளேறும் மூச்சில் = ஹு

இப்படி காலை மாலை இருவேளை ஒரு மணிநேரம் அறிவை தெளிவாக்கினால் 5 நிறங்கள் 4 சுவைகள் 5 அட்சரங்கள் 5 ரூஹுகள் இவைகளில் ஏதேனும் ஒன்றோ அல்லது அனைத்துமோ ஓர்மைக்குதக்கபடி உதயமாகும் மேலும் மனநோய் விழகும் நரம்புதளர்ச்சி தீரும். (இன்ஷா அல்லாஹ்)

முஹப்பத்து = இதற்க்கு

திக்ர் கபீ X மன்ஜில் ஜெம்ஹுத் இதன் மகாம் மனக்கன் இதில் முர்ஸத் தீதாரை ஜியாரத் செய்வது = நேரம் ஸஹர் வக்த் தஹஜ்ஜத் தொழுது விட்டு து.ஆ. கேட்பது போல் இருகைகளையும் ஏந்தியபடி இருந்து ஓர்மையுடன்

யா ரப்பு.யாகாதிர் 11 தரம் X யா.சுப்பூஹு யாகுத்தூஸ் 11 தரம் அல்லாஹு ம.இ X அல்லாஹு ஹாளிரி அல்லாஹு நாலிரி X அல்லாஹு ஷாஹிதி என்று 11 தரமும் ஓதி நெஞ்ஜில் ஊதிக்கொண்டு பின்னர் வலது தோள்புறம் தலைசாய்த்தபடி இருந்து, அன்தல் லாஹு யாஹு என்று 11 தரமும் இடது தோள் புறம் தலை சாய்த்தப்படி இருந்து அன்தல் ஹக்கு யாஹு என்று 11 தரமும் ஓதி பின்னர்

தன் முர்ஸிதை வலது பக்கம் நிறுத்தி (கற்பனை) நீ பிஸ்மி காலில் இருந்து நடுநெற்றியை மனக்கண்ணால் கூர்ந்து அலிஃபு ஹே வாவ் என்று கல்பைக்கொண்டு 156 தரம் வீதம் காலையிலும் மாலையிலும் ஒரு மணி நேரம் தவத்தில் இருந்து துதித்தால் காணக்கிடைக்காத காட்சிகளை காணும் நஸ்பு கிடைக்கும் மன அழுக்கு விழகும் நோய்கள் விரண்டோடும் பாவம் மண்ணிக்கப்படும் கேட்டது ஆ.கபூலாகும் ஆனால் நாவைக்கொண்டு ஓதத்கூடாது

இதில் ஒளி உதிப்பது

1. வலது புறத்திலிருந்து ஒளி உதயமானால் = அது தன்பீர் முர்ஸதின் ஒளிவு என்றும்
2. இடது பாகத்திலிருந்து ஒளி வெளியானால் = அது இப்லீஸின் ஒளி என்றும்
3. முதுகு புறமாய் ஒளி வெளியானால் அது = மலாயிகத்துக்களின் ஒளி என்றும்
4. தன் நெஞ்சுக்கு நேரே உதயமானால் அது நம் நப்ஸின் ஒளி என்றும்
5. கல்புக்கு மேலே ஒளி வெண்மையானால் அது கல்பின் ஒளிவு என்றும் அதுவே
6. வெள்ளையும் சிகப்புமாய் இருந்தால் அது ரூஹுவின் ஒளிவு என்றும்
7. ஒரு திசையும்யில்லாது உதயமானால் அது நூருல்லாஹ் வென்று சுஜுத் செய்

இது ஒருமாபெரும் தவமாகும் இதை எல்லோர்க்கும் சொல்லக்கூடாது

தரீக்கத்தில் உள்ளவர்களுக்கு சொல்ல தடையில்லை மேலும் வயற்றிற்க்குல் மலம் ஜலம். இல்லாத வெறும் வயற்றுடன் இருந்து இந்த தவத்தை செய்பர்களுக்கு காட்சியும் ஒளியும் இலகுவாய் கிடைக்கும் என அறியவும்

www.miskinsha.blogspot.com

தக்தீர் = விதி என்றால் என்ன

அல்லாஹ் நம்முடன் எனும் கிதாபில் கூறுப்படுகிறது.

நீ செய்யும் நலவு அல்லாஹ்வின் செயல்
நீ செய்யும் பாவச்செயல் உனது செயல் (அல்குர்ஆன் 42=30)

நீ நன்மையான காரியத்தை செய்ய நாடுவது மலக்கானிய்யாவின் தத்துவமும்
நீ தீமையான ஒரு காரியத்தை செய்ய நாடுவது சைத்தானிய்யாவின் தத்துவமுமாகும்

நன்மையில் இருந்து எது உன்னை அடைகிறதோ அது
அல்லாஹ்வின் புறத்தில் இருந்தே ஆகும்
தீமையில் இருந்து எது உம்மை தொடுகிறதோ அது
உம்புறத்தில் இருந்தே ஆகும். அல்குர்ஆன் (4=78)

நாம் ஒருபாவம் செய்து விட்டு எல்லாமே தக்தீர் (விதி) இது முன்பே எழுதப்பட்டு விட்டது என்பதும் உண்மைதான் என்றாலும் எல்லாம் அவன் செயல் என்றால் பிறகு யாருக்காக சொர்க்கம் யாருக்கு நரகம் என்று குழப்பம் வரும் சூழ்நிலை உருவாகும் மேலும் அல்லாஹ்வே அடியார்களை குற்றம் செய்ய வைத்துவிட்டு அவனே தண்டனையும் தருகிறான் என்றால் அல்லாஹ் அநீதி யாளன் என்று தவறானதாகிவிடும் அப்படிச் சொல்லக் கூடாது.

அவனைப்பற்றி அறிந்தவர்களிடம் சென்று கேளுங்கள் அல்குர்ஆன் (25=59)

முஸ்லீம்களுக்கு இஸ்ட்டமானதும் x காபிர்களுக்கு கஸ்ட்டமானதும் என்று தான் சொர்க்கம் நரகம் படைக்கப்பட்டது என்று முடிவானப்பின் ஏன் இந்த தவறான முடிவு என அல்லாவின் மீது அவதூற சொல்ல நேரும் இப்படி சொல்பவர்கள் குற்றத்தில் இருந்து தப்பிக்க முடியாது ஆனதால் அல்லாஹ் மேலே குறிப்பிட்டது போல் அறிந்தவர்களிடம் அறியாதவர்கள் விளக்கம் கேட்டு செயல்பட வேண்டியது கடமையானதாகும்.

லவ்ஹுல் மஹ்பூல்
அஸ்ராருல் ஆலம் எனும் கிதாபில் உள்ள விபரமானது

ஹக்கு தஆலாவின் ஒளிவாய் இருப்பது லவ்ஹுல் மஹ்பூல் அதில் அக்கில் (புத்தி) இருந்து பதியப்படுகிறவைகளுக்கு களா வென்று சொல்லப்படும்.

நபி (ஸல்) அவர்களை முதன்மையாகப்படைத்தது அக்கிலையே என்று சொல்லியிருக்கிறார்கள் இந்த லவ்ஹுக்கு நபுசுகுல்லி என்றும் சொல்லப்படுகிறது. ஒரு மனிதன் இந்த நேரத்தில் இன்ன விதமாய் இந்த ரூபமாய் பிறப்பான் என்று திட்டப்படுத்தியதற்க்கு தக்கீறென்று சொல்லப்படும்.

ஆலங்களில் வெளியாகிறதும் ஆகிறத்தில் வெளியாகிறவைகளும் லவ்ஹில் பதியப்பட்டிருக்கும் அறிவானவனே அறிந்துக்கொள் உன் மனதை உனக்கு லவ்ஹுல் மஹ்பூளென்று வைத்துக்கொள்ளலாம். ஏன் என்றால் நீ சிறுவனாக இருந்தது முதல் இன்று வரை நீ படித்தது பயின்றது கேட்டது அறிந்தது போன்ற அறிவுகளும் எண்ணங்களும் கல்விகளும் உன்னுடைய மனமென்கிற கஜானாவிற் பதியப்பட்டிருக்கின்றன அதன் கொள் அளவிற்க்கு எல்லையே இல்லை என அறிந்துக்கொள்.

உன் மனதிற்க்கு அறிவுகள் உனது அக்கிலைக் கொண்டுண்டாக்கின்றன அக்கில் இல்லாத போனால் அறிவு. இருக்க முடியாது அது போலவே அக்கிலுல் அவ்வலைக்கொண்டு லவ்ஹில் இல்முகலுண்டாகின்றன உனது அக்கில் உனது நப்ஸின் தத்துவமாய் இருக்கும் உனக்கு நப்ஸில்லாது போனால் அக்கிலும் மிருக்கக்கூடாது மனமுமிருக்க முடியாது.

உனது நப்ஸை ஹக்கு தஆலாவுக்கு உதாரணமாய் வைத்துக்கொள் நப்ஸைக் கொண்டே சகலதும் நடக்கின்றது போல் ஆலத்திலுள்ளவைகள் சகலதும் ஹக்கு தஆலாவைக் கொண்டே நடக்கின்றன. மேலும் லவ்ஹுல் மஹ்பூல் சகல படைப்புகளையும் சூழ்ந்திருக்கிறது இன்னும் அக்கிலும் அவ்வல் லவ்ஹை சூழ்ந்திருக்கிறது என்று அறிந்துக்கொள் இதனை உம்முல் கிதாப் பென்றும் சொல்லப்படும். இதில் பதிவாகியிருக்கும் எழுத்துக்களெல்லாம். அரூபியானவைகளாகவே இருக்கும் இது கண்களுக்கு தெரியாது. மனக்கண் கூர்மை பெற்ற மஹான்களால் காணமுடியும்.

அல்லாஹுதஆலாவும் நானும் நாடினால் ஒருவனுடைய தக்தீரை மாற்றி புதிய தக்தீர் உண்டாக்கப்படும் என நபிமணி(ஸல்) கூறியிருக்கிறார்கள்.

www.miskinsha.blogspot.com

திக்ரில் காட்சிகள்

அல்லாஹு தஆலாவுடைய = கஸ்புடைய மகாமையும், சுஹூதுடைய மகாமையும் சேர நாடுகிறவர்கள். கல்பு எனும் இருதயக் கமலத்தில் சுவாசத்தை சந்திர சூரிய இருகலைகளாலும் சேர்த்து = இல் = என்று ஏற்றி இறக்க வேண்டியது. அப்போது புருவ மத்தியில் = அல் = என்று நினைவை கூர்ந்து நோக்க நூருல் அஹம் மதியா ஒளிவு ஜெக ஜோதியாக தோற்றமாகும் அதில்

முஷாஹிதாவில் =லாம் = உடைய மகாமில் ஒளிவை தெரிசித்தால் அந்த ஒளி ரசூல் (ஸல்) அவர்களின் தாத்தின் ஒளிவாக இருக்கும் இன்னும்

அலிஃப்பு = உடைய மகாமில் ஒளிவை தெரிசித்தால் அந்த ஒளி அல்லாஹ்வின் சிபத்தின் ஒளிவாக இருக்கும் திக்ர் ஜல்லியின் கலிமாவில் = லாம் என்ற எழுத்தானது ஒளி வீசும் அது எம்பெருமான் முஹ்யித்தீனாக இருக்கும் மேலும் அ க் க லி மா தேன்அமிர்தம் ஹூ = நாவில் சுவையானால் அது திருமணி முஹ்யித்தீனாக இருக்கும் தவத்தை அறிந்து உணர்ந்தால்

அம்மாறாவின் குணமென்ற பாலானது
முத்ம இன்னா எனும் தயிராகி பின்பு
ராலியா வெனும் மோராகி பின்பு
மறலியா வென்னும் வெண்ணையாகி
காமிலா வெனும் குணத்தில் நெய்யாகி
அதில் உன் முகத்தை தெரியச் செய்யும்

ஹே = யுடைய மகாமில் ஒளி உண்டானால் அது அல்லாஹ்வின் அர்ஸின் ஒளிவாக இருக்கும் என்றும் ஒவ்வொரு மகாமின் ஒளிகளையும் அறிந்து விளங்கி அது எந்த ஒளி என்று அறிந்துக் கொள்வதே சிறப்பானதாகும்.

தங்கள் தொழுகையில் பரா முகமாயிருக்கும் (நயவஞ்சகமான) தொழுகையாளிகளுக்கும் கேடுதான் அவர்கள்

தொழுத போதிலும் ஜனங்களுக்கு காண்பிக்கவே தொழுவார்கள் (அல்குர்ஆன் 107=4.5.6)

அறிவானவனே அறிந்துக்கொள்

பதிநான்கு இல்முகள்

அல்லாஹுதஆலாவின் நாட்டப்படி தாய் தந்தையர்களின் கருப்பொருள்களான சுக்கிலம் சுரோனிதத்தால் உண்டாக்கப்பட்ட சரிரத்தில் தாய் பங்கு நான்கு = தோல், தசை, ரத்தம், நரம்பு=தந்தை பங்கு நான்கு = எலும்பு, மூளை, விந்து, வியர்வை=அல்லாஹ்வின் பங்கு ஆறு = பார்வை கேள்வி பேச்சு மூச்சு அறிவு சக்தி இந்த பதிநான்கு வஸ்த்துக்களையும் ஆராய்ந்து அறிந்து உணர்ந்தவர்க்கே அவர்கள் செய்யும் முஷாஹிதா முழுமையானதாகவும் தெளிவாகவும் இருக்கும். இப்படி இல்லாது கண்ணை மூடி இருந்துக்கொண்டு பெருமைக்காக ஆகா ஒகோ அதைபார்த்தேன் இதை பார்த்தேன் என்று பிதற்றுவது தவமும் ஆகாது தவமும் பளிக்காது கருவில் இருப்பதை கண்டவரே காமில் தாலிபானவனே

அல்லாஹ் எனும் அய்ந்தெழுத்து = அலிஃப்பு லாம் லாம் அலிஃப்பு ஹே ஹாமீம் எனும் மூன்றெழுத்து = ஹே அலிஃப்பு மீம் முஹ்யித்தீன் ஆறெழுத்து = மீம் ஹே ஏ தாள் ஏ நூன் இந்த

பதிநான்கு ஹர்புகளான எழுத்துக்களை அல்லாஹ் நமது
சீரத்தில் எந்த வஸ்தாக அமைத்திருக்கிறான் என்றும்
அறிந்து உணர்ந்தவர்க்கே அவர்கள் செய்யும்

முஷாஹிதா முறாகபா போன்ற இபாதத்துக்கள் முழுமையான பலன்கொடுக்கும் இல்லையேல் ஒதியதற்குண்டான பலனே கிடைக்கும். என்று (பெரியநூஹு லப்பை ஆலீம் அவர்கள்) தன் கவியில் கூறியிருக்கிறார்கள்.

நாசூத்து என்றது சுவாசம் காற்றாக இருக்கும்
மலகூத்து என்றது இரு கண்களாக இருக்கும்
ஜபுரூத்து சந்திர சூரிய மகாம்களாய் இருக்கும்
லாஹூத்து என்றது காதின் கேள்வியாய் இருக்கும்
ஜெம்ஹூத்து என்றது ஓர்பள்ளிவாசலாய் இருக்கும் அதில்
ஒரு மிம்பரும்

நான்கு படியும் இருக்கும் அதில் ஏறி ஹூவென்ற கைதடியை பிடித்து முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குத்பா ஒதுவார்கள். இதை பிஸ்மிகாலில் இருந்து தலைகுனிந்து ஓர்மையுடன் அந்த ஒசையை கேட்பவர்களுக்கு இதை தவத்தில் இருந்து பார்த்தவர்களுமே மெஞ்ஞான சரீரம் பெற்ற ஷெய்காகவும் தன்னை அறிந்து மஹான்களாகவும் முடியும் என அறிந்துக்கொள்

www.miskinsha.blogspot.com

உஹது = ஸஹாபாக்கள்

பத்ரு போர் : ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமலான் பிறை பதினேழில் நடந்தது

உஹது போர் ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு ஷவ்வால் பிறை பதினைந்தில் சனிக்கிழமை அன்று (உஹது போர்) ஆரம்பமானது இதில் இன்னுயிர் நீத்த தியாகிகள் அறுபத்தைந்து பேர்கள் இந்த புண்ணியவான்களின் பொருட்டால் நாம் கேட்கும் து.ஆவை அல்லாஹ் கபூல் செய்வான் என்ற உறுதியுடன் செயல்பட அல்லாஹ் அருள்புரிவானாக இதில் முஹாஜிர்கள் நான்கு பேர்கள் அன்ஸாரிகள் அறுபத்தொரு பேர்.

அல்லாஹும்ம இன்னி அஸ் அலுக பி.ஸய்யிதினா ஸய்யிதிஸ் சுஹதாயி லை சில்லாஹி

1. ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹு
2. அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஸ் ரலியல்லாஹு அன்ஹு
3. முஸ் அப் இப்னு உமைர் ரலியல்லாஹு அன்ஹு
4. ஷம் மாஸ் இப்னு உதுமான் ரலியல்லாஹு அன்ஹு
5. அம்ரு இப்னு முஆத் ரலியல்லாஹு அன்ஹு
6. ஹாரித் இப்னு அனஸ் ரலியல்லாஹு அன்ஹு
7. உமரா இப்னு ஜியாத் ரலியல்லாஹு அன்ஹு
8. ஸலமா இப்னு தாபித் இப்னு வக்ஷ ரலியல்லாஹு அன்ஹு
9. அம்ரு இப்னு தாபித் இப்னு வக்ஷ ரலியல்லாஹு அன்ஹு
10. தாபித் இப்னு வக்ஸ் ரலியல்லாஹு அன்ஹு
11. ரிபாஆ இப்னு வக்ஸ் ரலியல்லாஹு அன்ஹு
12. ஹுஸைல் இப்னு ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு
13. ஸைஃபீ இப்னு கைளீ ரலியல்லாஹு அன்ஹு
14. ஹபீப் இப்னு கைளீ ரலியல்லாஹு அன்ஹு
15. அப்பாத் இப்னு ஸஹ்ல் ரலியல்லாஹு அன்ஹு
16. ஹாரித் இப்னு அவ்ஸ் ரலியல்லாஹு அன்ஹு
17. இயாஸ் இப்னு அவ்ஸ் ரலியல்லாஹு அன்ஹு
18. உபைத் இப்னுத் தையிஹான் ரலியல்லாஹு அன்ஹு

19. ஹபீப் இப்னு யஜீத் ரலியல்லாஹு அன்ஹு
20. யஜீத் இப்னு ஹாத்திப் ரலியல்லாஹு அன்ஹு
21. அபூ சுப்யான் இப்னு ஹாரித் ரலியல்லாஹு அன்ஹு
22. ஹன்ளலா இப்னு அபீ அமீர் ரலியல்லாஹு அன்ஹு
23. உனைஸ் இப்னு கத்தாதா ரலியல்லாஹு அன்ஹு
24. அபூ ஹய்யா இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
25. அப்துல்லா இப்னு ஜுபைர் ரலியல்லாஹு அன்ஹு
26. கைதமா அபூ ஸஅத் இப்னு கைதமா ரலியல்லாஹு அன்ஹு
27. அப்துல்லா இப்னு ஸலமா ரலியல்லாஹு அன்ஹு
28. ஸுபைஃ இப்னு ஹாத்திப் ரலியல்லாஹு அன்ஹு
29. அம்ரு இப்னு கைஸ் ரலியல்லாஹு அன்ஹு
30. கைஸ் இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
31. தாபித் இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
32. ஆமிர் இப்னு மக்லத் ரலியல்லாஹு அன்ஹு
33. அபூ ஹுபைரா இப்னுல் ஹாரித் ரலியல்லாஹு அன்ஹு
34. அம்ரு இப்னு முத்தாரிப் ரலியல்லாஹு அன்ஹு
35. அவ்ஸ் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு
36. அனஸ் இப்னு நள்று ரலியல்லாஹு அன்ஹு
37. கைஸ் இப்னு முகல்லத் ரலியல்லாஹு அன்ஹு
38. கைஸான் ரலியல்லாஹு அன்ஹு
39. ஸுலைம் இப்னு ஹாரித் ரலியல்லாஹு அன்ஹு
40. நுஃமான் இப்னு அப்து அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
41. காரிஜா இப்னு ஜைத் ரலியல்லாஹு அன்ஹு
42. ஸஃது இப்னுர் ரபீஉ ரலியல்லாஹு அன்ஹு
43. அவ்ஸ் இப்னுல் அர்க்கம் ரலியல்லாஹு அன்ஹு
44. மாலிக் இப்னு சினான் ரலியல்லாஹு அன்ஹு
45. ஸயீத் இப்னு சுவைத் ரலியல்லாஹு அன்ஹு
46. உத்பா இப்னு ரபீஉ ரலியல்லாஹு அன்ஹு
47. தஅலபா இப்னு பர்வா ரலியல்லாஹு அன்ஹு
48. தக்ஃப்பு இப்னு பர்வா ரலியல்லாஹு அன்ஹு
49. அப்துல்லா இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
50. ளம்ரா ரலியல்லாஹு அன்ஹு

www.miskinsha.blogspot.com

51. நவ்பல் இப்னு அப்துல்லா ரலியல்லாஹு அன்ஹு
52. அப்பாஸ் இப்னு உபாதா ரலியல்லாஹு அன்ஹு
53. நுஃமான் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு
54. முஜத்தர் இப்னு தியாத் ரலியல்லாஹு அன்ஹு
55. உபாதா இப்னு ஹஷாஸ் ரலியல்லாஹு அன்ஹு
56. ரிஃபாஆ இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
57. அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
58. அம்ரு இப்னு ஜமூஹ் ரலியல்லாஹு அன்ஹு
59. கல்லாத் இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
60. அபூ அய்மன் ரலியல்லாஹு அன்ஹு
61. ஸுலைம் இப்னு அம்ரு ரலியல்லாஹு அன்ஹு
62. அள்த் தரா ரலியல்லாஹு அன்ஹு
63. ஸஹ்லு இப்னு கைஸ் ரலியல்லாஹு அன்ஹு
64. தக்வான் இப்னு அப்து கைஸ் ரலியல்லாஹு அன்ஹு
65. உபைத இப்னு மு அல்லா ரலியல்லாஹு அன்ஹு

அல்லாஹ் உடைய பாதையில் வெட்டுண்ட (வேற்றுமையை பனாவாக்கிய) வர்களை மௌத்தானவர்களென்று எண்ண வேண்டாம். என்கிலும் அவர்கள் ஹயாத் தானவர்களாகவே இருக்கின்றார்க்ள (அல்குர்ஆன் 3=169)

சிறப்பானவனே = உனக்கு ஒரு ஹாஜத் இருந்தால் அக்காரியம் நிறைவேற இரண்டு ரகாஅத் நபிள் தொழுத பின்னர் மன ஒர்மையாய் இருந்து ஸலபாத் 11 தரமும் தவ்பா 70 தரமும் ஓதிபின்பு இந்த உஹது ஸஹாபாக்கள் திருநாமங்களை முழுவதும் ஓதி (ஒரு முறை) அல்லாஹ்விடத்தில் சுஜுதில் இருந்து து.ஆ.கேட்டால் உன் கஸ்ட்டம் நஸ்ட்டம் உண்டாக காரணமான எல்லா தோசங்களும் தீர்ந்து போகும் மேலும் புனித நாட்களிலும் இதை தொடர்ந்து ஓதி வந்தால் (இன்ஷா அல்லாஹ்) நல்லபலன் கிடைக்கும் குல்ஹு வல்லாஹு சூரா 65 தரம் ஓதி இவர்கள் ஆன்மாவுக்கு ஹகியா செய்துவிட்டு து.வா. கேட்கவும்

தலைமுறைகள்.50

நீங்கள் அவர்களை அவர்களுடைய (உண்மையான) தந்தைகளின் பெயர்களைக் கூறி அழையுங்கள் அதுதான் அல்லாஹ் விடத்தில் மிக நீதமாக இருக்கின்றது. அவர்களின் தந்தைகளை நீங்கள் அறியா விட்டாலோ (அவர்கள்) உங்களுடைய மார்க்க சகோதரர்களாவும் உங்கள் மார்க்க சிநேகிதர்களாவும் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 33=5)

பாவா ஆதம் அவர்களும் பீபீ ஹவ்வா அவர்களும் ஒன்று சேர்ந்து ஒவ்வோர் சூலிலும் இரண்டு இரண்டு பிள்ளைகளாக

இருபது சூலில் ஆணும் பெண்ணுமாக நாற்பது பிள்ளைகள் பெற்றார்கள் அதின் நின்றும் ஷீது நபி அவர்களும்

அவருடைய பிள்ளை யாநூசு	அவருடைய பிள்ளை கைனான்	அவருடைய பிள்ளை மகுலீல்
அவருடைய பிள்ளை எதுது	அவருடைய பிள்ளை உகுநூகு	அவருடைய பிள்ளை இத்ரீஸ்
அவருடைய பிள்ளை மத்துசல்கு	அவருடைய பிள்ளை லாமக்கு	அவருடைய பிள்ளை நூஹுநபி
அவருடைய பிள்ளை ஸாம்	அவருடைய பிள்ளை அறுபசுகு	அவருடைய பிள்ளை ஸலாகு
அவருடைய பிள்ளை அய்பறு	அவருடைய பிள்ளை பாலகு	அவருடைய பிள்ளை றாகுவா
அவருடைய பிள்ளை ஸாருகு	அவருடைய பிள்ளை நாகூறு	அவருடைய பிள்ளை ஆஸறு
அவருடைய பிள்ளை இப்றாஹீம்	அவருடைய பிள்ளை இஸ்மாயீல்	அவருடைய பிள்ளை தாபித்து
அவருடைய பிள்ளை எசுஹுபு	அவருடைய பிள்ளை அஃறபு	அவருடைய பிள்ளை தைறகு
அவருடைய பிள்ளை நாகூறு	அவருடைய பிள்ளை மிக்குவம்	அவருடைய பிள்ளை உதது
அவருடைய பிள்ளை அதுநான்	அவருடைய பிள்ளை முஅத்து	அவருடைய பிள்ளை நிஸார்
அவருடைய பிள்ளை முழுறு	அவருடைய பிள்ளை இல்யாசு	அவருடைய பிள்ளை முதற்கு
அவருடைய பிள்ளை குஸைமா	அவருடைய பிள்ளை ஹனானா	அவருடைய பிள்ளை நுழறு
அவருடைய பிள்ளை லாமக்கு	அவருடைய பிள்ளை பிக்துறு	அவருடைய பிள்ளை காலிபு
அவருடைய பிள்ளை லூவை	அவருடைய பிள்ளை கஃபு	அவருடைய பிள்ளை முற்றத்து
அவருடைய பிள்ளை குசை	அவருடைய பிள்ளை அப்துல் முனாப்	அவருடைய பிள்ளை ஹாஸீம்
அவருடையபிள்ளைஅப்துல்முத்தலிப்	அவருடைய பிள்ளை அப்துல்லாஹ்	அவருடைய பிள்ளை தான்

நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்கள்

www.miskinsha.blogspot.com

ஜெய ஜெக ஜோதி நபி

கவிக்கோ=அப்துர் ரஹ்மான் அவர்களின் தந்தை ஆலி ஜனாப் செய்யத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் நூலில் இருந்து

இது உங்கள் பிதாவாகி இப்றாஹீமுடைய மார்க்கமாகும் அவர் தாம் இதற்க்கு முன் உங்களுக்கு முஸ்லீம்கள் என்று பெயரிட்டவர் என்று அல்லாஹ் அறிவிக்கிறான்

(அல்குர்ஆன் 22=78)

(குறிப்பு) தூதராகிய ஹலரத் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களே இந்த மார்க்கத்திற்க்கு இஸ்லாம் என்றும் இதைப்பின்பற்றுபவர்களுக்கு முஸ்லீம்கள் என்றும் பெயரிட்டவர்களாகும்.

பூமியின் நடு மத்தியான மக்கமா நகரில் குறைஷ் குலத்தில் தந்தை அப்துல்லாஹ் அவர்களுக்கும் தாய் ஆமீனா அம்மையார் அவர்களுக்கும் மகனாராக கி.பி 571 ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி ரபியுல் அவ்வல் மாதம் பன்னிரண்டாம் தேதி திங்கள் அன்று நபிமணி (ஸல்) அவர்கள் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தார்கள். மனிதகுல மா மகுடம் ஈருலகப்பேரொளி விழி கூசும் ஒளிவிளக்கு ஹலரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதார மானார்கள் அதே வேளையில் பாரஸீக மஜூஸிகளின் நெருப்புக் குண்டம் அணைந்தது. ரோ மானியச்சக்ரவர்த்தியின் தர்பார் மண்டபத்தின் கலசங்கள் இடிந்து விழுந்தன. அவர்கள் அழிவை இச்சம்பவம் முன்மொழிந்தது பின்னால் தெரிந்தது.

பொய்யும் புரட்டும் அனாச் சாரங்களும் கஃபாவில் பெண்கள் நிர்வாணமாக வலம் வந்த கொடுமை திருவிழாவும் கண்மூடி தனமாக நடந்த எதிலும் கலந்து கொள்ளவில்லை. சிறுவராய் இருந்த முஹம்மது (ஸல்0 அவர்கள் நாட்டு மக்களை சீர்திருத்தி காட்டு தர்பாரை மூட்டைகட்ட அக்காலத்தில் நேர்மையுள்ளம் படைத்த இளைஞருடன் சேர்ந்து ஹில்ஃபுல் புளூல் என்ற சங்கத்தை தோற்று வித்தார்கள்.

காலங்கள் விரைந்ததும் நாற்பதாம் வயதில் ஹீராகுகையில் தியானத்தில் இருந்தார்கள் அன்று முதல் அல்லாஹுதஆலா தன்தூதருக்கு நபித்துவம் இல்முல் லதுன்னி = என்ற ஞானத்தை வழங்கினான் அதுமுதல் முதலில் முஸ்லிமானவர் கத்திஜா பிராட்டியார் என்பதும் அடுத்தபடியாக நண்பர் அபூபக்கர் (ரலி) என்பதும் மிகக்குறிப்பிடத் தக்கது. சிறுவராயிருந்த ஹலரத் அலீ (ரலி) அவர்களும் அபிசீனியாவிலிருந்து அடிமையாக வந்த

இப்படியாக மூன்று ஆண்டுகளுக்குள் இஸ்லாத்தை தழுவியவர்கள் நாற்பது பேராயினர் நபிகளாரின் பெரிய தந்தையர்களான அபுஜஹிலும் அபூலஹபுமே இஸ்லாமிய எதிரிகளுக்கு தலைமை தாங்கி முஸ்லீம்கள் மீது கொடுமை இழைக்க தொடங்கினர்.

புதிதாக இஸ்லாத்தை தழுவிய வரான ஹாரிஸ் பின் உப்பி உம்மூஹாலா என்பவர் வீட்டில் நபிகளார் இருந்தார்கள் அப்போதுபகைவர்கள் வாளை உருவிய வண்ணம் வந்தார்கள் அப்போது நபிகளாரை காப்பாற்ற முன்வந்த ஹாரிஸ் மீது வாள் வெட்டு விழுந்தது. அவ்விடமே அவர் உயிர் நீத்தார் அதுவே இஸ்லாத்தின் முதல் பலியாகும் பின்னர் ஹலரத் உமரிப்னு கத்தாப்(ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவியப்பின்பு புதிய அத்தியமே தொடங்கியது.மேலும் நபிகளாரின் பெரிய தந்தை ஹம்ஸா (ரலி) அவர்களும் முஸ்லிமானார்கள் அதுசமயம்.

குறைஷியர்கள் நபிகளாரின் குடும்பத்தை பகிஷ்காரம் (ஊரைவிட்டு ஒதுக்குதல்) செய்து உணவு பொருளோ தண்ணீரோ கொடுக்கக்கூடாது பேசக்கூடாது என்று எழுதி கஃபாவில் தொங்கவிட்டனர். அதுபோது நபிகளாரின் பெரியதந்தை அபுதாலிப் தம் குடும்பத்தாருடன் நபிகளாரின் குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு மக்காவிற்கு அருகில் உள்ள ஓரு மலைப்பள்ள தாக்கில் போய் தங்கினார்கள். இப்படியாக மூன்று ஆண்டுகள் இலைகளையும் கிழங்குகளையும் தின்னலாயினர். ஆயினும் நபிகளார் பொருமையோடு நாட்களை நடத்தினார்கள் பின்னர் மக்காவுக்கு வந்ததும் சில ஆண்டுகளுக்குப்பின் மதினாவில் குடியோறி இஸ்லாத்தை நிலைநாட்டியதும் இன்னும் சில ஆண்டுகளுக்குப்பின் மக்காவை கைபற்றியதும் நாம் அறிந்ததே ஆயினும்.

ஹிஜ்ரி எட்டாவது ஆண்டில் ரமளான்மாதம் முஸ்லீம் வீரர்கள் பத்தாயிரம் பேர் படையுடன் வந்து கஃபாவை தம் வசமாக்கினார்கள் ஹிஜ்ரி பத்தாவது ஆண்டில் நபிகளார் இருதி ஹஜ் செய்தார்கள். ஹிஜ்ரி பதினொன்றாவது ஆண்டில் தமது அறுபத்து மூன்றாம் வயதில் எந்த மாதம் எந்த தேதியில் பிறந்தார்களோ அதே ரபியுள் அவ்வல் மாதம் பனிரெண்டாம் தேதி அதே திங்கள் அன்று ஹலரத் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு (அலை அவர்கள் இவ்வுலகை விட்டு பிரிந்தார்கள் (இன்னா லில்லாஹி)

பள்ளிக்கூடத்தில் படித்ததில்லை உலக ஞானிகளுக்கு பாடம் போதித்தார்கள்=போர்ப்பயிற்ச்சி பெற்றதில்லை படைநடத்தி வெற்றிக்கண்டார்கள்=வாளோங்கி அறியார் அவரது வாள்வீச்சு வியக்கத் தக்கதாயிருந்தது=பணபலமில்லை படைபலமில்லை தம்மை சூழ பெரும் கூட்டத்தை சேர்த்தார்கள்.

அவர்கள் அனைவரும் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக உயிர் பொருள் இன்பம் அனைத்தயும் தியாகம் செய்ய எச்சமயமும் சித்தமாய் இருந்தனர்.

www.miskinsha.blogspot.com

இளவர சராயிருந்து ஆளும் பயிற்ச்சி பெற்றதில்லை உலகத்தை ஓர் குடையாய் ஆட்சி செய்தார்கள் கருப்பர் வெள்ளையர் எனும் பேதத்தை அறவே ஒழித்துக்கட்டி கறுப்பராகிய பிலாலை உமர் (ரலி) அவர்கள் சையிதினா (தலைவரே) என்றே அழைத்தார்கள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் ஹஸன்பிலாலை மக்காவின் கவர்னராக பதவி பிரமானம் செய்து வைத்திருந்தார்கள்.

இப்படி உலகாண்ட நபிகளார் ஆடம் பரத்தில் மூழ்கவில்லை அரண்மனையில் குடியேறவில்லை எளிய வாழ்வே வாழ்ந்தார்கள் தம் செருப்புகளை தாமே பழுதுபார்த்துக் கொண்டார்கள் முரட்டு கம்பளிளை அணிந்து குடிசையில் வாழ்ந்து அரை வயற்று உணவு உட்கொண்டு அவனியை ஆண்டவர்கள் இவ்வுலக வரலாற்றில் வேறு யாரேனும் உண்டா முதலாளி தொழிலாளியை தம் சகோதராக பாவிக்க வேண்டும் தாம் உண்ணும் உணவே அவருக்கும் கொடுக்க வேண்டும் தாம் உடுத்தும் ஆடை போன்றே அவருக்கும் கொடுக்க வேண்டும் அவர் சக்திக்கு மிஞ்சிய வேலை வாங்கக் கூடாது உழைப்பாளியின் வியர்வை உலருமுன் ஊதியம் வழங்க வேண்டும் என்றெல்லாம் உபதேசம் செய்து சாத்வீகமான முறையில் வாழ வைத்த வள்ளல் எம் பெருமான் அறிவூற்று சத்திய ஒளியான அண்ணலாருடைய

புனித உடலை குளிப்பாட்ட ஹஜ்ரத் அலீ(ரலி) ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் இருபுதல்வர்களான ஹஜ்ரத் ஃபழ்ல் (ரலி) ஹஜ்ரத் கஸம் (ரலி) மற்றும் இதர குடும்ப உறுப்பினர்களான ஹஜ்ரத் உஸாமா (ரலி) ஹஜ்ரத் ஷக்ரான் (ரலி) ஆகியோர் தயாரானார்கள்.

அண்ணலார் அணிந்திருந்த உடையோடு அவர்களைக் குளிப்பாட்டினார்கள் மூன்று துணிகளைக் கொண்டு கபனிட்டார்கள் (பிதாயா இத்ஹாப் நூல்) ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டிலேயே அண்ணலாரை அடக்கம் செய்வதென. தீர்மானித்து அதன்படி ஹஜ்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்கள் புதைக்குழி (கப்ர்) தோண்டினார்கள். மறுநாள் செவ்வாய் கிழமை அண்ணலார் புனித உடலை ஹஜ்ரத் அலீ (ரலி) ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் இரு குமாரர்கள் ஆகிய நால்வரும் கபரில் இறங்கி பிறகு மண்ணை நிரப்பி சமாதி வடிவமாக்கி தண்ணீர் தெளித்தார்கள் அனைவரும் கண்களும் கண்ணீர் சிந்தியப்படியே கலைந்து சென்றார்கள்

நபிகளார் கூறிய கடைசி சொல் (அல்லாஹும்ம ஃபிர் ரஃபீகில் அஃலா)

கலம் = எழுதுகோல்

அல்லாஹ் ஜல்ல ஷானஹூ தஆலா அர்சு குர்சு லவ்ஹூ கலம் பூதங்கள் சுன்ஜூல் மஃபி இவைகளை உண்டாக்குவதற்கும் முன்னே அல்லாஹ்வின் உஜூத் எனும் உதிப்பில் நின்றும் ஓர் அஸ்ரிரீ எனும் ஸப்தம் உண்டாகி கலமே நீ உண்டாகு என்றது அக்கணமே முஹ்யித்தீன் என்ற கலம் உண்டாயிற்று அதற்க்கு லவ்ஹில் எழுதும்படி ஆணை பிறந்தது கலத்தின் முனையில் வரி பிளக்காததாலே எழுத முடியாமல் நின்றது மீண்டும் ஓர் ஸப்தம் ஹூம் என்ற உண்டானது அதை கேட்டதும் கலத்தின் முனையில் (பெண் அடையாளம்) ஓர் நுக்தாவுடன் ஓர் அலிஃப்பு சேர்ந்த பிளப்பு ஆனது.

கலம் எழுத துவங்கி லவ்ஹில் கலம் பட்டதும் ஓர்நுக்கத் உண்டானது அதில் நின்றும் நூரெ முஹம்மதியா ஆனது அந்நுக்கத் சுஜூது செய்தது அந்த பிரகாசத்தில் நின்று பாத்திமா நாயகியின் ரூஹூ உண்டானது. அதில் நின்றும் ஹஸன் ஹூஸைன் என்னும் சூரிய சந்திர பிரகாசச் சுடர் வெளியானது பிறகு.

அல்லாஹ் கலத்தை பார்த்து என்ஹபீபே குத்புல் அஃலமே எழுதும் என்றான், தஜல்லியின் கலாம் அனைத்தும் தஜல்லியின் ஏவள் பிரகாரம் விதி கற்பனை களாக்களை பற்றி விடாமல் எழுதி முடித்தது.

அந்த பச்சை நிறமான நுக்கத்தில் நின்றும் நூரெ முஹம்மதி உண்டானதும் அதிலிருந்து அர்சு குர்சு லவ்ஹூ நரகம் சொர்க்கம் வானம் பூமி ஹூருல் ஈன்கள் கடல் மனிதர் ஜின் அரக்கர் இப்படி பல பல சிருஷ்டி படைப்புக்கள் ஜீவ ஜந்துக்கள் முஹம்மதில் நின்றும் வெளியானது. அதனால் தான்

கலிமா முஹம்மதாக இருக்கிறது அதன் ரூபம் முஹ்யித்தீனாக இருக்கிறது வெண்முத்திலிருந்து லவ்ஹையும் இரத்தினத்திலிருந்து கலத்தை ஆக்கினான்.

www.miskinsha.blogspot.com

மரண ஒலை

அல்லாஹு ஜல்லஷானஹு தஆலா தாம் படைத்த மனிதர்களின் ரூஹை கைப்பற்றி மவுத்தை உண்டாக்கும் விபரமானது கிராமன் காத்திபீன் இருமலக்குகளும் மவுத்தாகப் போகிறவனின் பெயர் ஊர் தாய்பெயர் போன்ற குறிப்புகளை எழுதி முன்கர் மலக்கிடம் தருவார்கள் அவர் அதை வாங்கிக்கொண்டுபோய் ஆறாம் வானில் உள்ள சிதரத்துல் முன்தஹா எனும் இலந்தை மரத்து இலைகளில் இந்த குறிப்பு எழுதியுள்ள இலையை தேடி பிடித்து அந்த இலையை பறித்து இஸ்றாயீல் அல்ஹிஸ்ஸலாமின் மடியில் அந்த குறிப்பு உள்ள இலையை போடுவார்கள் அந்தக் குறிப்பு பிரகாரம் அவர்கள் ரூஹை வாங்க வரும்முன்.

சக்கராத்து நிலை

ஸக்கராத்து என்றால் அய்ம் பொறிகளும் ஒடுங்கி அடங்கி அனுபவித்தவை எல்லாம் மறைந்து போகும் விதமான ஒருவித மயக்கம் எனப்படும் அப்போது ரூஹை கைப்பற்றும் இஸ்றாயீலையும் இன்னும் பல மலக்குகளையும் மவுத்தான நம் முன்னோர்களையும் காணக்கூடியதாக இருக்கும் அந்த சக்கராத்தை அனுபவிக்கிறவர்களுக்கு மகா கொடுமையான வருத்தமும் திட்டுமுட்டும் திகிலும் ஆயாசமும் களைப்பும் தாகமும் வரட்சியும் பலவித சங்கடங்களும் அதிகமிருக்கும்.

சக்கராத்தில் மூன்று சங்கடம்

1 வது சக்கராத்து வருத்தம் 2 வது இஸ்றாயீலின் பயங்கர தோற்றகாட்சி 3 வது நரக வேதனையை கண்டு பீதியின் சோகம் என்றும்

சக்கரத்தில் மூன்று நற்க்குறிகள்

1 வது உடல் உசும்பாது ஒடுங்கி நெற்றியில் வேர்ப்பதும்
2 வது கண்களில் நீர் ததும்புவது 3 வது உதடுகள் உலர்ந்து இருப்பதும்

சக்கராத்தில் மூன்று துற்க்குறிகள்

1 வது தொண்டை நெரிப்பதில் உண்டாகும் உறுமுவது போலும் 2 வது உடல் சிவந்து காணப்படுவதும் 3 வது உதடுகள் சாம்பல்பூத்து இருப்பதும்

நல்ல முடிவு

1 வது ஹுஸ்னுல் காத்திமா சைத்தானை விரட்டி ஈமானுடன் மவுத்தாவது

கெட்ட முடிவு

2 வது சூவுல் காத்திமா சைத்தானின் சொல்கேட்டு துன்யாவில் இருந்ததுபோலவே ஈமான்மாறி கெட்ட முடிவில் மவுத்தாவது

ஒவ்வொருவனுக்கும் சக்கராத்து நடந்து ரூஹு தொண்டை குழியில் வந்தால் தவ்பா வாசல் அடைப்பட்டு விடும் அதன் பின்னர் ஒரு உருப்புக்கு மற்ற உருப்புகள் ஸலாம் சொல்லிக் கொள்ளும் ரூஹு உடலுக்கு ஸலாம் சொல்லும் X அறிவு புத்திக்கு ஸலாம் சொல்லும் அப்போது நான்கு மலக்குகள் வருவார்கள்.

1 வது ரிஸ்ஸக்குடைய மலக்கு வந்து
இனி உனக்கு இங்கு ரிஸ்ஸக்இல்லை என்றும்
2 வது குடிப்புடைய மலக்கு வந்து
இனிஉனக்குஇங்குஒருசொட்டுதண்ணீர்யில்லைஎன்றும்
3 வது மூச்சுடைய மலக்கு வந்து
இனி உனக்கு இங்கு ஒரு மூச்சும் இல்லை என்றும்
4 வது தவனையுடைய மலக்கு வந்து
இனி உனக்கு இங்கு இருக்க தவனை முடிந்தது என்றும் சொல்வார்கள்

கிராமன் காத்திபீன் எனும் (ஹலபத்) காவல்கார மலக்குகள் வந்து பட்டோலை. புத்தகத்தை காட்டி படிக்கச் சொல்வார்கள் அதைபடித்ததும் நல்லவர் சிரிப்பார் கெட்டவர் அழுவார் அந்த புத்தகத்தை அவர்கள் கட்டி முத்திரை வைத்து அவன் கழுத்தில் தொங்க விடுவார்கள் இனி அவன் கியாமத்தில் அந்த கிதாபுடனே தான் எழுந்திருப்பான்.

சாலிஹானவனின் சக்கராத்தில் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஜிபுரியீலும் ரஹ்மத்துடைய மலக்கும் நேரில் வருவார்கள் அப்போது ஜிபுரீயீல் அவர்கள் தன் சிறகால் அவன் முகத்தை தடவி கொடுப்பார்கள் அப்போது முஹம்மது நபி (ஸல்) அவர்களை காட்டி இவர்கள் தான் உனது தலைவர் முஹம்மது நபி என காட்டுவார்கள். இவர்களுக்கு கலிமா சொல் என்று கூறி அவனை கலிமா சொல்ல வைத்து து.ஆ.செய்வார்கள் அப்போது இப்லீசின் மாயாஜாலம் ஒன்றும் பலிக்காது வெட்கி தலைகுனிந்து அவமானப்பட்டு ஒடி விடுவான்.

அறிவானவனே அறிவை எழுப்பிவிடு

உடல் நிரந்தரமல்ல உயிர் நிரங்தரமல்ல கபுறை மறந்து துன்யாவை இச்சித்து வாழ்ந்துக்கொண்டிருந்தால் முடிவு என்ன
என்பது உனக்கு புரியும் ஆனால் நீ செயல்பட முடியாது அதுவும் எனக்கு தெரியும் என்றாலும் முடிந்த மட்டும் நல்லவனாய் இரு நல்லதைச் செய் நல்லதே நடக்கும்.

www.miskinsha.blogspot.com

தோலுக்கு மரணம் வந்தால் நப்ஸ் அம்மாரா மறைந்துவிடும் அப்போது நப்ஸ் ரூஹானி அதன் மகாமில் உதயமாகும். சதைக்கு மரணம் வந்தால் நப்ஸ் லவ்வாமா மறைந்து விடும் மூளைக்கு மரணம் வந்தால் நப்ஸ் முல்ஹிமா மறைந்து விடும் உடல் உறுப்புகளும் நரம்புகளும் வலி வேதனை கண்டால் மற்ற எல்லா நப்ஸிகளும் மறைந்துவிடும்

சதை இரத்தம் இரண்டும் மரணிக்கும் போது நப்ஸ் ரூஹு தாமரைக்காய் வழியாக வந்து குட்டி நாவுக்கும் கபாலத்திற்க்கும் இடையில் உள்ள வெள்ளை குழாய் வழியாக வந்து அறிவை அழிக்கும் அப்போது ஆறறிவும் விழுந்து விடும் கண்கள் வெள்ளைபூத்து பஞ்சடையும்

நரம்பு எலும்பு மூளை இவைகள் மரணிக்கும் போது நப்ஸ் ரூஹுல்லாவானது செவியை அடைந்து கசப்பாக்கும் அப்போது காது மரணித்துவிடும் நாக்கும் மரணித்துவிடும்

சுவாசத்தை சிலேர்பன சளி ஆடை படர்ந்து தொண்டை சங்காங்குழி கர் கர் என தொண்டையில் உள்ள சுவாச குழாயில் சளிபடர்ந்து சுவாசத்தை அடைக்கும் அப்போது மூச்சு திணறல் எற்ப்படும்

கை கால் அவயங்கள் ஊச லாட்டம் போடும் பின்னர் எல்லா உறுப்புகளும் அடங்கி ஒடுங்கி உடல் நீட்டி நிலை பெறும்

உலகம் செப்புத் தரையாகும் என்றது போல

மனிதன் உடல் இரத்தம் பூத்து உடல் சமமாகும் பின்னர்

சரீரம் ஆடாது அசையாது நிசப்தமாய் இருக்கும் ரூஹு ஒதுங்கும் தலம் நினைவாகும்

மரண அறிகுறி

தன் கண்ணால் தன் புருவங்களை கான முடியாதவர்களுக்கு 9 நாளில் மரணம் காது கேளாதவர்க்கு 7 நாளில் மரணம் வானிலுள்ள நட்சத்திரம் தெரியாதவர்க்கு 5 நாளில் மரணம் மூக்குநுனி தெரியாதவர்க்கு 3 நாளில் மரணம் இரு கண்களையும் அழுத்தினால் நீர் வராதவர்களுக்கு 10 நாளில் மரணம் வர வாய்ப்பு உள்ளதாக ஒரு ஞானி கூறியிருக்கிறார்கள்

உடலில் மஹ்ஸர் நிலை

சொர்க்கம் நம் சரீரத்தில் முண்டகக்கமலம் இருதயக் கமலம் உந்திக்கமலம் இந்த மூன்றிலும் பின்னிப்பிணைந்து நிறைந்து வீசுவலைப் போல் உச்சி முதல் உள்ளங்கால் வரை படர்ந்துள்ள ரூஹு பதிநான்கு அட்சரங்களை கொண்டது மேலும் இது ஒதுங்கும் இடம் நினைவாகும். இந்த ரூஹு எனும் ஆத்மாவை வாசி கலையால் பழுதாகாமல் வாசியை நேராக வாங்கினால் அது நூருல் அய்ன் எனும் கண்பாவையாகிய சொர்க்கத்தில் சேரும் அப்போது மனிதன் சொர்க்கத்தை அடைந்தான் என்றும்.

நரகம் இந்த வாசியை தவறுதலாகவே அல்லது தவறாகவோ இழுத்து வாங்கி அது பித்தமெனும் நரகத்தில் விழுந்தால் இவன் நரகம் அடைந்தான் எனப்படும் அதாவது வாசியோகம் அக்கர் மக்கர் பண்ணும் பட்சத்தில் அதுவிழும் தலமானது வைலுன் என்கிற அக்னி ஒடையே என அறியவும் ஆனதால்

வாசியோகம் அறிந்தவர்களைக்கொண்டே பழகவேண்டும் அப்படியில்லாமல் எனது நாசி எனது வாசியென்றும் ஏற்றி இறக்கினால் நீர் துவாரத்தில் இரத்தம் கசியும் அபாயம் உண்டாகிவிடும்.

இருகண்பாவையும் = சொர்க்கமாகும்

பித்தப்பை அக்னியே = நரகமாகும்

இவைகள் இரண்டிற்க்கும் நடுவானதே குரல்வலை ஆகும் இதுவே

சிராத்தல் முஸ்தகீம் பாலமாகும்

நப்ஸெ முத்மஇன்ஸா மீஜான் தராசு இதன் நடுமுன் குட்டி நாக்கு

இருசெவிகளும் கசப்பு, பாவக் கருமாகும்

இதுதான் மறைவான மஹஸர் நிலை எனப்படும் (ஆலம் கபீறா)

மனிதா

சுபர்க்கம் என்னிடத்தில் வழிபாடு உன்னிடத்தில் நாயகத்தனம் என்னிடத்தில் (பணி) அடிமைத்தனம் உன்னிடத்தில் கபூல் செய்வது என்னிடத்தில் து.ஆ.கேட்பது உன்னிடத்தில் பலாயை இறக்குவது என்னிடத்தில் ஸப்று செய்வது உன்னிடத்தில் ரிஸ்ஸக் என்னிடத்தில் சுக்று செய்வது உன்னிடத்தில் பிழைப்பொறுப்பது என்னிடத்தில் தவ்பா செய்வது உன்னிடத்தில் என்று அல்லாஹ் ஹதீது குத்ஸியில் கூறியிருக்கிறான்

www.miskinsha.blogspot.com

மூச்சு பயிற்ச்சி

அல்லாஹு சுப்ஹான ஹுவத ஆலா ஆகிறத்தை துன்யாவில் நின்றும் ஒரு பிரதியாக உண்டாக்கினான். அறிந்துக்கொள்: துனியா வாகிறது ஆகிறத்துக்கு தாயாக இருக்கும் நமது நபிநாயகம் அவர்கள் துனியா வானது ஆகிற மென்னும் பயிர்கள் விளையும் நிலமாக இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனதால் இஸ்லாமிய சகோதர சகோதரிகள் இதை நன்கு உணர்ந்து இதற்க்கு தேவையானதை காலம் கடத்தாமல் தொழுகையிலும் திக்ரிலும் அல்லாஹ்வின் நினைப்பிலும் ஒவ்வொறு மூச்சையும் செலவு செய்து துன்யாவில் இருக்கும் போதே வீன் பேச்சிலும் துற்ச்செயலிலும் ஆணவம் அலங்கார போன்றவற்றிலும் இல்லாது நற்ச்செயல் நற்ப்போதனையில் இருந்து பிறந்தப்பயனை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

உண்ணால் முடியும்

அறிந்துக்கொள் நரகம் இடையில் உண்டானது ஆனால் சொர்க்கமோ அவ்வலில் ஆனது

ஆண்டவன் நரகத்தை கஹ்ஹார் என்ற தன் இஸ்மைக் கொண்டுப் படைத்தான் மேலும் மன்னிப்புக்கு மூன்று பேர் வந்தது அது காபிர் கப்பார் கபூர் எனப்படும் வேதனைக்கு கஹர் கஹ்ஹார் என்று இரண்டு பேர் வந்தது ஆனதால் வேதனையை கிருபை முந்தி விட்டது. மாணிடனே நீ செய்ததற்க்கு மன்னிப்பும் இனி நற்செயல் படுவதற்க்கு ரஹ்மத்து பெறும் பாதையை தேடிக்கொள். ஜஹீம் எனும் நரகத்தை நகீம்மெனும் சொர்க மாளிகையாக்கிக் கொள் நெருப்பு நிலையானது அல்ல சீக்கிரமே சாம்பாலாகிவிடும்

சொர்க்கம் நமக்காகவே ஆனது அதை உனது வீடாக ஆக்கிக்கொள் ஆனதால் நீ இல்லரத்தில் இருந்துக்கொண்டே நல்லரமான துறவரத்தைச் செய்ய ஓர் தனிமையான அறையை தேர்ந்தெடுத்துக்கொள் அது வரட்சியும் குளிர்ச்சியும் இல்லாத இடமாய் இருக்கவேண்டும் எண்ணெய் கடுகு ஆகாது மெல்லிய உணவு ஒருவேளை அல்லது இருவேளை அரைவயறு உண்டு தூக்கத்தை சிறுக சிறுக குறைத்து வந்து நாளடைவில் பழகியதும் வாரம் ஒருமுறை அல்லது ஒருநாள் விட்டு ஒருநாள் சிறிது ஆகாரம் உண்ணப் பழகினால் பலன் ஏற்படும் வயறு நிறைய உண்டப்பின் சுவாசத்தை ஏற்றவோ இறக்கவோ அடக்கவோ செய்யாதே அப்படி செய்வதால் வாயுவு கண்ட இடங்களில் இருந்துக்கொண்டு கஸ்டத்தை உண்டாக்கும்.

வலது கால் பெரு விரலில் நின்று அசைந்திலகி ஏறி இடதுநாசியைப் பற்றி நிற்கும் நாடிக்கு இடகலையென்றும் இடதுகால் பெருவிரல்நின்று அசைந்திலகி ஏறி வலது நாசியைப் பற்றி நிற்கும் நாடிக்கு பிங்கலையென்றும் பெயராகும். நடுமுதுகெலும்பின் மத்தியில் அடியிடுப்பில் இருந்து சிரசு வரை இடகலை என்றும் நாடிகளுக்கு மத்தியில் ஒடுகின்ற கால்வாய்க்குத்தான் முதுந்தண்டு என்றும் சொல்லப்படும் என்றும் மேலும் சாதரண ஜனங்களுக்கு இடகலை பின்ங்கலை நாடிகள் திறக்கப்பட்டே இருக்கின்றன ஆனால் முதுகந்தண்டு நாடி மாத்திரம் மூடப்பட்டேயிருக்கும் இந்த முதுகந்தண்டு நாடியை திறப்பதே யோகிகளின் முதல் முயற்சியாகும்இதை யோக பயிற்சியால் தான் திறக்க முடியும்

பத்மாசனத்தில் இருந்து வலதுகை பெருவிரலால் வலதுநாசியை அடைத்துக்கொண்டு இடதுநாசியால் காற்றை உள்ளுக்கிழுத்து பின்னர் இரண்டு நாசியையும் மூடிக்கொண்டு இழுத்த காற்றை நாடியின் வழியாக செலுத்தி மூலா தாரத்தை முட்டச் செய்து அந்த இடத்திலேயே அக்காற்றை சிறிது நேரம் நிறுத்திய பின்னர்

வலதுகை சுண்டுவிரலால் இடது நாசியை மூடி வலது நாசியால் சுவாசத்தை சிறிது மேலெழுப்பி வெளியே விட வேண்டும் இதில் சுவாசத்தை இழுப்பதற்கும் நிறுத்துவதற்கும் சுவாசத்தனை விடுவதற்கும் கால கணக்குண்டு அதை உன் முர்ஸிடம் கேட்டுக்கொள் இப்படியாக 96 நாள் செய்து வந்தபின் மன சாந்தி உண்டாகி மூலாதாரத்தில் இருக்கும் குண்டலி சக்தியானது அசை தலுற்று மேலெழும்ப ஆரம்பித்துவிட்டால் மனித சுபாமே மாறிவிடும் அப்போது அவனுக்கு ஞான உதயமாகும் பின்பு அவன் அறிவை தேடி புத்தங்களை படிக்க தேவையில்லை அவன் மனதே அகண்ட ஞான மகா புத்தகமாகி விடும். ஆகையால் இதை முறைப்படி விடா முயற்சியால் பழகியப்பின் எல்லாம் தன் அனுபவத்தில் தெரியும்

ஆராதாரம் ஆறு

1.வது மூலாதாரம்	= முன்பின் துவரங்களின் நடுமேடு
2.வது சுவாதிஸ்தானம்	= ஆண் பெண் குறிமேடு
3.வது மணி பூரகம்	= தொப்புள் ஸ்தானம்
4.வது அனாகதம்	= இருதயம்
5.வது விசுத்தி	= தொண்டை குழி
6.வது ஆஞ்ஜை	= நடு நெற்றி எனப்படும்

www.miskinsha.blogspot.com

1 =வது மூலாதாரம் =இது சிகப்பு நிறம் கொண்டது தண்டுவடம் சிறுநீரகம் கழிவு மண்டலம் இவைகளை இயக்கும்.

2 =வது சுவாதிஸ்தானம் =இது ஆரஞ்ச் நிறம் கொண்டது இதுவே ஜனன இந்திரியத்தை இயக்கும்.

3 =வது மணிப்பூரகம் =இது மஞ்சள் நிறம் கொண்டது

இரைப்பை கருஈரல் பித்தப்பை கணையம் பற்குத்தி இவைகளை இயக்கும்.

4 =வது அனாகதம் இது பச்சை நிறம் கொண்டது தாமரைக்காய் ரத்த மண்டலம் இருகைகளையும் இயக்கும்.

5 =வது விசத்தி இது நீல நிறம் கொண்டது குரல் உறுப்புகளையும் நுரைஈரல் உணவுகுழாய் சிறுகுடல் பெருங்குடல் இவைகளை இயக்கும்.

6 =வது ஆஞ்சை இது கரு நீல நிறம் கொண்டது இடது கண் இருகாது மூக்கு இன்னும் நரம்பு மண்டலம் இவைகளை இயக்கும் சக்கரங்களாகும்

அறிந்துகொள் = அவ்வல் கலிமா இருபத்துநான்கு எழுத்துக்களும் இந்த ஆறு சக்கரங்களாய் சுற்றி சுழன்று உன்னை இயக்கிறது

இதைத்தான் தர்கலை பீரப்பா அவர்கள் அங்கத்துக்குள் கலிமாவை அறியாத குருவை ஆதரித்தோன் பெயர் குபிராம் அனல் நரகில் வீழ்வான் என்றார்கள்

ஆகையால் நீ இதை உன் முர்ஸிதிடம் கேட்டு விளங்கிக்கொள் இதில் அய்ம்பத்தியோர் அட்சரங்களையும் இருபத்துநான்கு எழுத்துக்களையும் கேட்டு இதன் கோணல் கணக்குகளையும் இதன் முவக்கல்களையும் விளங்கிக்கொள்.இதுவே ஞானமார்க்கத்திற்கு = ரூஹாக இருக்கும் அந்த ரூஹு பதிநான்கு அட்ரங்களாக இருக்கும்

குணங்குடியாரின் போதனை

இன்ஷானின் சரீரத்தில் மூலாதாரத்தில்தான் சர்வ சக்தியும் உண்டாகியிருக்கிறது. அந்த சக்தியைதான் நாம் கஷ்டப்பட்டு மூலாதாரத்திலிருந்து ஆஞ்ஜை அல்லது மூளைக்கு கொண்டு வர வேண்டும்

இன்ஷானில் உள்ள எல்லா சக்திகளிலும் உயர்ந்தது தெளிவு இந்த தெளிவானது இன்ஷானில் மூளையில் இருக்கிறது இதுயாரிடம் அதிகமாயிருக்கிறதோ அவன் ஞானியாகவும் தைரியசாலியாயும் இருப்பான்

ஆசனம் ஏன் செய்யவேண்டும் இது நமக்கு தேவையா சாதரணமாய் பிஸ்மிகாலில் இருந்து இபாத் செய்தால் போதாதா என கேட்பவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள் என்று உணர்ந்தே இதை எழுதுகிறேன் முதுகந்தண்டு எனும் முதுகெலும்பு நிமிர்ந்து செங்குத்தாக இருந்தால் புவிஈர்ப்பு தொன்னூறு டிகிரி பூமியில் இருந்து மூலாதாரம் வழியாக முதுகெலும்பில் ஏறி மூளை வரை பாயும் இப்படியில்லாமல் முதுகுவளைந்து இருந்தால் (மிருகங்களைபோல்) பூமியின் ஜீவ காந்த சக்தி சரிவரஏறாமல் தடைபடும். முதுகெலும்பு நிமிர்ந்தால் அறிவும் மனமும் ஒன்றுபடும். மேலும்

குணங்குடி மஸ்த்தான் ஸாஹிபின் யோகம்

தியானம் செய்கின்ற சூஃபி முகக்கண்களை மூடி மனதை அடக்கி ஒடிக்கி நினைவை நிறுத்தி ஒர்மையில் ஆனதும் ஆடிக்கொண்டிருக்கின்ற ஆராதார சக்கரங்கள் அசையாது அப்படியே அசந்து நிற்கும் அப்போது மூலாதாரத்தில் இருக்கும் நூரெ முஹம்மதி என்ற ஒளியானது பளீர் என மின்னி வெளியாகும் அந்த பிரம்ம ஒளிவை தவம் செய்யும் சூஃபி கலங்காத நினைவுடன் நெற்றியின் நடுத்தலத்தை கூர்ந்து பார்க்க ஆஞ்ஜை எனும் ஆகாச அம்ஸம் கொண்ட புருவநடு விழிப்படைந்து உடனே தலை உச்சி குழியில் நீண்டு நிற்கும் நுண்ணிய நரம்புகள் அக்காட்சிகளை(ஆண்ட னா) அனுமின் அலைகளை மாற்றி உடனே அது குட்டி நாக்கிற்கு அனுப்புகிறது. அங்கு வந்ததும் கபாத்தில் உள்ள சுழிமுனைக்கு தொடர்பு இருப்பதால் அந்த அனுமின் அலைகளை ஒளி ஒலி அலைகளாக மாற்றி கண்களுக்கும் காதுக்களுக்கும் குட்டி நாக்கு அனுப்பிகிறது. இவ்வாறு சூஃபி காட்சிகளையும் அறிவிப்பான அஸ்ரரிகளையும் கேட்க முடிகிறது இப்படியே சூஃபியானவர் சில ஆண்டிகள் தவத்தில் இருந்த பின்பு அவர் நினைப்பதும் அவர் சொல்வதும் அல்லாஹ்வினால் கபூலாக்கப்பட்டு கிருபை பெற்ற மனிதனாகி மஹானாகி புனிதம் அடைகிறார்கள் பல நூறு ஆண்டுகளாய் ஜீவசமாதியெனும் நிலை பெறுகிறார்கள் ஆனதால் நீயும் கபுறுக்கு தேவையானதை இன்றே தேடிக்கொள் காலங்கடத்தாதே.

www.miskinsha.blogspot.com

வஹீ இல்ஹாம்

மகாம்கள்

ஒரு இன்ஷான் ஆசனத்தில் இருந்து செய்யும் திக்ர் பிக்றுகளில் அவரின் கல்பு ஒளிக்கு தக்கப்படி ஒளி அலைகள் தோன்றும் அந்த ஒளி ஏறுவதும் பூமியில் இறங்குவதும் மீண்டும் உயர போவதும்(லதுன்னீ) எனும் இல்மு உண்டாகிறது எப்படி வந்தது எங்கே போனது என்று ஏதும் புரியாமல் இருந்தாலும் அதுரூஹின் மகாம் எனப்படும்.

மறைவான ஒளிவு நபிநாயகத்தின் சிபாத்துகளின் கஸ்பு இல்ஹாம் வஹீயின் தஜல்லியாத்து களாகிய இவைகள் ரஹ்மானின் குணங்கள் எனப்படும்

சாலிஹீன்கள் தாங்கள் இருக்கிற மகாம் இன்னதென்று தெறியாது வாசி ரூஹுடைய மகாமை சேர்ந்தால் நீ உன் விலாயத்துடைய ஷெய்ஹு இல்லாமல் அந்த மகாம் போகக் கூடாது போனால் அபாயம் நேரிடலாம்.

கல்புடைய மகாமிலும் மலக்கிய்யாவுடைய மகாமிலும் இவ்விதம் என்று சொல்ல முடியாத இன்பமும் ஆனந்தமும் மஸ்தும் முண்டாகி கல்குகளையும் துன்யாவின் இன்பங்களையும் விட்டு நீங்கி விடச் செய்யும்.

மறைவான ஆலங்களிலுள்ளவைகளோடும் அறுவாஹுடைய ஆலத்தை சேர்ந்தைவைகளோடும் உறவாடி வாழ்வதற்கே ஆசையுண்டாக்கி விடும் திக்ரில் இருக்கையில் பஞ்சேந்திரியங்களின் உணர்வு அற்று பரவமாகி புத்தி மட்டு இருக்கும்.

திக்ரில் நினைவும் சப்தமும் ஹாஸிலானால் கல்பில் சூடுண்டாகி அதன் ஆவிமூளைக்கேறி புத்தியையும் ரூஹெ ஹைறவானியையும் தடுத்து பேச்சுயில்லாமல் ஆக்கி மயங்கி விழுகிறதாய் இருக்கும் இந்த ஹாலில் அவனுக்கு மேகம்தோட்டம் கிணறு கடல் போல் உள்ளவைகள் தோன்றுவதும் உண்டு. அவைகள் அந்த ஆவியால் உண்டாவையென

அறிந்துக்கொள்.

சைத்தானுக்கு உனது பஞ்சேந்திரிய அறிவுரைகளை இல்லாமலாக்கி உனது புத்தியில் அறிவுகள் வரச் செய்ய

அவனுக்கு தத்துவமில்லை.

அய்யறிவு இருக்கையில் சைத்தான் வந்து உன்னை என் அடியானே நான் உனது ரப்பு என்று பேசி உன்னை வழி

கெடுப்பான் அப்போது நீ அஊதும் பிஸ்மியும் ஆயத் குர்ஸியும் ஸ்திக்பாறும் ஓதி அவனை விரட்ட வேண்டும்

அப்போது உனக்கு ரப்பானியாவின் கடாச்சமும் ரஹ்மத்தும் மகத்துவமும் ஞானமும் ஹிம்மத்தும் ஆகியவைகள் வெளியாகும்

கடாச்சம் வெளியானல் அல்லாஹ்வுடன் சகவாஸம் (ஆனசு உண்டாகும்) மகத்துவம் வெளியானால் கல்பில் வணக்கமான குணம் தரிப்படும். ஞானம் வெளியானால் அப்போது கல்பு சாந்தமைதியாகும். மலக்கியாவால் சோபனம் கூறப்படுதலும் எச்சரிக்கை உண்டாக்குதலும் உணர்ச்சியுண்டாக்குதலும் நேரும் சோபானம் கூறப்பட்டால் கல்பு மலர்ந்திருக்கும் எச்சரிக்கையுண்டானால் கல்பு சுருக்கப்பட்ட தாய் இருக்கும் உணர்ச்சியுண்டானால் கல்பு அறிவுடையதாய் இருக்கும் அப்போது நப்ஸானிய்யா மனஇச்சையையும் துற்குணங்களையும்

உண்டாக்கும்.

சைய்த்தாணிய்யா பாவ விருப்பம் எளிமை வெறுக்குதல் கெடுதி குபிர் ஆகிய தீமைகளை பிரிய முண்டாக்குவதும் செய்யும்.

வஹீ என்பது நபிமார்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்ட ஞான அருட்சியாய் இருக்கும் இதற்கு அல்லாஹ்வின் பேச்சு என்று சொல்லப்படும் இதில் மூன்று விதம் உள்ளது.

1 =வது நபிமார்களின் கல்புகளின் அல்லாஹ்வின் நின்று வரும்.

2 =வது ஒரு மறைவுக்கு பின்னால் இருந்து பேச்சாக வரும்(உதாரணம்) மூஷாநபிக்கு மரத்திலிருந்து பேச்சு வெளியானது போல்

3= வது மலாயிகத்துக்கள் வழியாகவும் வரும்(உதாரணம்) நாயகம்(ஸல்) அவர்களுக்கு குர்ஆனை கல்புலிருந்து வெளியாக்கப்பட்டது போல்.

இல்ஹாம் என்றால் அல்லாஹு த ஆலாவால் நப்ஸிக்கு நேரே உண்டாகிற அறிவுகள் கல்பு எந்த அளவுக்கு பரிசுத்தமாக இருக்குமோ அந்த மட்டுக்கு அல்லாஹ்வின் ஒளி பிரகாசிக்கும் நபுசு குல்லியிருந்து இல்ஹாம் உண்டாகி வரும் இல்ஹாம் ஒளிமார்களின் பதவியாய்யிருக்கும். புத்தியின் அவ்வலில்லிருந்து வஹீ வரும் வஹியாவது அன்பியாக்கள் ரசூல்மார்களின் ஆபரணமாய் இருக்கும்.

இல்முல்ல துன்னீ என்றால் நபிமார்களுக்கும் ஒளிமார்களுக்கும் உண்டாகும் அது அல்லாவினால் நேரே அவர்கள் கல்பில் உண்டாகும் அறிவு நாயகம்(ஸல்) அவர்களுடன் வஹீவுடைய வாசல் அடைப்பட்டு விட்டது. இல்ஹாம் என்பது நபுசுல் குல்லியில் நின்று தகுதியுடையோர்களுக்கு எக்காலமும் உண்டாகும். வஹீ ஆரம்பத்தில் கனவில் தான் வெளியாகும் அவ்விதம் வந்தால் அதற்கு ரூயா வென்று பெயர் சொல்லப்படும்.

www.miskinsha.blogspot.com

வஹீயை மலாயிகத்துக்கள் மனித ரூபமாய் வந்து வெளியாக்குவதும் உண்டு.மேலும் நபிமார்களுடைய கல்பில் சென்று தெரிவிக்கிறதும் உண்டு. வஹீ மார்க்க சட்டங்களையும் ஹளாலையும் ஹராமையும் வெளியாக்கும்.

இல்ஹாம் மார்க்கத்திலுள்ளவைகளும் விரோதிக்காத விளக்கங்களை தெரிவிக்கும். ஆனதால் குர்ஆணைக்கொண்டு ஹதீதுகளைக்கொண்டும் அமல் செய்து வருகையில் கல்பில் ஒளி பிரகாசித்து உண்டாகிற அறிவுகளால் நாம் நல்லதை கெட்டதை அறிந்து வாழவும் மேலே சொன்ன மறைவான போதனைகளால் அமல் செய்யவும் அல்லாஹ் அருள்செய்வானாக அறிவானவனே நான் சொல்லி வந்த வஹீ இல்ஹாம் இல்முல் லதுன்னீ ரூயா போன்ற விசயங்கள் உன்அறிவுக்கு விளங்காது போனால் அதைப்பற்றி அறிந்தவர்களிடம் கேட்டு அறிந்துக்கொள் அறியாதவரிடம் கேட்டால் உன்னை வழிகேட்டில் மாட்டி விட்டு விடுவார்கள் ஆகையால் அமைதியாய் இருந்து சிந்தித்து முடிவு செய்

சாலிஹீன் இபாதத் இரண்டுவகை

1 வது சாலிஹீன் என்பவர் நபுஸின் தீயக்குணங்களை அடக்கி கல்பின் அசுத்தங்களை நீக்கி திக்ரில் மனதை தரிப்படுத்தினால் ஆலம்முல்கிலும் ஆலம் மலகூத்திலும் தங்கள் அடிமை தனம் திட்டமாகும் அதைக்கொண்டு தங்கள் நபுசிருக்கிற தன்மையையும் பதவியையும் தன்குணங்களையும் அறிந்துக் கொள்வார்கள் நப்ஸ் நப்ஸானிய்யாவின் குணத்திலோ மிருகங்களின் குணத்திலோ அல்லது துஸ்ட்ட மிருங்களின் குணத்திலோ அல்லது கஸ்பியின் பதவியிலோ அல்லது ரூஹின் தன்மையிலோ மலாயிகத்துகளின் மறுத்தபாவிலோ அல்லது ரஹ்மானின் குணத்திலோ இருக்கின்றதென்று வெளியாகும்.

2வது ஆவள் உலோபம் பெருமை கோபம் ஆகிய தீய குணங்கள் இருந்தால் அந்த அந்த குணமுடைய மிருகங்கள் தோன்றும் அது எப்படி என்றால்

அதிக ஆவள் இருந்தால் பெருச்சாலி அல்லது எலும்பு இவைகள் தெரியும் X குரோதம் அதிகமிருந்தால் நட்டுவாகாலி அல்லது பாம்பு தெரியும் X பெருமை அதிகமிருந்தால் குதிரையில் ரூபம் வெளியாகும் X தீனில் அதிக பிரியமிருந்தால் ஆடு அல்லது மாடு போன்ற மிருகங்கள் வெளியாகும் X இச்சை அதிகமிருந்தால் கழுதை வெளியாகும் X தந்திரம் அதிகமிருந்தால் நரி போன்றுள்ள மிருகங்களை கண்டுக்கொள்வான்.

துஸ்ட்ட குணமிருந்தால் குணத்திற்க்கு தக்கப்படி துஸ்ட்டமிருகங்கள் தெரியும் ஷைத்தானிய்யா குணம் அதிகமிருந்தால் ஷைத்தான் பிசாசு தரிசனையாகும். தெளிவான நீரோடும் நதி கிரகங்கள் சூரியன் சந்திரன் வானம் ஆகியதை கண்டால் அது கல்பியாவின் மகாம் என்று அறித்துக்கொள் என்று அஸ்ராருல் ஆலம் என்ற நூலில் விபறிக்கப்பட்டுள்ளது ஆகையால் நன்மையானதை கண்டால் நல்ல குணம் என்றும் தீமையான தை கண்டால் தியகுணம் என்று அறிந்து தீமை குணத்தை அறுத்தெரிய செய்ய வேண்டும்.

குணங்குடி மஸ்தான் ஸாஹிப் போதனை

சரீ அத்=தரீக்கக்=ஹகீகத்=மஃரிபத் எனும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் பாதைகளின் விபரங்கள் யாதெனில்

1. சரீயத் எனும் சரியை பள்ளிவாசலில் சென்று தொழுகை வழிப்படுவது

2. தரீகத் எனும் கிரியை மந்திர உச்சாடனம் செய்து முவக்கள்களையும் சில ரூஹானிகளையும் சில சக்திகளையும் கைவரப் பெறுவதும்.

3. ஹகீகத் எனும் யோகம் சுவாசத்தை பலவழிகளிலும் நிறுத்தி யோக ஆசனம் பயிற்றி செய்து நரை திரை மூப்புயில்லாமல் நோய்யற்ற உடலெடுத்து உயர்ந்த சித்துக்களை கற்று பிறருக்கு உதவி செய்வதும்.

4. மஃரிபத் எனும் ஞானம் என்பது எதையும் தெளிவாக அறிவதும் பிறர் எதை சொன்னாலும் இது உண்மையா பொய்யா என முடிவு செய்வதும் துன்யாவையும் பேராசைகளையும் மனதில் அடக்குவதும் தன்னையறிவது அறிவால் ரூஹை கண்டு பேரின்பம் காண்பதும் ஆகும்.

தத்துவ ஞானி குணங்குடி மஸ்தான் ஷாஹிப் அவர்கள் யோகம் ஞானம் இரண்டையும் கைகொண்டு பல பல சித்து விளையாட்டு காட்டியிருக்கிறார்கள் அவைகள் நன்மையான

வழியிலே செல்ல வேண்டியதாய் இருப்பதால் நீ இதை பயில விரும்பினால் தகுதியான குருவிடத்தில் இருந்து பயின்றுவா இல்லையேல் நோய் உண்டாகிவிடும் உஷார்.

ரேசகம் அல்லது அகாரம் என்பது சுவாசத்தை வெளியே விடுவது என்றும்

பூரகம் அல்லது உகாரம் என்பது சுவாசத்தை உள்ளே இழுப்பது என்றும்

கும்பகம் அல்லது மகாரம் என்பது சுவாசத்தை உள்ளேயே நிறுத்துவது என்றும்

சித்தர்களும் தமிழ்ஞானிகளும் மறைபொருளாக கூறியிருக்கிறார்கள்

இதை நீ அறிந்து கொள்ளவே தெளிவுவாய் கூறியிருக்கிறேன்.

www.miskinsha.blogspot.com

பரிசுத்தமே பேரின்பம்

அறிவானவனே நீ அல்லாஹ்வின் வழியில் உயர் பதவியடைய ஆவல் கொண்டவனாய்யிருந்தால் முதலில் உன் சரீரத்தின் உள்பக்கமும் வெளிப்பக்கமும் பரிசுத்தம் செய்துக்கொள் ஏன் என்றால் சுத்தம் ஈமானின் ஒரு பகுதியாகும் என்பதால் சுத்தம் தான் முதல் காரியமாகும் உதாரணம் நாம் வசிக்கும் வீட்டின் சுவருக்குவர்ணம் அடிக்க வேண்டியிருந்தால் நாம் முதலில் அந்த சுவற்றில் உள்ள அழுக்கு பசை மேடு பள்ளங்களை சரிசெய்த பின்பே வர்ணம் பூசுவோம் அல்லவா அதுபோல் ஒரு பித்தளை தேக்ஸாவுக்கு ஈயம் பூச முதலில் அதை தேய்த்து கழுவி சுத்தம் செய்த பின்புதான் கலாய்பூசுகின்றோம் என்பது நீ அறிந்த அறிவுதான் அதைப்போலவே நீ உன் சரீரத்தில் உள்ள இரைப்பை மலப்பை சிறுநீர்பை இந்திரியப்பை உணவுகுழாய் போன்றவற்றை சுத்தம் செய்துக் கொண்டால் மலம் ஜலம் சளி உள்ள உள் உறுப்புகள் சுத்தமாகும். மீண்டும் அசுத்தம் ஆகாதபடி இருக்கவேண்டும் மேலும் வெளிசுத்தம் என்பது கைகளையும் வாயை சுத்தம் செய்தும் கண்ணை சுத்தம் செய்தும் நாசியையும் கால்களையும் செவியையும் பேணுதலாகவும், நினைவையும் பேச்சையும் பார்வையையும் கேள்வியையும் நஜீஸானதுவாரத்தை நாசியின் நுகர்தலையும் சுத்தம் செய்தப்பின்பு இவைகள் கூர்ந்து கவனித்து காற்க்க வேண்டும் இதைப்பற்றி மஸ்தான் ஷாஹிப் சொல்கிறார்கள்.

வாச சரீரத்தில் வாசியை பூட்டிட்டால்
நாசத்தை அண்ட வொட்டாதே என்று சாலிஹானவனே
நீ உண்பதற்க்கு என்றே படைக்கப்பட்டவனல்ல
நீ உறங்குவதற்க்கென்றே படைக்கப்பட்டவனல்ல
நீ அல்லாஹ்வை அறிந்து உணர்வதற்க்காகவே படைக்கப்பட்டவன் என்பதை மறந்து விடாதே இதோ அல்லாஹ் கூறுவதை கவனி

எவன் ஆகிரத்தை நாடினானோ அவன்
அதற்க்குரிய முயற்ச்சியை செய்வான் (அல்குர்ஆன் 17-19)

ஒருவனின் பாவச்சுமையை மற்றொருவன் சுமக்கமாட்டான் (அல்குர்ஆன் 53-38)

மன உருக்கத்தோடும் பக்தியோடும் சொல்லில் சப்தம்யின்றி காலையிலும் மாலையிலும் உம்முடைய மனதில் உமது நாயனை தியானியும் மறந்தவர்களில் நின்றுமாய் இருக்க வேண்டாம் (அல்குர்ஆன் 7 -205)

அல்லாஹ்யாரை வழிக்கேட்டில் விட்டுவிட நாடிவிட்டானோ அவர்களுக்கு வழிகாட்டும் வலிமார்களை காட்டித் தருவதில்லை (அல்குர்ஆன் 18-17)

பற்குத்தி எனும் மண் ஈரல்

எவன் வரம்புமீறி (மறுமையைப் புறக்கணித்து) இவ்வுலக வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டானோ, அவன் தங்குமிடம் நிச்சயமாக நரகம் தான் (அல்குர்ஆன் 80=37-38-39)

அறிவைபெற வந்தவனே

உன்னை உருவாக்கி உன்னை வழிநடத்த மலங்குகளையும் மூவக்கள்களையும் அமைத்து ஆயிரம் கோடிவிஞ்ஞானிகளாலும் செய்ய முடியாத உனது உடல் உருப்புகளை தந்து அவைகளை இயக்க வைத்து உன்னை எவ்விதம் வாழச் செய்கிறான் என்று கவனி.

பற்குத்தியெனும் மண் ஈரல்

இது வயற்றின் இடது பாகத்தில் உள்ளது இதற்க்கு முன்புறம் இரைப்பையும் இதன்பின்புறம் இடதுபக்க சிறுநீரகமும் உள்ளது இதன் நீளம். ஏழுசென்று மீட்டர் இருக்கும் நமது சரீரத்தில் நாள்பட்ட பழசாகிப்போன செயலிழந்து இரத்த அனுக்களையும் மற்றும் இரத்தத்தில் கலந்துள்ள நுண்கிருமிகளையும் இதுஇளுத்து விழுங்கி விடும். இரத்த சிவப்பணுக்கள் சராசரியாக அது நூற்றிருபது நாட்கள் மட்டுமே இருக்கும். பிறகு அது அழிந்து புது புது இரத்த சிவப்பணுக்கள் உருவாகும். அப்படி செயலிழந்த இரத்த அனுக்களை உடைத்து அழிப்பது இது தான் இது கருவில் நான்கு மாதமான சிசுவில் இந்த இரத்த சிவப்பணு இந்த மண் ஈரலில் தான் உருவாகின்றன. குழந்தை பிறந்ததும் பிறகு எலும்பின் உள்ளே உள்ள மஜ்ஜையில் உருவாகின்றன. மனிதனின் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்குவது இந்த மண்ஈரல் தான் இரத்த சிவப்பணுக்களை இது சேமித்து வைக்கும். தேவைப்படும் போது அதை இரத்தத்தில் கலக்கும். மேலும் மலேரியா காசநோய், டைஃபாய்டு போன்ற நோய்கள் வந்தால் இந்த பற்குத்தி எனும் மண்ஈரல் வீங்கி விடும் இதன் எடை சராசரி நூற்றைம்பது கிராம் முதல் இருநூறு கிராம் வரை இருக்கும்.

நூற்றைம்பது பவுண்ட் எடையுள்ள வாட்ட சாட்டமான மனிதனில் 2 X 2 சதுரம் அளவுக்கு வெள்ளையடிக்க வேண்டிய சுண்ணாம்பும் 3 டஜன் தீக்குச்சியில் இருக்கும் அளவு பாஸ்பரஸ் கெந்தகமும் 3 இரும்பு ஆணி செய்ய போதுமான அயன் இரும்பு சக்தியும் சில காலன் தண்ணீர் செய்ய வேண்டிய கார்பன் ஹைட்ரஜன் ஆக்ஸிஜன் போன்ற அற்புதமான உலோகம் மற்றும் கிரகஎல்லாம் நமது சரீரத்தில் உள்ளதை மனிதா அறிந்துக்கொள். அல்லாஹ்வுக்கு நன்றி செய் இத்தனையும் அல்லாஹ் எதற்க்காக படைத்தான் என்று சில துளிநேரம் முழுமனதாய் யோசி நல்லவனாய் இருப்பாய் நலம் பெறுவாய்.

www.miskinsha.blogspot.com

இது வயற்று குழியின் மேல் புரத்திலும் வலது புறத்திலும் ஓர்அளவு இடது புறம் சாய்ந்தார் போல் இருக்கும் இதன் கீழ்பரப்பு இரைப்பையும் இதன் மேல் பரப்பு உதர விதானத்தை ஒட்டியும் முன்புறம் சிறுகுடலையும் நோக்கியதாக அமைந்துள்ளது. நாம் சாப்பிட்ட உணவு ஜீரணிக்கும் பித்தநீரை இந்த கருஈரல்தான் சுரந்து தருகிறது அதுவும் ஒவ்வொரு நாளும் சராசரியாக ஆறுநூறு மில்லி முதல் ஒருலிட்டர் வரை பித்தநீரை சுரக்கிறது. நெஞ்சு பகுதியையும் வயற்று பகுதியையும் பிரிப்பது உதரவிதானமாகும்

இரத்தங்களிலும் மேலும் சில கழிவுகளில் உள்ள விஷம் போன்ற நச்சுபொருள்களை மாற்றி தீங்குயில்லாததாக செய்து காப்பாற்றுகிறது இதன் எடை சராசரி ஒருகிலோ முன்னூறு கிராம் இருக்கும் இதன் அடிப்பாகத்தில் தான் பித்தப்பை அமைந்துள்ளது இங்கு கருஈரல் பாதிக்கப்பட்டால் ஏற்படும் பிரச்சனைகள் ஏராளம் அதில் மிக முக்கியமான நோய் எது தெரியுமா மஞ்சள் காமாலைதான் இந்த கருஈரலில் பித்தநீர் உருவாவதால் மாறாக பித்த உப்புகளும் பித்த நிறமிகளும் இரத்தத்தில் அதிகமாகிவிடும் இந்த நிறமிகளால் உடலில் பல பாகங்கள் மஞ்சள் நிறம் படியும் இதுவே மஞ்சள் காமாலை எனப்படும். மனிதா சிந்தித்துப்பார்

நாம் உண்ணும் உணவு ஜீரணமாகாமல் பத்துநாள் இருந்தால் நாம் என்ன பாடுபடுவோம் எவ்வளவு கஸ்ட்டம் எவ்வளவு நஸ்ட்டம் புரிகிறதா நற்குணம் கொள் நன்றிச்செய்.

சுவாஸம்

நாம் உயிர்வாழ்வதற்க்கு காற்று மிகவும் கட்டாயமாக தேவையாகிறது காற்றில் உள்ள. ஆக்சிஜனை எடுத்துக்கொண்டு உருப்புகளுக்கு தருவதும் உருப்புகள் உண்டாக்குகின்ற. கரியமில வாயுவை வெளியே அனுப்புகிற வேலையைத்தான் சுவாஸம் என்று சொல்லப்படுகிறது. இதில் உள்சுவாஸம் வெளிசுவாஸம் என்பது தேகத்தில் உள்ள எல்லா திசுக்களும் இரத்தத்தில் இருந்து ஆக்சிஜன் எனும் பிராணவாயுவை பெற்றுக்கொண்டு கழிவாகிப்போன கார்பைடைஆக்சைட் இதை இரத்தில் அனுப்பி இரத்தத்தை சுத்தம் அடைய செய்கிறதை உள்சுவாஸம் என்றும் நாம் சுவாசித்து உள்ளே அனுப்புகின்ற பிராணவாயுவை நுரைஈரலில் உள்ள இரத்தமானது எடுத்துக்கொண்டு சுத்தமான இரத்தமாகி தருகிறது இதையே நாம் வெளி சுவாஸம் என்கிறோம்.

நமது மார்புக் கூட்டுக்குல் பஞ்சுபோல் ரோஸ் நிறத்தில் வலது பக்கம் ஒரு இலையும் இடதுபக்கம் ஒரு இலையுமாய் இருப்பதே நுரைஈரல் எனப்படும் இதன் நடுமையத்தில் அமிழ்த்திக்கொண்டு இருதயம் தலைகீழாய் தொங்கும்

நாம் வாழ்கின்ற பூமியில் மேல்பரப்பில் உலவுகின்ற காற்றின் அளவு அய்யாயிரம் மில்லியன் மில்லியன் டன்கள். இதில் ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 60 வயதானவர் இழுத்த காற்று அளவு 96 லட்சம் கனஅடிகளாகும். உள்யேறி வெளியாகும் சுவாச காற்றில் 76 சதவிகிதம் நைட்டிரஜனும் 17 சதவிகிதம் பிராணவாயுவும் 4 சதவிகிதம் கரியமில வாயுவும் உள்ளன.

வேகமாய் நாம் இழுத்து விடும் காற்றின் அளவு 5 லிட்டர்கள் என்றும் நுரைஈரல் காற்றுக்கொள்அளவு 6 லிட்டர் என்றும் மீதி 1 லிட்டர் இதில் இருப்பில் இருந்துக் கொண்டே இருக்கும் ஆனால் நாம் இழுத்துவிடும் போது உள்ளே போகும் காற்றின் அளவு அரை லிட்டர் தான். இந்த நுரைஈரலின் எடை சராசரி 1 கிலோ 13 கிராம் இருக்கும். இதை பாய் போல் விரித்தால் 156 சதுர கஜம் பரப்பளவு கொண்டதாக இருக்கும்.

நம்மிடம் உள்ள தீய பழக்கங்களாக புகைபிடித்தல், சாம்ராணிபுகை, சமையல் புகை, தொழிற்சாலைப்புகை போன்றவற்றால் இந்த உருப்பு கருப்பாய் நிறம்மாறிவிடும். மேலும் பொடி போதை பொருள் மது அருந்துவது இவற்றால் இதில் நோய் கிருமிகள் உண்டாகிவிடும். மார்பு புற்று நோய் வர வாய்ப்புகள் நாமே தேடிக்கொள்கிறவர்களாய் இருக்கின்றோம் சிறப்பானவனே சிந்தனைச் செய்.

நீ உலகில் வந்தது முதல் இன்று வரை மூச்சு மூச்சு என்று பேசுகிறாயே மூச்சை பற்றி நீ புறிந்துக் கொண்டாயா. அதன் நிலைகளையாவது அறிந்தாயா. ஒரு மனிதன் 24 மணி நேரத்திற்க்கு வாங்கிவடும் மூச்சு கணக்கு எவ்வளவு தெரியுமா 21600 இதில் ஒரு நிமிடத்திற்க்கு 15 தரம் நாம் சுவாசிக்கின்றோம். இதில் 85 வருடம் ஆயுள் உள்ளவன் வாங்கி விட்ட மூச்சுகள் 67,01,40,000 இந்த மூச்சுகள் எல்லாம் இருந்த இடம் எது தெரியுமா அது தான் தொப்பூள் ஸ்தானம் திங்கள், புதன், வெள்ளி இந்த நாட்களில் (அதிகாலையில்) சந்திரனாய் இடது நாசியிலும் சனி. ஞாயிறு, செவ்வாய் இந்த நாட்களில் சூரியனாய் வலது நாசியிலும் வியாழன் மட்டும் வளர்பிறையில் சந்திரக்கலையாகவும் தேய்பிறையில் சூரியக்களையாகவும் ஓடும் ஆனதால் நீ காற்றையும் சுவாசத்தையும் நுரைஈரலையும் அறிவது அவசியமாய் இருப்பதால் இவைகளை அறிந்துக்கொள்வது உனக்கு கடமையாக உள்ளது.

www.miskinsha.blogspot.com

பித்தமும் இருதயமும்

இதன் இருப்பிடம் முன் பாடத்தில் சொல்லியிருக்கிறேன் இதில் உள்ள திரவமான பித்தநீர் எனும் திரவம் மிக மிக கொடிய கசப்பு உள்ளதாக இருக்கும் இதன் எடை 85 கிராமாகும்.

பித்த நீரானது கொழுப்பு பொருள்களை செரிமான மாக்க மிகமிக தேவையுள்ளதாய் இருக்கிறது இது பித்த உப்புக்கள் கொலஸ்டிராலை வெளியேற்றும் வழியாக உள்ளது. அதிகமான கொலஸ்டிரால் உடலில் இருக்குமானால் அதுபோதுமான அளவில் பித்த உப்புக்களாக வெளியேற்றப்பட்டாமல். பித்தகற்கள் உருவாக வழி செய்து விடும். நாம் உன்னும் உணவு வாய்வாழியாக இரைப்பை குடல் இப்படி எங்கெல்லாம் போய் ஜீரணமாகிறதோ அங்கெல்லாம் பித்தம் சென்று ஜீரணம் உண்டாக்க உதவுகிறது.புரதம் கொழுப்பு மாவு பொருள் வைட்டமின் என்று பிரிக்கப்படுகிற இடத்தில் உள்ள அதிகாரம் பித்தப்பைக்கும் உண்டு.

இருதயம்

இது மார்பு கூட்டின் இடது பக்கமாகவே இதன் பெரும்பாகம் இடம் பெற்றிருக்கும் நுனி கிழாகவும் அடிபாகம் மேலாகவும் இருக்கும் இதன் எடை 300 கிராமாகும்.இருதயத்தில் முன்பரப்பு மார்பின் நடு எலும்பையும் விலாக் குருத்தெலும்புகளையும் நோக்கியுள்ளது. இதன்பின் பரப்பு உணவு குழலை நோக்கியும் இதன் கீழ்பரப்பு உதர விதாணத்தை நோக்கியும் அமைந்துள்ளது. இதன் மேல்புறத்தில் இரத்த குழாய் பின்னால் முதுகெலும்பு தொடரும் உள்ளன இது நுரைஈரல்களுக்கும் நடுவில் இதமான இடத்திலே பத்திரமாய் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நிமிடத்திற்க்கு 4 லிட்டர் இரத்தை இறைக்கிறது ஒரு நிமிடத்திற்க்கு 75 தடவை சுருங்கி விரிகிறது. பிறந்த குழந்தைக்கு 140 தடவை என்றும் வயதானவர்க்கு 90 முதல் 95 தடவையும் சுருங்கிவிரிகிறது.

இதன் துடிப்பு

மனிதனுக்கு 72 முறையும் = திமிங்கிலத்திற்க்கு 150 முறையும்
யாணைக்கு 25 முறையும் = குதிரைக்கு 40 முறையும்
பூனைக்கு 120 முறையும் = எலிக்கு 250 முறையும்
பிறந்த குழந்தைக்கு 140 முறையும் = இதயம் துடிப்பதாகவும் விஞ்ஞானம் கூறுகிறது.

மக்காம்களும் பாதையும்

கலிமாவில் லா என்றது மண்		கலிமாவில் இலாஹ என்றது தண்ணீர்	
மகாம்	நாஜூத்	மகாம்	மலக்கூத்
பாதை	சரீயத்து	பாதை	தரீக்கத்து
மலக்கு	ஜிப்ரயீல்	மலக்கு	மீக்காயீல்
புலன்	பேச்சு	புலன்	பார்வை
உள்உருப்பு	பற்குத்தி	உள்உருப்பு	கருஈரல்
தரீக்	சிஸ்திய்யா	தரீக்	காதிரிய்யா
இதுவாஜிபுல் உஜூத் ஜஸது		இது முக்கினுல் உஜூத் கல்பு	
திக்ர்	ஜல்லி	திக்ர்	கல்பி

கலிமாவில் இல்லா என்றது காற்று		கலிமாவில் அல்லா என்றது நெருப்பு	
மகாம்	ஜெபுரூத்	மகாம்	லா.ஹூத்
பாதை	ஹகீகத்து	பாதை	மஃரிபத்து
மலக்கு	இஸ்றாபீல்	மலக்கு	இஸ்றாயீல்
புலன்	சுவாசம்	புலன்	கேள்வி
உள்உருப்பு	நுரைஈரல்	உள்உருப்பு	பித்தம்
தரீக்	சுஹர் வர்திய்யா	தரீக்	தபகாத்திய்யா
இது மும்தனவுல் உஜூத் = தில்		இது ஆரிபுல் உஜூத் = ரூஹ்	
திக்ர்	ரூஹி	திக்ர்	சிர்ரி

கலிமாவில் ஹூ என்றது ஆகாயம்		
மகாம்	முஹப்பத்	திக்ரே = ஜல்லி
பாதை	ஹாஹூத்	திக்ரே = கல்பி
மலக்கு	அஜாஜில்	திக்ரே = ரூஹி
புலன்	நாட்டம்	திக்ரே = சிர்ரி
உள்உருப்பு	தலை மூளை	திக்ரே = கபீ
தரீக்	ரிஃபாயி பக்கீர்	இவைகளை தகுந்த முர்ஷிது
இது வாஜிபுல் உஜூத் = விளக்கம்		இடத்தில் பயிற்ச்சி பெறவும்
திக்ர்	கபீ	தவறாக செய்தால் பாவமும்
		மரணமும் நேரும்.

www.miskinsha.blogspot.com

தரீக்கா தொழுகை

தக்பீர் கட்டும் முன் செய்யும் நீயத் ஹல்க்கை விட்டு பிரிந்து ஹக்கு அளவில் சேருவதற்க்காக என்னுடைய அடிமைத்தன ஜடலத்தில் நாயகத்தனம் எனும் ரப்பு மறைந்திருக்கிற ரகஸியத்தை தெரிசிப்பதற்க்காக (அக்மல் உஜுது) மெஃராஜாகிய தொழுகை தொழப்போகிறேன் (என்று நீயத் செய்து)

தக்பீர் கட்டுமுன்

முஹம்மதாகிய அப்து அஹமதாகிய தொழுகையை அறிந்து தொழுகிறேன் அல்லாஹு அக்பர் என தக்பீர் கட்டவும்

ரகஸியத் தொழுகை

தனா ஓதி அல்ஹம்து ஓதி குல்ஹு வல்லாஹு ஓதி முதல் ரகாஅத்முடித்து 2ஆம் ரகா அத்தில் அல்ஹம்தும் வேறு சூராவும் ஓதியப்பின் அல்லாஹு அஹது X அல்லாஹு அவ்லா வென்று (நினைக்கவும்) ருகூவில் திக்ர் முடித்து விட்டு அல்லாஹு ஹைய்யுன் X அல்லாஹு முமீத் X அத்தஹிய்யாத் ஓதியப்பின் ஸலாம் கொடுக்கும்போது அல்லாஹு தாயிம் X அல்லாஹு காயிம் இப்படி நபில் 2 ராகஅத் தொழுக வேண்டும் தொழுகையில் வேறு நினைவு வராது தடுக்க

அஊது பில்லாஹி மினல் ஹின் ஸிய்யீ என ஓதிக் கொள்ளவும்

கேட்டது ஆ. கபூலாக இஸ்முல் அஃலம்

1. வ. அனத்தில் உஜுஹுலில் ஹைய்யுல் கைய்யூம் (300 தரம்)

2. அலிப் லா. மீம். அல்லாஹு லா இலாஹ இல்லா ஹுவல் ஹைய்யுல் கைய்யூம் (300 தரம்)

3. அல்லாஹு லா இலாஹ இல்லாஹுவல் ஹைய்யுல் கைய்யூம் (300 தரம்)

ஆதாரம் (தப்ஸீறுல் ஹமீத்)

தீங்கை தேடிக்கொள்ளாதே

உனக்கு யாதொரு நன்மை ஏற்பட்டால் (அது) அல்லாஹ்வினால் ஏற்பட்டது என்றும் உனக்கு யாதொரு தீங்கேற்பட்டால் (அது நீ இழைத்தகுற்றத்தின் காரணமாக) உன்னால் வந்தது என்றும் (நபியே கூறுவீராக) (அல்குர்ஆன் 4-79)

மறதியை உண்டாக்குபவைகள்

பேனை உயிருடன் பூமியில் விடுவது
எலி தின்டதை உண்பது
நிற்க்கும் நீரில் சிறுநீர் செய்வது
பிசினை திண்பது
புளிப்பான மாதுளம் பழம் திண்பது
கபரில் பலகையில் எழுதியிருப்பதை படிப்பது
இரு பெண்களுக்கு நடுவில் நடந்து செல்வது
தூக்கில் இறந்து தொங்குபவரை பார்பது
பச்சை மில்லி தளையை தின்னுவது
ரொட்டியை சூடாய் தின்னுவது
கருப்பு செருப்பு அணிவது (இவைகளால் மறதி உண்டாகும் சிறுவர்களுக்குப் பள்ளிப்பாடங்களோ பெரியவர்களுக்கு ஞானப்பாடங்களோ

மனிதில் பதிய

அல்லாஹும்மப் தஹ் அலைனா
ஹிக் மதக்க வன்ஷீர் அலைனா

ரஹ்மத்தக யாதல்ஜலாலி வல் இக்ராம் (என்று 11 தரம் ஓதி 7 நாள் நெஞ்ஜில் ஊதிக் கொள்ளவும் அல்லது தண்ணீர் ஊதிகுடிக்கவும்.

நஸீஹத்து

நின்றுக் கொண்டு நீர் தண்ணீர் குடிக்காதே அதனால் நீரழிவு நோய் வரும் உட்கார வழியில்லையேல் கால் பெருவிரல் இரண்டையும் ஆட்டியப்படியே நீர் குடித்தால் நீரழிவு நோய் வராமல் அல்லாஹ் பாதுகாப்பான். ஒரே மூச்சில் தண்ணீர் குடிக்காதே அதனால் நெஞ்சுவலி மூச்சு திணறல் போன்ற இதயக் கோளாறுகள் உருவாகலாம்.

நிர்வாணமாக = தூங்காதே = குளிக்காதே = உடலுறவு செய்யாதே மலக்குகள் சபிப்பார்கள், பரக்கத் குறையும்.

www.miskinsha.blogspot.com

குளித்தபின் நீர் குடிக்காதே, அதனால் நரம்புதளர்ச்சி வரும் உடலுறவு செய்தப்பின் நீர் குடிக்காதே அதனால் இடுப்பு முதுகுவலி வரும் 0 உண்ணும்போது அடிக்கடி நீர் குடிக்காதே அஜீரணம் உண்டாகும் 0 அன்னாந்து நீர் குடிக்காதே கருசரல் வலி உண்டாகும் 0 பழங்களை தின்றப்பின் உடனே நீர் குடிக்காதே மரணம் உண்டாகலாம் 0 கடுமையான வேலைக்குப்பின் நீர் குடிக்காதே மாரடைப்பு உண்டாகலாம் 0 அதிகாலையில் அதிகமாக நீர் குடிக்காதே முதுமை ஏற்படலாம் 0 சூடாக அல்லது குளிராக உள்ள நீர் குடிக்காதே தொண்டைவலி பல்வலி வரும் 0 பொரித்த இறச்சி தின்றவுடன் நீர் குடிக்காதே இரைப்பை வேதனை உண்டாகும்.

உணவு உண்டு சிறிது நேரம் ஆனப்பின் நீர் குடி எளிதில் ஜீரணமாகும் நெய்யும் திராட்சையும் சேர்த்து உண்ணாதே மீனையும் முட்டையையும் சேர்த்து உண்ணாதே இதனால் நரம்புதளர்ச்சி, குஸ்டம், பக்கவாதம் வர வாய்ப்புள்ளது. இரவில் நெய் உண்ணாதே பார்வை கோளாறு வரலாம் மீனையும் பாலையும் சேர்துண்ணாதே வெண்குஸ்ட்டம் வர நேரும்.

உணவு உண்டவுடன் மலம் ஜலம் போகாதே அதனால் குன்மவியாதி வரலாம் 0 உணவு உண்டப்பின் நூறு அடி நடந்தப்பின் படுக்கலாம் உறங்கலாம் 0 இரவில் குறைந்தது ஆறு மணி நேரமும் பகலில் உணவுக்குப்பின் ஒரு மணி நேரமும் உறங்குவது அல்லது படுத்திருப்பது மாநபி (ஸல்) அவர்களின் வழக்கம்.

உடலை மெலிய வைப்பது

வெறும் வயற்றில் தண்ணீர் குடிப்பதாலும்
புளிப்பு அதிகமாக உண்பதாலும்
உடல் உறவு அதிகம் செய்வதாலும்
அதிக கவலைப்படுவதாலும் உடலை இளைக்க வைக்கிறது.

உடலுக்கு வலு தருவது

இறச்சி உண்பதும்
நறுமணம் சுவாசிப்பதும்
உடல் சுத்தமாக இருப்பதும்
பருத்தி உடை அணிவதாலும் உடல் வலு பெறும்

மூத்தோர் சொல்

சிறுநீர் செய்யும் இடத்தில் ஒலுச்செய்ய வேண்டாம்
இரவில் கண்ணாடி பார்க்காதே
தொழும் போது வானத்தை பார்க்காதே
சூடான உணவுகளை உண்ணாதே
இருட்டில் உணவு உண்ணாதே
வெட்கப்பட்டு குறைவாக உண்ணாதே
மனைவி வயற்றை கையால் தடவாதே
தனியாக உணவு உண்ணாதே

உணவு உண்ணும்முன்

இருகைகளையும் கழுவிக்கொள்வதும்
உப்பை சிறு வாயில் வைப்பதும்
பிஸ்மி சொல்லி உண்ணுவதம்
வலது காலை ஊற்றி இடது காலில் அமர்வதும்
தட்டையின் ஓரமாக எடுத்து உண்ணுவதும்
வாயில் உள்ள உணவை சுவைத்து தாமதித்து உண்ணுவதும்
கீழே சிந்தியதை எடுத்து தின்பதும்
தட்டையை துப்புறவாய் செய்வதும்
விரல்களை சப்புவதும்
மூன்று முறை வீட்டுக்காரர் உபசரிப்பதும் (சுன்னத்தாக இருக்கிறது)

மக்ரூஹ் கானவைகள்

சாய்ந்து கொண்டு உண்ணுவது
ஒருகையை ஊன்றிக்கொண்டு உண்ணுவது
பேரிச்சை பழத்தை இரண்டாக தின்னுவது
அதன் விதையை துப்புவது (பேரிச்சம் மரம் மாமி முறையாகும்)
காறி காறி திண்பதும்
உண்ணும்போது மூக்கு சிந்துவதும்
நாக்கை சப்புகொட்டி உண்பதும்
அழுகிய பழங்களை உண்பதும்
கையை உதறி உதறி திண்பதும் (அறுவெறுப்பான செயல்களாகும்)

www.miskinshah.blogspot.com

உம்மி நபியின் உபதேசம்
ஹஜ்ரத் அலிக்கு சொன்னது

யா அலி உஸ்தாதுக்கும் அவருடைய பெண் ஜாதி பிள்ளைகளுக்கும் மிகுந்து கிருபை செய்யும் அதனால் இரு உலகிலும் பலனுடன் அல்லாஹ் தஆலாவின் தீதாரும் நபி (ஸல்) அவர்களுடை ஸபாஅத்தும் சுவர்க்க லோக நன்மைகளும் பலன்களும் இன்னும் நரகத்தை விட்டு விழகியும் போக அல்லாஹ் கிருபை செய்வான்

யா.அலி சனிக்கிழமை அன்று நகம் வெட்டுங்கள் அல்லது வியாழனில் வெட்டுங்கள்

யா.அலி செவ்வாய் அன்று முக சவரம் செய்து கொள்ளுங்கள் அன்று தான் முதன் முதலில் ஆதம் நபிக்கு ஜிபுரயீல் சவரம் செய்த நாளாகும்.

யா.அலி ஒன்றியாக எங்கும் போக வேண்டாம் துணைக்கு ஒருவரை அழைத்துபோகவும்

யா.அலி தாய் தகப்பனுடைய சம்மதியின் பேரில் எந்த நல்லவேலையையும் செய்யுங்கள் அவ்வேலையின் மீது அல்லா ரசூலுடைய சம்மதம் இருக்கிறது. இன்னும் தாய் தகப்பனின் கோபத்திலும் அல்லா ரசூலுடைய கோபமிருக்கிறது.

யா.அலி நன்மையாளிகளான நல்லவர்களுக்கு மட்டும் மதிப்பு செய்யுங்கள்

யா.அலி வாழைப்பழம் தின்னுங்கள் அதனால் அறிவு அதிகமாகி கோழை விழகும்

யா.அலி மாதம் இருமுறை மீசை கம்கட்டு போன்ற முடிகளை தரிக்கவேண்டும்

யா.அலி கிரைக்காய் தின்னவேண்டாம். இதனால் மனம் கருத்து இரக்கமில்லாது போகும்

யா.அலி மாதுளம்பழம் தின்னுங்கள் இது சொர்கத்து கனியாகயிருக்கும்.

யா.அலி மனைவியுடன் உடலுறவு செய்வதாய் இருந்தால் கீழே சொல்லும் இந்த நான்கையும் தவிர்க்கவும்

சர்க்கரை தின்றதினால் தரிக்கும்பிள்ளை அனியாய்காரனாவான் 0 கொத்தமல்லி இலை தின்ற இரவு தரிக்கும்பிள்ளை திருடனாவான் 0 புளிப்பு தின்ற இரவு தரிக்கும் பிள்ளைக்கு வாயில் நீர் ஒழுகும் 0 பால் இதை குடித்த இரவு தரிக்கும் பிள்ளை சோம்பேரியாய் இருப்பான்

ஆகாத நாள்

யா.அலி பிறை ஒன்று பதினைந்து பிறைகடைசி இதில் பிள்ளை தரிக்கக் கூடாது இந்த நாட்களில் பிள்ளை தரித்தால் வெறி பிடித்தவானாய் இருப்பான்

யா.அலி உடலுறவின்போது பேச வேண்டாம் அப்போது தரிக்கும் பிள்ளை

தாய் தகப்பனுக்கு வருத்தத்தை உண்டாக்குவான் யா.அலி பெண்ஜாதியின் வெட்கத்தலத்தை பார்க்க வேண்டாம் அதில்பெண் பிள்ளை தரித்தால் கெட்ட நடத்தையும் கண் பார்வை குறைவாயும் இருக்கும்

யா.அலி ரமலான் 27 ஆம் இரவு மனைவியுடன் சேர வேண்டாம்
இதில் தரிக்கும் பிள்ளை கடினமனதும் அதிக கோபமுமாய் இருப்பான்

யா.அலி ஷஅபான் 15.ஆம் இரவு மனைவியுடன் சேரவேண்டாம்
இதில் தரிக்கும் பிள்ளை பகிலாயும் உடல் குறைபாடு உள்ளவனாய் இருப்பான்

யா.அலி ரஜபு கடைசி 5 நாள் பெண்ஜாதியுடன் சேர வேண்டாம்
அந்தபிள்ளை பகிலனாகவும் பொய்சாட்சிகாரனாகவும் மார்கத்தை மதிக்காதவனாகவும் இருப்பான்

யா.அலிகுர்பானிகொடுக்கும்இரவில்பெண்ஜாதியுடன்சேரவேண்டாம்
அன்று தரிக்கும் பிள்ளை கொடுமையான திருடனாய் இருப்பான்

யா.அலி வெள்ளி அன்று பகலில் சேர வேண்டாம்
பிள்ளை குருடனாய் பாவியாய் இருப்பான்

யா.அலி ஞாயிறு இரவு வீடு கூட வேண்டாம்
அந்தப்பிள்ளைபுத்திகெட்டுஆலீம்களைமதிக்காமல்இருப்பான்

யா.அலி செவ்வாய் இரவு வீடு கூட வேண்டாம் அந்தப்பிள்ளை
கெட்ட வியாதிபிடித்தவனாய் இருப்பான்

ஆகுமான நாள்

யா.அலி திங்கள் இரவு அல்லது பகலில் பிள்ளை தரித்தால்
ஆலிமாகவும் அல்லாஹ்வை புகழ்பவனாகவும் இருப்பான்

யா.அலி வெள்ளி இரவு உடலுறவு செய்யுங்கள் கருதரித்தால்
ஆலிமாகவும் சஹாதத் மவுத்து கிடைத்தவனாகவும் இறப்பான் மேலும் சீதேவிதனமும் இரக்கமும் எளியவரின் கூட்டாளியாகவும் இருப்பான்

யா.அலி சனி இரவு மனைவியுடன் சேருங்கள் அதனால்
அழகாகவும் உண்மையானதாகவும் குணவாளனாக இருப்பான்

யா.அலி வியாழன் இரவு ஒன்று சேருங்கள்
அந்தப்பிள்ளை காஜீ கதீபு ஆலிம் தவ்லத் காரணாகும்.

யா.அலி பெண்ஜாதியுடன் மூன்றாம் ஜாமம் இரவுக்குப் பின் சேரும்
இதில் கருதரித்தால் பணக்காரனாகவும் சீதேவி தனமாகவும் பிறருக்கு உபகாரம் செய்யும் மனதுள்ளவனாகவும் இருப்பான்.

யா.அலி பெண்ஜாதியும் புருஸனும் உறவு செய்தப்பின்
அந்த ஈரத்தை ஒரே துணியால் இருவரும் துடைக்க வேண்டாம் அதனால் சண்டையுண்டாகி தலாக் செய்யும் பொல்லாங்குவரும்.

www.miskinsha.blogspot.com

நல்ல நாள்

திங்கள் அன்று வெளியூர் ஸபர் சென்றால் பரக்கத் பெற்றதாய் இருக்கும் வியாழனில் பெரியார்க்களை அரசர்களை காண வெற்றியான நாளாகும்

உடை உடுத்த

திங்கள் அன்று புத்தாடை அணிய இரணமும் பரக்கத்தும் உண்டாகும் புதன் அன்று புத்தாடை அணிய வாழ்வும் சரீர சுகமும் உண்டாகும் வெள்ளி அன்று புத்தாடை அணிய ஆயுள் நீண்டு வாழ்வு உண்டாகும்

செவ்வாய் அன்று தீயாலோ, நீராலோ திருட்டினாலோ அழிவு உண்டாகும் வியாழன் அன்று ரிஸ்ஸக் குறையும் புத்திதடுமாறும் சனி அன்று புத்தாடை அணிந்தால் கவலையும் கஸ்டமும் உண்டாகும் ஞாயிறு அன்று புத்தாடை அணிந்தால் பணகஸ்டம் மனகஸ்டம் உண்டாகும்

உடலுறவு கொண்டப்பின் குளிக்கும் முன் உணவு உண்ணவும் நீர் அறுந்தவும் நேர்ந்தால் ஒலு செய்தப்பின் உண்ண குடிக்க செய்யலாம். ஆனால் குசுலுடன் இருக்கும்போது சவரம் செய்வதும் நகம் வெட்டுவதும் தலைமுடி வெட்டுவதும் கூடாது

குளிக்க

ஞாயிறு அன்று தலை குளிக்காதே = உடல்வலு குறையும்

திங்களன்று தலை குளிக்க = வயதும் செல்வமும் பெருகும்

செவ்வாயில் தலைகுளிக்க = கவலையும் கஸ்டமும் உண்டாகும்

புதன் அன்று தலைகுளிக்க = சந்தோசமும் சவுக்கியம் கிடைக்கும்

வியாழன் அன்று தலைகுளிக்க = முஸீபத்தும், மிடுமையும் உண்டாகும்

வெள்ளி அன்று தலைகுளிக்க = இரணமும் பரக்கத்தும் பெருகும்

சனி அன்று தலைகுளிக்க = புத்தி குறையும் கவலை பிடிக்கும்

தடுக்கப்பட்ட நாளில் உடை உடுத்த வேண்டியிருந்தல்

அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தான் நிர்ரஜீம் லா.ஹவ்ல வலா. குவ்வத்த இல்லா பில்லாஹ்என்று 3 முறை ஓதி துணி அணியலாம்

விருச்சங்களில் வினோதம்

பூமியில் பல தொகுதிகளை சேர்ந்தார் போல் அமைத்து அதில் திராட்சை தோப்புகளையும் தானியப் பயிர் நிலங்களையும் பேரிச்சை மரங்களையும் ஆக்கினான். கிளைகள் உள்ளதும் கிளைகள் இல்லாததுமான மரங்களையும் உற்பத்தி செய்கிறான் இவையாவற்றிற்க்கும் ஒரேவித நீர்புகட்டப்பட்ட போதிலும் சிலவற்றை விட சிலவற்றை ரசனையில் நாம் மேன்மையாக்கி வைத்தோம். இதில் அறிவுடைய மக்களுக்கு நிச்சயமாக பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (அல்குர்ஆன் 13-4)

பூமியின் பசுமை

தன்பீஹுஂ : கடலாகிறது பெருகி பூமியின் நான்கில் மூன்றுப் பங்கை மூடிக்கொண்டிருக்கிறது. அம்மூன்று பங்கின் மீது விழுகிற சூரியனின் கிரணங்களின் சூட்டினால். அக்கடல் நீரில் நின்றும் ஆவி உண்டாகியதுடன் அக்கடலில் இருக்கின்ற ஜெந்துக்களுடைய ஆவியும் சேர்ந்து அக்னிமண்டலம் செல்ல நாடிய போது குளிர் தங்கிய காற்றானது அந்த ஆவியைக் கொண்டு எழுந்து பனி மண்டலத்தில் சென்றவுடன் அப்பனியின் குளிர்ச்சியாலும் காற்றுடைய வழக்கத்தாலும் அந்த ஆவி கட்டுண்டு புகையின் ரூபமாய் வெளியாகின்றதனால். அதனை ஆவர்த்தம் என்கிற நீர்மேகம் என்று சொல்லப்படுகிறது. அம்மேகத்தை அல்லாஹுதஆலா வின் உத்தரவு கொண்டு காற்றானது ஈழ்த்து அவன் நாடிய இடங்களில் மழைகளை பொழிய வைக்கும் அதனால் பூமிகுளிர்ந்தும் ஆறு அருவிகள் பெருகியும் பற்பல மரங்களும் புற்பூண்டுகளும் முளைத்து செழித்து கனிகளையும் மற்றயவஸ்த்துக்களையும் கொடுப்பதால் மனிதர்கள் புசித்து பிழைத்திருப்பார்கள்

வஜ அல்னா மினல்மாயி குல்லஷையின் கையில் என்கிற ஆயத்தில் நாம் ஆக்கிவைத்தோம். தண்ணீரில் நின்றும் வஸ்துகளைத்தையும் ஹயாத்தாய் இருக்கும் பொருட்டு (அல்குர்ஆன் 21=30)

அப்படிப்பட்ட நீரினால் பூமியின் கண்ணில் இருக்கிற வித்து விதைகளாகிறது. முளைத் தெழும்போதே பஞ்ச பூதங்களின் நிறங்களை வெளிப்படுத்துவது. பூமியின் மஞ்சள் (வெள்ளை) நிறத்தை தோலிலும்

தண்ணீர் சிகப்பு நிறத்தை பூவிலும்

நெருப்பின் கருப்பு நிறத்தை வைரத்திலும்

காற்றின் பச்சை நிறத்தை இலைகளிலும்

ஆகாய வெண்மை நிறத்தை விதைகளிலும் காட்டித் தருகிறது.

www.miskinsha.blogspot.com

இவைகளின் (சத்து) சுவைகளை

இலைப்பை வேரிலும் X துவர்ப்பை பட்டையிலும் X உப்பை சாரிலும்,

கசப்பை மரவைரத்திலும் X புளிப்பை இலைகளிலும் X இனிப்பை கனிகளிலும் கொண்டுள்ளது.

இவைகளுக்கு நோய்கள்

மண்ணால் மக்கி அழிதலும் X தண்ணீரால் உலுத்து, மாபூத்தலும்

நெருப்பால் காய்தலும் X காற்றால் வெடிப்பதும் X ஆகாயத்தால் சாய்வதும்

மண்ணின் செய்கை 5 அவைகள்

மரம் நார் சக்கை தோல் இலை என்றும் இவைகளுக்கு மு.வக்கல் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் என்றும்

தண்ணீரின் செய்கை 5 அவைகள்

நீர், சாறு, பால், பிசின், எண்ணெய் என்றும்

இவைகளுக்கு மு.வக்கல் மீக்காயீல் அலைஹிஸ் ஸலாம் என்றும்

நெருப்பின் செய்கை 5 அவைகள்

வாடல், காய்தல், சுருங்கல், வெடித்தல், வேகல் என்றும்

இவைகளுக்கு மு.வக்கல் இஸ்ராயீல் அலைஹிஸ் ஸலாம் என்றும்

காற்றின் செய்கை 5 அவைகள்

ஆடல், அலைதல், முறிதல், பறத்தல், இசைதல் என்றும்

இவைகளுக்கு மு.வக்கல் இஸ்றாபீல் அலைஹிஸ் ஸலாம் என்றும்

மரம் மரத்திலிருந்து புஸ்பம் புஸ்பத்திலிருந்து காய், காயிலிருந்தும் பழம் பழத்திலிருந்து விதை, விதையிலிருந்து மரம்

இவைகள் ஆகாயத்தின் செய்கைகள் என்றும் இவைகளை உற்பத்தியாக்கும் மு.வக்கல் அபுல் அர்வாஹ் எனப்படும்

மனிதா இரும்பையும் உருக்கும் தத்துவம் மரம், செடி, கொடிகளுக்கு இருப்பதால் தான் பல பொருட்கள் இரும்பினால் செய்யப்படுகிறது என்பதை அறிவானவனே அறிந்துக்கொள்.

இவைகளுக்கு 7 தத்துவங்கள்

1 வது ஜாதிபா இது வெளியே உள்ள உணவுகளை உள்ளே இழுப்பது இந்த தத்துவம் இல்லாத போனால் எவ்விதம் வெளியே உள்ள ஆகாரங்கள் பூச்சி கொல்லி மருந்துகள் உரம், நீர் இவைகள் எவ்விதம் உள்ளே செல்லும் என்றே அல்லாஹுத்த ஆலா இந்த ஜாதிபா வெனும் தத்துவத்தை உண்டுபண்ணியிருக்கிறான்.

2 வது மாஸிக்கா இது அப்படி மரத்தில் இவைகள் உள்சென்றப்பின் அவைகளை பற்றிப்பிடித்து கொள்ளாது போனால் மரத்தில் சத்துக்கள் சேராது வெளியிலேயே தங்கிவிடும் அவைகளை மரத்தில் சேர்ப்பது.

3 வது முஸவ்விறா நாம் விதைத்த விதை துளிரவும் மரம் கொப்பு கிளைகளாக பிரித்து ரூபமாக்கி வைப்பது

4 வது நாம் தெளித்த மருந்து. உரம் தண்ணீர் இவைகள் சத்துக்களை உறுஞ்சியதை ஜீரணமாக்கி வைப்பது ஹாலிமா

5 வது மு.மய்யினா இது ஜீரணமான வைகளை கொப்பு கிளைகளுக்கும் இலை பூ பிஞ்சு காய் கனிகளுக்கும் பிரித்து அனுப்புவது

6 வது தாபி.ஆ இது தேவையில்லாத இலை, பூ, பிஞ்சு, காய், கனி, பட்டை இவைகளை வெளியே தள்ளிவிடும் தத்துவம்

7 வது மு.வல்லிதா இது விதைத்த விதையுடன் கள்ளவிதை களான. கழை போன்ற வேறு வித புள் பூண்டுகளை முளைக்க வைப்பது

செடி கொடி மரங்களில் உள்ள ஒவ்வொரு இலையும் அதற்க்கு நுரைசுரல் போல் இருந்து காற்றை உருஞ்சி சிலபங்கை வெளியே தள்ளும்.

இலைகளில் உள்ள (குளோரோஃபில்) பச்சையத்தின் உதவியால் ஒளிச்சேர்க்கை மூலமாகவும் கார்பைன்டை ஆக்சைட் மற்றும் நீர் இவைகளைக்கொண்டு (ஸ்டார்ச்) உணவுகளை தயார் செய்து கொள்கின்றன.

www.miskinsha.blogspot.com

மண் தண்ணீர் காற்று நெருப்பு இவைகள் நூரெ முஹம்மதியாவின் மலுஹர்களாக இருக்கின்றன. இவைகளில் நூரின் ஹகீகத்தை அறியும் போது இவைகள் தாத்துல் முத்லக்காய் இருக்கின்றன இக்காரணத்தினால்

மண்ணுடைய அணுக்களின் பங்கு அதிகமாய் இருக்கிற கனியின் சுவை இலைப்பாயும் தண்ணீருடைய அணுக்களின் பங்கு அதிகமாய் இருக்கிற கனியின் சுவை இனிப்பாயும் காற்றுடைய அணுக்களின் பங்கு அதிகமாய் இருக்கிற கனியின் சுவை புளிப்பாயும் நெருப்புடைய அணுக்களின் பங்கு அதிகமாய் இருக்கிற கனியின் சுவை கசப்பாயும் அல்லாவினால் அமைந்திருக்கிறது.

இவைகளுக்கும் அறிவு உண்டு

தாத்தின் சத்தாகிய ஜீவகாந்த ஒளி எனும் அறிவு எல்லா வஸ்த்துவுக்கும் அல்லாஹ் உண்டாக்கியிருப்பதாக தெரிகிறது. ஒரு விதையை தலைகீழாக மண்ணில் நட்டால் முதலில் வேர்மேலும் முளைகீழுமாக கிளம்பி. பிறகு வேர்கீழும் முனை மேலுமாக மாறி விடுகிறதும்.

அவைகளுக்கு ஏதாவது தடைகள் நேரிடுமானால் அதைவிட்டு ஒதுங்கியே வளைந்து வளர்கிறதும். வேர் மண்ணுக்குள் செல்வதும் வெளிச்சத்தில் பாதைமாறி செல்வதும் பிறகு மண்ணுக்குள் மறைவதும். கிளைகளுக்கு ஏதேனும் ஒரு மரத்தாலோ அல்லது விடுகளாளோ தடுப்பு இருப்பதை அறிந்து திசைமாறி செல்வதும் அவைகள் பிறரின் மேல் கவனம் செலுத்தாமல் தங்கள் பாதையை தானே வகுத்துக் கொள்கிறதும்.

சில செடிகள் மழை பெய்யப்போகிற சமயத்தில் தங்கள் இலைகளைமூடி ஒடுங்கிக் கொள்கிறதும் சில பூண்டுகளை தொட்டாலோ அல்லது மனித வாடை பட்டாலோ சுருங்கி கொள்கிறதும். அல்லிப்பூ சந்திரன் உதயமாகும் போது மலர்கிறதும் தாமரைப்பூ சூரியன் உதயமாகும்போது இதழ்களை விரிப்பதும் மற்ற வேளைகளில் இதழ்களை கன்னிப்பெண்போல் மூடுகிறதும் சில மலர்கள் சந்திரன் சூரியன் இருக்கும் திசையைப்பார்த்தப்படி தங்கள் முகத்தை திருப்புகிறதும்.

சில புஸ்பங்கள் ஆண் மரத்தில் இருந்து வரும் வண்டுகளுக்கு மட்டும் இதழை விரித்து மதுவை உண்ண கொடுப்பதும் சில புஸ்பங்கள் எல்லா வித வண்டுகளுக்கும் இதழ்விரிப்பதும் சில பூண்டுகள் அதன் சமீபமாய் வரும் பிராணிகளை இழுத்து பிடித்து சுற்றி வளைத்து தமக்கு அவைகளை ஆகாரமாக்கிக்கொள்கிறதும். (இதற்க்கு வேட்டையாடும் கொடிகள் எனப்பெயர் சொல்லப்படும்).

மனிதன் வாடைப்பட்டால் பூமிக்குல் பதுங்கும் நிலம்புரண்டி பூண்டும் இரைச்சல் இடுகிற பூண்டும் இரவில் அக்கினியாய் பிரகாசிக்கும் மரங்களும் இருந்த இடத்தை விட்டு நகரும் ஒரு வித மரங்கள் எல்லாம் பால் இனப்பெருக்கத்தில் ஆண் பகுதி எனும் மகரந்தத்தாலும் பெண் பகுதி எனும் சூலகமும் சேர்ந்து ஈடுபடுவதால். பூ காய் கனி இவைகள் உண்டாகின்றன. இவைகளுக்கு அல்லாஹ் தன் பரிபூரண அற்புதங்களை தந்திருப்பதை மனிதா நீ அவசியம் அறிய வேண்டியே இருக்கிறது.

மண்ணின் மகிமைகள்

பூச்செடிகள் பூக்கொடிகள் பட்ரோஸ் ஓமவள்ளி போன்ற வைகளை வெட்டி எடுத்து வேறு இடத்தில் முளைக்க வைக்கும் மண் ஒரு இரும்பு துண்டையோ அல்லது புளியன் மர சிறு கிளையையோ வெட்டி எடுத்து நட்டாலோ போட்டாலோ முளைக்கச் செய்வதில்லை மண்ணின் அறிவோ மகா நுட்பமானதாக உள்ளது.

அரச மரம் ஒருமணி நேரத்திற்க்கு 2250 கிலோ அளவு கார்பைண்ட் ஆக்சைடை வாங்கி 1700 கிலோ ஆக்ஸிஜனை வெளியிடுகிறது. இந்த ஆக்ஸிஜன் ஹார்மோன்களை தூண்டும் நிலை (கருஉண்டாக) யில் இதை சுவாசிப்பவர்கள் பலன் பெறுவார்கள் (தாவர சங்க சாஸ்திரம்)

மனிதா மரம் இல்லைஎன்றால் மனிதன் நிலை என்ன என்று சிந்தித்துப்பார் மர பொருட்கள் இல்லை வண்டி பஸ்லாரி பிளேன் கப்பல் படகுகள் வீடு கதவு சன்னல் விறகு மருந்து மழை காற்று விளைச்சல் இப்படி ஏதும்யில்லாமல். ஓர் நிலைமையை நினைத்துப்பார்க்கவே கஸ்டமாக இருப்பதால் நாம் மரம் செடிகளுக்கும் இவைகளை உண்டாக்கித்தந்த அல்லாஹுத் தஆலாவுக்கும் நன்றி செய்ய கடமைபட்டுள்ளோம் என்பதை மனிதா மறந்துவிடாதே. (நீ நன்றிச் செய்ய பிறந்தவன்)

www.miskinsha.blogspot.com

ஹைவான்களின் தத்துவம்

மனிதர்களிலும் ஜீவராசிகளிலும் (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால்நடைகளிலும் இவ்வாறே பல வண்ணங்கள் இருக்கின்றன. நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களிலும் அவனுக்கு பயப்பபடுவதெல்லாம் (அறிவுடைய) கல்விமான்கள் தான் நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) மிகைத்தோனும் மிக்க மண்ணிப்பு உடையோனுமாக இருக்கிறான். (அல்குர்ஆன் 35-28)

அல்லாஹு தஆலாவின் தத்துவம் பிராணிகளில் எந்தவிதத்தில் சூழ்ந்துள்ளது என்று அறிவுடையவனே அறிந்துக்கொள்

5 சிருஸ்ட்டிகள் மாததீட்டு காண்கின்றன 1வது பெண்பிள்ளை, 2வது வல்லால், 3வது நாய், 4வது முள்ளம்பன்றி, 5வது முயல் இவைகளுக்காய் இருக்கும்.

முதன் முதலில் இன்ஷானுக்கு மையத்தை கபுர் தோண்டி அடக்கும் முறையையும் 0 ஆண் பெண் உறவு செய்யும்போது யாரும் யில்லாத மரைவான இடத்தில் இருக்கும் அறிவையும் அறிய வைத்தது காக்கை எனும் காகமாக இருக்கும் மேலும் காகம் தன் ஒரு கண்ணால் இருபக்கம் உள்ளதையும் அறியும்

பூனைக்கு இரவிலும் பகலிலும் கண் தெரியும் 0 பாம்பின் கண்களில் பார்க்கும் சக்தியும் கேட்கும் சக்தியும் உள்ளன. யாணையில்துதிக்கைய்யில் தருவதை அறியும் சக்தியும் ஆள் முதுகில் ஏறும் உணர்வை அறியும்படி சக்தியும் உள்ளன 0 பாம்பு முட்டை குஞ்சு பொறித்தால் அது சில குட்டிகளை திண்றுவிடும் தேள் குட்டிகளை பிரசவிக்கும் போது தாய் தேளின் வயறு வெடித்து குட்டிகள் வெளியாகும் ஆனால் தாய்தேள் செத்து விடும் மனிதா நீ பாம்பின் குணத்தில் இல்லாது தேளின் தியாகத்தை கடைபிடி

முயல் ஒரு வருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவும் இருக்கும் 0 செம்பருந்தும் ஒரு வருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவும் இருக்கும் 0 ஆண் ஆமைக்கு இரண்டு குறியும் பெண் ஆமைக்கு இரண்டு குறியும் இருக்கும் 0 ஆண் உடும்புக்கு இரண்டு ஆண் குறியும் பெண் உடும்புக்கு இரண்டு பெண் குறியும் இருக்கும்.

முதலைக்கு பின்துவாரம் இல்லை X வவ்வாலுக்கு பின்துவாரமில்லை ஆமைக்கு பற்க்கள் இல்லை X பாம்புக்கு காதுகளில்லை தவளைக்கு எலும்பில்லை X மீனுக்கு மலம் இல்லை குதிரைக்கு பற்குத்தியில்லை X ஒட்டகைக்கு பித்தில்லை தேரைக்கு பசியில்லை X குளிரில் குயில் கூவுவது இல்லை

மயிலும் எறும்பும் ஆண் பெண் சேர்க்கையில்லாத பிறவிகளாகும்.

முதலைக்கு பற்க்கள் 60 நரம்புகள் 60 புணர்வது 60 தரம் அது இடும் முட்டைகளும் 60 அதன் வயதும் 60 தான். முதலையிடும் முட்டை நிலத்தில் இருந்தால் சகங்கூர் மீனாகவும் நீரில் கிடந்தால் முதலையாக உருவாகும் சுபுஹானல்லாஹ்

ஆமை முட்டைகளை அடைக்காற்காது தான்யிட்ட முட்டைகளை அது மறந்துவிடும் சில நாள்களுக்குப்பின் மீண்டும் அதற்க்கு ஞாபகம் வரும் போது இட்ட முட்டைகளை போய் பார்க்கும் அந்தப்பார்வை நூருல் அய்ன் என்னும் மகா பிரகாசமாய் இருக்கும். அந்தப்பார்வையின் சூடு பட்டதும். முட்டைகள் வெடித்து குஞ்சுகள் வெளியேவரும்.

மீன்கள் தன் சினைகளை நீரில் பீச்சிவிடும் பின்னர் அந்தமீன் சினைகளின் முன்னால் நின்று சினைகளை திரும்பிப்பார்க்கும் அந்த பார்வையின் குதரத்தால் சினைகள் எல்லாம் மீன் குஞ்சுகளாக நீரில் நீந்தி விளையாடும் சுபுஹானல்லாஹ்

புலியின் தும்மலிலிருந்து பூனை படைக்கப்பட்டது ஜிமாவில் பெண்ணை அடக்கும் சக்தி இன்ஷானுக்கும் புறாவுக்கும் மட்டும் தரப்பட்டுள்ளது.

www.miskinsha.blogspot.com

ஒட்டகம் தன் தாய் அக்காள் தங்கைகளை புணராது முட்டையின் வெள்ளை கருவிலிருந்து குஞ்சு தனை படைக்கப்படுகிறது. மஞ்சள் கரு முட்டையுள் இருக்கும் குஞ்சுக்கு உணவாக்கப்படுகிறது. முட்டை ஒட்டில் 8 ஆயிரம் நுண் துளைகள் உள்ளன குஞ்சுசுவாசித்து வாழ

தீ முழுங்கி பட்சி தண்ணீரே குடிக்காது அதன் காதும் கேட்காது அதன் தலையில் மூளை இல்லாது படைக்கப்பட்டிருக்கிறது

உடும்புக்கு தலையில் மூளை வைத்து படைக்கப்படவில்லை அதற்க்கு பற்க்கள் விழுகாது அது தண்ணீரே குடிக்காது

யானை 400 வருடம் வரை ஜீவித்திருக்கும் அது 2 வருடம் சூழாய் இருக்கும்.

புலி 1000 வருடம் ஜீவித்திருக்கும்

குதிரை 90 வருடம் ஜீவித்திருக்கும்

உடும்பு 700 வருடம் ஜீவித்திருக்கும்

புறா 14 நாள் சூலாய் இருக்கும்

வெருகு பூணை 50 நாள் சூலாய் இருக்கும்

குரங்கு ஒரு சூலில் 12 குட்டிகள் போடும்

வெட்டுக்கிளிக்கு

குதிரையின் முகம் X யானையின் கண்கள்

காளை மாட்டின் கழுத்து X கடமானின் கொம்பு

புலியின் நெஞ்சு X நட்டுவா காலியின் வயறு

கழுகின் இறகு X ஒட்டகையின் தொடை

தீமுழுங்கி பட்சியின் கால்கள் X பாம்பின் வால்

இப்படி 10 விதமான படைப்புகளின் உருப்புகளை ஒன்றுபடுத்தி உண்டாகிய வெட்டுக்கிளி இதை தக்பீர் சொல்லி அறுத்து உண்ணுவது ஹலால் ஆக உள்ளது.

வினோத சக்திகள்

காற்று பூத அதிபாரகிய. இஸ்றாபீல் (அலை) அவர்களின் தாயளம் நாய் யிடமும் பட்டாம் பூச்சி யிடமும் தாளாரமாய் உள்ளது. அதாவது = மனிதனிடம். மோட்பசக்தி 5 மில்லியன் செல் தான் ஆனால் நாயிடமோ 220 மில்லியன் செல்கள் உள்ளன. இது இயற்கை சீற்றம் பேரழிவுகள் நிகழும் முன்பாக இந்த உயிரியல் நுட்பம் மூலம் நாய் அறிந்துக்கொண்டு சதா குறைத்துக் கொண்ட அங்கும் இங்குமாய் ஒடிகுறைத்துக்கொண்டே இருக்கும் முன்கணிப்பு ஆற்றலை அல்லாஹ் த ஆலா இதற்கு தந்துள்ளான்

பெண்பட்டாம் பூச்சியானது இணை சேரும் காலங்களில் அதன் உடலில் உள்ள வாசனை துகள்களில் ஒரு மில்லியனில் அதாவது 10 ஆயிரத்தில் ஒரு பங்கை மட்டும் அது காற்றில் வெளிப்படுத்தும் இதை சிலமைமயில்களுக்கு அப்பால் உள்ள ஆண் பட்டாம்பூச்சி மோட்பசக்தியால் அறிந்து பெண் பூச்சியினை தேடி வந்து சேரும் சுபுஹானல்லாஹ்

நெருப்புபூத தத்துவமாகிய காதின் கேள்விசக்தியால் வவ்வால்கள் 70,000 அதிர்வுகளை கேட்கும் திறன் பெற்றவையாய் உள்ளன. இது ஒரே நேரத்தில் 1000 கணக்கான ஓசைகளை கேட்கும் சக்திக் கொண்ட தாய் யிருந்தாலும் இந்த ஒலிகளுக்கு நடுவே தன் உறவு வவ்வாலின் அழைக்கும் ஒலிசப்தம் கேட்டு குழப்பம் அடையாமல் செயல்படும் மனிதனின் செவிப்புலன் 20,000 அதிர்வுகளைத்தான் தாங்கும் ஆனால் வவ்வாலோ 70,000 தாங்கும் திறனை அல்லாஹ் அதற்க்கு அளித்துள்ளான்

ஆகையால் மனிதா சிந்தித்துப்பார் ஒவ்வொரு படைப்பையும் எவ்வாறு எப்படி ஏன் இப்படி என்று ஒவ்வொரு நிமிஸமும் அவனை சிந்தித்து போற்றி புகழ்ந்து நல்லவனாய் செயல்படவே இந்த பயானை எழுதுகின்றேன்.

தண்ணீர் பூத புலனாகிய கண்பார்வையின் கூர்மை அமையப்பெற்ற பறவைகளானது வானில் பல மைல்களுக்கு அப்பால் பறந்துக்கொண்டே பூமியில் உள்ள தண்ணீர் தடாகங்களையும் பசிக்கு தேவையான இரையையும் இருப்பதை பார்வையின் நுண் நோக்கிமூலம் தெளிவாக கண்டு பிடிக்கிறது. இது மனிதனில் தெளிவாக அமையவில்லை.

www.miskinsha.blogspot.com

ஒரு வகையான பூனையில் புனுகு எனும் வாசனைப்பொருள் கிடைகின்றது

தேனீ: மலர்களில் உள்ள தேனை குடித்துவிட்டு ஒரு கூட்டை கட்டி அதில் தன் மலத்தையும் ஜலத்தை சேமிக்கின்றது அதுதான் தேன்

கவரிமான் : ஒருமுடி கீழே உதிர்த்துவிட்டால் அந்த மான் தன் உயிரை மடித்துக் கொள்கிறது.

பசுமாடு : பச்சைபுள்ளையும் மஞ்சள் வைக்கோலையும் உண்டு வெள்ளை நிறமான பால் தருகிறது.

ஒருவகையான மானில் கஸ்தூரி வாசனைப் பொருள் கிடைக்கிறது.

பசுமாட்டில் கோரோஜனை உண்டாகின்றது.

திமிங்கலத்தின் வாந்தி அம்பர் எனும் வாசனை பொருளாகிறது.

மாடப்புறா தன்ஜோடி புறா செத்து விட்டால் சிறிய சிறிய கற்களை விழுங்கி விட்டு உயர பறந்து போய் திடீர் என்று கீழே விழுந்து மரணம் அடைகின்றது

வானில் வட்டமிடும் பறவைகள் மூளையின் உதிப்பு சக்தியால் சந்திர சூரிய ஓட்டங்களை உணர்ந்து திசைகளையறிந்து கால நேரப்படி தான் போக வேண்டிய திசையையும் இடத்தையும் அறிவுகளால் அறிந்து செல்கின்றன இதைபோல்

ஆகாய பூதகுணம் புலனான மூளையின் புத்தி கூர்மை பெற்ற பாம்பு பார்வைக்கு எட்டாத தூரத்தில் இருக்கும் இரையை மூளையின் உதிப்பு ஆற்றலால் உணர்ந்து ஊர்ந்து சென்று செயல்படுகிறது என்பதை நாம் அறிகின்றபோது அல்லாஹ் த ஆலாவின் அதிசய ஆற்றலை நினைத்து போற்றத் தான் வேண்டும் போற்றாத நெஞ்சங்கள் ஏற்றம் பெற ஏகனே போதுமானவன்.

அல்லாஹ்வை அறியும் பாதைகள்
7.மர்த பாக்காள்
அல்லாஹ்வை கொண்டு ஈமான் கொண்டேன் என்றதின் விளக்கம்

அல்லாஹ்வை த ஆலாவை அறியும் பாதைகள் கணக்கில்லாதவைகளாக உள்ளன.என்றாலும் அதை 40 ஆக சுருக்கப்பட்டது. பின்னர் அதையும் மாற்றி 7 என்று சுருக்கப்பட்டதின் விபரங்கள்

1) அஹதியத்து = இதை = மர்த்த பத்துல் அமா என்றும்
மர்த்தபத்துல்லாத்து அய்ன் என்னும்
(குறிப்பில்லாத மறுத்தபா என்றும்)
கலப்பற்ற தாத் என்றும் சொல்லப்படும்

2) உஹதியத்து = இதை.ஹகீகத்து.முஹம்மதியா என்றும்
சிபாத்துடைய மர்த்தபா என்றும்
அஃயான் தாபித்தா = த.அய்யுன் அவ்வல் என்ற
முதல் குறிப்பென்றும் சொல்லப்படும்

3)வாஹிதியத்து = இதை.ஹகீகத்து இன்ஷான் ஆதம் என்றும்
அஃ; யான் காரிஜா என்றும்
த.அய்யுன் தானி என்கிற வெளிகண்ட
இரண்டாம் குறிப்பென்றும் சொல்லப்படும்

4) ஆலம் அர்வாஹ்.(அல்லது).ஆலம் ஜபுரூத் அல்லாஹ்வின்
ஜலாலியத்தான அஸ்மாவும் x ஜமாலியத்தான அஸ்மாவும்
ஒன்றோடென்று மோதிக் கோலப்படாமல் இருந்ததே அந்த
நூரேமுஹம்மதியாவும் அதிலடங்கிய எல்லா உயிர்களுமாய்
இருக்கும்

5) ஆலம் மிதால்.(அல்லது) ஆலம் மலக்கூத் இது
முன்னால் கோலமில்லாத அர்வாஹாய்யிருந்தது
கோலமாச்சுதே அதுவாக இருக்கும்

6) ஆலம் அஜிஸாம் (அல்லது) ஆலம் ஷஹாதா எனப்படும் இது
மண் தண்ணீர் காற்று நெருப்பு இன்நான்கு
அனாசிரைக்கொண்டு உண்டான கண்டிப்பு
அனைத்துமா இருக்கும்

www.miskinsha.blogspot.com

7) வது = ஆலமுல் இன்ஷான் (அல்லது) ஆலம் நாசூத் எனப்படும் இது முன் கூறிய மறுத்தபாக்களை அறிந்து மபு தபு என்னும் நாம் வந்த வரலாற்றையும் நாம் இந்த பூ உலகில்யிருந்து எங்கு செல்லப் போகிறோம். சொர்க்கமா நரகமா என நமக்குநாமே கேள்விகளையும் நாம் பிறந்தது முதல் இன்று வரை நன்மை செய்திருக்கின்றோமா அல்லது தீமை செய்திருக்கின்றோமா நன்மை கணக்கு எவ்வளவு நாம் செய்த தீமை கணக்கு எவ்வளவு என்று நீதிபதியாய் இருந்து மன சாட்சியை சீர்தூக்கி நாம் வாழவும் புள் பூண்டு பறவை மிருகம் போன்ற அனைத்தையும் படைத்து பராமறிக்கும் அல்லாஹு

தஆலாவை ஒரு நொடி நேரம் கூட மறந்து விடாமல் நன்றி செய்யும் பொருட்டு கூஹு எனும் மனக்கண் தெரிசனத்தில் இஸ்க்கில் மூழ்கி முத்தெடுக்கும் ஆரிபாக இருக்கும் இன்னும்

வானம் 7=பூமி 7=நட்சத்திரம் 7=நரகம் 7=கிழமைகள் 7=மனிதவகை 7=நப்ஸ் 7=திக்கர் 7=ஜகாத்.பொருள் 7=அல்ஹம்து ஆயத் 7= இவ்விதமாக கணக்கில் அடங்காத அல்லாஹ் உண்டாக்கியவைகளையும் அறியும் பாதைகான இந்த 7 மர்த்தபாக்களை அறிவது கடமை இதை அறிய விரும்புவோர்கள் கஸஸில் அன்பியா கிதாபை பார்க்கவும்

மலாயிகத்துக்களைக்கொண்டு ஈமான் கொண்டேன் என்றால் மட்டும் போதாது அவர்களை முழுமையாக அறிய வேண்டும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ரூஹுல்அமீன் என்பார்கள் அவர்களுக்கு 6 சிறகுகள் உண்டு இதில் ஒவ்வொரு சிறகளிலும் 100 சிறகுகள் உண்டு. இவருக்கு முதுகுபுறம் 4 சிறகுகள் உண்டு அதில் 2 சிறகுகள் பச்சை நிறமாக இருக்கும் அதை அவர்கள்லைத்துல் கதிர் இரவில் மட்டும் விரிப்பார்கள் மற்ற இரண்டு சிறகுகளை ஊரை நாசமாக்க மட்டும் விரிப்பார்கள்

எல்லாசிறகுகளுமே இரத்தின வகையால் ஆனது அவர்களின் இரண்டு புருவமும் வெளுத்திருக்கும் பற்களின்ஒளி மின்னலைப் போல் இருக்கும் சரீரம் வெண்மையாய் இருக்கும் சரீரம் பூரா ரோமங்கள் கருத்து இருக்கும். பனித்தண்ணீர் நிறமாயும் இருக்கும் இரண்டு கால்களும் ஒளியினால் சூழப்பட்டிருக்கும். இவர்கள் ஒரு சிறகால் அர்ஸ் குர்ஸ் லவ்ஹு .கலம்.பூமி.பாதாளம் சொர்க்கம் நரகம் போன்ற எல்லாவற்றையும் சிறகால் மூடி விடும் ஆற்றலை அல்லாஹ் இவர்களுக்கு தந்துள்ளான். இவர்கள் வாய் திறந்தால் அம்பர் கற்பூரம் வாடைகள் வீசும் இவர்கள் முகம் புறாவின் முகம் போல் இருக்கும். மேலும் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹி கொண்டு வரும் போது = தஹியத்துல் கல்பி என்ற அஸ்ஹாபியின் ரூபத்தில் தான் வருவார்கள். மேலும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நமது ரசூல் நாயகத் திடத்தில் இருபத்துநானகாயிரம் தரமும்

ஆதம் நபி பேரில் இருபத்தோரு தரமும்
இதுரீசு நபி பேரில் நான்கு தரமும்
நூஹு நபி பேரில் அய்ம்பது தரமும்
இபுறாஹீம் நபி பேரில் நாற்பத்தெட்டு தரமும்
யஃகூபு நபி பேரில் நானூறு தரமும்
ஈஸாநபிபேரில் பத்து தரமும் வந்து இறங்கினார்கள் என்றும் இன்ஷானின் மீதில் முன்கர். நகீர். இருகண்களிலும்

கிராமின் காத்திபீன் 0 சந்திர சூரிய சுவாஸத்திலும் ரிலுவான் நெஞ்சு பகுதியிலும் 0 மாலிக் (செவிடர்) வயற்று பகுதியிலும் கண்பார்வையை செலுத்துவார்கள் பராமரிப்பார்கள் என்றும் அறிவிப்பார்கள் : கஃபு (ரலீ) அவர்கள்

www.miskinsha.blogspot.com

ஹஜ்ரத்.மீக்காயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உருவம் அன்னப்பட்சியின் வடிவாகவும் சரீரம் பச்சை நிறமாயும் 2.கால்களும் பெரிய தலையும் பெரிய முகமும் 2 பெரிய இறக்கையும் கொண்டவர்கள் அந்த பெரிய இறக்கைக்குள் 80 ஆயிரம் சிறிய சிறகுகளில் கோடான கோடி ரோமங்களும் ஒவ்வொரு ரோமத்தின் நடுவிலும் 40 ஆயிரம் முகங்களும் ஒவ்வொரு முகத்திலும் 40 ஆயிரம் வாய்களும் ஒவ்வொரு வாயிலும் 40 ஆயிரம் நாவுகளும் ஒவ்வொரு நாவிலும் 40 ஆயரம் பாஷைகள் பேசுபவர்களாய் அல்லாஹு¬வை தஸ்பீஹ் செய்பவர்களாயும் இருப்பார்கள்.

ஹற்ரத் இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 4 சிறகுகள் உண்டு. 1=வது சிறகுகளால் மஸ்ரிக்கை (கிழ்திசையையும்) 2 =வது சிறகுளால் மஹ்ரிப் எனும் மேல்திசையையும் 3 =வது சிறகுகால் வானத்தையும் பூமியையும் 4 =வது சிறகால் அல்லாஹ்வுடைய வல்லமை குறைந்தவர்களை மூடி விடுவாரார்கள் அவர்களின் இரண்டு காலும் 7வது பூமிக்கு கீழாக இருக்கும் அவர்களின் தலையோ அர்ஸ்வரை நீண்டிருக்கும். அவர்களுடைய இரு கண்களுக்கு நடுவே இரத்தினத் தால் ஆன ஒருபலகை உண்டாகியிருக்கி அல்லாஹு¬ சுப்ஹான ஹு¬வத ஆலா தன்னுடைய அடியார்களின் ஒரு காரியம் புதுப்பிக்கிறதற்க்குநாடினால் அவனுடைய நாட்டதைக் கொண்டு பலகையில் எழுதும்படி எழுது கோலான கலத்திற்க்கு கட்டளையிட்ட உடன் அது எழுதி முடிக்கும் இதுதான் தலை எழுத்தை(விதியை) மாற்றும் விதம்எனப்படும்.

ஹஜ்ரத் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உருவம் தலை குதிரை வடிவாகவும் 2 கால்களும் 7வது பூமிக்கு கீழாகவும் தலை மேல் வானத்திலும் முகம் லவ்ஹு¬ பலகைக்கு நேராகவும் இவர்வீடு முன் வானமாயும் இருக்கும் அவர்கள் உடல் கருப்பு நிறமாகவும் இருப்பார்கள் சிலநேரம் அரூபியாகவும் இருப்பார்.63 கண்களும் 360 நாக்குகளும் 360 கைகளும் 360 கால்களும் 4 சிறகுகளும் இருக்கும் அதில் 1வது சிறகு மஸ்ரிக்கிலும் 2வது மக்ரிபிலும் 3வது சிறகு திரைகளின் கடைசியிலும் 4வது சிறகு பூமியின் கடைசியாக இருக்கும் எல்லா அடியார்களும் அவரின் இருகண்களுக்கு நடுவில் இருப்பார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் இஸ்ராயீல் அவர்களுக்கு நான்கு குதிரைமுகம் இருக்கும் என்றும் இடது கையால் கடல் பாதாளம் உலகம். இவைகளை விளக்கைப்போல் தூக்கி பிடித்திருப்பார்கள் என்றும்(மஃரிபத்துமாலையில் சொல்லப்பட்டுள்ளது)

இன்னா அன்ஸல்னா சூராவை தக்பீர் நிலையில் நின்று தொழுகையில் ஓதினால் அது ஜிப்ரயீல் அவர்களின் முஹப்பத்தை உண்டாக்கும்.

ருகூவு செய்தல் முன்கர் நகீரின் முஹப்பத்தையும் 0 இருப்பில் இருந்து அத்தஹிய்யாத்து ஓதுவது கிராமின் காத்திபீனின் முஹப்பத்தையும் 0 தொழுகையின் நேரங்களை எதிர்பார்த்து இருப்பது இஸ்ராயீலின் முஹப்பத்தையும் 0 ஒலுச் செய்த நீரானது மீக்காயிலின் முஹப்பத்தையும் 0 பாங்கு சப்தம் கேட்டதும் வாய்மூடிபதில்சொல்வது இஸ்ராயீலின் முஹப்பத்தையும் 0 தன் குடும்ப ஜனங்களுக்காக செய்யும் தர்மமானது. நரகத்தின் அதிபரான செவிட்டு மலக்கான மாலிக் அவர்களின் முஹப்பத்தையும் உண்டாக்கும் என்று மஃரிபத்துமாலையில் சொல்லப்பட்டிருக்கிறது.

உனக்குல் உள்ள ஒளிவுகள்

ஷரீஅத்தில் குர்ஆனின் ஹாபிஸீக்கு எந்தப் பெருமை இருக்கின்றதோ அதுபோல் தரீகத்தில் இர்பானுடைய ஹாபிஸீக்கு எழுபதுபங்கு அதிக உயர்வுகள் உள்ளன திருக்குர்ஆனில் இருபத்தி எட்டு தஹஜ்ஜி எழுத்துக்கள் இருக்கின்றன. அதுபோல் மனிதனின் உஜூதிலும் இருபத்திஎட்டு தஹஜ்ஜி எழுத்துக்கள் இருக்கின்றன. எவ்வாறு திருக்குர்ஆனில் ஏழுமன்ஜில்கள் உள்ளதோஅதுபோல் மனிதனின் உஜூதிலும் ஏழுமன்ஜில்களும் மகாம்களும் இருக்கின்றன எது வெல்லாம் குர்ஆனில் இருக்கின்றதோ அவை யெல்லாம் மனிதனிலும் இருக்கின்றன. (திருக்குர்ஆனின்) ஒவ்வொரு ஏழுத்திற்கும் இறைவன் ஒரு முவக்கலை படைத்திருக்கின்றான்.இன்னும் ஒவ்வொரு எழுத்தும் இந்த முவக்கலுக்கு கட்டுப்பட்டுள்ளது இதன் விபறம் கீழ்கண்ட விதமாக இருக்கிறது.

அலிஃப் என்ற எழுத்தின் வடிவம் நாக்கில் இருந்துக்கொண்டு தன்னுடைய வடிவத்தை மாற்றி இன்னொரு எழுத்தை உருவாக்குகிறது.அலிஃப் தாத்தில்யிருந்து அலிஃப் சிபாத் உருவாகின்ற ஹிக்மத் உள்ளது இதன் மு.வக்கல் ஹஜ்ரத் இஸ்ராபீல் எனும் காற்றின் அதிபராயிருக்கும்.

www.miskinsha.blogspot.com

பே எனும் இரண்டாம் எழுத்து இதன் இருப்பிடம் விரையின் பக்கத்தில் அமைந்துள்ளது இதன் முவக்கல் ஹஜ்ரத் ஜிப்ரயீலாக இருக்கும்

தே எனும் மூன்றாம் எழுத்து இதன் இருப்பிடம் விரையின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது இதன் முவக்கல் ஹஜ்ரத் இஸ்ராயீலாக இருக்கும்.

சே எனும் நான்காம் எழுத்து இதன் இருப்பிடம் இருவிரைகளுக்கு மேலே அமைந்துள்ள இது இரண்டாம் எழுத்தின் மஃரிபத்தாகும் ஒரு ரகசியத்தை மற்றொரு ரகஸியத்தில் வைத்தால் அது பரவசத்தை தருகிறது. இதன் முவக்கல்
மீக்காயீலாக இருக்கும்.

ஜீம் எனும் ஐந்தாம் எழுத்து இடுப்பில் அமைந்துள்ளது. இது ஜமால் ஜலாலின் தலைவராக உள்ள இதன் முவக்கல்
குல் காயிலாக இருக்கும்.

ஹே எனும் ஆறாம் எழுத்து வலது தோளில் இடம்பெற்றுள்ளது இதன் முவக்கலாக ஹஜ்ரத் தின் காஃபீல் பொருப்பேற்றுள்ளார்கள்

ஃகா எனும் ஏழாம் எழுத்து இடது தோளில் உள்ளது இதன் அதிபராக முவக்கல் மெஹ்காயீல் நியமிக்கப்பட்டுள்ளார்கள்

தால் எனும் எட்டாம் எழுத்து மேல் உதட்டில் இதன் முவக்கல் தர்தாயீல்

ஜால் எனும் ஒன்பதாம் எழுத்து கீழ் உதட்டில் இதன் முவக்கல் இஹ்ராயீல் ஆவார்கள்

ரே எனும் பத்தாம் எழுத்து மேல் இமையில் இதன் அதிபர் சர்ஃபாயிலாகும்

ஸே எனும் பதினொன்றாம் எழுத்து இடது இமையில் இதற்க்கு அம்வாகிலாகும்.

சீன் எனும் பனிரெண்டாம் எழுத்து வலது காதில் இதன் அரசர் ஹிஜ்ராயீலாகும்

ஷீன் எனும் பதிமூன்றாம் எழுத்து இடது காதில் இதன் முவக்கல் ஹம்ராயீல்

சுவாத் பதிநான்காம் எழுத்து வலது கை விரல்பகுதியில் முவக்கல் அஃஜமாயீல்

ளுவாத் எனும் பதினைந்தாம் எழுத்து இடது கைவிரல் பகுதியில் அதாகாயீல்

தோவ் எனும் பதினாறாம் எழுத்து வலது முழுங்காலில் இதன் முவக்கல் இஸ்மாயீல்

லோய் எனும் பதினேழாம் எழுத்து இடது முழுங்காலில் முவக்கல் லர்ஜாயீலாகும்.

அய்ன் எனும் பதினெட்டாம் எழுத்து வலது கண்ணில் இதன் முவக்கல் பாயீலாகும்.

ஙைன் எனும் பத்தொன்பதாம் எழுத்து இடது கண்ணில் இதன் முவக்கல் லோகாயீலாகும்

ப்பே எனும் இருபதாம் எழுத்து கழுத்தில் உள்ளது இதன் முவக்கல் சர்ஹமாகில்

காஃப் எனும் இருபத்தொன்றாம் எழுத்து உச்சந்தலையில் இதன் முவக்கல் இத்ராயீலாகும்

காப் எனும் இருபத்திரெண்டாம் எழுத்து தலையைசுற்றி முவக்கல் ஜர்யாயீலாகும்.

லாம் எனும் இருபத்தி மூன்றாம் எழுத்து நெற்றியில் இதன் முவக்கல் தாதாயீல்

மீம் எனும் இருபத்துநான்காம் எழுத்து (ஹல்கூமில்) இதன் முவக்கல் கார்வாயீலாகும்

நூன் எனும் இருபத்தைந்தாம் எழுத்து நடுநெஞ்ஜில் உள்ளது முவக்கல் மல்வாயீலாகும்

வாவ் எனும் இருபத்தாறாம் எழுத்து தொப்புளில் உள்ளது முவக்கல் ரஃமாயீலாகும்

ஹே எனும் இருபத்தேழாம் எழுத்து தாமரைக்காயில் முவக்கல் தர்தயாலாகும்

யா எனும் இருபத்தெட்டாம் எழுத்து இருபாதத்திலும் முவக்கல் சர்அகியதயரிலாகும்.

அறிவானவனே = எதையும் அறிந்தேசொல் அறிந்தே செல் அதுதான் அறிவானவர்களுக்கு அழகு தரும்.

நீ உன்னை அறியாமல்=எவ்வளவு குட்டிக்கரனம் போட்டாலும் நன்மையையடைய முடியாது=உண்மையை அறிந்துக்கொள்

www.miskinsha.blogspot.com

அஸ்ஸலாமு அலைக்கும்

அன்பிற்கினிய முரீதீன்களே அல்லாஹு சுபுஹான ஹுவதஆலாவின் அற்புதங்களை முழுவதுமாக எழுதிமுடிக்க நம்மால் இயலாது போனாலும் நம்சக்திக்கு முடிந்தவரை இல்மு அறிவுகளை பிறர் அறியவைப்பது கடமையாகக்கருதியே பெரும் முயற்ச்சி எடுத்து இந்நூலை தொகுத்தேன் ஏன் என்றால் அல்லாஹ் மனிதனில் உண்டாக்கி இருக்கிற மர்மமான மகத்துவங்களை மனிதன் உணரவேண்டும் என்பதற்க்காக சில உண்மைகளை இந்த கிதாபு முடியும் போதும் சொல்ல வேண்டும் என்றே இங்கே இதை கூறுகிறேன்.

சரீரங்களுக்கு பிதாவான அபுல் பஷர் எனும் ஆதநபிமக்கள் சரீரமும் அருவாஹுகளுக்கு பிதாவான அபுர் ரூஹ் எனும் நாயகம் (ஸல்) அவர்களின் ரூஹும் இணைந்த நமது சரீரத்தில் நரம்பு 360 எலும்பு 770 உறுப்பு 360 இவைகளில் மூளையை எலும்பும் எலும்பைச்சதையும் சதையை ரோமமும் உரோமத்தை கொழுப்பும் கொழுப்பை தோலும்

ஒன்றுக்கொன்று பிடித்தும் 0 ஆண்களுக்கு விலா எலும்பு இருபத்து நான்கும் 0 பெண் பிள்ளைகளுக்கு விலா எலும்பு இருபத்தைந்தாகவும் 0 குடல் ஒன்பது முழம் என்றும் அதில் மூன்று முழம் உணவும். மூன்று முழம் நீரும் மூன்று முழம் காற்றும் இருக்கும்படியும் 0 கண்புருவ முடி சூரியசுடரைக் காத்துக் கொள்ளவும் 0 நாசியில் உள்ள ரோமம் கருங்குஸ்ட்ட வியாதியை விரட்டவும் 0 காவலாய் இருக்கும்படியும் அமைத்த அல்லாஹ் ஹஜ்ரத் ஷாபியீ இமாம் அவர்களை தாய் வயிற்றில் நான்கு வருஸமும் ஹஜ்ரத் மாலிக் இமாம் அவர்களை அவர் தாய்வயற்றில் மூன்று வருஸமும் தரித்திருந்தார்கள் என்ற அற்புதமான குதரத்தை உண்டாக்கும் அந்த அல்லாஹ்வை புகழ்ந்தும் நபிநாயகம் (ஸல்) அவர்களை போற்றியும். இந்த கல்வியில்லாத பேதையாகிய நான் இப்புத்தகத்தை காணிக்கைவைத்து உங்கள் கைகளில் தந்திருக்கிறேன்.

தெளிந்த சிந்தையுடையவர்களே இதில் அனேக அறிவுகளை தொகுத்து இருக்கிறேன் இதை முழுவதும் படித்து சந்தோசம் கொள்வீர்களென்ற ஆசை பெரிதாக கொண்டு கூறுகிறேன் அல்லாஹுதஆலா நம் அனைவருக்கும் கிருபை செய்வானாகவும் ஆமீன் ஆமீன் யாரப்பில் ஆலமீன். வஸ் ஸலாம்.

www.miskinsha.blogspot.com